2994

T.N.L.A. Debates

Official Report

Vol. 45 No. 3

16th November 1987

D
V211,31 N87
N87.45.3
136539

வெளியீடு 8-6-1988 ,Issued 8 6-1988

2994
18 கு ...

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

529/70/88

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
### OFFICIAL REPORT

திங்கட்கிழமை, நவம்பர் 16, 1987–தொகுதி 45–எண் 3
Monday, the 16th November 1987–Volume 45–No 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

விலை ரூ.3 00 காசுகள்] [Price Rs-3 00 pai

D
V211,31 N87
N87.45.3

136539
சென்னை-600 009.

# உள்ளடக்கம்

16—11—1987


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—
(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 333—370
(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 370—444

2. தகவல் கோரல்—
(அ) இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து .. 444—445, 446, 447—448
(ஆ) சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது குறித்து .. .. 445, 446

3. விதி 111–இன் கீழ் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை—
நகராட்சிகள், மாநகராட்சிகளில் சொத்துவரி சீரமைப்பு குறித்து .. .. .. 448—450

4. கவன ஈர்ப்பு—
(அ) கட்டட வரி உயர்வு குறித்து .. .. 450—460
(ஆ) திண்டுக்கல் மருத்துவமனையில் குழந்தைகள் காணாமற் போனது குறித்து .. 460—463
(இ) ஆதி திராவிடர் நலன்களுக்காக நத்தம் புறம்போக்கு நிலங்கள் கிடைக்காதது குறித்து .. .. .. .. 463—464
(ஈ) குறிஞ்சிப்பாடி ஒன்றியம் பெருமாள் ஏரிக்கு தண்ணீர் வரும் வாய்க்கால் தூர்ந்துள்ளது குறித்து .. .. 464—466
(உ) வைகை ஆற்றின் கரையில் காமராஜர் பாலம் நுழைவு வாயிலையொட்டி அமைந்துள்ள வெள்ளத் தடுப்புச் சுவர் இடிந்துள்ளதால் வீடுகள் பாதிப்பு .. 466—467

5. அறிக்கை அளித்தல்—
பொது நிறுவனங்கள் குழு .. .. .. 468

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—
(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த )சட்ட முன்வடிவு, 198 .. 468

உள்ளடக்கம்—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| (ஆ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987 .. .. .. .. .. | 468—469 |
| (இ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987 .. | 469 |
| (ஈ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக் கட்டளைகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1987 . .. .. .. .. | 469 - 470 |
| (உ) தமிழ்நாடு வழக்குரைஞர் நலநிதியச் சட்ட முன்வடிவு, 1987 .. .. .. | 470 |
| (ஊ) தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்கு குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 .. .. | 470—471 |
| (எ) தமிழ்நாடு காணொலிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாக தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987 .. .. | 471—472 |
| (ஏ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 .. .. | 472 |
| (ஐ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு, 1987 .. .. .. .. .. | 531 |
| 7. மிகைச் செலவிற்கான மானிய கோரிக்கைகள் 1981–82 அளித்தல் .. .. .. | 472—473 |
| 8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1982–83 அளித்தல் .. .. .. | 473—474 |




2494

உள்ளடக்கம்—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| 9. அறிவிப்புகள்— | |
| (அ) 1987–88 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளை மொழிவது குறித்து (ஆ.செ.) .. | 475 |
| (ஆ) நிதி ஒதுக்கச் சட்ட (எண். 3) முன்வடிவு, 1987 .. .. .. .. | 531 |
| 10. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1987–88 விவாதமும் வாக்கெடுப்பும். .. .. | 475—530 |
| திரு. அ. ரகுமான்கான் .. .. . | 475, —476, 478—488 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. | 482, 483, 484, 485, 486 |
| *டாக்டர் ந. மாசிலாமணி .. .. | 489—492, 495 |
| *திரு. மா. சின்னராசு .. .. .. | 495—506 |
| திரு. கோ. வீரய்யன் .. .. .. | 505—511 |
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. .. | 511—516 |
| *திரு. பொ. உத்திராபதி .. .. | 516—519 |
| திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் .. | 519—522 |
| திரு. கு. தமிழரசன் .. .. .. | 522—526 |
| திருமதி டி. யசோதா .. .. .. | 477, 478 494, 527—528 |
| மாண்புமி டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | |
| 11. அரசினர் தீர்மானம்— விதி 189(3)ஐத் தளர்த்தல் .. .. .. | 488 |
| 12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் . | 531—532 |

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

1987, நவம்பர் 16, திங்கட்கிழமை

ஐப்பசி 30, பிரபவ — திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.''

தக்க இடத்தை அறிந்து பொருந்தியவராய்ச் செயலை நெருங்கிச் செய்வாராயின், அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர் தம் எண்ணத்தை இழந்துவிடுவார்.

### திருவில்லிபுத்தூரில் மார்க்கெட் சந்தையை அரசு கையகப்படுத்தல்

115— (*வினா எண் 2492) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் 'பென்னிங்டன்' மார்க்கெட் சந்தையை அரசு கையகப்படுத்தும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது ?

(ஆ) நகராட்சி, பேரூராட்சி தனியார் சந்தைகளை கையகப்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருவில்லிபுத்தூர் 'பென்னிங்டன்' மார்க்கெட்டை நகராட்சி கையகப்படுத்துவது சம்பந்தமாக அந்த மார்க்கெட்டின் கமிட்டி செயலாளரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் மீதான தீர்ப்பு நிலுவையில் உள்ளது.

(ஆ) பேரூராட்சி தனியார் சந்தைகளை கையகப் படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. ஈரோடு, திருச்சி, காரைக்குடி, அறந்தாங்கி, தேவகோட்டை மற்றும் திருவொற்றியூர் ஆகிய நகராட்சிகளில் தனியார் சந்தைகளை கையகப்படுத்துவது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட நகராட்சிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1987 நவம்பர் 16

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் முன்பு திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்தது. அப்பொழுது பென்னிங்டன் கலெக்டரால் 1878-ஆம் வருஷம் இந்த மார்க்கெட் உருவாக்கப்பட்டது. லைப்ரரியும் உருவாக்கப்பட்டது. அது தனியாருடைய சொத்து கிடையாது. அரசாங்கத்தின் சொத்து. இப்பொழுதும் மாவட்ட ஆட்சித் தலைவர்தான் தலைவராக இருக்கிறார். ஆகையால் இதை அரசாங்கத்திற்குக் கொண்டு வருவதற்கும், ஆறு வருடங்களாக ஹைகோர்ட்டில் இருக்கின்ற ஸ்டேயை வெக்கேட் செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சில நகராட்சிகளினுடைய தனியார் சந்தைகளைக் கையகப்படுத்துவதாகச் சொன்னார்கள். அது எந்த அளவில் உள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே குறிப்பிட்டதைப் போன்று ஏழு நகராட்சிகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றிலே அதனுடைய சொத்து மதிப்பீடு, அதை எப்படி அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பது என்பது போன்ற பிரச்சினைகள் சில இடங்களிலே பேசப்பட்டு வருகின்றன ; சில இடங்களில் முடிவுகள் மேற்கொள்ளப்படுவதில் சில சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, விரைவில் அதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. க. இரா. சின்னராசு :** பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரால் நடத்தப்படுகின்ற இந்த வாரச் சந்தைகளில் பெருமளவிற்குத் தனியார் கொள்ளை இலாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க சொத்துக்களிலிருந்து அரசாங்கத்திற்கு வரக்கூடிய, மக்களால் கொடுக்கப்படுகின்ற பணம் அரசுக்குச் சேர்கின்ற வகையில் தனியார் சந்தைகள் அனைத்தையும் அரசோ அல்லது உள்ளாட்சித் துறையோ அல்லது நகராட்சிகளோ எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்க தனியான ஒரு ஆய்வை நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; பேரூராட்சி அல்லது நகராட்சிகளினுடைய பொறுப்பில் அல்லது அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட இடங்களில் நடைபெறும் இதுபோன்ற



1987 நவம்பர் 16]

சந்தைகள் பற்றி அந்த நகராட்சி அல்லது பேரூராட்சிகள் ஒரு முடிவு எடுத்து, அதை அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் அதற்குப் பிறகுதான் நடவடிக்கைகள் எடுக்க முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பொறுப்புகளிலே இருக்கின்ற பொழுது அரசாங்கம் நேரடியாக தலையிட்டு இப்படிப்பட்ட கொள்கை முடிவுகளை எடுப்பதற்குப் பதிலாக, நிர்வாக நடைமுறையையொட்டி அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொண்ட பிறகுதான் அரசாங்கம் அதிலே தலையிடும்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சில நகராட்சிகளுடைய சந்தைகளை அரசாங்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தெரிவித்தார்கள். பேரூராட்சிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தீர்மானம் இயற்றி அரசுக்கு அனுப்பியிருக்கின்ற சில நிகழ்வுகளில் அரசு முடிவுகள் எடுக்காமல் இருக்கின்றது. அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அறநிலையத் துறைக்குப் பொறுப்பாக இருக்கின்ற பொழுது, என்னுடைய திருபுவனத்தில் இருக்கின்ற ஒரு சந்தையில் மிகப் பெரிய அளவில் ஊழல் செய்து கொண்டு இருக்கிறார்கள், அதை ஒரு தேவஸ்தானம் நடத்திக்கொண்டிருக்கிறது; அதை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தோம். அப்பொழுது அதற்குரிய சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு சட்டம் இயற்றலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். நான் கேட்டுக் கொள்வது, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தீர்மானம் இயற்றி அனுப்பியிருக்கின்ற இடங்களிலேயாவது அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து அதை மேற்கொள்வதற்கு முயற்சியெடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரூராட்சிகளைப் பொறுத்தவரை இதுவரை பேரூராட்சி நிர்வாகங்கள் தங்களுடைய ஆணைக்குட்பட்ட இடங்களிலே இப்படிப்பட்ட சந்தைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்துக்கள் எதுவும் அரசுக்கு வரவில்லையென்றுதான் குறிப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது போன்று குறிப்பிட்ட பேரூராட்சிகளிலிருந்து அப்படிப்பட்ட கருத்துரை இங்கே அரசுக்கு அனுப்பப்பட்டிருக்குமானால், அதைப்பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும். பொதுவாக, இது போன்ற சந்தைகள் நடத்துகின்ற வழக்கங்கள் நீண்ட காலமாகத் தனியாரிடத்திலிருந்து வருகின்றன. ஆனால் இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கிற நம்முடைய ஜனநாயக ஆட்சி முறையில் நம்முடைய நகராட்சிகள் அல்லது பேரூராட்சிகளுக்கு வருமானத்திற்கு வழி தேடிக் கொண்டிக்கிறபொழுது இது போன்ற கட்டணம் வசூலிப்பது போன்று மிகப் பெரிய அளவிலே வருவாய் வருகின்ற துறைகளும் பொது நிர்வாகத்திற்குள்ளே இருப்பதுதான் பொருத்தம். இதை அரசு கூர்ந்து கவனித்துக்

கொண்டிருக்கிறது. தேவையென அந்த நகராட்சிகள் அல்லது பேரூராட்சிகள் தங்களுடைய கருத்துக்களை, முடிவுகளை அரசாங்கத்திற்குத் தெரிவிக்குமானால், அதையொட்டி மாநிலம் தழுவிய ஒரு கொள்கை முடிவாக அரசு எடுத்து தீவிரப்படுத்துவதற்கு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நிலக்கோட்டையில் ஊற்று வேலை

*116—(*வினா எண் 9002)* திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நிலக்கோட்டையில் கமலாபுரம் ஜம்புதிரியம்மன் ஊற்று வேலை ஆரம்பிக்கப்பட உள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், விபரமென்ன ?*

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இப்பணி நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜம்புத்துரைக்கோட்டை ஊராட்சியில் 1985-86ம் நிதியாண்டில் தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, 21-1-1987 அன்று முடிக்கப்பட்டுவிட்டது.

**திரு. அ. பாலுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை பொதுப் பணித் துறை ஆய்வுத் திட்டத்தின் கீழ் எடுத்து வேலை செய்வதாக இருந்தது. ஆனால் உள்ளாட்சித் துறையின் மூலமாக குறைந்த தொகையில் வேலை பார்த்து சரியாக முடிக்கப்படாத காரணத்தால், அதை மீண்டும் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் சுமார் 24,000 ரூபாய்க்கு மேல் செலவழித்து அது நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் குறிப்புகள் இங்கே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற தகவலின்படி அதிலே ஏதாவது குறையாக இருக்குமானால், அரசு பரிசீலித்து அதைத் திருத்துவதற்கும் அல்லது பாக்கி இருந்தால் முடிப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

**திரு. அ. பாலுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்து நன்கு விரிவாக வேலை செய்வதற்குப் பொதுப் பணித் துறைக்கு மாற்றம் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திட்டம் நிறைவேறவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா ? அல்லது பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கி, அதுதான் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை அரசைப் பொறுத்தவரை, எந்தத் துறைக்கு ஒதுக்குவது என்பது முக்கியம் இல்லை. மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். ஆகவே, ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நடைபெறவேண்டிய திட்டங்கள் என்றால், அவை ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகத்தான் நிறைவேற்றப்படும். பொதுப் பணித் துறைக்கு மாற்றினால்தான் சிறப்பாக நடக்கும் என்று அரசு கருதினால், பொதுப் பணித் துறைக்கு மாற்றும்.

## அண்ணா சாலையில் மாற்று வழிப் பாதை

*117—(*வினா எண். 12161)* திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

*சென்னை அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க மாற்றுப் வழிப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?*

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்று வழிப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், இந்த சாலையில் நெரிசலை ஓரளவு குறைக்க டாம்ஸ் சாலையையும், பென்னி சாலையையும் இணைக்கும் இணைப்புச் சாலையைச் செப்பனிடும் பணியை சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் பெருகிவருகின்ற போக்குவரத்து நெரிசலைப் பார்க்கும்போது, இன்னும் 10 ஆண்டுக் காலம் கழித்துப் பார்த்தால், சென்னை மாநகரத்தில் நடக்கக்கூட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என்கின்ற அச்சம் உள்ளது. இப்போது, ஒரு இடத்தை அடைவதற்கு ½ மணி நேரமாகும் என்று ஒரு இலக்கை வைத்துக்கொண்டு பயணம் சென்றால், அந்த இடத்தைச் சென்றடைவதற்கு ஒரு மணி நேரம் ஆகிவிடுகிறது . இதை கவனத்தில் கொண்டு, சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசல்களைத் தடுக்க, மாற்றுத் திட்டத்தினைத் தயாரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 16

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபோன்ற மிகப் பெரிய நகரங்களில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, எதிர்கால வளர்ச்சியை மனதிலே கொண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதையொட்டித்தான், வெளியூர்களிலேயிருந்து வருகின்ற வாகனங்கள், பேருந்துகள் சென்னை நகருக்குள்ளே வந்து மறுபடியும் வெளியூர் செல்வதற்கான ஒரு சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக இரண்டு பெரிய திட்டங்கள் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சுமார் 14 கோடி ரூபாய் செலவிலே உலக வங்கி உதவியுடன் நம்முடைய '' சவுத் ஹைவேஸ்.'' என்று அழைக்கப்படுகின்ற '' நேஷனல் ஹைவேஸ் '' என்ற அந்தச் சாலையையும், '' பெங்களூர் ஹைவேஸ் '' சாலையையும், கல்கத்தா ஹைவேஸ் '' சாலையையும் இணைப்பதற்காக ஒரு 'ரிங் ரோட்' வளைவாக சென்னை நகருக்கு வெளியிலே செல்லுகின்ற சாலை அமைக்கப்பட்டு வருகிறது. அதைப்போல, தாம்பரத்திற்கு அருகிலேயே, சென்னைக்குள்ளே வராமல், திரும்பி, பெங்களூர் சாலையையும் நம்முடைய நெல்லூர் சாலையையும் இணைக்கின்ற வகையில் 17 கோடி ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டு, அதற்கான திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று, சென்னை மாநகரத்திற்குள்ளேயே வளர்ந்து கொண்டு வருகின்ற போக்குவரத்து நெரிசல் என்பது பூதாகாரமாக இன்றைக்கு உருவெடுத்துக்கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை. அரசாங்கம் இதை கூர்ந்து, மிகுந்த கவலையோடும், இதை எப்படி தீர்ப்பது என்பது குறித்தும், அப்படி தீர்க்க முயற்சி எடுத்துக்கொள்கிற நேரத்தில் இதற்கு எவ்வளவு கோடி ரூபாய்கள் தேவைப்படும் என்கின்ற அந்த உணர்வோடும் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அண்ணா சாலை மாத்திரம் என்பதல்ல, சென்னை மாநகரத்திற்குள்ளே பல சாலைகள் இப்படி போக்குவரத்து நெரிசலுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினையை ஒரு பொதுப் பிரச்சினையாக, தேசியப் பிரச்சினையாக, மத்திய அரசினுடைய துணையோடு மாநில அரசு தீர்ப்பதற்கு முயற்சிகளை எப்படி மேற்கொள்ளலாம் என்று திட்டமிடப்பட்டு வருகிறது.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரம் போன்ற பெரிய நகரங்களைத் தூய்மையாகவும், சாலைகளை நல்ல முறையிலே பராமரிக்கவும், ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கார்தான் இருக்கவேண்டும் ; அதற்குமேல் உள்ள கார்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் 5, 6 கார்களை வைத்துக் கொண்டால், இப்படிப்பட்ட பெரு நகரத்தினுடைய பல்வேறு நிலைகளுக்கு, அழகுக்கு, சாலைகளினுடைய பராமரிப்புக்குச் சிக்கல்கள் ஏற்படும். அதைத் தவிர்ப்பதற்கு ஒரு வீட்டுக்கு ஒரு கார்தான் இருக்க வேண்டுமென்று அரசு அறிவிக்குமா ? இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1987 நவம்பர் 16]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதெல்லாம் மிகப் பெரிய தேசியப் பிரச்சினைகள். தனி மனிதர்களுடைய உரிமையோடு தொடர்புள்ள பிரச்சினைகள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று, அந்த ஒரு கார் கூட தேவையில்லை, எல்லோருமே பேருந்துகளிலே செல்லலாம் என்று கூட நாம் சட்டம் இயற்ற வேண்டுமென்று லட்சக்கணக்கான மக்கள், கோடிக்கணக்கான மக்கள் விரும்புவார்கள். ஆகவே, இதையெல்லாம் எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதிலே தான் சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, நிலைமைக்கு ஏற்றவாறு இப்படிப்பட்ட நெருக்கடிகள் வந்தாலே, கார் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் இனிமேல் காரை வைத்துக் கொண்டிருக்க வேண்டாம் என்கிற ஒரு முடிவை அவர்களே கூட எடுத்துக் கொள்வார்கள். ஏனென்றால், மேற்கு நாடுகளிலே பல நகரங்களில், கார்களிலே போவதைவிட டாக்சிகளில் போய் இறங்குவது சிறந்தது என்ற பழக்கம் இன்றைக்குக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, வளர்ந்து வருகிற சூழ்நிலையில், அவரவர்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களையொட்டி முடிவுகளை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியத்திற்கு ஆளாவார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், இப்போது இருக்கின்ற இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் கிடைக்கலாம். அதை விட்டு விட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல ஒருவர் ஒரு கார்தான் வைத்துக் கொள்ளலாம் என்றால், அதோடு நிற்காது. அதையொட்டி, பல பிரச்சினைகள் வரும். ஒருவர் ஒரு வீடுதான் வைத்துக் கொள்ளலாம் என்று வரும். அப்படி ஒரு வீடு என்றால், எந்த அளவிலே வீடு வைத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் வரும். ஆகவே, இது காலம் தீர்க்க வேண்டிய பிரச்சினை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பெரிய அளவிலே திட்டம் தீட்டுகின்ற வகையில் சென்னை மாநகர் முழுவதும் இருக்கின்ற பல தெருக்களை ஒரு வழிப் பாதையாக மாற்றுகின்ற நடவடிக்கையை எடுத்தால்கூட போக்குவரத்து நெரிசலைத் தடுக்க ஏதுவாக இருக்கும். எனவே அந்த நடவடிக்கையாவது முதலிலே எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, உடனடியாக, அரசின் பரிசீலனையிலே இருக்கிற இந்தப் பிரச்சினை, இருக்கின்ற சாலைகளில் போக்குவரத்து நெரிசலை, அதுவும் மிக முக்கியமான நேரங்களில்—'பீக் அவர்ஸ்' எப்படி தடுப்பது என்பதைப் பற்றிய விவாதங்களை போக்குவரத்துத் துறையோடு விவாதித்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று, பல சாலைகளை ஒரு வழிப் பாதையாக ஆக்கலாமா என்பதும் பரிசீலனையிலே இருக்கிறது. ஆனால் இதில் ஒரு சிக்கல்—

ஒருவழிப் பாதை ஆக்குகிறோம் என்று அறிவித்த உடனேயே அங்கே இருக்கிற வியாபாரிகள், அந்தத் தெருவில் இருக்கிற மற்ற தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுக்கு இதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. அதனால் இந்த ஒரு வழிப் பாதையை ரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளிடத்தில் வந்து முறையிட்டால், அவர்களும் அதற்கு அனுசரணையாக அமைச்சர்களிடத்தில் அல்லது அரசிடத்தில் பொது மக்களின் பிரதிநிதியாக வந்து, இதை உடனடியாக ரத்து செய்யுங்கள் என்று கேட்காத உணர்வை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டால், இதைப்போன்ற,—கொஞ்சம் சிரமமாக இருந்தாலும், பொது நன்மையைக் கருதி, இந்தக் கட்டுப்பாடுகளை நாம் அமல்படுத்த முடியும். அரசாங்கம் இதைப்பற்றி தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, வட சென்னை முழுவதும் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதிகளின் சாலைகள் குறுக்கும் நெடுக்குமாகப் போவதால் நடக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் அங்கே இருக்கும் வசதியானவர்கள் வீடுகளை, பிளாட்பாரம் ஓரமாக நகர்த்திக் கட்டிவிடுகிறார்கள். அதையெல்லாம் அகற்றும் திட்டம் உண்டா? அந்த வீடுகளின்,—வலது புறத்திலும், இடது புறத்திலும் 20 அடி நிலத்தை அரசாங்கமே வாங்கி, அந்தச் சாலைகளை விஸ்தாரமாக்கும் திட்டம் உண்டா? திருவொற்றியூர் நெடுஞ்சாலைப் போன்ற சாலைகளில் நடக்க முடியாத நிலைமை இருக்கிறபோது, கார்கள் எவ்வாறு செல்லும்? பேருந்துகள் எவ்வாறு செல்ல முடியும்? ஆகவே ஆக்கபூர்வமான ஒரு அறிக்கையை அமைச்சர் அவர்கள் தருவார்களா? தவிர, துரிதமான நடவடிக்கை எடுத்து அந்த வீடுகளையெல்லாம் அரசாங்கமே வாங்கி அந்தச் சாலையை அகலப்படுத்துகிற திட்டம் ஏதேனும் அரசு வைத்திருக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் நம்முடைய சமுதாயத்தில் இருக்கிற மக்களுடைய உணர்வை ஒட்டிய பிரச்சினையாகும். சாதாரணமாக ஏழை எளிய மக்கள், வேறு வழியில்லாமல் நடைபாதையைக் கூட தங்களுடைய இருப்பிடமாக, தங்களுடைய வாழ்விடமாகக் கொண்டு, நாமெல்லாம் பார்த்து வருந்துகிற சூழ்நிலையில் அங்கே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாம் அவர்களை அப்புறப்படுத்த வேண்டும்— அந்தச் சாலைகளையெல்லாம் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும், அல்லது வசதியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று முயற்சிக்கிறபோது ஒரு மனிதாபிமான உணர்வே இல்லாமல் கூட இடையூறு செய்கிறார்களே என்று



நடவடிக்கை எடுக்கிறோம்— இது இல்லாதவர்களின், எளியவர்களின் நிலை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது, இருக்கிறவர்கள் பற்றிய நிலை. சொத்துக்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள், வீட்டைக் கட்டிக் கொண்டிருப்பவர்கள் எத்தனை அடி என்க்ரோச் பண்ணலாம். மற்றவர்களுடைய சொத்தில் கொஞ்சம் தலையை நீட்டி, வாலை நீட்டி, காலை நீட்டி, பிறகு மொத்தமாக உடம்பையே நீட்டலாம் என்று முயற்சிக்கிற மனப்பான்மை நாட்டில் வளர்ந்து கொண்டு வருகிறது. அதற்கு தெரிந்தோ, தெரியாமலோ நம்மைப் போன்றவர்கள் துணையாக இருந்து நாமும் வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்கிற சூழ்நிலையை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். எனவே இதற்காகக் கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தொடங்குகிறபோது, மக்களுடைய பிரதிநிதிகள் குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் "நமக்குத்தானே கெட்ட பெயர் வரும். எதிர்க் கட்சிக்காரர்கள் இதற்கு ஆதரவாகப் போராடினால் மக்களுடைய ஆதரவு நமக்கு இல்லாமல் போய் விடுமே" என்ற உணர்வு கொண்டு, அவர்களுக்கு ஆதரவாகப் போராட்டத்திலேயே ஈடுபடுகிறார்கள். அதற்குப் பல சம்பவங்களைக் கூட சான்றாகச் சொல்ல முடியும். எனவே நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவெடுத்து இதை ஒரு பொதுப் பிரச்சினையாகக் கருதி இப்படிப்பட்ட பாதைகளை அல்லது சாலைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களையெல்லாம் அகற்ற வேண்டும். முடியாத ஒரு சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு மட்டும் மாற்று வழி கண்டுபிடித்து விட்டு—இப்படிப்பட்ட எதேச்சாதிகாரமாக அதிக லாப நோக்கோடு அதிக ஆசையோடு ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களையெல்லாம் அகற்றுகிற முயற்சியில் நாம் அனைவரும் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடுகிற ஒரு முடிவை நாம் எடுத்து விட்டால் அதைக் கொஞ்சம் முறையாகச் செய்ய முடியும். அதைப் பற்றியும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதற்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் துணையாக இருக்க வேண்டும்.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பல இடங்களில் கட்டப்பட்டிருக்கிற நடைபாதைச் சுரங்கப் பாதைகளை மக்கள் உபயோகப்படுத்தாமல் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா? கண்டிப்பாக இதை நடைமுறைப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தால் கொண்டு வரப்படுமா? மேலும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க சுற்றுச்சாலைப் பணி துவங்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்தப் பணி எப்போது முடிவுறும் என்று அறிய விரும்புகிறேன். அதோடு அண்ணா சாலையில் தனியார் வாகனங்களை செல்ல விடாமல் வேறு வழிப் பாதையில் திருப்பி விட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 16

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுரங்கப் பாதைகளைப் பயன் படுத்தாமல் மக்கள் சாலைகளையே பயன்படுத்துகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சுரங்கப் பாதைகளைப் பயன்படுத்தாமல் இருப்பது இரண்டாவது விஷயம். நடைபாதைக்கு என்று இருக்கிற பிளாட்பாரத்தையே பயன்படுத்தாமல் இருப்பதுதான் முதலாவது. ஒரு காலத் தில் சென்னை போன்ற நகரங்களில் மக்கள் நடக்கிறபோது பாதுகாப்பாக ''ஓரமாக நட, ஓரமாக நட'' என்று வீட்டில் இருந்தும் சொல்லியனுப்புவார்கள். போகிறவர்களும் ஒரு பத்திர உணர்வோடு பாதையின் ஓரத்தில் நடப்பார்கள். ஆனால் இன்றைக்கு என்ன பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டிருக் கிறோம் என்றால், நாம் ஏன் ஓரத்திலே செல்ல வேண்டும். கார் வைத்திருப்பவன் மாத்திரம் தான் நடுவிலே செல்ல வேண்டுமா? நாமும் நடந்து போகிறவர்களும் போகலாம் என்ற உணர்வை ஒரு பக்கத்திலே—மக்களிடத்திலே—வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். வளர்த்துக் கொண்டு வருகிறோம். யாரை, எப்படி, எப்போது கட்டுப்படுத்துவது என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து ஆபத்து ஏற்படாமல் தடுக்க சுரங்கப்பாதை கட்டப்பட்டிருக்கிறது. அதிலே இறங்கிப் போவதற்கு சில நிமிடங்கள் அதிகமாகும் என்பதை பொறுத்துக் கொள்ளாமல் சாலையின் குறுக்கே வந்து, தங்கள் உயிருக்கே ஆபத்து விளை வித்துக் கொள்ளக் கூடிய மனப்பான்மையை நம்முடைய மக்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாமெல்லாம் சேர்ந்து அந்த உணர்வை வளர்க்கக் கூடிய நிலையிலே இருக்கிறோம். அந்த உணர்வை சட்டத்தின் மூலமாக அதிகாரத்தின் மூலமாக மட்டும் தடுத்து நிறுத்திவிட முடியாது. மக்களிடத்திலே நல்ல பழக்க உணர்வுகளை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். இந்த உணர்வை உருவாக்க எல்லோரும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும். ரிங் ரோடு பற்றி கேட்டார்கள். தனியாக கேள்வி போட்டால் அதற்குரிய அமைச்சர் பதில் அளிப்பார்.

(முற்பகல் 10–20)

திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, வட சென்னை, இராயபுரம் மேம்பாலத்தில் நெரிசல் அதிகமாக இருப்பதால் மாற்று வழிக்கு ஏற்பாடு செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர் களே, என்னிடத்திலே அண்ணா சாலையைப் பற்றிய குறிப்பு தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தனியாக கேள்வி போட்டால் அவற்றைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துச் சொல்லமுடியும்.



1987 நவம்பர் 16]

**வெள்ளக்கோவில் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தல்.**

118.—(*வினா எண் 12519) **திரு. கு. ரமணி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், வெள்ளக்கோவில் பேரூராட்சி யின் 23—6—1986 தேதியிட்ட தீர்மானப்படி தற்பொழுதுள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த கேட்டுள்ளது அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலை வர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே நமது மதிப்பிற் குரிய அமைச்சர் அவர்கள், இப்படியொரு பிரச்சினையே இல்லை என்று சொல்லுகிறார்கள். இது எப்படி சரியாக இருக்கும் என்று புரியவில்லை. காரணம் என்னவென்று தெரியவில்லை. அந்த பேரூராட்சியில் தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெரியார் மாவட்டத்திலே ஏற்கெனவே இருந்த ஆட்சித் தலைவர், அந்த இடத்திலே விரிவு படுத்தி கட்டுவதற்கான திட்டத்தைத் தயாரித்து அனுப்பியுள்ளார் இப்படிப்பட்ட விவரங்கள் இருக்கும்போது, வினாவே எழவில்லை என்று சொல்வது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே சந்தேகம் அதிகமாக வருகிறது. அந்தச் சந்தேகத்தை மேலும் வளர்க்கிற அளவிற்கு அமைச்சர் அவர்கள் விவரங்களைச் சொல்லுகிறார்கள். இது பெரிய சந்தேகத்தை உருவாக்குகிறது. அந்த வினா இங்கே வந்து காணாமல் போயிற்றா ? அல்லது வரவே யில்லையா ? என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அந்த விவரங் களைத் தெரிவிக்குமாறு நான் அமைச்சர் அவர்களைத் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலை வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற கேள்வி, ''பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த கேட்டுள்ளது அரசின் பரிசீலனையில் உள்ளதா? '' என்பது. '' அரசின் பரிசீலனையில் இல்லை '' என்பது அரசின் தரப்பிலே இருந்து வருகிற பதில். அங்கேயிருக்கின்ற உள்ளாட்சி மன்றத்தைச் சேர்ந்தவர்கள் பேருந்து நிலையம் சம்பந்தமாக என்னென்ன தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பது அரசினிடத்திலே இருக்கிறது. ஆனால், குறிப்பிட்ட ஒரு திட்டத்தை அனுப்பி, அதை நிறை வேற்றித் தர வேண்டும், அதற்குப் பொருள் உதவி வேண்டும்,

அனுமதி வேண்டும், அதற்காக நிலத்தைக் கையகப்படுத்திக் தர வேண்டும் என்று அரசினிடத்திலே இல்லை. ஆகவே அரசின் பரிசீலனையில் இல்லை என்று பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருக்குத் தகவலைத் தந்தவர்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற செய்தியையும் தந்திருக்கக் கூடும். இப்போது நாகப்பட்டினம்—கடலூர் சாலையில் சுமார் 41 சென்ட் விஸ்தீரணமுள்ள இடத்திலே ஒரு பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. இந்தப் பேருந்து நிலையம் நெருக்கடியாக இருக்கிறது, இதை மாற்றி வேறு ஓர் இடத்திலே, வாரச்சந்தை உள்ள பகுதியில் 3 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள இடத்திற்கு மாற்றினால் எல்லா வசதிகளோடும் எதிர்காலத்திலே விஸ்தரிக்கக் கூடிய அளவிற்கும் பயன்படுகின்ற பேருந்து நிலையமாக மாற்றலாம் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கும் ஒரு மறுப்பு வந்து, வேறு ஓர் இடத்தை, சுமார் 16 சென்ட் இடத்தை சேர்த்து அங்கே விரிவுபடுத்தலாம் என்ற குறிப்பு இங்கே இருக்கிறது. ஆகவே, பேரூராட்சியினுடைய நிர்வாகத்திற்கும், அவர்களுடைய அதிகாரத்திற்கும் உட்பட்டு பிரச்சினைகள் அங்கே விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசினிடத்திலே திட்டவட்டமான ஒரு திட்டம் அனுப்பப்படவில்லை என்பதால்தான் நான் பரிசீலனையில் இல்லை என்று பதில் அளித்தேன்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரளவு விவரங்கள் கொடுத்தது பற்றி மகிழ்ச்சி. எனக்கும் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல, இப்போது இருக்கக்கூடிய பேருந்து நிலையமானது ரோட் ஓரத்தில் இருக்கிறது. மிகவும் இடையூறான இடம் அது. அதைச் சேர்ந்தாற்போல் உள்ள இடம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடமா அல்லது புறம்போக்கு இடமா என்பது தெரியாது. பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இடம் வேறு ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டு, அந்த இடத்தைப் பயன்படுத்த முடியாத அளவுக்குத் தடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்தை விஸ்தரிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதித்தும்கூட, அவர்களால் செய்ய முடியாமல் இருக்கிறதென்று சொல்லப்பட்டது. எனவே, அந்த ஊராட்சி அல்லது பேரூராட்சி மன்றத்திற்கு உதவி செய்து, அந்த இடத்தைப் புறம்போக்கு நிலமாக இருந்தாலும், பெற்று அவர்களுக்குக் கொடுத்து, பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த ஆவன செய்யப்படுமா ? அது பொதுப்பணித்துறை நிலமானாலும் அதைக் கொடுக்க அரசு முன் வந்து, அந்த இடத்திலே பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்யவில்லை என்றால், பெரிய நெருக்கடி ஏற்படும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்துள்ள இடம் இப்போது இருந்து வருகின்ற பேருந்து நிலையத்தை ஒட்டிய இடம். அது நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான 16 சென்ட் இடம். அந்த இடத்தைப் பேரூராட்சி மன்றத்தினர், அவர்களுக்கு ஒதுக்கிவிட்டால், அங்கே இந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தலாமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி விரிவுபடுத்த முயற்சி எடுக்கும் நேரத்திலே, அங்கே ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருக்கிறவர்களை அப்புறப்படுத்தும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் முன்னாலேயே கேட்டார்களே, சர்க்கார் இடத்திலேயே ஆக்கிரமித்துக் கொண்டுள்ள கட்டிடங்களை எல்லாம் இடித்துவிடலாமென்று, அதைப்போலவே, இந்தச் சர்க்கார் இடத்திலே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்களை எல்லாம் அப்புறப்படுத்தும் நேரத்தில், அவர்கள் காங்கேயம் நீதி மன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்று விட்டார்கள். ஆகவே, எல்லா வளர்ச்சித் திட்டங்களுக்கும் போடப்படும் தடை ஆணை இங்கேயும் இருக்கிறது. அதை நீக்கும் முயற்சியிலே அந்தப் பேரூராட்சி மன்றத்தினர் ஈடுபட்டிருக்கிறார்கள். எப்போது முடியும், எப்போது நீங்கும் என்று தெரியவில்லை. ஆனால் இங்கே இருக்கிற குறிப்பின்படி வாரச் சந்தை பகுதியிலே 3 ஏக்கர் நிலம் கிடைக்கிறது என்றால், அதை ஏற்றுக் கொள்ளலாம். பொதுவாக பேருந்து நிலையங்களை அமைக்கும்போது, வீட்டைச் சுற்றியே இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இருந்து நாமெல்லாம் கொஞ்சம் மாறுபட்டாக வேண்டும். எதிர்கால வளர்ச்சியை மனதிலே வைத்துப் பார்த்தால், நகர வளர்ச்சி, ஊர் வளர்ச்சிகளை எண்ணிப் பார்க்கிறபோது, பேருந்து நிலையம எல்லாம் ஒதுக்குப் புறத்திலே அமைவது சிறப்பாக இருக்கும். இன்னும் 10 ஆண்டுக் காலத்திற்கு மக்களுக்குத் தொல்லை தராத வகையிலே இருக்கும், விரிவுபடுத்தவும் வசதியாக இருக்கும். இதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சம்பந்தப்பட்ட பேரூராட்சி மன்றத்தில் தெரிவித்து, 3 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலம் தொல்லையில்லாமல் கிடைக்கிறது என்று இருந்தால், அது நல்ல வசதியுள்ள இடமாக அமையும் என்ற உணர்வோடு, இந்தத் திட்டத்தை அங்கே அமல் படுத்த அவர்கள் முயற்சிக்கலாம். இல்லையென்றால், நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிற வழக்கு முடிவுற்றதற்குப் பிறகுதான் இந்த முயற்சியிலே வெற்றி பெற முடியும்.

**திரு. எ. என். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் வெள்ளக்கோவில் 'பேரூராட்சி பேருந்து நிலையம் பற்றிச் சொன்னார்கள். பொதுவாக தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற பேருந்து நிலையங்கள் போக்குவரத்து நெரிசல் உள்ளதாகவும், சுகாதார வசதி இல்லாமலும் இருக்கின்றன. குறிப்பாக முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்திலும், காமராஜர்

அவர்கள பிறந்த விருதுநகரிலும் இந்த நிலை இருக்கிறது. காஞ்சிபுரம் பேருந்து நிலையம் சுகாதார வசதி இல்லாமல் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறது. விருதுநகர் பேருந்து நிலையமும் சுகாதார வசதியற்று, நெரிசலாக இருக்கிறது. அவற்றை நவீனமயப்படுத்தவும், விரிவுபடுத்தவும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். விருதுநகர் நகர பேருந்து நிலையத்தை மாற்றி அமைத்தால் நெரிசலைச் சமாளிக்கலாம். அதை அரசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது வெள்ளக்கோவில் பேருந்து நிலையத்தைப் பற்றிய கேள்வி.

## மேலச்செவல் பஞ்சாயத்தில் மருத்துவமனை.

*119— (*வினா எண். 1535)* **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** *(பேரவைத் துணைத் தலைவர்) :* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் நகர பஞ்சாயத்து பொது மக்களிடமிருந்து மருத்துவமனை அமைக்கக் கோரி அரசுக்கு மனு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மேலச்செவல் கிராமத்தில் தற்போது இந்தியமுறை ஊராட்சி ஒன்றிய மருந்தகம் இயங்கி வருகிறது. உள்ளாட்சித் துறையினால் நிர்வகிக்கப்பட்டு வரும் இந்திய முறை மருந்தகங்களை நவீன முறை மருந்தகமாக மாற்றக் கூடாது என ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், 18-1-1984 நாளிட்ட அரசாணையில் இனிவரும் காலங்களில் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு எடுத்துக் கொள்வதில்லை என ஆணையிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நடந்து வருவது சித்த மருத்துவத்தைச் சார்ந்த மருந்தகம் ஆகும். அது 10 ஆயிரம் ஜனத்தொகை இருக்கின்ற இடம். இப்போது இருக்கின்ற கொள்கைப்படி





ஊராட்சி ஒன்றியத்தினுடைய மருந்தகம் இருந்தால் அங்கே மருத்துவ மனை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே, இந்தச் சித்த மருந்தகத்தை வேறு பகுதிக்கு மாற்றி, அந்தக் கொள்கையைத் தளர்த்தி அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அல்லது மருத்துவமனை ஏற்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தில் நம்பிக்கை வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சித்த மருத்துவம் சிறந்து ஓங்கி வளர்ந்துவரும் ஒரு மருத்துவம் ஆகும். இதிலே அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது. மேலும், சித்த மருத்துவ மனையை அப்புறப்படுத்திவிட்டுதான் நவீன மருத்துவ மனை ஆரம்பிக்க வேண்டும் என்பதில்லை. அதைத் தனியாக ஆரம்பிக்கலாம். சித்த மருத்துவம் நடைபெற்று வருவது ஊராட்சி ஒன்றியத்தினால் நடக்கிறது. தனியாக ஆரம்பிப்பது என்றால், அரசுதான் ஆரம்பிக்க வேண்டும். அதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

## கஞ்சனூர் மருத்துவமனைக்கு அதிகாரிகள் நியமித்தல்.

*120— (*வினா எண். 2343)* **திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுக்கா, திருப்பனந்தாள் ஒன்றியத்தைச் சார்ந்த கஞ்சனூர் கிராமத்தில் கட்டப்பட்ட அரசு மருத்துவமனை இரண்டு ஆண்டுகளாக மருத்துவ அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் செயல்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : கஞ்சனூர் கிராமத்தில் ஊரக மருந்தகம் ஒன்று இயங்கி வருகிறது. இங்கு பணிபுரிந்த மருத்துவர் ஓய்வு பெற்றுவிட்டபடியால் தகுதியான நபர் பணி மேற்கொள்ள முன்வராமையால் மருத்துவ அதிகாரி பணியிடம் காலியாக உள்ளது. தற்போது பந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய மருத்துவர், கஞ்சனூர் மருந்தகத்தின் பணியினை கவனித்து வருகிறார்.

[1987 நவம்பர் 16

திரு. மு. ராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஞ்சனூரில் இயங்குகின்ற இந்த மருத்துவமனையில் முழு நேர மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா? அதே நேரத்தில் ஒரு ஆண்டுக்கு எத்தனை ரூபாய்க்கு மருந்துகள் அங்கே செலவழிக்கப்படுகின்றன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மருந்தகம் ஆகும். அதுபற்றிய முழு விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஊராட்சி ஒன்றியம்தான் மருந்துவரை நியமிக்க வேண்டும்.

திரு. மு. ராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி சுமார் ஐம்பது கிராமங்கள் அடங்கியதாகும். அங்கே மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால்தான் இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையம் பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். 145 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க இருக்கிறோம். அப்போது இதைப்பற்றி எழுதிக் கொடுத்தால் அரசு பரிசீலிக்கும்.

### இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்றல்.

121— (*வினா எண். 4515) திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா இடைக்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைகளில், ஆரம்பச் சுகாதார நிலையங்களில், டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். 6 படுக்கை வசதிகள் இருக்கின்றன என்று சொன்னாலும் கூட, அந்தப் பகுதியிலே ஒரே ஒரு மருத்துவமனைதான் ஒரு பஞ்சாயத்திலே இருக்கின்றது. அதிகமான வசதி செய்து கொடுக்க



1987 நவம்பர் 16]

முடியுமா என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியை நான் எழுப்பினேன். இனிமேலாவது அரசு அதிகமான டாக்டர்களை நியமனம் செய்யவும், படுக்கை வசதிகளைக் கூட்டுவதற்கும் ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதிகமான மருத்துவர்களை நியமிக்கின்ற யோசனை அரசிடம் இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற டாக்டர்களில் ஒரு டாக்டர் கூட அங்கே இல்லை. அங்கே நியமிக்கப்பட்டவர்கள்கூட லீவ் போட்டுவிட்டு போனதாகச் சொல்கின்றார்கள். ஆகவே தயவு செய்து தேவையான மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்று சொன்னால் உடனே நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஏற்கனவே இந்த அவையில் சொல்லியிருப்பது போல பொதுவாக மருத்துவர்கள் குறைவாகத்தான் இருக்கின்றார்கள். இன்னும் ஏறத்தாழ 1500 மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். தமிழ்நாடு தேர்வாணைக் குழுவை கேட்டிருக்கிறோம். பட்டியல் வந்த பிறகு எல்லா இடங்களும் நிரப்பப்படும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே படுக்கை வசதிகள் என்னென்ன அடிப்படையில் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. 1964-லே ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் படுக்கை வசதிகள் கொண்டதாக மாற்றி அமைக்க வேண்டும் என்று பலவிதமான கோரிக்கைகளைக் கொடுத்து வைத்தோம். ஆனால் இன்னும் அப்கிரேட் பண்ணாமல் பழைய நிலையிலேயேதான் இருக்கிறது. குறைந்தபட்சம் 700 முதல் 1,000 வெளி நோயாளிகள் மருந்து வாங்கிக் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டச் சுகாதார நிலையங்கள் என்னுடைய கிள்ளியூர் தொகுதியில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 6 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்பச் சுகாதார நிலையத்தில் டாக்டர்கள் நோயாளிகளைத் தங்கவைத்து மருத்துவம் செய்வதில்லை. அந்த ஆறு கட்டில்கள் வேறு இடங்களுக்குத்தான் செல்கின்றனவே தவிர, அந்த ஆஸ்பத்திரியிலே கூட இருப்பதில்லை அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வந்து பார்வையிட்டால் நேரடியாக உணரமுடியும். ஆகவே ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் தேவையான படுக்கை வசதிகள் கொண்டதாக அப்கிரேட் செய்வதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 16

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படுக்கைகள் எங்கே போகின்றன என்று தெரியவில்லை. இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆரம்பச் சுகாதார நிலையத்தை மேல்நிலைச் சுகாதார நிலையமாக மாற்றும் பொறுப்பு அரசுக்கு உண்டு. நிதி நிலை சரியாகும்போது மத்திய அரசின் ஒப்புதல் பெற்று அதுபற்றி ஆவன செய்யலாம்.

தாலுக்கா அரசு மருத்துவமனைகளில் மனநோய்ப் பிரிவு.

122—(*வினா எண். 8331) திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளில் மன நோய் பிரிவு துவங்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தாலுக்கா அரசு மருத்துவமனைகளில் மனநோய் பிரிவு இன்னும் துவங்கப்படவில்லை. எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் இப்பிரிவு ஏற்படுத்திய பின்பு நிதிநிலைக்கு ஏற்ப, தாலுக்கா மருத்துவமனைகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம்.

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போழுது தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளில் எல்லாம் பல்வேறு பிரிவு நோய்களுக்கான மருத்துவ வசதிகள் உள்ளன. இதனால் ஏழையெளிய மக்கள் அங்கே வந்து இலவசமாக மருத்துவ சிகிச்சை பெறுகிறார்கள். இப்போதெல்லாம் கிராமங்களில் எங்கே பார்த்தாலும் ஒவ்வொரு கிராமத்திலும், வருடந்தோறும் 4, 5 பேர்களுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிற சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏழையெளிய மக்கள் சென்னைக்கு வந்து, தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அளவுக்கு நிதிவசதியில்லாதவர்களாக இருப்பதால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே ஏழையெளிய மக்களின் நலன் கருதி, அவர்களின் நலனுக்காகவே பாடுபட்டு வருகிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை பெறும் வகையில் தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளில் எல்லாம் இத்தகைய சிகிச்சைக்கான பிரிவை ஏற்படுத்த முன்வருமா ?



1987 நவம்பர் 16]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் ஆண்டுதோறும் 4, 5 பேர்களுக்கு மனநோய் பிடித்துவிடுகிறது என்று உறுப்பினர் சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. அது தவறு. எல்லா இடங்களிலும் அப்படி இருக்க முடியாது. அது புதிய கருத்தாக இருக்கிறது. அரசு ஒப்புக்கொண்ட கொள்கைப்படி எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் இப்பிரிவை ஏற்படுத்திய பின்பு நிதிநிலைக்கு ஏற்ப, தாலுக்கா மருத்துவமனைகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம்.

தென்காசி மாணவர் விடுதி.

123—(*வினா எண். 8956) திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத்துறை பிற்பட்டோர் நலத்துறையுடன் இணைந்து இருந்த காலத்தில் தென்காசியில் கட்டப்பட்ட மாணவர் விடுதியில் ஆதி திராவிட மாணவர்களுக்காக கட்டப்பட்ட மாடி அறைகள் 74 மூடிக்கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை மாற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் நலத்துறையும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையும் இணைந்திருந்த காலத்தில் தென்காசியில் கட்டப்பட்ட மாணவர் விடுதி பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக தற்போது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. இவ்விடுதியின் மாடியில் 12 அறைகள் மட்டுமே உள்ளன. இவ்விடுதியின் ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 60 ஆகும். எனவே, மாடியிலுள்ள 12 அறைகளும் காலியாக உள்ளன. விடுதியில் அதிக இடவசதி இருப்பதால், கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்பு திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் ஆதி திராவிடர் நலத்துறையும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையும் பிரிக்கப்பட்ட நேரத்தில் இந்த விடுதியைப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தன்னிடம் வைத்துக்கொண்டது. இந்தத் துறையானது 10 ஆண்டுக் காலமாக அறைகளை மூடி வைத்திருக்கிறது. திறப்பு விழா அன்றைக்கு போட்ட கோலங்கள் கூட அப்படியே இருக்கின்றன. மாணவர்கள் எண்ணிக்கைக் குறைவாக இருப்பதால்

கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு நாட்களில் அந்த நல்ல காரியம் நடக்கும் என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் ஒரு சிறிய திருத்தம். ஒருவேளை 'டைப்' செய்யும் போது தவறாக தட்டச்சு செய்திருக்கலாம் என்று கருதுகிறேன். அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். இரண்டு சமையல் அறைகளையும் சேர்த்து 14 அறைகள் என்றுதான் நான் கேள்வி கேட்டிருந்தேன். இப்போது கேள்வியில் 74 என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை 14 என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு சீக்கிரம் மாணவர்கள் சேர்கிறார்களோ, அவ்வளவு சீக்கிரமாக அதற்கு நல்ல காலம் வந்துசேரும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய அரசின் சார்பில் ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டல் ஏற்படுத்துகின்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அதற்காக அவர்கள் இடம் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். இந்த ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டலுக்காக இந்த 12 அறைகளில் சில அறைகள் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அது நிச்சயமாக இப்பொழுது சாத்தியமில்லை.

வட சென்னை மீன்பிடித் துறைமுகம்.

124—(*வினா எண். 12494) திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னையில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகம் மத்திய அரசின் நிர்வாகத்தில் உள்ளதா? மாநில அரசின் நிர்வாகத்தில் உள்ளதா?

(ஆ) இந்த மீன்பிடி துறைமுகம் சிறிய படகுகளுக்காகவா அல்லது மீன்பிடி கப்பல்களுக்காகவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) வட சென்னையில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகத்தின் நிர்வாகத்தை மீன்பிடித் துறைமுக நிர்வாகக்குழு மூலமாக சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் நிர்வகிக்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

(ஆ) சென்னை மீன்பிடித் துறைமுகம் 500 மீன்பிடி விசைப் படகுகளுக்கும், 50 மீன்பிடி நாவாய்களுக்கும் தங்குதள வசதி அமைக்கும் பொருட்டு கட்டப்பட்டுள்ளது.



(முற்பகல் 10-40)

திரு. எஸ். வேணுகோபால்: தலைவரவர்களே, இந்த மீன்பிடித் துறைமுகத்தின் நுழைவாயிலை அடிக்கடி மண் மூடிவிடுகிறது. நிரந்தரமாக மண் மூடாமல் தடுக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்தத் துறைமுகத்தின் நுழைவாயிலில் சில நேரங்களில் மண் மூடிக் காணப்படுவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள்; நானும் பார்த்திருக்கிறேன். நானும் அவர்களும் சேர்ந்தே அந்த இடத்தை பார்வையிட்டிருக்கிறோம் அங்கே மண் மேடிடுவதை நிரந்தரமாகப் போக்க வழி தெரியவில்லை. கடலுக்கு அடியிலிருந்து மண் வந்து சேருகிறது. ஒரு சீசனில் மண் வந்து சேர்ந்தால் இன்னொரு சீசனில் திரும்பப் போய் விடுகிறது என்று சொல்கிறார்கள். இன்னொரு கருத்தும் சொல்லப்படுகிறது. இந்தத் துறைமுகத்தின் நுழைவாயிலை கடலுக்கு உள்ளே கட்டி விட்டதால் அங்கே மண் வந்து சேருகிறது. மண் அரிப்பும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நிரந்தரமாக, மண் வந்து சேராமல் இருக்க துறைமுகப் பொறுப்புக்கழகம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்து மத்திய துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு எழுதியிருக்கிறோம்.

திரு. எஸ். வேணுகோபால்: தலைவரவர்களே, இந்த மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதுபற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது. மத்திய அரசும் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்து கொண்டிருக்கிறது. மண்ணை அப்புறப்படுத்த சில கோடி ரூபாய்களை — 5 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன் — இயந்திரம் வாங்குவதற்கு கொடுத்து, இயந்திரங்களை வரவழைத்துக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், மத்திய அரசு இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கருதுகிறேன்.

திருத்தணி மருத்துவமனையில் விபத்துப் பிரிவு.

125—(*வினா 13217) திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணியில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனையில் விபத்துப் பிரிவு எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு திருத்தணி அரசு மருத்துவமனையில் 29—6—1983 முதல் செயல்பட்டு வருகிறது.

**திரு. இரா. சண்முகம் :** தலைவரவர்களே, திருத்தணி அரசு மருத்துவ மனையில் கட்டப்பட்டுள்ள விபத்து பிரிவு சுமார் இரண்டு ஆண்டுகளாகத் திறக்கப்படாமல், மூடப்பட்டிருக்கிறது. நான் அதுபற்றி தலைமை மருத்துவரை அழைத்துக் கேட்டபோது கூடுதலாக தேவைப்படுகின்ற மருத்துவர்கள், உதவியாளர்கள், களப்பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை; ஆகவேதான் திறக்கப்படாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, அமைச்சர் அவர்களுக்குத் தவறான தகவலை அதிகாரிகள் தந்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. நான் அங்கே போய் பார்த்தேன், நேற்றுவரையில் செயல்படவில்லை. அந்தப் பிரிவைத் திறந்து, மீண்டும் செயல்படுத்தி, அந்தப் பகுதியில் விபத்திற்கு உள்ளாகிற மக்கள் பயன்பெற தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளாக இது செயல்படுகிறது என்று குறிப்பு தந்திருக்கிறார்கள். ஆனால் இரண்டு ஆண்டுகளாக மூடிக்கிடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். தவறான தகவலைத் தந்திருந்தால் நிச்சயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். அந்தப் பிரிவு செயல்படாமல் இருந்தால் அதைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும். அது செயல்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் புகாராக ஏற்று, விசாரித்து, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. சண்முகம் :** தலைவரவர்களே, திருத்தணி அறுபடை வீடுகளில் ஒன்றாக இருக்கிறது. அங்கே திருவிழாக் காலங்களில் கூட்டம் அதிகமாக வரும்; விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகையால் விழா நடைபெறுவதற்கு முன்னால் மாவட்ட அலுவலர்களையும் மற்ற அதிகாரிகளையும் அழைத்து விழா சிறப்பாக நடைபெற முன்னேற்பாடுகளைச் செய்கின்ற நேரத்தில் விபத்துக்குள்ளாகிறவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்க மருத்துவர்களை அழைத்து கேட்டபோது, 'ஆக்ஸிடன்ட் வார்டு' இருக்கிறது என்று சொன்னாலும் கூட இப்போது செயல்படாமல் இருக்கிறது என்று தலைமை மருத்துவர் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த விபத்துப் பிரிவைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர்தான் போர்க்களம் அமைந்த இடம். அங்குதான் விபத்து அதிகமாக ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. திருத்தணிகை திருக்கல்யாணம் நடந்த இடம் என்று சொல்கிறார்கள். அங்கே விபத்து ஏற்படுகிறது என்று சொல்வது விந்தையாக இருக்கிறது இருந்தாலும் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.





## குடவாசலில் நகரப் பேருந்துகள் விடுதல்.

126—(*வினா எண். 7556) **திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் குடவாசலை நகரப் பேருந்து விடப்படும் இடமாக அறிவித்து அங்கிருந்து பல கிராமங்களுக்கு நகரப் பேருந்துகள் விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, குடவாசல் நகரப் பேருந்துகள் விடும் இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. குடவாசலிலிருந்து பல்திசை வழித்தட உரிமத்தின் கீழ் சில வழித்தடங்களில் பேருந்துகள் விட தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** தலைவரவர்களே, குத்தாலம் தொகுதி குடவாசல் பேரூராட்சியை 'டவுன்' ஆக அறிவித்து போக்குவரத்துத் துறை மூலமாக டவுன் பஸ் விட ஏற்பாடு செய்த மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குடவாசலிலிருந்து இறவாஞ்சேரி வழியாக வடமட்டத்திற்கும்; அதைப்போன்று குடவாசலிலிருந்து இறவாஞ்சேரி வழியாக பேரளம், ஆலத்தூர் பகுதிகளுக்கும் டவுன் பஸ் விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்று வழித்தடங்களில் பேருந்து விடப்பட்டிருக்கிறது. மீண்டும் 4 வழித்தடங்களில் பேருந்து விட கருத்துரு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற வழித்தடத்தில் பேருந்துகள் விடுவதற்கான கருத்துரு இருக்கிறதா என்ற குறிப்பு இல்லை. அதுபற்றி ஆய்வு செய்யப்படும்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் பேரூராட்சியைப் போக்குவரத்துத் துறையின் டவுன் சென்டராக மாற்றியிருக்கிறார்கள். எனவே அந்தக் குடவாசலில் சி. ஆர். சி. யின் மூலமாக ஒரு டெப்போ கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, பக்கத்திலே இருக்கிற டெப்போக்கள் எப்படி இருக்கின்றன, எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்பதைப் பொறுத்துத்தான் அங்கே தனியாக ஒரு பணிமனை அமைக்க முடியுமா என்பதை ஆய்வு செய்யவேண்டும். இப்போதுதான் அது டவுன் சென்டராக மாற்றப்பட்டிருக்கிறது; எனவே அதற்குள்ளாக அனேகமாக அங்கே பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

[1987 நவம்பர் 16

**திருப்புவனம் தேசிய நெடுஞ்சாலையில் தடுப்புச் சுவர் கட்டுதல்.**

*127—(*வினா எண். 10604)* **திரு. க. பாரமலை :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி, திருப்புவனம் நகரப் பஞ்சாயத்தின் நடுவே செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் சாலை அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்போது துவங்கும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : மானாமதுரை தொகுதி, திருப்புவனம் நகரப் பஞ்சாயத்தின் நடுவே செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் சாலை அரிப்பைத் தடுக்க, தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் இல்லை. என்றாலும், வைகை ஆற்றின் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் மேற்படி பகுதியையும் உள்ளடக்கி, தேசிய நெடுஞ்சாலை எண். 49-ல் கி.மீ. 16/0 முதல் 21/0 வரையிலான பகுதியை உறுதிப்படுத்தும் வேலைக்காக ரூ. 81.26 இலட்சத்திற்கான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 81 இலட்சத்தில் திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது? அதை விரைவாக மத்திய அரசிடமிருந்து பெற்று நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இது எந்தத் தேதியில் அனுப்பப்பட்டிருக்கிறது என்ற குறிப்பு இல்லை. கடந்த ஆண்டு அனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1986—87-ல் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேசிய நெடுஞ்சாலை எண். 49 என்பது இரண்டு மாவட்டங்களின் தலைநகர்களை இணைக்கிற ஒரு முக்கியமான தேசிய நெடுஞ்சாலையாகும். வெள்ளம் வருகிறபோது அதற்குப் பக்கத்தில் இருக்கிற இடங்களிலே வெள்ள அரிப்பு ஏற்பட்டு கிராமங்கள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டு வேறு வழியில்லாமல் ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பொட்டலம் போடுகிற நிலைமை ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து



1987 நவம்பர் 16]

சென்ற வெள்ளக்காலத்தில் கூட 3, 4 இடங்களில் சிறிய பாலங்களைக் கட்ட வேண்டுமென்று குறிப்புகள் அரசிடம் இருந்தன. செல்ஃபா ப்ராஜக்ட் என்ற திட்டத்தில்தான் இம்மாதிரியான திட்டங்களைச் சேர்த்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, சிறிய அளவில் மழை பெய்து அதனால் வரக்கூடிய வெள்ளத்தைத் தடுத்தோ அல்லது அதிலே பாதிப்பு இல்லாமல் போக்குவதற்கோ வழிவகை செய்ய முடியும். ஆனால் ஹெலிகாப்டரிலே இருந்து பொட்டலம் போடுகின்ற அளவுக்கு அவ்வளவு பெரிய வெள்ளம் ஏற்படுகிற நிலைமை இருக்கிறது என்றால் எவ்வளவு நல்ல சாலையாக இருந்தாலும் தண்ணீரில் மூழ்கக் கூடிய நிலைமைதான் ஏற்படும். இருந்தாலும், சிறிய பாலங்களைப் பொறுத்தவரையில் முன்னுரிமை கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து பரிசீலனை செய்யலாம்.

**போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இன்சூர் செய்தல்**

*128—(*வினா எண். 11388)* **திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இன்சூர் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 94-ன் படி அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் மோட்டார் வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் பாலிசி எடுப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. கழக பேருந்துகளினால் விபத்துக்குள்ளானவர்களுக்குச் சட்டப்படி நட்ட ஈட்டுத் தொகை அளிக்க அரசு போக்குவரத்துக் கழகங்களே காப்பீட்டு நிதி ஏற்படுத்திக் கொள்ளலாமென வகை செய்யப்பட்டு உள்ளது. ஆகவே போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு இன்சூரன்ஸ் எடுக்கப்படுவதில்லை.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் புன்னகையோடு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நடைமுறையில் அந்தப் பேருந்துகளில் ஏற்படுகிற இழப்புகள் எப்படி ஈடு கட்டப்படுகின்றன. அவற்றால் ஏற்படுகிற நட்டங்களைக் கழகங்கள் எப்படி ஈடு கட்டுகின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 16

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பேருந்துக்கும் 4000 ரூபாய் வீதம் போக்குவரத்துக் கழகங்களில் ஒரு இன்சூரன்ஸ் போன்ற தொகையைச் சேர்த்து வைக்கிறார்கள். விபத்துக்குள்ளாகக் கூடியவர்களுக்கு நீதி மன்றத்தின் மூலமாகவோ அல்லது நேரடி பேச்சுவார்த்தையின் மூலமாகவோ எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்படுகிறதோ அது அந்தத் தொகையிலே இருந்து கொடுக்கப்படுகிறது. ஒரு வேளை அந்தத் தொகை போதவில்லை என்று கருதினால் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்கள் அதற்காக மேலும் தேவையான பணத்தை, தேவையான அளவுக்கு ஒதுக்குகின்றன.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்து ஏற்படுகிறபோது அந்த இழப்புகளுக்காகத் தொழிலாளர்களிடமிருந்து ஏதாவது தொகை வசூலிக்கப்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்படி ஏதாவது வசூலிக்கப்படுமானால் அது கைவிடப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக்கள் ஏற்படுகிறபோது தொழிலாளர்களிடமிருந்து அதற்கான நஷ்ட ஈட்டை முழுமையாக வசூலித்துவிட முடியாது. ஆனால் விபத்துக்களைத் தடுக்கவேண்டுமென்ற உணர்வோடுதான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விபத்துக்குக் காரணமாக இருந்துவிட்டால் அந்தத் தொழிலாளருக்கு என்ன வகையில் உரிய தண்டனை கொடுக்க வேண்டுமோ, அந்தத் தண்டனை கொடுக்கிற வகையில் தொகை வசூலிக்கப்படுகிறதே தவிர பேருந்து அடிபட்டுவிட்டது, அதற்குக் காம்பென்சேஷன் என்பதைப்போல வசூலிக்கப்படுவதில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருப்புக்கோட்டைக்கு பைபாஸ் ரோடு

*129*—(*வினா எண். 12328) திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டைக்கு பைபாஸ் ரோடு போடும் திட்டம் எந் நிலையில் உள்ளது?

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துச் செயல்படுத்த வேண்டும் என்று அடுத்து வரும் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகளில் இது சேர்க்கப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 16]

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எடுத்து பல ஆண்டுகள் ஆகியும், அதற்கு நில ஆர்ஜிதம் செய்தும், ஆர்ஜிதம் செய்த நிலம் முழுவதையும் விவசாயிகள் எடுத்து விவசாயப் பயிர் செய்து விட்டார்கள். மேலும் மதுரையிலே இருந்து திருச்செந்தூர், தூத்துக்குடி செல்ல வேண்டுமானால், அருப்புக் கோட்டையைத் தாண்டிதான் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிச் செல்கிற நேரத்தில் அருப்புக்கோட்டைக்கும் சாரியாபட்டிக்கும் மத்தியிலே பாளையம்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்தப் பாளையம்பட்டி என்ற ஊர் வழியாகச் செல்கிற நேரத்தில் தெப்பக்குளமும் கோயிலும் இருக்கின்றன. அந்த இடத்திலே அடிக்கடி உயிர் இழப்பும், விபத்துக்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே பாளையம்பட்டி ஊருக்குள்ளேயும், அருப்புக்கோட்டை நகரத்திற்குள்ளேயும்தான் போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ½ மணி நேரத்திற்கு ஒரு பஸ் போய்க் கொண்டிருக்கிறது. அப்படிப்போகிற நேரத்தில் ஜன நெருக்கடியான பகுதியாக இருக்கிறபடியால் இந்த பை-பாஸ் போடும் திட்டத்தை உடனடியாக எடுத்து நிறைவேற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல 5 1/4 லட்சம் ரூபாய் செலவழித்து நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாற்றுப் பாதையை அமைப்பதற்கு ஏறத்தாழ 60 லட்சம் ரூபாய் ஆகும் என்று திட்டம் தீட்டி இப்போது கைவசம் உள்ளது. ஆனால் நிதி பற்றாக் குறையின் காரணமாகத்தான் தள்ளிப்போட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எதிர் காலத்தில் நிதி நிலையை அனுசரித்து வேகமாக எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

நாகை துறைமுகம்.

*130*—(*வினா எண். 14033) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 நவம்பர் 16

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யக் கூடிய பரிசீலனை எதுவும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாகை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தற்போதில்லை என்று சொன்னாலும், அந்தத் துறைமுகத்திற்கு வந்துகொண்டிருந்த சரக்குக் கப்பல்கள் தற்போது வருவது பெரும்பகுதி நின்று விட்டது. அதனால் அதை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த 500 குடும்பங்களுக்கு மேல் பட்டினி கிடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு, அரசும் அமைச்சரும் தங்கள் செல்வாக்கையும் முயற்சியையும் பயன்படுத்தி மேலும் தொடர்ச்சியாக சரக்குக் கப்பல்கள் நாகை துறைமுகத்திற்கு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அந்தத் துறைமுகத்தை விரிவாக்குவதற்கான திட்டம் இல்லையே தவிர ஏற்கெனவே உள்ள வசதிகளை அதிகப்படுத்துவதற்காக 25 லட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டும் என்ற திட்டம் அரசிடத்திலே இருக்கிறது. இப்போது அங்கே வந்து கொண்டிருந்த கப்பல்கள் வராமல் இருக்கின்றன. அவை வர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்து இருக்கிறார்கள். அதனுடைய சாத்தியக் கூறுகள் என்ன என்பதைப்பற்றி இப்போது சொல்ல முடியாது. ஆனால் அதற்கான முயற்சிகளை நாம் எடுக்கலாம்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் துறைமுக அபிவிருத்திக்காகச் சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டதாக அவையிலே அறிவிக்கப்பட்டது. அந்த 50 லட்சம் ரூபாயும் பயன் படுத்தப்பட்டிருக்கிறதா, செலவு செய்யப் பட்டிருக்கிறதா? அபிவிருத்தி வேலைகள் எதுவும் நடைபெற்றிருக்கின்றனவா அல்லது அந்தப்பணம் திரும்பப்பெறப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். விரிவாக்கத்திற்காக பணம் ஒதுக்கப்படவில்லை என்றாலும், ஏற்கனவே இருந்த வசதிகள் பாதிக்கப்பட்டிருப்பதை சரி செய்வதற்காகவும் பழுது பார்ப்பதற்காகவும் பணம் ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டிலே 25 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. மற்ற பணத்தைத் தொடர்ந்து செலவழிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கலாம்.



1987 நவம்பர் 16]

**நகரப் பேருந்துகளின் தூரத்தை அதிகரித்தல்.**

131—(*வினா எண் 14360) **திரு. கி. வெங்கடாசலம் மற்றும் திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நகரப் பேருந்துகள் 80 கி. மீ. தூரம் இயக்கப்படுவதை 40 கி.மீ. ஆக உயர்த்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து இம்முறை அமுலுக்கு வரும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இச் செயற் குறிப்பை அரசு நன்கு பரிசீலித்த பிறகு, தூரத்தை அதிகரித்தல் உகந்ததல்ல என்று முடிவு எடுத்துள்ளது.

**திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைத்தல்.**

132—(*வினா எண். 14756) **திரு. கே. அன்பழகன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களில் பயணிகள் வசதிக்காக வீடியோ கேசட் பிளேயருடன் கூடிய தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களில், பயணிகள் வசதிக்காக வீடியோ காசட் பிளேயர் மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகள் சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வைப்பதற்காக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு மதிப்பீட்டில் இந்த வீடியோ காசட் பிளேயர் வைக்கப் பட்டிருக்கிறது? இதனை மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்த அமைச்சர் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் முக்கியமான சில பேருந்து நிலையங்களில் வைத்து, அதற்கு எப்படி பொதுமக்களுடைய வரவேற்பு இருக்கிறது என்பதைப் பார்த்து, மற்ற எல்லா இடங்களிலும் வைப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம். அதனுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு என்ற குறிப்பு இப்போது இல்லை. அந்தந்த பகுதிக்கு ஏற்ப, அங்குள்ள பரப்பளவிற்கு ஏற்ப எவ்வளவு தேவையோ அவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. கே. அன்பழகன்: தலைவர் அவர்களே, பொழுது போக்கு வசதிக்காக மட்டுமல்லாமல், போக்குவரத்துக் கழகங்களின் நல்ல பணிகள், மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள், பல்வேறு இலாக்காக்கள் தயாரித்துள்ள துண்டுப் படங்கள் ஆகியவற்றை அந்த வீடியோ கேசட் பிளேயர் மூலமாக மக்களுக்குக் காட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதை அமைத்து, அது செயல்பாட்டிற்கு வருகிற போது முழுமையாக மக்களுக்குப பயன்படுகிற வகையில் வேண்டிய காட்சிகள் காட்டப்படும்.

திரு. சு. சிவராஜ்: தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே ஓடிக் கொண்டிருக்கிற ஆம்னி பஸ்களில்—நீண்ட தூரப் பஸ்களில்—இந்த வீடியோ வசதிகளை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்குகின்ற நீண்டதூர பேருந்துகளில் இது போன்ற வசதி இல்லாத காரணத்தால் பிரயாணம் செய்கிற மக்கள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை விட ஆம்னி பஸ்களில் பிரயாணம் செய்வதைத்தான் விரும்புகிறார்கள். ஆகவே நம்முடைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இந்த வீடியோ வசதிகளைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தனியார் பஸ்கள் சிலவற்றில் அவர்கள் வைத்திருக்கிறார்கள். எல்லா பேருந்துகளிலும் இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. சாதாரணமாக அவர்கள் ஒரே ஒரு பேருந்தை மட்டும் வைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால் அதை இயக்குவதற்கு, கவனிப்பதற்கு அவர்களுக்குச் சுலபமாக இருக்கிறது. ஆனால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே நிலைமை அப்படியில்லை. இதற்கு முன்னாலே நெடுந்தூரப் பேருந்துகள் சிலவற்றில் நாம் அந்த வசதியை வைத்திருந்தோம். அது அடிக்கடி இயங்காமல் போகிற சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது. அதை மனதில் கொண்டு, அதற்காக ஆகிற செலவினங்களை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தபோது பல கோடி ரூபாய் அளவிற்கு வருமென்ற காரணத்தால் இப்போது அது கைவிடப்பட்டிருக்கிறது.

### கொட்டமுடி ஆற்றின் குறுக்கே பாலம்.

133—(*வினா எண் 14887) திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், போடிநாயக்கனூர் ஒன்றியம், பூதிப்புரம் அருகே கொட்டகுடி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### நெடுஞ்சாலைகளில் அலங்கார வளைவுகள்

134—(*வினா எண் 14913) திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புறங்களில் நகர நெடுஞ்சாலைகளில் அலங்கார வளைவுகள் கட்டி போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் இச்செயலை தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) இதனால் விபத்துக்கள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, (அ) இது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற நெடுஞ்சாலைகளில், அலங்கார வளைவுகளினால் கடந்த 3 ஆண்டுகளில் சாலை விபத்துக்கள் ஏதும் நிகழவில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அலங்கார வளைவுகள் கட்டுவதன் காரணமாக அழகான சாலைகளில் பள்ளங்கள் ஏற்படுகின்றன. அந்தப் பள்ளங்களை தூர்க்காத காரணத்தால் இரவு நேரங்களில் மோட்டார் பைக், மொபட், சைக்கிள் போன்றவற்றில் வருபவர்களும், இன்னும் சில நேரங்களில் பேருந்துகள் கூட விபத்துக்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இது போன்ற தகவல் வரவில்லையென்று சொல்வது முற்றிலும் மாறானது என்றே எண்ணுகிறேன். இருந்தாலும் மேலும் விபத்துக்கள் இதனால் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். அதற்கு பொலிட்டிகல் டெசிஷன் என்று சொல்வார்களே, அதைப் போல எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் சேர்ந்து, இணைந்து ஒரு முடிவை எடுத்து அரசு அதனைத் தீர்மானமாக வடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் இந்த வளைவுகளினால் பல்வேறு விபத்துக்கள் ஏற்படுவதை நானே நேரடியாகக் கண்டிருக்கிறேன். அதைப் போல உரிமங்கள் பெறுவதைக்கூட பெறாமலே அரசியல் கட்சிகள் இவற்றை அமைத்து விடுகின்றன. இந்த நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விபத்துக்கள் ரெக்கார்டில் வராமல் இருந்திருக்கலாம். எங்காவது சில விபத்துக்கள் நடந்திருக்கலாம். அதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார் என்று கருதுகிறேன். ஆனால் பல இடங்களில் மிக அதிகமாக செலவழித்துப் போடப்படுகிற ரோடுகள் அரசியல் கட்சிகள் பெரும்பாலும்—மற்ற நிறுவனங்களும் செய்கின்றன, நடத்துகிற கூட்டங்களுக்காக இந்த அலங்கார வளைவுகள் அமைக்கப்படுகிற போது பாதிக்கப்படுகின்றன. பல இடங்களில் இது போன்ற நிலைமை இருக்கிறது. எனவே அரசியல் கட்சிகள் அத்தனையும் சேர்ந்து ஒரு தீர்மானமாகப் போடுவதற்கு நிச்சயமாக இந்த அரசுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தத் தயக்கமும் இல்லை. ஆனால் தீர்மானம் போட்ட பிறகு அதனைக் கடைப்பிடிப்பதற்கு எந்த அரசியல் கட்சியும் தயாராக இல்லை என்பது தான் கடந்த கால அனுபவம். எல்லா தலைவர்களும் அதை ஒப்புக் கொள்கிறார்கள், நியாயம் என்று பேசுகிறார்கள், சட்டமன்றத்தில் நியாயம் என்று சொல்கிறார்கள். ஆனால் வெளியே போன பிறகு அதைக் கண்டிப்பதற்கோ அல்லது அவர்களுடைய கட்சியினர் செய்தால் அதைத் தடுப்பதற்கோ யாரும் தயாராக இல்லை. இப்படிப் பல்வேறு பிரச்சினைகளில் பார்த்தாகிவிட்டது. எனவே இதை எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டால் அதைச் செயல்படுத்துவதற்கு முடியும் என்று கருதுகிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும் அவற்றிடமிருந்து அனுமதி பெறவேண்டும். நெடுஞ்சாலையாக இருந்தால் பொதுப் பணித் துறையின் அனுமதியைப் பெற வேண்டும். அப்படி அனுமதியைப் பெற்று எந்தக் கட்சிகள் அந்த அலங்கார வளைவுகளை ஏற்படுத்துகின்றனவோ, அவை சாலைக்கு ஏதேனும் சேதம் விளைவித்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றிய அனுமதியை நகராட்சியாக இருந்தால் நகராட்சியிடமிருந்து பெற வேண்டும். மாநகராட்சியாக இருந்தால், மாநகராட்சியிடம் இருந்து பெற வேண்டும். காவல் துறையிலேயிருந்தும் இதற்கு ஒப்புதல் பெறவேண்டும். இவ்வளவும் இருக்கிறது. ஆனால் எந்த அரசியல் கட்சியின் மீது எப்படி நடவடிக்கை எடுப்பது? இதற்கு ஏதாவது ஒரு வழி வகையை நீங்களே சொல்ல வேண்டும். நடவடிக்கை எடுத்தால், உடனே பழி வாங்குகிறார்கள் என்று சொல்கிற நிலைமை வருகிறது. நாம் இப்போது கூட பல இடங்களிலே பார்க்கிறோம். எங்காவது நாம் ஊருக்குப் போகிறபோது, எந்த வழியாக



அந்த ஊருக்குப் போக வேண்டும் என்பதைப் பற்றி போர்டு போடப்பட்டிருக்கும். உள்ளூரிலே இருப்பவர்களுக்குப் பிரச்சினை இல்லை. வெளியூரிலேயிருந்து வரக்கூடியவர்களுக்கு எந்த ஊருக்குப் போகிறது என்று தெரியாது. அரசியல் கட்சியினுடைய போஸ்டர்கள் அத்தனையும் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள போர்டிலே தான் ஒட்டப்படுகிறது. எனவே இதற்கு எல்லாம் நாம் எங்கே போய்ச் சொல்வது என்று தெரியவில்லை. இதற்கு நடவடிக்கை எடுத்தால் எங்கள் மீது பழிவாங்கப்படுகிறது என்று இங்கே கூட ஒத்திவைப்புத் தீர்மானமே வருகிறது. எனவே இதற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து ஏதாவது ஒரு முடிவுக்கு வந்துவிட்டால், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

மகாபலிபுரத்தில் ஒலி—ஒளிக் காட்சி

135— (*வினா எண். 5788) திரு. செ. செம்மலை: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகாபலிபுரத்தில் ஒலி—ஒளிக் காட்சி நடத்த மத்திய தொல் பொருள் துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் ஒப்புதல் இதுவரை கிடைக்கப்பெறாததால் அமையவிருக்கும் திறந்த வெளி அரும்பொருட்காட்சி வளாகத்திலேயே ஒலி-ஒளிக் காட்சி நடத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலை செப்பனிடுதல்

136—(*வினா எண் 6903) திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், பழமுதிர்ச்சோலை முருகன் கோயிலை செப்பனிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1962-ல் புதிதாக கட்டப்பட்டுள்ள அழகர்மலையில் முருகன் கோயில் நல்ல நிலையிலேயே உள்ளது. திருப்பணி செய்யப்பட வேண்டிய அவசியம் ஏதுமில்லை.

[1987 நவம்பர் 16

கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் அமைத்தல்

137— (*வினா எண். 7707) திரு. கோ. வீரகுபதி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் துறையில் எத்தனை கால்நடைகள் எண்ணிக்கை இருந்தால் ஒரு கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைக்கலாம் ?

(ஆ) கால்நடை மருந்தகத்திற்கு மருத்துவப் பெருமனை அமைத்திட எவ்வளவு கால்நடைகள் ஊரில் இருக்க வேண்டும் என்ற வரையறை உள்ளதா ?

(இ) இல்லையெனில் அப்படி வரையறையை அரசு உருவாக்குமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, (அ) இனவிருத்திக்கு ஏற்ற வயதுக்கு வந்த பசுக்களும்/எருமைகளும் 1000-க்கு குறையாமல் இருக்கும்போது நிதி நிலைக்கு ஏற்ப கிளை நிலையம் தொடங்கப்படுகிறது.

(ஆ) பொதுவாக கால்நடை மருந்தகந்தான் மருத்துவ மனையாக தரம் உயர்த்தப்படுகின்றது. அப்படி தரம் உயர்த்த கீழ்க்கண்ட வரைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன:—

(1) அந் நிலையத்திற்கு சிகிச்சை பெறும் கால்நடைகளின் தினசரி வருகை 50-க்கு மேல் இருக்க வேண்டும்.

(2) அந் நிலையம் அரசுக்கு சொந்தமான மனையில் அரசினால் கட்டப்பட்ட நிலையமாக இருக்க வேண்டும்.

(3) உள்நோயாளிகள் கூடம் அமைப்பதற்கும் நிலையப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டவும் பிற்காலத்தில் விரிவாக்கத்திற்கும் தேவையான இடவசதி இருக்க வேண்டும்.

(4) மருத்துவ மனை மற்றும் குடியிருப்புகளின் தேவைக்கு ஏற்ற தண்ணீர் வசதி இருக்க வேண்டும்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 நவம்பர் 16]

கீரமங்கலத்தில் திருமண மண்டபம்.

138— (*வினா எண். 8157) திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதி கீரமங்கலத்தில் மெய் நின்றநாத சுவாமி திருக்கோவிலில் திருமண மண்டபம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இத் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டுவதற்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் 2–12–1981-ல் ரூ. 1,32,000-க்கு நிர்வாக அனுமதியும், 4–12–1981-ல் மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திருமண மண்டபம் கட்ட இத் திருக்கோயிலுக்கு முன்பு இதற்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லாத காரணத்தால், புறம்போக்கு இடத்தை திருக்கோயில் பெயருக்கு பட்டா பெற அக்கோயில் செயல் அலுவலரால் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 7–6–1981-ல் எழுதப்பட்டுள்ளது. ஆனால் பட்டா இதுவரை கிடைக்கப் பெறவில்லை. திருமண மண்டபம் கட்ட தேவையான புறம்போக்கு நிலம் இத் திருக்கோயிலின் பெயரில் மாற்றப்பட்டு பட்டா அளிக்கப்பட்ட பின்னர்தான் திருமண மண்டபம் கட்ட வாய்ப்புள்ளது.

செங்கோட்டையில் பால் பதனிடும் தொழிற்சாலை.

139— (*வினா எண். 9190) திரு. செ. பெருமாள்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம் செங்கோட்டையில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, தற்போது நெல்லையில் உள்ள ஐம்பதினாயிரம் லிட்டர் திறன் கொண்ட பால் பதனிடும் நிலையம் ஒரு இலட்சம் திறன் கொண்டதாக விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதால் மேலும் செங்கோட்டையில் ஒரு பால் பதனிடும் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியமில்லை.

[1987 நவம்பர் 16

விளவங்கோடு தாலுகாவில் சப்-ஸ்டேஷன் அமைத்தல்.

140—(* வினா எண். 13746) திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தாலுகாவில் மின்னழுத்தக் குறைவை நிவர்த்திக்க சப்-ஸ்டேஷன் அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது ?

(ஆ) இப்பணிக்காக அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) குழித்துறையில் 10 மெகாவோல்ட் ஆம்பியர் திறன் கொண்ட ஒரு மின்மாற்றியுடன் கூடிய ஒரு 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தினை 1989 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் இயக்கிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

(ஆ) குழித்துறை 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் நிறுவுவதற்கான திட்டத்தொகை ரூ. 93.02 இலட்சம், 1988—89 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும்.

கரிம்பேட்டில் திருமண மண்டபம் கட்டுதல்.

141—(*வினா எண். 13749) திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கரிம்பேடு அருள்மிகு நாதாளீஸ்வரர் ஆலயத்தில் திருமண மண்டபம் கட்டிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, செங்கல்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கரிம்பேடு அருள்மிகு நாதாளீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமாக திருமண மண்டபம் கட்டப்பட்டு, அது 1—7—1986 முதல் வாடகைக்கும் விடப்பட்டு வருகிறது.



1987 நவம்பர் 16]

அரிசன மக்களுக்கு வீடு கட்ட இடம்.

142—(*வினா எண். 4321) திரு. அ. நடராசன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி மதுக்கரை மட்டைசாளை பகுதியில் குடியிருக்கும் அரிசன மக்கள் 133 பேர் வீட்டு இடம் கேட்டு விண்ணப்பித்து உள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வீட்டு இடம் தரப்படும் ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மதுக்கரை கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்கத் தேவையான நிலம் கையகப்படுத்த முன் மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாட்டில் கட்டப்படும் ஆதி திராவிடர்கள் வீடுகளின் வடிவமைப்பை மாற்றுதல்.

143—(*வினா எண். 14150) டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கட்டப்படும் ஆதி திராவிடர்கள் வீடுகளின் வடிவமைப்பை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஆதி திராவிட நலத்துறை மூலம் நடைபெற்றுவரும் உயர்நிலைப் பள்ளிகள்.

144—(*வினா எண். 15261) திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அளவில் ஆதி திராவிட நலத்துறை மூலம் நடைபெற்று வரும் உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) ஆதி திராவிட நலத்துறை மூலம் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, (அ) 54 உயர்நிலைப் பள்ளிகள். (இதில் உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளிகள் மூன்றும் அடங்கும்.)

(ஆ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்.

## தஞ்சை நகரில் நீச்சல்குளம் கட்டுதல்.

1— வினா 709— திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை நகரில் நீச்சல் குளம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூரில் ரூ. 8.00 இலட்சம் மதிப்பீட்டில் நீச்சல் குளம் கட்ட அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இந்நீச்சல் குளத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

## தவசிமேடை வடுகம்பட்டியில் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்.

2— வினா 1944— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி சாணார்பட்டி ஒன்றியம், தவசிமேடை வடுகம்பட்டியில் ஆற்றின் குறுக்கே கட்டியுள்ள பாலம் பழுதடைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பாலம் பழுது பார்க்க அரசு முன்வருமா?



விடை—

(அ) இல்லை.

(ஆ) சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தவசிமேடை ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச் சாலையின் நீளம் 1.0 கி.மீ. ஆகும். இதில் கி.மீ. 0/2ல் 1981–82ல் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ரூ. 30,000 மதிப்பீட்டில் ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது. பாலம் கட்டப்பட்டுள்ள பகுதி நல்ல நிலையில் உள்ளது. பழுதுகள் ஏதுமில்லை. ஆனால் தரைப்பாலத்தின் இரு பக்கமும் உள்ள அணுகு சாலைப் பகுதிகள் மழைக்காலங்களில் அதிக நீர் வரத்தினால் அரிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே தவசிமேடை வடுகம்பட்டியில் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் பணியினை 1986–87-ல் இணைப்புச் சாலை மானியத்தில் கீழ் எடுத்துச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## மதனத்தூர் பிரிவு பொன்னேரி கால்வாயை நவீனப்படுத்தும் திட்டம்.

3— வினா 2830— திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் உப கோட்டம், மதனத்தூர் பிரிவு பொன்னேரி கால்வாயினை நவீனப்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) பொன்னேரி கால்வாய் தலைப்பில் (டெப்டாம்) கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) திருச்சி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம் கொள்ளிடம் இடது கரையில் பிரியும் பொன்னேரி மெயின் வாய்க்கால் மற்றும் பொன்னேரி கிளை வாய்க்கால்களையும் மேம்பாடு செய்வதற்காக சுமார் ரூ. 4.97 இலட்சத்துக்கான மதிப்பீடு தென்னாற்காடு வட்டக் கண்காணிப்புப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) பொன்னேரி மெயின் வாய்க்காலின் தலைப்புக்கு கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு வலது கரையில் நான்கு கிராயின்கள் கட்டுவதற்கு ரூ. 7.00 லட்சத்திற்கு மேற்காணும் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. எனவே தனியே படுகை அணை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

## கல்லாற்று அருகே ஏரி கட்டும் திட்டம்.

4—வினா 2890—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் ராமநாய்க் கன்பாளையத்திற்கு வடக்கே கல்லாற்று அருகே ஏரி கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இத்தகைய திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மற்றும் (இ). இக்கேள்விகளுக்கு இடமில்லை.

## மதுரை மாவட்டத்திலுள்ள மூலிகைப் பண்ணையிலிருந்து மூலிகைகள் ஏற்றுமதி.

5—வினா 3664—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட மூலிகைப் பண்ணையிலிருந்து வெளி நாடுகளுக்கு மூலிகைகள் ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தமிழ்நாடு மூலிகைப் பண்ணைக் கழகத்தின் சார்பில் மதுரை மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை ஏதும் தற்சமயம் அமைக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



## வரதட்சணை கொடுமையால் வாழ்வு பாழ்படுத்தப்பட்டுள்ள பாவையர் எண்ணிக்கை.

6—வினா 3729—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980-84 வரை வரதட்சணை கொடுமையால் வாழ்வு பாழ்படுத்தப்பட்டுள்ள பாவையர் எண்ணிக்கை என்ன?

(ஆ) அதில் பலியானவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

(அ) 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை வரதட்சணைக் கொடுமையால் வாழ்வு பாழ்படுத்தப்பட்டுள்ள பாவையர் எண்ணிக்கை மொத்தம் 49 பேர்.

(ஆ) அதில் பலியானவர்கள் எண்ணிக்கை மொத்தம் 30 பேர் ஆகும்.

## நத்தம் ஒன்றியத்தின் கீழுள்ள சாலைகளில் மெட்டல் போடுதல்.

7—வினா 4433—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியத்தின் கீழ் உள்ள சாலைகளில் மெட்டல் ரோடு போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

நத்தம் ஊராட்சி ஒன்றியத்தில், பாலப்ப நாய்க்கன்பட்டி இராசகோபாலபுரத்திற்கு மட்டும் சாலை அமைக்க 1986–87-ல் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் (ரூ. 4.50 லட்சம் உத்தேச மதிப்பீடு) எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்ற சாலைகளில் மெட்டல் போடுவதற்கு சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

நாரைக் கிணறு அருகில் பெரிய ஆற்று ஓடையின் குறுக்கே கசிவு நீர்க்குட்டை கட்டும் பணி.

8—வினா 4697—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள நாரைக்கிணறு அருகிலுள்ள பெரிய ஆத்து ஓடையின் குறுக்கே கசிவு நீர்க் குட்டை கட்டும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவாக கட்ட நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) சேலம் மாவட்டம், நாரைக்கிணறு அருகில் பெரிய ஆத்து ஓடையில் குளம் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசு ஒப்புதல் அளித்ததும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

1984-85-ல் சந்தனக் கட்டை திருட்டு வழக்கில் வழக்கு பதிவு செய்யப்பட்டோர்.

9—வினா 4701—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் 1984—85 ஆம் ஆண்டில் சந்தனக் கட்டை திருட்டு வழக்கில் எத்தனை பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) சந்தனக் கட்டை திருட்டு வழக்கை கண்டுபிடித்து முன்பு போல் காம்பவுண்டு முறையை கொண்டுவர அரசு பரிசீலனை செய்யுமா?

(இ) சந்தனமர திருட்டு வழக்கு எத்தனை நிலுவையில் உள்ளது?

விடை —

(அ) 891 பேர்கள்.

(ஆ) சந்தனமர திருட்டு வழக்கை கண்டுபிடித்து முன்பு போல் காம்பவுண்டு, முறையை கொண்டு வருவதற்கான பிரேரணைகள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(இ) 1,[illegible] வழக்குகள்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆலயங்களின் அருகிலுள்ள கடற்கரை பகுதியை பொதுவான புனித இடமாக அறிவித்தல்.

10—வினா 4810—திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமையை நிரந்தரமாக சீராக்கிப் பேண கன்னியாகுமரி, மண்டைக்காடு, கூட்டாலுமூடு, கொல்லன்கோடு, ஆகிய தேவி ஆலயங்களின் அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் இரண்டு கிலோ மீட்டர் தூரப் பகுதியைப் பொதுவான புனிதமான இடமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அறிவிக்கப்படும் ?

விடை—

(அ) அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

பாரப்பட்டி ஆதி திராவிடர்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

11—வினா 5177—திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் பாரப்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

விடை—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம் பாரப்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்புக்கு, ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்— ஓலப்பட்டி-பாரப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளது. 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியும், ஆறு பொதுக் குழாய்களும் இக் குடியிருப்பில் அமைக்கப் பெற்று, கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் குடிநீர் வழங்கப் பெற்று வருகிறது.

[1987 நவம்பர் 16

**நரியனூரில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை குடிநீர்த் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம்.**

12—வினா 5185—திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் பள்ளிப்பட்டி கிராமம் நரியனூரில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை குடிநீர்த் தொட்டி மூலம் குடிநீர் விநியோகிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

(இ) அதை சரி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): இத் திட்டத்திற்கென அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணறு பொய்த்து விட்டமையால் மேல்மட்ட நீர்த் தொட்டிக்கு நீரை ஏற்ற முடியவில்லை. மறுநீர் ஆதாரம் அமைப்பதற்கான நில இயல் ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. 31–12–1986-க்குள் மறுநீர் ஆதாரம் அமைக்கப்பட்டு திட்டம் பயன் பெறும் வகையில் முடிக்கப்படும்.

**புக்கம்பட்டி கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

13—வினா 5190—திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் புக்கம்பட்டி கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆரம்பப் பணிகள் துவக்கப்பட்டுவிட்டனவா?

(ஆ) அந்தத் திட்டம் எப்போது முடிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): இல்லை. சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியத்தைச் சேர்ந்த புக்கம்பட்டி குடியிருப்பு வகை 6-ல் இருந்து 3-க்கு மாற்றப்பட வேண்டும். மேலும் இக்குடியிருப்பு நடப்பு நிதியாண்டில் ஊரகக் குடிநீர்த் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இடம் பெறவில்லை. இக்குடியிருப்பு வகை மாற்றம் செய்யப்பட்டு, இக் குடியிருப்புக்கென ஒரு குடிநீர்த் திட்டத்தினை அமுல்படுத்த, 1987–88-ல் நடவடிக்கை எடுக்கப்படும்.



1987 நவம்பர் 16]

**சென்னை மாநகரில் குடிநீர்க் குழாய்கள் அமைக்காத பொதுத் தெருக்களின் எண்ணிக்கை.**

14—வினா 5419—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் குடிநீர்க் குழாய்கள் அமைக்காத பொதுத் தெருக்கள் எத்தனை?

(ஆ) குடிநீர்க் குழாய்கள் அமைத்துத்தர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) 486.

(ஆ) நடப்பு ஆண்டில் (1986–87) 32 தெருக்களுக்கு குடிநீர்க் குழாய்கள் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தெருக்களுக்கும் குடிநீர்க் குழாய் வசதிகள் அமைக்க வரும் ஆண்டுகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றிய விவசாயிகளுக்கு விளாங்காடு மின் இறவைப் பாசனம் மூலம் தண்ணீர் அளித்தல்.**

15—வினா 6470—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் விளாங்காடு, மங்களநாயகிபுரம் விவசாயிகளுக்கு 420 ஏக்கர் விளாங்காடு மின் இறவை பாசனத்தால் தண்ணீர் இறைத்துக் கொடுக்காமல் இரண்டாண்டு காலமாக நிலம் தரிசாகக் கிடப்பதாக அரசுக்கு கோரிக்கை மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு இதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) அத்தகைய கோரிக்கை மனு ஏதும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 நவம்பர் 16

### கிராமப்புற கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களுக்கு வெறிநோய் தடுப்பு மருந்து வழங்கல்

16—வினா 7712—திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக வெறிநோய் தடுப்பு ஊசி போடுவதற்கு, கிராமப்புற கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களுக்கு வெறி நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கிராமங்களில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக வெறி நோய்த் தடுப்பு ஊசி போடுவதற்கு கால் நடை மருத்துவக் கிளை நிலையங்களுக்கு வெறி நோய்த் தடுப்பு மருந்து இலவசமாக வழங்கும் திட்டம் ஏதுமில்லை.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணிக்க பொதுமக்கள் குழு நியமித்தல்.

17—வினா 7714—திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களை (I. R. D. P.) ஆய்வு செய்யவும் கண்காணிக்கவும் பொது மக்கள் குழு நியமிக்க அரசு ஆலோசித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்பட உள்ளது?

விடை—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட செயலாக்கத்தில் பயன் பெறுவோரும் பெருமளவில் ஈடுபாடு கொள்ளும் பொருட்டு கிராம பஞ்சாயத்து அளவிலும் வட்டார அளவிலும் இத்திட்ட செயலாக்கத்தை ஆய்வு செய்து ஆலோசனை வழங்க குழுக்களை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 16]

### குடவாசல் ஒன்றியத்தில் சாலைகளை மேம்பாடு செய்தல்.

18—வினா 7938—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம் வடுவக்குடி செருகுடி-கம்பூர் சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றிடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் குடவாசல் ஒன்றியம் வடுவக்குடி-செருகுடி சாலை (0/0—3/0 கி.மீ.) 1986–87 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 5.20 லட்சங்கள் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

19—வினா 7963—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம் புளியஞ்சேரி-விக்ரபாண்டியம்-சேதனிபுரம் சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம் புளியஞ்சேரி சேதனிபுரம் (சேந்தனாபுரம்) சாலை (0/0—3/0 கி.மீ.) மேம்பாடு செய்ய 1986–87-ல் ஊரக நில மற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 5.20 லட்சங்கள் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### யூகலிப்டஸ் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

20—வினா 8024—டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எங்கெங்கு யூகலிப்டஸ் எண்ணெய் தயார் செய்கிறார்கள்?

(ஆ) இதற்கான தனி தொழிற்சாலை உள்ளதா?

[1987 நவம்பர் 16

விடை—

(அ) தனியார் துறையில் கொடைக்கானல், நீலகிரி மலைப் பகுதிகளில் யூகலிப்டஸ் எண்ணெய் தயாரிக்கும் சிறு தொழிற் சாலைகள் உள்ளன. ஆனால், நீலகிரி பகுதியில் சின்கோனா துறை மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், யூகலிப்டஸ் எண்ணெய் காய்ச்சி வடித்தல் முறையில் உற்பத்தி செய்கின்றனர்.

(ஆ) வனத்துறைப் பொறுப்பில் இதற்கென தனியாகத் தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. இது ஒரு குடிசைத் தொழிலாகும். தனியாக தொழிற்சாலை என இயங்காமல் குடிசைத் தொழில் முறையில் தனியார் இந்த எண்ணெயை தயாரிக்கின்றனர்.

சிதம்பரம் நந்தனார் ஆண்கள் விடுதி மாணவர்களுக்கு அளிக்கப்படும் உணவு வகைகள்.

21— வினா 8056—திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் தொகுதியைச் சேர்ந்த சிதம்பரம் நந்தனார் ஆண்கள் விடுதியில் மாணவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உணவு வகைகள் சரியான முறையில் அளிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) காட்டுமன்னார் கோயில் தொகுதியைச் சேர்ந்த சிதம்பரம் நந்தனார் விடுதி மாணவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உணவு வகைகள் சரியான முறையில் வழங்கப்படவில்லையென்று புகார் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

சிலட்டூரில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம்.

22— வினா 8123—திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, அறந்தாங்கி வட்டம், சிலட்டூரில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 நவம்பர் 16]

காடம்பாறை அணைத் திட்டத்திற்கான மொத்தச் செலவு.

23— வினா 8393—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடம்பாறை அணைத் திட்டத்திற்கு ஆகியுள்ள மொத்தச் செலவு எவ்வளவு?

(ஆ) இதில் தனியார் ஒப்பந்தக்காரர்களுக்குத் தரப்பட்டுள்ளது எவ்வளவு?

விடை—

(அ) 1985–86 ஆண்டு முடிய செலவு ரூ. 144.27 கோடி.

(ஆ) ரூ. 44.92 கோடி.

குருந்தன்கோடு ஒன்றியத்திலுள்ள மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக மாற்றல்.

24— வினா 8532—திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், குருந்தன்கோடு ஒன்றியம் மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சோழிங்கநல்லூரில் பால் பண்ணை அமைக்கும் திட்டம்.

25— வினா 9003—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் அடங்கிய சோழிங்கநல்லூர் பேரூராட்சியில் பால் பண்ணை அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் திட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 510.79 இலட்சம்.

கோவில்பட்டியில் ஆதி திராவிட மாணவர் விடுதி ஏற்படுத்தல்.

26— வினா 9008—திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டியில் ஆதி திராவிட மாணவர் விடுதி ஏற்படுத்த அரசு குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கோவில்பட்டியில் ஏற்கெனவே 75 பேர்களைக் கொண்ட மாணவர் விடுதியும், 50 மாணவிகள் கொண்ட மாணவியர் விடுதியும் உள்ளன.

திருக்காட்டுப்பள்ளி-திருவையாறு மற்றும் திருக்காட்டுப்பள்ளி-கண்டியூர் சாலைகளை செப்பனிடும் பணி.

27— வினா 9146—திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்காட்டுப்பள்ளி-திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி-கண்டியூர் சாலைகளை இருபுறமும் அகலப்படுத்தி செப்பனிடும் பணி அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இரு சாலைகளையும் இரு வழித்தடமாக மேம்பாடு செய்வதற்கு சுமார் ரூ. 52.00 இலட்சம் தேவைப்படுகிறது. அரசின் நிதி பற்றாக்குறையின் காரணத்தால் மேற்கண்ட பணிகளை உடன் எடுத்துச் செய்ய இயலாது.



ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம்.

28— வினா 9172—திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட அரசு அனுமதி அளித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு எவ்வளவு தொகையில் கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள நடமாடும் அறுவை அரங்கம்.

29— வினா 9441—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள நடமாடும் அறுவை அரங்கத்தில் 1985–86 ஆம் ஆண்டில் எத்தனை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) நடமாடும் அறுவை அரங்க ஊர்தியின் மதிப்பு எவ்வளவு ?

விடை—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடமாடும் அறுவை அரங்கம் எதுவும் இல்லை. தஞ்சாவூரில் இராஜா மிராசுதார் மருத்துவமனையில் மட்டுமே, இரண்டு நடமாடும் கண் அறுவை சிகிச்சை பிரிவுகள் உள்ளன. ஒன்று மாநில அரசாலும், மற்றொன்று மத்திய அரசின் உதவியுடனும் நிறுவப்பட்டவையாகும். அவற்றின் மூலம் 1985–86ல் செய்யப்பட்ட கண் அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை 4,005 ஆகும்.

(ஆ) நடமாடும் கண் அறுவை சிகிச்சை ஊர்தியின் மதிப்பு ரூ. 1,19,172.85 ஆகும்.

[1987 நவம்பர் 6

### தோவாளை சாலையைப் புதுப்பிக்கும் திட்டம்.

30—வினா 9570—திரு. கோ. பெருமாள் பிள்ளை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி தொகுதி தோவாளை சாலை புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): தற்போது திட்டமேதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேற்படி சாலையை விரிவுபடுத்தி தார் தளமிட்டு சாலையில் குறுக்கிடும் சிறு பாலங்களை புதுப்பித்து பாதுகாப்பு வேலைகளை செய்து குடியிருப்பு பகுதிகள் குறுக்கிடும் இடத்தில் சாலையினை உயர்த்தி மேம்பாடு செய்ய சுமார் மொத்தமாக ரூ. 17.00 இலட்சம் தேவைப்படும். மேற்கண்ட சாலை பணி இதுவரையிலும் அரசின் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை.

### போளூர் தொகுதியிலுள்ள அருள்மிகு ரேணுகாம்பாள் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களுக்காக தங்கும் விடுதி கட்டுதல்.

31—வினா 9584—திரு. ஜே. இராஜாபாபு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி ஏ. கே. படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் வசதியில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) போளூர் அருகாமையிலுள்ள ஏ. கே. படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக கீழ்க்கண்ட மூன்று சத்திரங்கள் உள்ளன :—

(1) ஆதி-மூல சத்திரம் (8 அறைகளைக் கொண்டது).
(2) வையாபுரி சத்திரம் (3 அறைகளைக் கொண்டது).
(3) பரசுராமர் சத்திரம் (4 அறைகளைக் கொண்டது).

மேற்படி மூன்று சத்திரங்களும் நாள் ஒன்றுக்கு, அறை ஒன்றுக்கு ரூ. 10 வீதம் வாடகைக்கு விடப்படுகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 நவம்பர் 16]

### அரூர் நகரிலுள்ள மருத்துவமனை.

32—வினா 9587—திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் நகரில் ஆஸ்பத்திரி புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பழைய கட்டிடத்தில் முன்சீப் கோர்ட் நடத்த அனுமதி அளிக்கப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசு மட்டத்தில் அத்தகைய கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

### பச்சைமலையில் வைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள்.

33—வினா 9595—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் பச்சைமலையில் வைக்கபபட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் இயக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) சேலம் மாவட்டம் பச்சைமலையில் வைக்கப்பட்டுள்ள நான்கு தொலைக்காட்சிப் பெட்டிகளும் தற்போது ஒழுங்காக இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### திருப்பத்தூர் நகரில் நியாய விலை கடைகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் அமைத்தல்.

34—வினா 9614—திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் நகரில் உணவுப் பொருள் வழங்க நியாய விலைக் கடைகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுகிறது ?

விடை—

(அ) நியாயவிலைக் கடைகளில் காணப்படும் முறைகேடுகளைக் களைவதற்காக ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும், அது செயல்படும் முறையைக் கண்காணிப்பதற்காக ஒரு விழிப்புப் பணிக்குழு (Vigilance Committee) அமைப்பதென அரசு முடிவு செய்து, அத்தகைய குழுவை அமைப்பதற்கு ஆணையிட்டுள்ளது. திருப்பத்தூர் நகரில் உள்ள நியாயவிலைக் கடைகள் ஒவ்வொன்றிலும் விழிப்புப் பணிக்குழு உள்ளது.

(ஆ) இக்குழுக்கள் 1–7–1984 முதல் செயல்பட்டு வருகின்றன.

### திருப்பத்தூர் தொகுதியில் வழங்கப்பட்ட இலவச மனைப் பட்டாக்கள்.

35—வினா 9615—திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் 1985–86 நிதியாண்டில் கொடுக்கப்பட்ட இலவச மனைப்பட்டாக்கள் எவ்வளவு?

விடை—

திருப்பத்தூர் தொகுதியில் 1985–86 நிதி ஆண்டில் 1,048 இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### குடவாசல் ஒன்றியத்தில் அரசலாற்றின் குறுக்கே வண்டிப்பாலம் கட்டுதல்.

36—வினா 9729—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியத்தில் மணவாள நல்லூருக்கும் மருத்துவக்குடிக்கும் இடையே அரசலாற்றின் குறுக்கே ஒரு வண்டிப்பாலம் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

வினாவில் குறிப்பிடப்படும் சாலையில் வண்டிப்பாலம் அமைக்கும் இடத்திலிருந்து ஆற்றின் மேற்கே 6·00 கி.மீ. தூரத்தில் புதுக்குடியிலும், கிழக்கே 4·00 கி.மீ. தூரத்தில் திருவீழிமிழலையிலும் வாகனப் போக்குவரத்து நடைபெறும் வகையில் பாலங்கள் ஏற்கெனவே உள்ளதால் அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொள்ளும்போது இவ்விடத்தில் உடனடியாக பாலம் கட்டத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

### 1985–86-ல் புதிதாகப் போடப்பட்டுள்ள விசைத்தறிகள்.

37—வினா 9743—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1985–86-ல் புதிதாக விசைத்தறிகள் போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு போடப்பட்டுள்ளது (மாவட்ட வாரியாக)?

விடை—

(அ) விசைத்தறிகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் மைய அரசிடம் 30–4–1986 வரை இருந்துள்ளது. எனவே, தமிழ்நாட்டில் 1985–86ல் புதியதாக விசைத்தறிகள் ஏதும் போடப்பட்டமைக்கு அதிகார பூர்வமான விவரங்கள் அரசிற்கு வரப்பெறவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

### தஞ்சை மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளில் சித்த வைத்திய பிரிவுகள் ஏற்படுத்தல்.

38—வினா 9768—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் "சித்த வைத்திய பிரிவுகள்" ஆரம்பிக்கப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

(இ) செலவிட்ட தொகை எவ்வளவு?

[1987 நவம்பர் 16

விடை—

(அ) ஆம். 1972 ஆம் ஆண்டிலிருந்தே மாவட்டத் தலைமை மருத்துவமனை வட்ட மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையம், அரசினர் சித்த மருந்தகம் அரசினர் கிராம மருந்தகம் போன்றவைகளில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது :—

| | |
|---|---|
| (ஆ) மாவட்ட தலைமை மருத்துவமனை .. | நாகப்பட்டினம். |
| அரசு வட்ட மருத்துவ மனைகள். | கும்பகோணம்.<br>மன்னார்குடி.<br>புதுக்கோட்டை.<br>மாயவரம்.<br>திருவாரூர்.<br>திருத்துறைப்பூண்டி.<br>பேராவூரணி. |
| ஆரம்ப சுகாதார நிலையம். | ஆலங்குடி.<br>ஆக்கூர்.<br>அழகியநாயகிபுரம்.<br>கபிஸ்தலம்.<br>கோனுலம்பள்ளம்.<br>காளி.<br>நல்லூர்.<br>பட்டீஸ்வரம்.<br>பூந்தோட்டம்.<br>திருவீழிமிழலை.<br>தாமரங்கோட்டை.<br>தேவூர்.<br>தண்டாரம்பட்டு.<br>திருமருகன்.<br>உள்ளிக்கோட்டை.<br>மிலாத்தூர்.<br>அடியக்கா மங்களம். |
| அரசினர் சித்த மருந்தகம் | வாய்மேடு. |
| அரசினர் கிராம மருந்தகம். | வானதிராஜபுரம் கீழ்அணைக் கட்டு. |
| (இ) 1985–86க்கான செலவுத் தொகை. | 10,30,255.00 ரூபாய். |



1987 நவம்பர் 16]

**சென்னை நகரில் விளக்குகள் இல்லாத சுரங்கப்பாதைகள்.**

39—வினா 9873—திரு. கே. உச்சி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை நகரில் விளக்குகள் இல்லாத சுரங்கப்பாதைகள் எத்தனை ?

(ஆ) அவைகளுக்கு விளக்கு போட அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) சென்னை நகரில் விளக்குகள் இல்லாத சுரங்கப் பாதைகள் ஒன்றும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**தா. பழூர் ஒன்றியத்தில் சாலையை மேம்படுத்தும் திட்டம்.**

40—வினா 9930—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா. பழூர் ஒன்றியத்தில் ஸ்ரீபுரந்தான்-தா, பழூர் சாலையை மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இச்சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 15.00 இலட்சம் தேவைப்படும். அரசின் குறுகிய நிதி ஒதுக்கீட்டினால் இப்பணியை உடன் எடுத்துச் செய்ய இயலாது.

**ஜெயங்கொண்டம் தொகுதியில் சாலை சீர்படுத்தும் திட்டம்.**

41—வினா 9953—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா. பழூர் இடங்கண்ணி-அண்ணாங்காரன் பேட்டை—தென்கச்சிப் பெருமாள் நத்தம் சாலையை சீர்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா. பழூர் இடங்கண்ணி-அண்ணாங்காரன் பேட்டை—தென்கச்சிப் பெருமாள் நத்தம் சாலையை சீர்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் சாலைகளை செப்பனிட்டு மராமத்துச் செய்யும் பணி.

42—வினா 10124—திரு. ஜே. முகம்மதுகனி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் வீரடிப்பட்டி முதல் முதுகுளம் வரை சாலையை அகலப்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கிராமப்பணித் திட்டத்தின் கீழ் (Village Works Programme) சாலை மேம்பாடு பணிகளுக்கு இந்த ஆண்டு நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. சாலை சீரமைப்புப் பணிகளுக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதி ஒதுக்கீடு ஒரு வட்டாரத்திற்கு ரூ. 60,000 என இந்த ஆண்டு குறைந்த அளவு ஒதுக்கப்பட்டுள்ளதால், கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் வீரடிப்பட்டி முதல் முதுகுளம் வரை உள்ள சாலையை அகலப்படுத்தும் பணியினை எடுத்துச் செய்ய இயலவில்லை.

43—வினா 10130—திரு. ஜே. முகம்மதுகனி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை-கந்தர்வகோட்டை ஒன்றியங்களில் வாண்டான் பட்டி முதல் மங்கனூர் வரை, விராலிப்பட்டி முதல் திரானிப்பட்டி வரை, தச்சங்குறிச்சி முதல் சவுரியாப்பட்டி வரை ஆகிய சாலைகளை செப்பனிடவும் புதுப்பிக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கிராமப் பணித் திட்டத்தின் கீழ் (Village Works Programme) சாலை மேம்பாடு பணிகளுக்கு இந்த ஆண்டு நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. சாலை சீரமைப்புப்பணிகளுக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதி ஒதுக்கீடு ஒரு வட்டாரத்திற்கு ரூ. 60,000 என இந்த ஆண்டு குறைந்த அளவு ஒதுக்கப்பட்டுள்ளதால், மேற்படி சாலைகளை செப்பனிடுதல் மற்றும் புதுப்பிக்கும் பணியினை எடுத்து செய்ய இயலவில்லை.





44—வினா 10131—திரு. ஜே. முகம்மதுகனி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை யூனியன், கோமாபுரம் முதல் சமுத்திரப்பட்டி வரை, நாயக்கர்பட்டி முதல் ஆத்தாங்கரைப் பட்டி வரை, வெள்ளாள விடுதி முதல் ஆத்தாங்கரை விடுதி வரை, கல்லாகோட்டை முதல் சொக்கம்பேட்டை வரை, மோகனூர் முதல் விரடிப்பட்டி புதுரோடு வரை, விரடிப்பட்டி முதல் பட்டுக்கோட்டை ரோடு வரை மராமத்து செய்ய திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கிராமப் பணித் திட்டத்தின் கீழ் (Village Works Programme) சாலை மேம்பாடு பணிகளுக்கு இந்த ஆண்டு நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. சாலை சீரமைப்புப் பணிகளுக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதி ஒதுக்கீடு ஒரு வட்டாரத்திற்கு ரூ. 60,000 என இந்த ஆண்டு குறைந்த அளவு ஒதுக்கப்பட்டுள்ளதால் மேற்படி சாலைகளை மராமத்து செய்யும் பணியினை எடுத்துச்செய்ய இயலவில்லை.

## குருச்சி குளத்தில் சமுதாயக் கிணறு வெட்டும் பணி.

45—வினா 10134—திரு. ஜே. முகம்மதுகனி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை ஊராட்சி குருச்சிப்பட்டி கிராமம் குருச்சி குளத்தில் சமுதாய கிணறு வெட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

[1987 நவம்பர் 16

### சேலம் நகரில் சலவைத்துறை கட்டுதல்.

46—வினா 10211—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் சலவைத்துறை கட்ட அடிக்கல் நாட்டப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அது இன்னும் கட்டி முடிக்கப்படாததை அரசு அறியுமா ?

விடை—

(அ) சேலம் நகரில் சலவைத்துறை கட்ட சமீபத்தில் அடிக்கல் ஏதும் நாட்டப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### பெரியகுளத்தில் மேல்நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம்.

47— வினா 10245—டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்தில் மேலும் ஒரு மேல்நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சுவையூட்டப்பட்ட பாலை அட்டை டப்பாக்களில் நிரப்பி விற்பனை செய்தல்.

48— வினா 10255—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுவையூட்டப்பட்ட பாலை அட்டை டப்பாக்களில் நிரப்பி விற்பனை செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



1987 நவம்பர் 16]

(ஆ) அதற்கான தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ,

விடை—

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் இவற்றிற்கான இயந்திரங்களை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்து வருகின்றது.

### உடுமலை-பல்லடம் சாலையை செப்பனிடுதல்.

49—வினா 10269—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை-பல்லடம் சாலையை தார்ச் சாலையாக செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கும் ,

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடும் சாலையில் கி.மீ. 50/0—61/0 வரையுள்ள பகுதியில் 1983—84ஆம் ஆண்டு பாகம் இரண்டு திட்டத்தின் கீழ் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் சிறப்பு பராமரிப்பு நிதியின் கீழ் கி.மீ. 5/0—6/0 மற்றும் 47/2—50/0 வரையிலும் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளில் அவ்வப்பொழுது ஏற்படும் நொடிகளை சரிசெய்து தார் தளம் போட்டு ஆண்டு பராமரிப்பு நிதியின் கீழ் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### கோவை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் பிணப் பரிசோதனைக்காக புதிய நவீனக் கருவிகள் வழங்கும் திட்டம்.

50—வினா 10289—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள சவக் கிடங்கில் பிணப் பரிசோதனை செய்ய புதிய நவீன கருவிகளை வழங்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

[1987 நவம்பர் 16

விடை—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள சவக் கிடங்கில் பிணப் பரிசோதனை செய்ய நவீன கருவிகள் வழங்கும் திட்டம் நடப்பு நிதியாண்டில் (1986—87) இல்லை.

கோணப்பட்டி மக்களுக்கு குடிநீர் வழங்கல்.

51 வினா 6912—திரு. மெ. ஆண்டிஅம்பலம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் திண்டுக்கல் தாலுகா, கோணப்பட்டி கிராம கஸ்பாவில் குடியிருக்கும், கோணப்பட்டி தெற்குத் தெரு மக்களுக்கு குடிநீருக்காக மேலும் ஒரு அடி போரிங் பைப் போட்டுத்தர அரசு முன்வருமா ?

விடை—

அண்ணா மாவட்டம், திண்டுக்கல் தாலுகா, கோணப்பட்டி கிராம கஸ்பாவின் தற்போதைய மக்கட் தொகை 150 ஆகும். இக்கிராமம் வகை எண் 6-லிருந்து 3—ற்கு வகை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் சாணார் பட்டி ஊராட்சி ஒன்றியம், கோணப்பட்டி கிராமக் குடிநீர்த் திட்டத்துக்கான நீர் ஆதாரம் உருவாக்கும் பணியும், மதிப்பீடு தயாரித்தல் மற்றும் ஒப்பளிப்பு பணியும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மேற்படி குடிநீர்த் திட்டம் மார்ச் 1987-க்குள் முடிக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. திட்டம் செயல்ாக்கத்திற்கு வரும்போது தெற்குத் தெருவில் ஒரு பொதுக் குழாய் மேற்படி திட்டத்திலிருந்து அமைத்துக்கொடுக்கப்பெறும்.

தஞ்சை பெரிய கோவிலில் நாட்டியங்கள் நடத்தல்.

52—வினா 7116—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை பெரியகோவிலில் நாட்டியங்கள் நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்படும் ?



1987 நவம்பர் 16]

விடை—

(அ) தஞ்சை பெரிய கோவில் மாநிலத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. மைய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் வரலாற்றுச் சின்னமாக உள்ளது. இங்கு நாட்டிய நாடகம் நடத்த மத்திய தொல் பொருள் ஆய்வுத் துறையே அனுமதி வழங்க வேண்டும். இதன் அனுமதி பெற்றே இராஜ ராஜ சோழனின் 1000ஆவது முடிசூட்டிய ஆண்டு விழாவின்போது தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் இங்கு நாட்டிய நாடகம் நடத்தப் பெற்றது.

(ஆ) மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ் வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்கப்படுகின்ற புகழ்வாய்ந்த கஜுராஹோ போன்ற கோயில்களில் நாட்டிய நாடக நிகழ்ச்சிகள் நடத்த சின்னத்தை ஒட்டிய வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு அனுமதி அளிப்பதுபோல், இராஜ ராஜ சோழனின் வரலாற்றை ஒட்டி நிகழ்ச்சி அமையுமானால் அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு கால்நடை கிளை நிலைய ஆய்வாளர்களுக்கும் மருந்தக மருத்துவர்களுக்கும் குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

53—வினா 7539—திரு. சோ. ரகுபதி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கால்நடை கிளை நிலையங்களில் பணிபுரியும் ஆய்வாளர்களுக்கும், மருந்தகங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கும் குடியிருப்பு இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், குடியிருப்புகள் கட்ட திட்டம் ஏதேனும் உண்டா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சில அரசு கால்நடை கிளை நிலையங்களிலும் மற்றும் மருந்தகங்களிலும் பணிபுரியும் ஆய்வாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும் குடியிருப்புகள் ஏற்கனவே கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள கால்நடை கிளை நிலையங்களிலும், மருந்தகங்களிலும் பணிபுரியும் ஆய்வாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும் குடியிருப்புகள் கட்ட தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், வறட்சி நிவாரணப்பணித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் முதலிய பல திட்டங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் கால்நடை மருந்தகங்கள் தரம் உயர்த்தப்பட்டு, மருத்துவமனைகளாக ஆக்கப்படும்பொழுது அங்கு குடியிருப்புகள் கட்ட, தற்பொழுது திட்டப் பணியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1987 நவம்பர் 16

சங்ககிரி வட்ட கிராமப் பகுதிகளில் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கல்.

54—வினா 8270—திரு. ச. கோவிந்தசாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், பூலாம்பட்டி நெடுங்குளம், வெள்ளரி வெள்ளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கருவ ரெட்டியூர், புதுப்பட்டி, காட்டூர் ஆகிய பகுதிகளின் பாசன கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

31–12–1985 வரை சேலம் மாவட்டத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பிற்காக 40,359 மனுக்கள் நிலுவையில் உள்ளன. இதில் 31–3–1978–க்கு முற்பட்ட விண்ணப்பங்கள் 5,234 ஆகும். 1986–87-ல் 4,486 பம்புசெட்டுகளுக்கு இணைப்பு தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 31–3–1978-க்கு முன் மனு செய்யப்பட்ட விவசாய பம்பு செட்டுகளுக்கான 78 விண்ணப்பங்கள் பூலாம்பட்டி, நெடுங்குளம், வெள்ளரி வெள்ளி ஆகிய கிராமங்களிலுள்ள கருவரெட்டியூர், புதுப்பட்டி, காட்டூர் ஆகிய பகுதிகளில் உள்ளன. இந்த 78 மனுக்களில் 15–9–1986 நிலவரப்படி 25 மனுதாரர்கள் தங்கள் தயார் நிலையைப் பதிவு செய்து உள்ளனர். ஆகவே, இந்த 78 மனுதாரர்களில் தயார் நிலையைப் பதிவு செய்யவரும் மனுதாரர்களுக்கு 31–3–1987-க்குள் மின் இணைப்பு தரப்படும்.

உசிலம்பட்டி, செல்லம்பட்டி ஒன்றியப் பகுதிகளில் நிரந்தர குடிநீர் வழங்கும் திட்டம்.

55—வினா 8286—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி மற்றும் செல்லம் பட்டி ஒன்றியப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிரந்தர அடிப்படையில் குடிநீர் வழங்க அரசு திட்டம் ஏதும் வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



1987 நவம்பர் 16]

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் உசிலம்பட்டி பேரூராட்சிக்கான குடிநீர்த் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. இதற்கிடையில் ஒரு முன்னோடி குடிநீர்த் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் உசிலம்பட்டி மற்றும் செல்லம்பட்டி ஒன்றியங்களில் உள்ள வகை 1 முதல் வகை 5-ன் கீழ் வரும் குடியிருப்புகளுக்கு ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது இந்த இரண்டு ஒன்றியங்களிலும் பிரச்சினையுள்ள குடியிருப்புகள் குறித்து ஆய்வுகள் நடைபெற்று, அவற்றினை வகை மாற்றம் செய்வதற்கான பிரேரணைகள் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன. அவை ஏற்கப்பட்ட உடன் இக்குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருவில்லிபுத்தூர் அருகே காடுகளில் சந்தன மரங்கள் திருட்டை தடுக்கும் நடவடிக்கை.

56—வினா 8309—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் அருகே உள்ள காடுகளில் சந்தனமர திருட்டு அதிகரித்துள்ளதாக அரசுக்கு தகவல் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், திருட்டை தடுப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

(அ) மற்றும் (ஆ) 3–1–86 அன்று ஒரே ஒரு சந்தனமரத் திருட்டு வெட்டுக்குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். வழக்கு நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளது. மேற்படி குற்றம் தொடர்பாக அம்பாசிடர் ஊர்தியும் ரூ. 10,000 மதிப்புள்ள 106·300 கிலோ எடையுள்ள சந்தனக் கட்டைகளும் கைப்பற்றப்பட்டன. இது தவிர திருவில்லிப்புத்தூர் வனச் சரகத்தில் உள்ள காடுகளில் சந்தன மரத் திருட்டு அதிகரித்துள்ளதாக எவ்வித தகவலும் இல்லை.

[1987 நவம்பர் 16

## 1986 உள்ளாட்சித் தேர்தலில் மாநிலத்திலுள்ள மொத்த வாக்காளர்கள்.

57—வினா 8439—மாண்புமிகு பேராசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984 பொதுத் தேர்தலில் மாநிலத்தில் மொத்த வாக்காளர்கள் 3.09 கோடியாக இருந்தது. 1986 உள்ளாட்சித் தேர்தலில் மாநிலம் முழுவதும் மொத்த வாக்காளர்கள் 2·6 கோடியாக குறைந்துள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1984-ல் பொதுத் தேர்தலுக்கான வாக்காளர்களின் எண்ணிக்கை 3.09 கோடி. பொதுத் தேர்தல்களில், மாநிலம் முழுவதிலுமுள்ள வாக்காளர்கள் வாக்களிக்கிறார்கள். ஆனால், ஊராட்சித் தேர்தல்களில் மாநிலம் முழுவதிலுமுள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதில்லை. ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றில் உள்ள வாக்காளர்கள் மட்டுமே ஊராட்சித் தேர்தல்களில் வாக்களிக்கிறார்கள். ஊராட்சித் தேர்தல்களுக்கு மாநிலத்திலுள்ள 98 நகராட்சிகள் 8 நகராட்சி நகரியம் மற்றும் சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய 3 மாநகராட்சிகளிலுள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதில்லை. ஆகவே, 1986 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊராட்சித் தேர்தல்களுக்கு, ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் மட்டிலும் உள்ள வாக்காளர்கள் எண்ணிக்கை சுமார் 2.6 கோடி.

## ஜெயங்கொண்டம் தொகுதியில் இராம சாலைகள் திட்டத்தின் கீழ் சாலை அமைத்தல்.

58—வினா 8821—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள ஜெயங்கொண்டம், காட்டுமன்னார்குடி சாலை, கல்லாத்தூர், வெத்தியார்வெட்டு சத்திரம், குண்டவெளி வழியாக கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் சாலைபோடும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இது பற்றிய செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை. இந்த சாலையின் சரியான பெயர் கல்லாத்தூர்-மீன்சுருட்டி சாலையாகும். இது 16.2 கி.மீ. நீளமுடைய ஓர் ஊராட்சி ஒன்றியச்



1987 நவம்பர் 16]

சாலையாகும். இச்சாலையை தார் சாலையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 35 இலட்சம் தேவைப்படும். இச்சாலையை கிராமச் சாலை திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய இயலாத நிலை உள்ளது. இனி வரும் ஆண்டுகளில் பகுதி 2 திட்டத்தின் கீழ் இப்பணியை எடுத்துச் செய்வது பரிசீலிக்கப்படும்.

## அரூரிலுள்ள பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம்

59—வினா 9588—திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூரில் பொதுப்பணித்துறையின் நிர்வாக இன்ஜினியர் (அணைத்திட்டம்) அலுவலகம் கலைக்கப்பட்டு விட்டது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அலுவலகம் வேறு எந்த துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது?

(இ) வாடகை கட்டிடங்களில் இயங்கும் இலாகாக்களுக்கு மேற்படி கட்டிடத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வாணியாறு கோட்டம் கலைக்கப்பட்டவுடன் நாகாவதி நீர்த் தேக்கத் திட்ட கோட்டத்தை சார்ந்த ஈச்சம்பாடி உபகோட்டம் மற்றும் ஈச்சம்பாடி பிரிவு அலுவலகமும் தற்பொழுது அந்த அலுவலகத்தில் இயங்கி வருகிறது. மேலும் கலைக்கப்பட்ட வாணியாறு, ஈச்சம்பாடி தும்பலஹள்ளி மற்றும் பாம்பாறு உபகோட்டத்தை சார்ந்த ஆவணங்கள் அனைத்தும் வைக்கப்பட்டுள்ளன.

(இ) பொதுப்பணித்துறையைச் சார்ந்த நாகாவதி திட்ட கோட்டத்தின்கீழ் இயங்கிவரும் ஈச்சம்பாடி உபகோட்டம் மற்றும் பிரிவு அலுவலகங்கள் இக்கட்டிடத்தில் இருந்து வருகின்றன. எனவே, வாடகைக் கட்டிடங்களில் இயங்கும் மற்ற இலாக்கா அலுவலகங்களுக்கு ஒதுக்க இயலாது என்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

[1987 நவம்பர் 16

விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக்கோரி விண்ணப்பித்த ஆதி திராவிடர்கள் எண்ணிக்கை

60— வினா 9601திருமதி. தா. இராசாம்பாள்: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு பெற வேண்டிய ஆதி திராவிட விண்ணப்பதாரர்கள் மாவட்ட வாரியாக எவ்வளவு பேர் இருக்கின்றார்கள் ?

(ஆ) இவர்கள் முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு சாதாரணமாக விண்ணப்பித்த தேதிபடி வழங்கப் படுகிறது. இதில் 4 லட்சம் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. இதில் ஆதி திராவிட விண்ணப்பதாரர்கள் எத்தனை பேர் என்பது தெரியவில்லை. ஆதி திராவிடர்களுக்கு என்று சிறப்பு முன்னுரிமை ஏதும் கிடையாது. எனவே மாவட்ட வாரியாக ஆதி திராவிடர்களின் விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் நிலுவைப்பட்டியல் ஏதும் தற்சமயம் இல்லை.

நீலகிரி மாவட்டத்தில் தேசியப்பணித்திட்டம் செயல்பட்டு வரும் மேல்நிலைப் பள்ளிகள்

61 —வினா 9911:திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நீலகிரி மாவட்டத்தில், தேசியப் பணித் திட்டம் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் செயல்பட்டு வருகிறதா ?

(ஆ) இத்திட்டத்தில் 1985–86 ஆம் ஆண்டில் பங்கு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) மொத்தச் செலவு எவ்வளவு?

விடை—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள மொத்தம் 27 மேல்நிலைப் பள்ளிகளில் 12 மேல்நிலைப் பள்ளிகளில் மட்டுமே நாட்டு நலப்பணித்திட்டம் செயல்பட்டு வருகின்றது



19о7 நவம்பர் 16]

(ஆ) இத்திட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் பள்ளிக்கு 50 மாணவ, மாணவிகள் வீதம் 12 பள்ளிகளிலும் 600 மாணவ மாணவிகள் பங்கு பெற்றுள்ளனர்.

(இ) ஒரு பள்ளிக்கு ரூ. 2,250 வீதம் 12 பள்ளிகளுக்கு மொத்தம் ரூ. 27,000 செலவு செய்யப்பட்டுள்ளது.

இரவு நேரப் பயணிகள் வசதிக்காக ஆவின் சுடுபால் விற்பனை நிலையங்கள் துவக்குதல்.

62— வினா 10022—திருமதி. தா. இராசாம்பாள்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரவு நேரப் பயணிகளின் வசதிக்காக மாமண்டூர், திண்டிவனம், விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, தொழுவூர், கொட்டாம்பட்டி, கயத்தாறு, ப. கூட்டுரோடு ஆகிய இடங்களில் ஆவின் சுடுபால் விற்பனை நிலையங்களை துவக்க உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்,

விடை—

(அ) இல்லை.

(ஆ) திண்டிவனம் பால் நுகர்வோர் சங்கம் திருவள்ளுவர் பேருந்து நிலையத்தில் இரவு நேர பயணிகளின் வசதிக்காக ஒரு விற்பனை நிலையத்தை அமைத்துள்ளது. மேலும் சிதம்பரனார் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் கயத்தாறு என்னும் இடத்தில் பயணிகளின் வசதிக்காக காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை ஒரு விற்பனை நிலையத்தை அமைத்துள்ளது.

வெள்ளைக்கல் பகுதி மக்களுக்கு தெருவிளக்கு, குடி தண்ணீர் வசதிகள் செய்து கொடுத்தல்.

63— வினா 10028 திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட வெள்ளைக்கல் பகுதி மக்களுக்கு தெருவிளக்கு, குடிதண்ணீர் போன்ற எந்தவித அடிப்படை வசதியும் செய்து கொடுத்திடக் கூடாது என மதுரை மாநகராட்சி கேட்டுக் கொண்டுள்ளதாகவும். அதன் பேரில் இந்த வெள்ளைக்கல் பகுதிக்கு செய்யப்படவேண்டிய அடிப்படைத் தேவைகள் கூட நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் உள்ள நிலை அரசின் கவனத்திற்கு வந்ததா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை வெள்ளைக்கல் பகுதி என்பது மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான கழிவுநீர் பண்ணை உள்ள பகுதியாகும். இப்பகுதி மதுரை மாநகராட்சிக்கு வெளியே உள்ள பகுதியாகும். கழிவு நீர்ப்பண்ணையில் புல்வளர்த்து பராமரிப்பதற்காகவும் புல் விற்பனை செய்வதற்காகவும் மாநகராட்சியால் தற்காலிக அடிப்படையில் குடியமர்த்தப்பட்டவர்கள் நிரந்தரமாக அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டு வெளியேறாமல் மாநகராட்சிக்கு இடையூறு செய்து வருகிறார்கள். அவர்களைச் சட்டப்படி வெளியேற்ற மதுரை மாநகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தண்ணீர் விநியோகம், மற்ற வசதிகள் தவிர புதிதாக எவ்வித வசதியையும் செய்வதில்லை என்று மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

பட்டுக்கோட்டை தொகுதி ஆலத்தூர் ஊராட்சி ஆரம்ப பள்ளிக்கு கட்டிட வசதி.

64— வினா 10101—திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள ஆலத்தூர் ஊராட்சியில் ஆரம்ப பள்ளியின் கட்டிடம் கடந்த வெள்ளத்தின் போது இடிந்து விழுந்து விட்டது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) அறியும்.

(ஆ) சுமார் 15 வருடங்களுக்கு முன் பொது மக்களால் பள்ளிக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட கீற்றுக் கட்டிடம் பழுதடைந்து 1983ஆம் வருட வெள்ளத்தில் கீழே சாய்ந்தது. பின்பு ஊராட்சி ஒன்றியத்தினரால் வெள்ள நிவாரணப் பணி அடிப்படையில் அந்தக் கீற்றுக் கட்டிடம் சரி செய்து கொடுக்கப்பட்டது. மேலும் அந்தக் கீற்றுக் கொட்டகை 1985 பெரு வெள்ளத்தில் மீண்டும் கீழே விழுந்து விட்டது. அதன் பின்பு ஊர் மக்கள் கீழே விழுந்த பொருட்களை பயன்படுத்தி வேறு இடத்தில் 40'X15' அளவில் ஒரு கீற்றுக் கொட்டகை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதில் 4 வகுப்புகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிக்கு நிரந்தர கட்டிடம் தர மதுக்கூர் ஊராட்சி ஒன்றிய ஆணையருடன் தொடர்பு கொள்ளப்பட்டு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.



வடகோவை இரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டுதல்.

65-வினா 10290 திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடகோவையில் இரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) இதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) மத்திய அரசின் உதவி எவ்வளவு?

(ஈ) எப்போது பணி தொடங்கும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சுமார் 215.00 இலட்சம் ரூபாய்.

(இ) 50 விழுக்காடு.

(ஈ) இப்பணிக்கான நேர்பாடு, நெடுஞ்சாலைத்துறையின் தரை வரைபடம், மதிப்பீட்டு விவரங்கள் மற்றும் இரயில்வே துறையின் தரை வரைபடம், மதிப்பீடு விவரங்கள் ஆகியவை இரயில்வே துறையின் இசைவிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவர்களது இசைவு வந்த பின்னர், விரிவான மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கி, ஒப்பந்தப் புள்ளிகள் கோரி ஒப்பந்த உடன்படிக்கை செய்யப்பட்ட பின்னர் மேற்படி இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

காட்டுமன்னார் கோயில் வருவாய்த்துறை புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளோர்.

66—வினா 10328—திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயில் நகர எல்லைக்குட்பட்ட மற்றும் காட்டுமன்னார் கோயில் தாலுக்காவில் வருவாய்த்துறைக்கு சொந்தமான புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து உள்ளவர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அதன் விவரம் என்ன?

[1987 நவம்பர் 16

(இ) இது சம்பந்தமாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை —

(அ) 340.

| | | |
|---|---|---|
| (ஆ) காட்டுமன்னார்கோவில் | .. | 243 |
| கோயில்பத்து | .. .. | 11 |
| திருமூலஸ்தானம் | .. .. | 5 |
| குப்பிள்ளை சாவடி | .. | 12 |
| இராஜேந்திர சோழகன் | .. | 69 |

(இ) இந்த 340 ஆக்கிரமிப்புகளில் தகுதியுள்ளவர்களுக்கு ஒப்படை முன் மொழிவுகள் தயாரிக்கப்பட்டு, பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆட்சேபணையுள்ள இனங்களில், ஆக்கிரமிப்புகளை காலி செய்ய 'பி' மெமோக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

### மசினகுடி மற்றும் மாயார் பகுதிகளுக்கு அதிகமாக மினி பேருந்து விடல்

67 —வினா 10355-திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், மசினகுடி மற்றும் மாயார் ஆகிய பகுதிகளுக்கு உதகை கள்ளட்டி பாதை வழியாக அதிக அளவு மினி பஸ் வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) தற்போது இல்லை. 6 மினி பஸ்கள் மேற்படி வழித்தடத்தில் நாளொன்றுக்கு 18 முறை இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

### சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் வருமானம்

68— வினா 10404—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயிலுக்கு 1985–86ஆம் ஆண்டு வருமானம் எவ்வளவு ?



1987 நவம்பர் 16]

(ஆ) திருக்கோயில் வருமானம் மூலம் 1985–86-ல் என்னென்ன சமுதாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

(இ) அவற்றிற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

(அ) மேற்படி கோயிலின் பசலி 1395ம் ஆண்டு வருமானம் ரூ. 16,20,047.00 ஆகும்.

(ஆ) சமுதாயப் பணியின் சிறப்பு அம்சம் எனக் கருதக் கூடிய ''அன்பு இல்லம்'' தொடர்ந்து 1985–86லும் நடத்தப்பட்டது. தற்போதும் இப்பணி தொடர்கிறது. புதிய சமுதாயப் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) ''அன்பு இல்லம்'' நடத்துவதற்காக 1985–86ல் ரூ. 62,250.67 செலவிடப்பட்டுள்ளது.

### தஞ்சை பெரிய கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள்

69— வினா 10432—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் ஸ்ரீபிரகதீஸ்வரர் பெரிய திருக்கோயிலுக்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அவற்றிலிருந்து வரும் வருமானம் எவ்வளவு?

(இ) குத்தகை பாக்கி எவ்வளவு?

(ஈ) வசூல் ஆகாத குத்தகையை வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) நன்செய் ஏக்கர் 160.75 சென்ட் நிலங்கள் உள்ளன.

(ஆ) நெல் கலம் 506 வருமானம் வர வேண்டும்.

(இ) 1376-ம் பசலி முதல் 1395-ம் பசலி முடிய நெல் கலம் 6,924.10.2½ குத்தகை பாக்கியாக வரவேண்டியுள்ளது.

(ஈ) தஞ்சை மாவட்டத்தில் ரெவின்யூ கோர்ட் முழுமையாக செயல்படத் துவங்கியதும், குத்தகை பாக்கியை வசூலிக்க தேவையான நடவடிக்கை தொடர பொருளாளர் மற்றும் மேலாளருக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

[1987 நவம்பர் 16

## மைய அரசிடமிருந்து தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் (NREP) கீழ் பெற்ற தொகை

70—வினா 10473—திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985–86 ஆம் ஆண்டில் மைய அரசிடமிருந்து NREP திட்டத்தின் மூலமாக வந்த தொகை எவ்வளவு?

(ஆ) எல்லா தொகைகளும் செலவு செய்யப்பட்டதா?

(இ) மாநில அரசு இந்தத் திட்டத்தில் செலவு செய்த தொகை எவ்வளவு?

விடை—

(அ) 1985–86 ஆம் ஆண்டில் மைய அரசிடமிருந்து தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக ரூ. 19,34.95 இலட்சங்கள் பெறப்பட்டது.

(ஆ) ஆம்.

(இ) மாநில அரசு இத்திட்டத்திற்காக 1985–86 ஆம் ஆண்டு ரூ. 19,34.95 இலட்சங்கள் செலவு செய்தது.

## தஞ்சையில் வீட்டுவசதி வாரிய நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்தல்

71—வினா 10479—திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

விடை—

தஞ்சையில் தற்பொழுது போதிய அளவிற்கு வீட்டுவசதித் திட்டங்கள் இல்லாததால் வீட்டுவசதி வாரியத்தின் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்தும் கருத்துரு தற்பொழுது அரசிடம் இல்லை.



1987 நவம்பர் 16]

## கடலூர் நகரத்தில் சில பகுதிகளில் புது டிரான்ஸ்பார்மர் அமைத்தல்

72—வினா 10506—திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூர் நகரத்தின் ஒரு பகுதியான சிங்காரத் தோப்பு, கோரி, சோனாங்குப்பம் ஆகிய இப்பகுதியில் உள்ள டிரான்ஸ்பார்மரை மாற்றி புது டிரான்ஸ்பார்மர் அமைக்கும் யோசனை அரசுக்கு உண்டா?

விடை—

ஆம்.

## குண்டு உப்பலவாடி கிராமத்தில் குழாய் பாலம் கட்டும் திட்டம்

73—வினா 10511—திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு யளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதியில் குண்டு உப்பலவாடி கிராமத்தில் குழாய் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் குண்டு உப்பலவாடி-தாழக்குடா சாலை (வகைப்படுத்தா சாலை) கி.மீ. 2/0ல் குறுக்கிடும் உப்பனாற்றின் குறுக்கே கட்ட தோராயமாக ரூ. 41.00 இலட்சம் தேவைப்படும். போதிய நிதியின்மை காரணத்தால் இப்பணியை தற்போது எடுத்துச் செய்ய இயலாது.

## சென்னை வி. வி. கோயில் தெருவைச் சுற்றியுள்ள பகுதிகளில் கை பம்ப் அமைக்கும் திட்டம்

74—வினா 10552—திரு.ஜே. முகம்மதுகனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கொசப்பேட்டை பகுதி, வி.வி. கோயில் தெருவைச் சுற்றியுள்ள பகுதிகளில் கை பம்ப் போடப்படுமா?

(ஆ) சென்னையில் உள்ள எல்லா பகுதிகளிலும் உள்ள பைப்புகளில் 24 மணி நேரம் தண்ணீர் விடுகின்ற திட்டம் உள்ளதா?

விடை—

(அ) சென்னை கொசப்பேட்டை, வி. வி. கோயில் தெருவைச் சுற்றியுள்ள பகுதிகளில் மொத்தம் 16 ஆழ்த்துளை கிணறுகள் மற்றும் கையிறைப்பான்களும் அமைக்கப் பெற்று குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக கையிறைப்பான்கள் அமைக்க அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

(ஆ) நீர் நிலைகளில் தற்போதுள்ள நீரைக் கொண்டு நகருக்கு 24 மணி நேரமும் நீர் வழங்க இயலாது.

### குளத்தூர் தொகுதியில் சாலையை செப்பனிட்டு பேருந்து விடல்

75—வினா 10621—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் பேராம்பூர், ஆலங்குளம், வெள்ளாகுடை மதயானைப்பட்டி, புதூர் சோனியக்குடி, தொரக்குடி வழியாக கலிமங்கலம் வரை சாலையை செப்பனிட்டு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இச்சாலை கீழ்க்கண்ட மூன்று சாலைகளில் அமைகிறது. (1) பேராம்பூர்-ஆலங்குளம் சாலை (அரசு இதர மாவட்ட சாலை) (2) ஆலங்குளம்-மதயானைப்பட்டி சாலை (ஊராட்சி ஒன்றிய சாலை) (3) மதயானைப்பட்டி-சோனியக்குடி சாலை (ஊராட்சி சாலை), முதல் சாலையில் பேருந்து சென்று கொண்டிருப்பதாலும் நல்ல நிலையில் உள்ளதாலும் தற்போது செப்பனிடத் தேவையில்லை. மற்ற இரண்டு சாலைப் பணிகளும் அரசின் குறுகிய நிதிவளக் காரணத்தால் தற்போது எடுத்துச் செய்ய இயலாது.

### ஊரக வளர்ச்சித் துறை பணிக்கான ஊதியத்தை உணவுப் பொருளாக வழங்கும் திட்டம்

76-வினா 10823—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரக வளர்ச்சித் துறையில் பணிக்கான ஊதியத்தை உணவுப் பொருளாக வழங்கும் திட்டத்தில் தொழிலாளர்களுக்குக் குறைவான ஊதியங்கள் கொடுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?





விடை—

(அ) மற்றும் (ஆ) பணிக்கான ஊதியத்தை உணவுப் பொருளாக வழங்கும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றில் தொழிலாளர்களுக்குக் குறைவான ஊதியங்கள் கொடுக்கப்படுவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

### 1985–86 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் புதிதாக திறக்கப்பட்டுள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்.

77—வினா 10886—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985–86 ஆம் கல்வி ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் புதிதாக உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1985–86 ஆம் கல்வி ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் உபதலை என்னுமிடத்தில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் கல்வி ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் புதிய மேல்நிலைப் பள்ளிகள் ஏதும் திறக்கப்படவில்லை.

### நீலகிரி மாவட்டத்தில் ஊரக மின்சாரம் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கல்

78—வினா 10900—திரு. கே. உச்சு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஊரக மின்சாரம் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடந்த 1985 டிசம்பர் முடிய எத்தனை குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது?

(ஆ) இதனை மேலும் அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஊரக மின்சாரம் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் எதுவும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## 1984–85 ஆம் ஆண்டில் மின் இணைப்பு வழங்கப்பெற்ற கிராமங்கள்

79—வினா 10905-திரு. கே. உச்சி: மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85 ஆம் ஆண்டில் மின் இணைப்பு பெற்ற கிராமங்கள் எத்தனை?

(ஆ) மற்ற மின் வசதி பெறாத கிராமங்களுக்கு மின் வசதி செய்து தர அரசு பரிசீலிக்குமா ?

விடை—

(அ) 27 கிராமங்கள் மின் இணைப்பு பெற்றன.

(ஆ) மின் சக்தி பெறாத மற்ற கிராமங்களுக்கு மின் வசதி செய்துதர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## எடக்காடு கிராமத்திலிருந்து உதகைக்கு புதிய பேருந்து வழித் தடம் ஏற்படுத்தல்

80—வினா 10951திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம் எடக்காடு கிராமத்திலிருந்து குந்தா பெங்கால் மட்டம் கைகாட்டி, தேவர்சோலா வழியாக உதகைக்கு புதிய பேருந்து வழித்தடம் ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?



விடை—

(அ) தற்போது உதகையிலிருந்து எடக்காடு கிராமத்திற்கு பாலடா, இத்தலார் வழியாக நான்கு பேருந்துகளும், காந்திப் பேட்டை, காத்தாடிபட்டம், தங்காடு வழியாக இரு பேருந்துகளும் சேரன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வழித் தடம் நீளம் 27 கி.மீ. உதகை—எடக்காடு என்னும் புதிய வழித் தடத்தில் உள்ள அனைத்து ஊர்களுக்கும் நேர்வழித்தடத்தில் போதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தட நீளம் 35 கி.மீ. இவ்வழித்தடத்தில் பேருந்து விடும் திட்டம் கீழ்க் காணும் காரணங்களால் பரிசீலனையில் இல்லை:

(1) இத்தடம் சுற்று வழியாக இருப்பதால் பயணிகள் இதனை விரும்பமாட்டார்கள்.

(2) இச்சுற்று வழிப் பயணக் கட்டணம் ரூ. 3.70 இது நேர்வழிக் கட்டணத்தை விட 80 பைசா அதிகமாக இருக்கிறது.

(3) பயண நேரமும் 20 நிமிடம் கூடுதலாகிறது.

## நீலகிரி மாவட்டத்தில் நடமாடும் மண் பரிசோதனைக் கூடம் ஏற்படுத்தல்

81—வினா 10973-திரு. கே. உச்சி: மாண்புமிகு உ. அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் நடமாடும் மண் பரிசோதனைக் கூடம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) எத்தனை மண் பரிசோதனைகள் செய்யப்பட்டன?

விடை—

(அ) ஆம். நீலகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடமாடும் மண் பரிசோதனைக் கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) மண் பரிசோதனைகள் எண்ணிக்கை வருமாறு—

(1) 1983–84 ஆண்டில் 7376.

(2) 1984–85 ஆண்டில் 10,911.

(3) 1985–86 ஆண்டில் 11,128.

[1987 நவம்பர் 16

### தூனேரி மற்றும் எருமாடு மாணவர் இல்லத்திற்கு கட்டிடம் கட்டுதல்

82—வினா 11073-திரு. கே. உச்சி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் உள்ள தூனேரி மற்றும் எருமாடு மாணவர் இல்லத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு தொகை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் தூனேரியில், ரூ. 4.68 இலட்சம் மதிப்பீட்டில் பிற்படுத்தப்பட்டோர் நல அரசு மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் கட்டிடம் கட்ட பொது மராமத்துத் துறையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது எருமாடு பிற்படுத்தப்பட்டோர் நல அரசு மாணவர் விடுதிக்கு விடுதிக் கட்டிடம் கடடும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

### குருவிக்குளம் — திருவேங்கடம் சாலையை செப்பனிட்டு தார் போடுதல்

83— வினா 11157-திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சங்கரன்கோவில் தாலுகா குருவிக்குளம்— திருவேங்கடம் சாலையை செப்பனிட்டு தார்போடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்

(ஆ) இச்சாலையில் உள்ள தார் நொடிகள் சீராக்கப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் நடப்பு ஆண்டில் பகுதி பகுதியாக தார் தளம் புதுப்பித்தலுக்காக தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1987 நவம்பர் 16]

### சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி

84 வினா 11189—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் உள்ள சேதுபதி அரசினர் கலைக் கல்லூரியில் நடப்பு ஆண்டிலிருந்து மாணவர்கள் சேர்க்கப்பட்டு வகுப்புகள் தொடர்ந்து நடைபெறுகின்றனவா ?

விடை—

ஆம்.

### உடையார்பாளையம் மருந்தகத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம்

85-வினா 11265 டாக்டர். ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் அரசு மருந்தகத்திற்கு புதிதாக கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

### ஜெயங்கொண்டம் அரசு மருந்து மனை மருந்துவர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம்

86— வினா 11269 டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருந்துவர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

### தென்கச்சி பெருமாள் நத்தத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்கும் திட்டம்

87 வினா 11284—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி, தா. பழூர் ஒன்றியத்தைச் சார்ந்த தென்கச்சி பெருமாள் நத்தம் என்ற ஊரில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

### மாமண்டூரில் பொது நவீன கழிப்பிடம் கட்டும் திட்டம்

88 வினா 11309—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மாமண்டூர் என்ற ஊரில் பொது நவீன கழிப்பிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

### திருச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மூலம் பயன்பெற்றோர் எண்ணிக்கை

89 வினா 11337—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் 1984–85, 1985–86 ஆகிய ஆண்டுகளில் டி.ஐ.ஐ.சி. ன் மூலம் பயன்பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) முதலீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் திருச்சி மாவட்டத்தில் 1984–85 ஆம் ஆண்டில் 213 நிறுவனங்களுக்கும், 1985–86 ஆம் ஆண்டில் 268 நிறுவனங்களுக்கும் நிதி உதவி அளித்திருக்கிறது.

(ஆ) கடன் தொகையாக 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 349.00 இலட்சங்களும் 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 395.00 இலட்சங்களும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளன.



### திருப்பூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் சித்த மருத்துவமனை அமைத்தல்.

90—வினா 11400—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிக்குள் சித்த மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): தற்போது இல்லை.

### நீலகிரி மாவட்டத்தில் புதிய கோட்டம் ஏற்படுத்தி விறகுக் கிடங்குகள் அமைக்கும் திட்டம்

91—வினா 11430—திரு. கே. உச்சி: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1986-87 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் புதிய கோட்டம் ஏற்படுத்தி விறகுக் கிடங்குகளை அமைத்து செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

நீலகிரி மாவட்டத்தில், புதிய கோட்டம் ஏற்படுத்தி, அரசு விறகுக் கிடங்குகளை அமைத்து செயல்படுத்தும் கருத்துரு ஏதுமில்லை.

### நீலகிரி மாவட்டத்திலுள்ள யூகலிப்டஸ் கமால்டு லென்சிஸ் தோட்டத்தின் பரப்பளவு

92—வினா 11488—திரு. கே. உச்சி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில், தற்போது உள்ள யூகலிப்டஸ் கமால்டு லென்சிஸ் தோட்டத்தின் மொத்த பரப்பளவு என்ன?

(ஆ) இவைகளை அதிக அளவில் வளர்க்க அரசு உத்தேசித்துள்ளதா?

[1987 நவம்பர் 16

விடை—

(அ) நீலகிரி மாவட்டத்தில், யூகலிப்டஸ் கமால்டு லென்சிஸ் தோட்டங்கள் ஏதுமில்லை.

(ஆ) யூகலிப்டஸ் கமால்டு லென்சிஸ், கடல் மட்டத்திலிருந்து 1,000 மீட்டருக்கு மேல் உயரமான இடங்களில் வளராது. எனவே, நீலகிரி மாவட்டத்தில் இதைப் பயிரிட இயலாது. மேற்சொன்ன காரணத்திற்காக யூகலிப்டஸ் கமால்டு லென்சிஸ் நீலகிரி மாவட்டத்தில் வளர்க்கப்படுவதில்லை.

நடுவட்டத்தில் சின்கோனாத் துறை மூலம் குழந்தைகளுக்கான பற்பொடி தயாரித்தல்

93—வினா 11459—திரு. கே. உச்சி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், நடுவட்டத்தில் சின்கோனாத் துறை மூலம் குழந்தைகளுக்கான பற்பொடி தயாரிக்கப்படுகிறதா ?

(ஆ) எத்தனை தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 20 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.

94—வினா 11510—திரு. கே. உச்சி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் செயல்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?



1987 நவம்பர் 16]

விடை—

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் தற்பொழுது அதன் இறுதிக் கட்ட பணியில் உள்ளது 1979–80-ம் ஆண்டு வரையப்பெற்ற செயலாக்கத் திட்ட வரைவுப்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் தற்பொழுது மதுரை, அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், புதுக்கோட்டை, கட்டபொம்மன், சிதம்பரனார், வடஆற்காடு மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மட்டும்தான் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் இத்திட்டத்தை தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் 1987–88 முதல் 1991–92 ஆம் ஆண்டு வரை விரிவாக்க எண்ணி, கருத்துரு ஒன்று தயார் செய்யப்பட்டு இந்திய அரசின் மூலமாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏற்கப்பட்டால், நீலகிரி மாவட்டம் உட்பட பிற மாவட்டங்களுக்கும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

சென்னை மாநகர் தலைமை மாஜிஸ்ட்ரேட் பதவி நியமனம்

95—வினா 11537—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) சென்னை மாநகரில் உள்ள மாநகர் தலைமை மாஜிஸ்ட்ரேட் விடுதலையடைந்த சிறைவாசிகளின் நலச் சங்க அலுவலர் வழி அலுவலக உறுப்பினரா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் நீதித்துறை அதிகாரிகளை அவ்வாறு அனுமதிக்கப்பட்டது?

விடை—

(அ) சென்னை மாநகரில் உள்ள மாநகர் தலைமை மாஜிஸ்ட்ரேட், தமிழ்நாடு விடுதலையடைந்த சிறைவாசிகளின் நலச் சங்கத்தின் மற்றும் அதன் மத்தியக் குழுவின் உறுப்பினர் ஆவார்.

(ஆ) தமிழ்நாடு விடுதலையடைந்த சிறைவாசிகளின் நலச் சங்கத்தின் "ஆர்ட்டிகில்ஸ் ஆஃப் அஸோசியேஷன்" விதி எண் 6-ன்படி தமிழ்நாடு விடுதலையடைந்த சிறைவாசிகளின் நலச் சங்கத்தின் மற்றும் அதன் மத்தியக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக உள்ளார்.

### நத்தம் தொகுதியில் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் மூலம் பேருந்து விடல்

96—வினா 11589—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்திலிருந்து நத்தம்—மதுரை, நத்தம்—திண்டுக்கல் மற்றும் நத்தம்—(மூங்கில்பட்டி, பொய்யாம்பட்டி வழியாக) மேலூர் செல்ல செமி மொபசில் பஸ் விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

நத்தம்—மதுரை வழித்தடத்தில் ஒரு மொபசில் பஸ் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நத்தம்—திண்டுக்கல் வழித்தடத்தில் கூடுதலாக பேருந்து விட தற்சமயம் தேவையில்லை. நத்தம்—மேலூர் (வழி—மூங்கில்பட்டி, பொய்யாம்பட்டி) வழித்தடத்தில் சாலைகளின் தன்மை முதலிய காரணங்களால் பேருந்து இயக்க இயலவில்லை.

### இரணியம்மன் கோவில் நகரில் பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நிறுத்தி செல்லுதல்

97—வினா 11673—திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெருங்களத்தூர்—வண்டலூர் இடையே உள்ள இரணியம்மன் கோவில் நகரில் பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நிறுத்தப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பகுதிகளில் ''Request Bus Stop'' ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

(அ) சென்னை பெருங்களத்தூர்—வண்டலூர் இடையே உள்ள இரணியம்மன் கோவில் நிறுத்தத்தில் பெரியார் போக்குவரத்துக் கழக அனைத்து நகரப் பேருந்துகளும் நின்று செல்கின்றன.

(ஆ) நீண்ட தூர புறநகர்ப் பேருந்துகள் பயணிகள் விருப்பத்திற்கேற்ப நின்று செல்ல ''Request Bus Stop'' ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





### மச்சம்பாளையத்திலுள்ள சுடுகாடு சர்வே பணி

98—வினா 11709—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சி மச்சம்பாளையத்தில் உள்ள சுடுகாட்டை சர்வே செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றி, வேலி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சி, மச்சம்பாளையத்தில் உள்ள சுடுகாட்டினை சர்வே செய்யும் பணி முடிவடைந்துவிட்டது. மேற்படி சுடுகாட்டில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, சுடுகாட்டிற்கு முள் கம்பி வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### பேட்டைக் குளத்திலிருந்து பெரிய அருவி நீர்த்தேக்கம் வரை சாலையைப் புதுப்பித்தல்

99—வினா 11840—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, மதுரை ரோடிலிருந்து, பேட்டைக் குளத்திலிருந்து பெரிய அருவி நீர்த்தேக்கம் வரை சாலை பழுதடைந்திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நத்தம் தொகுதி, மதுரை சாலையிலிருந்து, பேட்டைக்குளத்திலிருந்து பெரிய அருவி நீர்த்தேக்கம் வரை உள்ள சாலையின் நீளம் 7 கி. மீட்டர். இச்சாலையின் அகலம் 2.80 மீட்டர். பாதையின் இருபுறமும் பட்டா நிலங்கள் அமைந்திருப்பதால், சாலையை விரிவுபடுத்த, கிரயம் கொடுத்து இடத்தை கையகப்படுத்தவேண்டும். இதனை பொது மக்கள் உபயோகிப்பது இல்லை. இதனை பழுது பார்க்க ரூ. 7 லட்சம் செலவாகும். எனவே, தற்போது எந்தத் திட்டத்திலும் இதனை சேர்க்க வாய்ப்பில்லை.

[1987 நவம்பர் 16]

## தலைஞாயிறு கால்நடை மருத்துவமனையை மேம்படுத்தி தரம் உயர்த்துதல்

100—வினா 11916—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறு கால்நடை மருத்துவமனையை மேம்படுத்தி, தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## உலக வங்கியால் வட்டியில்லா கடன்

101—வினா 1966—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கியால் வட்டியில்லா கடன் வழங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த திட்டத்திற்காக அந்த நிதி பயன்படுத்தப்பட்டு வருகிறது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்நிதி தமிழ்நாடு அரசின் சமூகநலத்துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்திற்குச் செலவு செய்யப்படுகிறது.

## கோயில்களின் வைப்பு நிதி

102—வினா 3055—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எந்தெந்த கோயில்கள், எவ்வளவு தொகையை வங்கிகளில் வைப்பு நிதியாக வைத்துள்ளது ?



1987 நவம்பர் 16]

விடை—

2744 திருக்கோயில்கள், வங்கிகளில் மொத்தம் ரூபாய் இருபத்தேழு கோடியே நாற்பத்து மூன்று லட்சத்து, எண்பத்தைந்தாயிரத்து அறுபத்தாறும் பைசாக்கள் எண்பத்தைந்தும் முதலீடு செய்துள்ளன. விவரம் பின்வருமாறு—

| திருக்கோயில்களின் விவரம். | எண்ணிக்கை. | முதலீடு செய்துள்ள தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1. துணை ஆணையர்/செயல் அலுவலர்— திருக்கோயில்கள் | 7 | 11,80,27,541.35 |
| 2. உதவி ஆணையர்/செயல் அலுவலர்— திருக்கோயில்கள் | 10 | 3,09,18,762.40 |
| 3. துணை ஆணையர் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்கள் | 1,186 | 10,78,91,076.15 |
| 4. உதவி ஆணையர் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்கள் .. | 1,541 | 1,75,47,686.95 |
| மொத்தம் | 2,744 | 27,43,85,066.85 |

## ஆத்தூர் நகர அரசு மருத்துவமனை

103—வினா 4114—திருமதி தா. ராசாம்பாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் நகரில் அரசு மருத்துவமனை தண்ணீர் வசதி மற்றும் மின் விளக்குகள் இல்லாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வறட்சியினால் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க நகராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து நீர் வழங்கவும், மின் இணைப்புகளை சரி செய்து மின் விளக்குகளை எரியச் செய்யவும் பொதுப்பணித் துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சேலம்—உளுந்தூர் பேட்டை நெடுஞ்சாலை

*104*—வினா *4525*—திருமதி தா. ராசாம்பாள் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்—உளுந்தூர்பேட்டை நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பதினாறு மாநில நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைத் தொகுப்பில் சேர்க்குமாறு மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அச்சாலைகளில் சேலம்—உளுந்தூர்பேட்டை சாலையும் ஒன்றாகும். நிதி நெருக்கடி காரணமாகவும், தற்போதுள்ள நிதி வசதி, தற்போதுள்ள தேசிய நெடுஞ்சாலைகளுக்கே போதுமானதாக இல்லாததாலும், தற்போதுள்ள தேசிய நெடுஞ்சாலைத் தொகுப்பில் புதிய சாலையை சேர்க்கும் கோரிக்கையினை பரிசீலிக்க இயலாது என்றும் மைய அரசு தெரிவித்துள்ளது.

## சேக்கிழாருக்கு நினைவுச் சின்னம்

*105*—வினா *5320*—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேக்கிழாருக்கு அரசு அமைக்கும் நினைவுச் சின்னப் பணி எப்போது நிறைவு பெறும் ?

(ஆ) அதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

விடை—

(அ) சேக்கிழார் பெருமானுக்கு அவர் பிறந்த ஊரான குன்றத்தூருக்கு அருகில் நினைவுச் சின்னம் அமைப்பது குறித்தான கருத்துரு ஆய்வில் உள்ளது என ஆணையர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை தெரிவித்துள்ளார்.

(ஆ) ரூ. 8 இலட்சம் ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.



## மாதவரம் பால் பண்ணை

*106*—வினா *6102*—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாதவரம் பால் பண்ணையில் *1983–84* ஆம் ஆண்டு கிடைத்த நிகர லாபம் எவ்வளவு ?

விடை—

*1983–84* ஆம் ஆண்டு மாதவரம் பால் பண்ணையில் இலாபம் ஏதும் இல்லை. *1983* ஆம் ஆண்டில் நிகர நட்டம் ரூ. *29.25* இலட்சம்.

## திருப்பூர் துணைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு தொலைபேசி வசதி

*107*—வினா *6546*—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையின் துணைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு தொலைபேசி வசதி செய்து தரும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

## பரம்பரை அறங்காவலர்கள் மீது வழக்கு

*108*—வினா *7179*—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எத்தனை பரம்பரை அறங்காவலர்கள் மீது கோயில் பணத்தைக் கையாடல் செய்ததற்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது ?

விடை—

இரண்டு பரம்பரை அறங்காவலர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

[1987 நவம்பர் 16

## பொது நிறுவனங்களின் தலைவர்கள் பதவி பற்றிய விதிகள்

109—வினா 7360—திரு. ம. சுந்தரதாஸ்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

a) Whether rules have been framed under the relevant Acts stipulating the qualifications of the Chairman of various Public Under standing in the State

b) If so, the details thereof?

விடை—

(அ) மற்றும் (ஆ) இம்மாநிலத்தில் பல்வேறு பொது நிறுவனங்களின் தலைவர்கள் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கென விதிகள் ஏதும் உருவாக்கப்படவில்லை. தகுதிவாய்ந்த அலுவலர்கள் மற்றும் அனுபவம் மிக்க அலுவல் சார்பற்றவர்கள் பல்வேறு பொது நிறுவனங்களின் தலைவர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

## வேடசந்தூர் வட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா

110—வினா 8437—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு நீதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், கல்வார்பட்டி கிராமம், கோலார்பட்டி, எல்லைப்பட்டி ஆதி திராவிடர்கள் தாங்கள் குடியிருக்கும் இடத்தை பாதை புறம்போக்கு என்பதை கிராம நத்தமாக மாற்றி வீட்டுமனைப் பட்டா வழங்க அரசை கோரியுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) அண்ணா மாவட்டம், வேடசந்தூர் வட்டம், கல்வார்பட்டி கிராமம் உட்கடை கோர்பட்டி கிராமம் சர்வே எண். 1224, பாதை புறம்போக்கில் 2.08 ஏக்கரில் வீடு கட்டி குடியிருந்து வரும் சுமார் 33 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு மேற்படி பாதை புறம்போக்கை கிராம ஆதி திராவிடர் நத்தமாக மாற்றி ஒப்படை செய்யவும் மற்றும் எல்லைப்பட்டி கிராமம், சர்வே எண். 71-ல் 17.85 ஏக்கர் வண்டிப் பாதை புறம்போக்கில் குடியிருந்து வரும் ஆதி திராவிட குடும்பங்களுக்கு மேற்படி இடத்தை நத்தமாக மாற்றி வீட்டுமனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1987 நவம்பர் 16]

## குண்டாற்றின் நடுவே பாலம்

111—வினா 8931—திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி கோட்டம் அபிராமம் பகுதியில் உள்ள குண்டாற்றின் நடுவே கட்டப்பட்டு உள்ள பாலம் பழுது அடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பாலத்தைதிரும்ப கட்டும் பணி, பணித் தொகுப்பு பட்டியலில் (Shelf of Projects) இடம் பெற்றுள்ளது.

## தமிழகத்தில் பாம்புக் கடிக்கு மருத்துவப் பயிற்சியாளர்கள்

112—வினா 9400—திரு. சா. ஜெயச்சந்திரன் மற்றும் திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பாம்புக் கடி மருத்துவப் பயிற்சியாளர்கள் எத்தனை பேர் உள்ளார்கள்?

(ஆ) இதில் ஆதி திராவிடர் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

(அ) தமிழகத்தில் தென்னாற்காடு, வடாற்காடு, அண்ணா, பெரியார், தஞ்சாவூர் முதலிய மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டு வரும் பாம்புக்கடி முதலுதவி திட்டத்தின் கீழ் இதுவரை 829 பாம்புக்கடி முதலுதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) 311 பேர்கள்.

[1987 நவம்பர் 1

## ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆர். எல். இ. ஜி. பி. மூலம் அமைக்கப்பட்டுள்ள சாலைகள்

113—வினா 8816—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் 1984–85-ம் நிதியாண்டில் ஆர். எல். இ. ஜி. பி. மூலம் அமைக்கப்பட்டுள்ள சாலைகள் எத்தனை ?

(ஆ) ஆகிய செலவு எவ்வளவு ?

விடை—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் 1984–85 ஆம் நிதியாண்டில் ஆர். எல். இ. ஜி. பி. திட்டம் மூலம் நெடுஞ்சாலை இலாக்காவினால் எந்த சாலை வேலையும் எடுத்து செய்யப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

## இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் சாலை அமைக்கும் பணி

114—வினா 9973—திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதியில் ஆடையூர் ஊராட்சியைச் சேர்ந்த குடிமானூரிலிருந்து மதுரை காளியம்மன் கோயில் சுப்புக்காடு வழியாக கோவில்பாளையம் காட்டுவளவு வரையிலான சுமார் 5 கிலோ மீட்டர் சாலை அமைக்கும் பணியை ஆர். ஆர். அல்லது ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தில் சேர்த்து செப்பனிட்டு அப்பகுதிக்கு போக்குவரத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

விடை —

சேலம் மாவட்டம், இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆடையூர் ஊராட்சிக்குட்பட்ட குடிமானூரிலிருந்து மதுரை காளியம்மன் கோவில் சுப்புக்காடு வழியாக கோவில்பாளையம் காட்டுவளவு வரையிலான சுமார் 7.00 கிலோ மீட்டர் சாலையை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் அமைக்க நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. சாலை பணிகளுக்கு குறைந்த அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால், மேற்படி சாலை சீரமைப்பு பணியினை எடுத்துச் செய்ய இயலவில்லை.



1987 நவம்பர் 16]

## மணலூர்பேட்டை காவல் நிலையம்

115—வினா 10090—திரு. மு. சந்திரசேகரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம் மணலூர்பேட்டை காவல் துறையில் பணிபுரியும் காவலர்களுக்கு இல்லங்களும், புதிய காவல் நிலையமும் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை—

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம் மணலூர்பேட்டை காவல் துறையில் பணிபுரியும் காவலர்களுக்கு குடியிருப்புகளும் புதிய காவல் நிலையமும் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

## வேலையில்லா இன்ஜினியர்கள், டிப்ளமோ இன்ஜினியர்கள்

116—வினா 10140—திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1986 ஆம் ஆண்டு முடிவில் தமிழ்நாட்டில் வேலையில்லா இன்ஜினியர்கள், டிப்ளமோ இன்ஜினியர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் ?

(ஆ) அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பகங்களில் பதிந்து வேலைக்காக உயிர்ப்பதிவேட்டில் 31–12–1986 அன்று காத்திருந்தவர்களின் எண்ணிக்கை :

(அ) பொறியியல் பட்டதாரிகள் .. 5,101

(ஆ) பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் 26,756

(ஆ) வேலைவாய்ப்பை தோற்றுவிப்பது மாநில திட்டக் குழு/பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த பணியாகும். வேலை வாய்ப்பலுவலகங்கள், அறிவிக்கப்படும் காலியிடங்களுக்கு தகுதி வாய்ந்த நபர்களை பரிந்துரை செய்யும் பணியை மட்டுமே மேற்கொண்டு வருகிறது.

[1987 நவம்பர் 16

அமெரிக்கா நிறுவனம் இலவசமாக வழங்கிய கருத்தடை சாதனம்

117—வினா 10204—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியம் (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமெரிக்கா நிறுவனம் இலவசமாக வழங்கிய Dalkon Shield என்றும் கருத்தடை சாதனம் தமிழக மருத்துவமனையில் பயன்படுத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அச்சாதனம் பொருத்தப்பட்டதால் எதிர் விளைவுகள் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1974 ஆம் ஆண்டில் ஆராய்ச்சிக்காக ஒரு சிலருக்கு பொருத்தப்பட்டு அவ்வாண்டே அகற்றப்பட்டது.

(இ) இல்லை.

எம். என். ஏ. எப். என். ஏ. என்ற மருத்துவ உதவியாளர்கள்

118—வினா 10282—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எம். என். ஏ. எப். என். ஏ., என்ற மருத்துவ உதவியாளர்கள் கோவை அரசினர் மருத்துவமனையில் எத்தனை பேர் உள்ளனர் ?

(ஆ) 1980 முதல் 1986 ஜுன் முடிய புதிதாக எடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ? மாவட்ட வாரியாக.

விடை—

(அ) எம். என். ஏ. என்ற ஆண் செவிலிய உதவியாளர் 73 பேர்கள் எப். என். ஏ. என்ற பெண் செவிலிய உதவியாளர் 60 பேர்கள்.

| | | ஆண். | பெண். | மொத்தம் |
|---|---|---|---|---|
| (ஆ) | சென்னை மாவட்டம் | 91 | 90 | 181 |
| | செங்கல்பட்டு மாவட்டம் | 12 | 13 | 25 |
| | தஞ்சாவூர் மாவட்டம் | .. | 1 | 1 |
| | மதுரை மாவட்டம் | 4 | 1 | 5 |
| | கோயம்புத்தூர் மாவட்டம் .. | 12 | 9 | 21 |
| | திருநெல்வேலி மாவட்டம் .. | 1 | .. | 1 |
| | | 120 | 114 | 234 |



1987 நவம்பர் 16]

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு குடிநீர்

119—வினா—11020—திரு. கே. உச்சி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம் பந்தலூரி லுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு குடிநீர் அளிக்க தோண்டப்பட்டு வரும் கிணறுவேலை தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இப்பணியை விரைவில் முடித்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம் பந்தலூரில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக ஒரு கிணறு வெட்டப்பட்டு 10 குதிரை திறன் கொண்ட மின் விசை பம்பு நிறுவப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

வீரானந்தபுரம் சிவன் கோவில்

120—வினா—11130—திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோயில் வட்டம், வீரானந்தபுரம் சிவன் கோயிலுக்குச் சொந்தமான நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் எவ்வளவு ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வீரானந்தபுரத்தில் சிவன் கோயில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 நவம்பர் 16

## திருச்சி-சிதம்பரம் சாலையில் சாலையோரப் பூங்கா

121—வினா—11326— டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி—சிதம்பரம் சாலையில் விளாங்குடி அருகே ஒரு சாலையோரப் பூங்கா அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

## கோவையிலிருந்து பாலக்காடு தேசிய நெடுஞ்சாலை

122—வினா—11701— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி நெடுஞ்சாலையில் இருந்து மாச்சம்பாளையம், இடையார்பாளையம் வழியாக பாலக்காடு தேசிய நெடுஞ்சாலைக்கு செல்லும் சாலையை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி நெடுஞ்சாலையில் (சேலம் கொச்சின் தேசீய நெடுஞ்சாலை) கி. மீ. 164/0ல் பிரிந்து இடையார்பாளையம் மாச்சம்பாளையம் வழியாக பாலக்காடு தேசீய நெடுஞ்சாலையுடன் (கோவை, திண்டுக்கல் மாநில சாலை) இணையும் சாலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 2.40 கி.மீ. சாலையாகும். இது 3.75 மீட்டர் அகலமுடைய தார் சாலையாகும். மேற்படி சாலையினை 1987-88-ம் ஆண்டில் தலசாலை மான்யத் திட்டத்தின்கீழ் சீர் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 16]

## நத்தம் தொகுதி ஊராளிப்பட்டியிலிருந்து சீரங்கம்பட்டிக்கு புதிய சாலை.

123— வினா 11812 திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், நத்தம் தொகுதி, ஊராளிப்பட்டி பஞ்சாயத்து, சீரங்கம்பட்டிக்கு ஊராளிப்பட்டியிலிருந்து புதிய சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையான ஊராளிப்பட்டி முதல் சீரங்கம்பட்டி சாலையின் மொத்த நீளம் 2 கி.மீ. ஆகும். 4.0 மீட்டர் அகலமுடைய கிராவல் பரப்பு கொண்ட இச்சாலையை 7.50 மீ. அகலத்திற்கு சரளை சாலையாக மேம்பாடு செய்ய சுமார் 8.00 லட்சம் தேவைப்படும். மேலும் இச்சாலையில் 3 இடங்களில் காட்டு ஓடை குறுக்கிடுகிறது. இவ்விடங்களில் பாலங்கள் கட்ட சுமார் ரூ. 2.00 லட்சம் தேவைப்படும். ஆக மொத்தம் 10.00 லட்சம் தேவைப்படும். மேற்படி திட்டம் அரசு அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. அரசின் குறுகிய நிதி வளம் காரணத்தால் இப்பணியினை உடன் எடுத்துச் செய்ய இயலாது. எனினும், இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி வளம் இடம் தரும்போது வேலையின் முக்கியத்துவம் போன்றவற்றை கருத்திற்கொண்டு பாகம் 2 இதர சாலை திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய பரிசீலிக்கப்படும்.

## நத்தம் தொகுதி குட்டுப்பட்டியில் சாலை அமைத்தல்.

124— வினா 11835 திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், நத்தம் தொகுதி, குட்டுப்பட்டி பஞ்சாயத்து, குட்டுப்பட்டிக்கு தென்புறத்தில் இருந்து செந்துறைக்கு செல்லும் ரோட்டில் இருந்து மேற்கே உள்ள அரிஜன மக்களுக்கு சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள குட்டுப்பட்டியிலிருந்து அரிசன தெருவிற்கு சாலை அமைப்பதாகும். தற்பொழுது குட்டுப்பட்டியிலிருந்து அரிசன தெருவிற்கு சாலை ஏதும் இல்லை. ஒத்தையடி மண் பாதைதான் உள்ளது. இதன் அகலம் 2 மீட்டராகும். இதனை 7.5 மீட்டர் அகலத்திற்கு சரளை சாலையாக செய்வதற்கு சுமார் ரூ. 6.50 லட்சம் தேவைப்படும். இப்பாதை பட்டா நிலங்கள் வழியாக செல்கிறது. இச்சாலையினை அகலப்படுத்துவதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும். நில ஆர்ஜிதம் செய்து சாலை அமைத்து கொள்வது என்பது உடனடியாக செய்ய இயலாது.

## தலைஞாயிறில் சமூக நலக்கூடம்

125— வினா 11913 திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறில் சமூக நலக்கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## 1985-86ல் பதிவாகிய கொலைக் குற்றங்கள்

126— வினா 11931 திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985—86ல் பதிவு செய்யப்பட்ட கொலைக் குற்றங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் வழக்கு தொடரப்பட்டவை எத்தனை?

(இ) அதில் தண்டனை பெற்றவை எத்தனை ?

விடை—

(அ) 1985—86ல் பதிவு செய்யப்பட்ட கொலைக் குற்றங்கள் 1,403 ஆகும்.

(ஆ) அவைகளில் 897 கொலைக் குற்றங்கள மீது வழக்கு தொடரப்பட்டது.

(இ) அதில் தண்டனை பெற்றவை 81 ஆகும்.



## 1985-86 ல் பதிவாகிய திருட்டுக் குற்றங்கள்

127—வினா 11932 திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86 ல் பதிவு செய்யப்பட்ட திருட்டுக் குற்றங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் வழக்கு தொடரப்பட்டவை எத்தனை ?

(இ) அதில் தண்டனை பெற்றவை எத்தனை ?

(ஈ) கைப்பற்றப்பட்ட பொருள்களின் மதிப்பு எவ்வளவு ?

விடை—

(அ) 23,304 திருட்டுக் குற்றங்கள் 1985—86-ல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) அவைகளில் 17,786 திருட்டுக் குற்றங்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளன.

(இ) அதில் 7,963 வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளது.

(ஈ) கைப்பற்றப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 1,95,39,128 ஆகும்.

## தஞ்சை மாவட்டத்தில் 31-5-1986 முடிய வேலைவாய்ப்பு பகத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள்.

128— வினா 12052 திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 31—5—1986 முடிய எத்தனை பேர் வேலைவாய்ப்பு வேண்டி பதிவு செய்துள்ளனர் ?

(ஆ) தொழில் கல்வி பயின்றவர் எத்தனை பேர் பதிவு செய்துள்ளனர் ?

(இ) 1985—86ஆம் ஆண்டில் எத்தனை நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) 88,120

(ஆ) 2,161

| | | |
|---|---|---|
| (இ) 1985ஆம் ஆண்டு | — .. | 3,421 |
| 1986ஆம் ஆண்டு | — .. | 1,777 |
| | | 5,198 |

[1987 நவம்பர் 16

### ஊராட்சி ஒன்றியங்களில் சமூகக் காடு வளர்ப்புப் பணிகள்.

129 வினா 12092 திரு. கோ. ரகுபதி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆதி திராவிடர் நல விரிவாக்க அலுவலர்கள் சமூகக் காடு வளர்ப்பு பணிகளை பார்க்க மாற்றி நியமிக்கப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், புதிய ஆதி திராவிட நல விரிவாக்க அலுவலர்கள் நியமிக்கப்படுவார்களா ?

விடை—

(அ) ஆம் ஊரக வளர்ச்சித்துறைக்கு ஒதுக்கப்பட்ட 50 விழுக்காடு பணிகளில் இரண்டு ஆண்டு வேளாண்மை பயிற்சி முடித்த ஊர்நல அலுவலர் மற்றும் ஆதி திராவிட நல விரிவாக்க அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து விரிவாக்க அலுவலர்களிலிருந்து தகுதியானவர்கள் சமூகக் காடுகள் வளர்ப்பு திட்டத்திற்கு நியமனம் செய்யப்படுகிறார்கள்.

(ஆ) மேற்படி நியமனம் செய்யும் போது ஏற்படும் காலியிடங்களான ஆதி திராவிட விரிவாக்க அலுவலர் பணியிடங்களில் ஒரு பணிவிதியின்படி தகுதியான நபர்கள் மட்டுமே நியமனம் செய்யப்படுகிறார்கள்.

### சோழவந்தானில் புறவழிச் சாலை

130— வினா 12175 திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம், சோழவந்தான் நகரில் புறவழிச்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள புறவழிச்சாலையானது திருமங்கலம்— பள்ளிப்பட்டி சாலையில் கி.மீ. 23/6-ல் பிரிந்து இதே சாலையில் கி.மீ. 24/10-ல் இணையும் 2.0 கி.மீ. நீளமுள்ள சாலையாகும். இதில் பெரும்பாலான பகுதி பட்டா செய்யப்பட்ட நஞ்சை நிலங்களில் செல்கிறது. 2.0 கி. மீட்டர் நீளமுள்ள புறவழிச்சாலை அமைக்கவும்,



1987 நவம்பர் 16]

இடையே தேவையான இடங்களில் ஒரு பெரிய பாலமும் சுமார் 3 இடங்களில் சிறு பாலங்களும் அமைக்கவும் ரூ. 11.00 லட்சமும்; நிலம் கையகப்படுத்த ரூ. 20.00 லட்சமும் ஆக மொத்தம் சுமார் ரூ. 31 லட்சம் தேவைப்படும். பட்டா செய்யப்பட்ட நஞ்சை நிலங்கள் வழியாக பெரும்பாலான புறவழிச்சாலை செல்வதால் நிலம் கையகப்படுத்துவது என்பது மிகவும் கடினம். எனவே, இப்பணியை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள இயலவில்லை.

### காவேரி நகர் அரசு உயர்நிலைப் பள்ளி.

131— வினா 12363 திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, காவேரி நகர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய அரசு மாணவர் விடுதி தொடங்க அரசு அனுமதி வழங்குமா ?

விடை—

குளத்தூர் தொகுதி காவேரி நகரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்குவது குறித்து செயற்குறிப்பு ஏதும் வரப்பெறவில்லை.

### அம்பாசமுத்திரத்திலுள்ள ஆடு வளர்ப்புச் சங்கங்கள்.

132— வினா 12471 திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் ஒன்றியத்தில் எத்தனை ஆடு வளர்ப்புச் சங்கங்கள் உள்ளன ?

(ஆ) 1982–83, 1983–84 ஆகிய ஆண்டுகளில் எத்தனை சங்கங்களுக்கு எத்தனை உறுப்பினர்களுக்கு ஆடுகள் வாங்க பணம் கொடுக்கப்பட்டது ?

விடை—

(அ) அம்பாசமுத்திரம் ஒன்றியத்தில் ஆறு ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(ஆ) 1982–83-ல் இரண்டு ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களின் 57 உறுப்பினர்களுக்கும் 1983–84-ல் மூன்று ஆடுவளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களின் 80 உறுப்பினர்களுக்கும் (மொத்தம் 5 கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு)

ஆடுகள் வாங்க பணம் அளிக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 113 உறுப்பினர்களுக்கும் சிறப்பு கால்நடைத் திட்டத்தின் கீழ் 24 உறுப்பினர்களுக்கும் ஆடுகள் வாங்க பணம் அளிக்கப் பட்டது. மேல அம்பாசமுத்திரம் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கத்திலிருந்து (ஆறாவது சங்கம்) 1982–83 மற்றும் 1983–84 ஆகிய ஆண்டுகளில் கடன் வேண்டி உறுப்பினர்கள் யாரும் விண்ணப்பிக்கவில்லையாதலால் அச்சங்கத்திற்கு குறிப்பிட்ட காலத்தில் கடன் வழங்கப்படவில்லை.

### புதுக்கோட்டை அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டிட வசதி.

133—வினா 12541 திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை அரசு மருத்துவமனை மற்றும் இராணியார் அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டிட வசதி செய்யப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கான 10 படுக்கைகள் கொண்ட வார்டு, தலைமையிட மருத்துவமனை மற்றும் மகப்பேறு பிரிவுகளில் உள்ள பிணவைப்பறைகளுக்கு குளிர்சாதன வசதிகள் 1987–88-ம் ஆண்டிற்கான திட்டப் பணியாக செயற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்படவிருக்கிறது.

### தக்கலை ஒன்றியத்தில் மின் அழுத்தக் குறைவு

134—வினா 12681 திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஒன்றியத்திற்குட்பட்டுள்ள வாழ்வச்சக் கோஷ்டம் பேரூராட்சி, முளகுமூடு பேரூராட்சி, விலவூர் பேரூராட்சி, திக்கணங்கோடு பேரூராட்சி,





திருவிதாங்கோடு பேரூராட்சி, மருதூர் குறிச்சி ஊராட்சி ஆகிய இடங்களில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் மின் விளக்குகள் எரிவது இல்லை என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### தக்கலை தொழுநோய் மருத்துவமனைக்கு சொந்தக் கட்டிடம்.

135—வினா 12682 திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை தொழுநோய் மருத்துவமனைக்குச் சொந்தமாக கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### திருவிடைமருதூரில் குடியிருப்பு மனைகளுக்கு நில ஆர்ஜிதம்.

136—வினா 12728 திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்ட ஆதி திராவிடர் நல வட்டாட்சியர் அலுவலகம் மூலம் திருவிடை மருதூர் தாலுக்கா பகுதிகளில் குடியிருப்பு மனைக்கு நில ஆர்ஜிதம் செய்ய முன்மொழிவுகள் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஊர்கள், எவ்வளவு இடம் கேட்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| கிராமத்தின் பெயர். | கையகப்படுத்தவுள்ள நில அளவு. |
|---|---|
| (1) | (2) |
| | ஏ. செ. |
| உக்கரை .. .. .. .. | 1.85 |
| திருநீலக்குடி .. .. .. .. | 0.97 |
| திருபுவனம் .. .. .. .. | 1.84 |
| அத்திப்பாக்கம் .. .. .. .. | 1.61 |
| விட்டலூர் .. .. .. . | 2.57 |
| சிதம்பரநாதபுரம் .. .. .. | 2.20 |
| கோவிந்தபுரம் .. .. .. .. | 1.96 |
| மணிக்குடி .. .. .. .. | 1.85 |

நத்தம் ஒன்றியம் கஞ்சாநாயக்கன்பட்டி வரை ரோடு.

137— வினா 12747 திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், நல்லபிச்சம்பட்டியில் செந்துறை பிரிவிலிருந்து கஞ்சாநாயக்கன்பட்டி எல்லை வரை ரோடு போட அரசு முன்வருமா ?

விடை—

நத்தம், செந்துறை ஊராட்சியில் நல்லபிச்சம்பட்டியிலிருந்து செந்துறை வரை உள்ள சாலை மண் சாலையாகும். கஞ்சாநாயக்கன்பட்டி சாலை மருங்காபுரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். சாலை பணிகளுக்கு குறைந்த அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால், மேற்படி பகுதியில் சாலை அமைக்கும் பணியினை தற்போது எடுத்துச் செய்ய இயலவில்லை.



நத்தம் ஒன்றியம், புங்கங்குளத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கல்.

138— வினா 12755 திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி நத்தம் ஒன்றியம் குடகிப்பட்டி கிராமம் புங்கங்குளத்தில் சர்வே நெம்பர் 159—162 இடங்களில் வீடு கட்டி வாழ்ந்து வரும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா ?

விடை—

நத்தம் வட்டம், குடகிப்பட்டி கிராமம் புல எண். 159, 162 ஆகியவைகளில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. எனினும், குடகிப்பட்டி கிராமத்தில் புங்கக்குளம் என்பது புல எண். 158-ல் உளளது. இது கண்மாய் புறம்போக்கு. இதில் 7 ஏழை குடும்பத்தினர் 0.15.0 ஹெக்டேர் நிலப்பரப்பில் குடிசை வீடுகள அமைத்து குடியிருந்து வருகிறார்கள். அனைத்து நீர் நிலைப் புறம்போக்குகளிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன் முறைப்படுத்தும் செயற்குறிப்புகளுக்கு அரசு ஒரு முழுமையான தடையை விதித்துள்ளதால், மேற்படி நிலத்தை நத்தமாக மாற்றி ஆக்கிரமிப்புதாரர்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க இயலாது.

நத்தம் ஒன்றியம், கோசுக்குறிச்சி பால்வாடிக் கட்டிடம்.

139— வினா 12763 திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், கோசுக்குறிச்சியில் இயங்கிவரும் பால்வாடிக் கட்டிடம் கூரைக் கொட்டகையில் இயங்கிவருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், குழந்தைகள் நலன் கருதி கல் கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். இக்கட்டிடம் நல்ல கெட்டிக் கட்டிடத்தில், மேல் பகுதி மட்டும் கூரை வேயப்பட்டு, நன்கு அமைக்கப்பட்டுள்ளது. ஆகையினால் வேறு கெட்டிக் கட்டிடம் கட்டும் உத்தேசம் ஏதுமில்லை.

## குத்தாலம் தொகுதியிலுள்ள எல்லா கிராமச் சாலைகளையும் செப்பனிடுதல்.

**140—வினா 12779 திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் சீதக்கமங்கலம்-பம்மல்-தேதியூர் சாலையை கிராமப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மேற்படி வினாவில் குறிப்பிடப்படும் சாலையினை தார் தளமாக மாற்ற சுமார் ரூ. 38.00 இலட்சங்கள் தேவைப்படும். இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

**141—வினா 12781 திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்ட, ம்குத்தாலம் தொகுதி குத்தாலம் ஒன்றியம் மாந்தைகருப்பூர் சாலையை கிராமப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மேற்படி வினாவில் குறிப்பிடப்படும் சாலைப்பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

**142— வினா 12782 திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரம் திரியம்பகபுரம்-மதுரமாணிக்கம் சாலையை கிராமப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கப்பி சாலையாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?**





விடை

இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

**143— வினா 12783—திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், வடுகக்குடி-செருகுடி கம்பூர் சாலையை கிராமப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கப்பி சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத் திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

**144— வினா 12784—திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் கூந்தலூர்—வடமட்டம் சாலையை கிராமப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கப்பி சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

[1987 நவம்பர் 16

145—வினா 12785—**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், அதம்பார்-மேலவெளி-புதுபாக சாலை சாலையை கிராமப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கப்பி சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

146—வினா 12786—**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், புதூர் வைகல் சாலையை கிராமச் சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கப்பி சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

147—வினா 12787—**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம் வடமட்டம்-சிவனாகரம் சாலையை கிராமப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கப்பி சாலையாக மாற்றித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



1987 நவம்பர் 16]

விடை.—

இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

148—வினா 12788—**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம் கடலங்குடி-சேத்ரபாலபுரம் சாலையை கிராமப்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கப்பி சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

149—வினா 12789—**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், புதூர்-கோடிமங்கலம் சாலையை கிராமப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

[1987 நவம்பர் 16

150 — வினா 12791 — **திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம் முத்தூர்-கொடவிளாகம் சாலையை கிராமப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கப்பிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இச்சாலைப் பணி அரசு அங்கீகாரம் பெற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் இடம் பெறாததால் அத்திட்டத்தின் கீழும் தற்போது இச்சாலையில் பேருந்துகள் எதுவும் செல்லாததால் பேருந்து தட ஏற்புத் திட்டத்தின் கீழும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

**திரு. கி. மனோகரன் :** பாயின்ட் ஆப் ஆர்டர்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் எழுதி அனுப்பியிருந்தீர்கள். அதை நான் பார்த்தேன், அவ்வளவுதான். (குறுக்கீடு) நீங்கள் என்னைப் பார்க்காமலேயே அதைக் கொடுத்து அனுப்பினீர்கள்.

**திரு. கி. மனோகரன் :** இலங்கையில் தமிழ் ஈழப் பகுதியில் இந்திய அரசு உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இந்த அவை இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்ற .... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதை நீங்கள் இங்கே படிப்பது சரியில்லை. (குறுக்கீடு), நீங்கள் என்னிடம் கொடுக்கவில்லை. தபாலிலே கொடுத்தீர்கள். என்னைப் பார்க்கவில்லை. என்னுடைய அனுமதியையும் பெறவில்லை.



1987 நவம்பர் 16]

**திரு. கி. மனோகரன் :** உங்களிடம் கொடுத்தால் என்ன உங்கள் செயலாளரிடம் கொடுத்தால் என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செயலாளர் அனுமதி வழங்க முடியாது. நான் தான் வழங்க முடியும். இதற்கு அனுமதி இல்லை என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன் உங்களிடம் (குறுக்கீடு). இதைப் பற்றி நீங்கள் தினமும் கொடுத்துக் கொண்டு வருகிறீர்கள் ஒரு நேரம் தள்ளுபடியானால் இன்னொரு நேரம் கொடுக்கக் கூடாது என்று ''ரெஸ்ஜுடிகேட்டா'' இங்கே கொண்டு வரவேண்டியதுதான்.

### (ஆ) சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்து.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இன்று சபை நடவடிக்கையில் ஏறத்தாழ 8 சட்ட முன் வடிவுகள் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றன. சட்ட முன் வடிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டால் 5 நாட்கள் தவணை கொடுக்க வேண்டும் என்ற ஒரு முறை இருப்பதாக நான் அறிகிறேன். ** மறுநாளே சட்ட முன் வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறீர்கள். இது சரிதானா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதிக்கப்பட்டு, இன்றைக்கு அரசு அலுவல்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று எல்லோரும் ஒத்துக் கொண்டதுதான். இந்த 5 நாட்களைப் பற்றி அங்கே நீங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடு),** இதைப் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதித்த பிறகு இங்கே விவாதிப்பது முறையல்ல. அங்கேயே ஒத்துக் கொண்ட விவகாரங்கள்தான் இவைகள். (குறுக்கீடு), இதற்கு நாம் என்ன செய்ய முடியும். நீங்கள் உட்கார்ந்து படிக்க வேண்டும். உங்களுக்கு டியூசன் சொல்லித் தர முடியுமா? அமருங்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** நீங்கள் அதைச் சொல்ல வேண்டாம் சார். 5 நாள் டைம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாம் இது பற்றி பேசியாகிவிட்டது. அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதித்தாகி விட்டது. உங்களுக்கும் நான் சொல்லி விட்டேன். (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 நவம்பர் 16

(அ) இலங்கையில் போர்நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து—தொடர்ச்சி.

திரு. இ. மனோகரன் : நாடாளுமன்றத்திலே, நான் எழுப்பியதைப் பற்றி விவாதிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாடாளுமன்றத்திலே பதில் சொல்வதற்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள். இது வெளி விவகாரத் துறை சம்பந்தப்பட்டது.

திரு. இ. மனோகரன் : நீங்கள் அலவ் பண்ண மாட்டீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அலவ் பண்ணவில்லை. இதைப் பற்றியெல்லாம் என்னிடம் கேட்க வேண்டாம். என் சம்பந்தப்பட்டவற்றை மட்டும் கேளுங்கள். ஏற்கனவே இதைப் பற்றி உங்களிடம் நான் சொல்லிவிட்டேன்.

திரு. இ. மனோகரன் : எனக்கு பாதுகாப்பு நீங்கள்தானே, வேறு யார் இருக்கிறார்கள் ? உங்களிடம் தான் கேட்க முடியும். (குறுக்கீடு). இவ்வளவு பெரிய முக்கியமான பிரச்சினை பற்றிப் பேசக்கூடாது என்று சொல்கிறீர்களா ? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போகிறவர்கள் நேராகப் போய் விடலாம். நான் ஏற்கெனவே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். விவாதம் இல்லையென்று, (குறுக்கீடு). நீங்கள் காலையிலே கொடுத்து இருக்கிறீர்கள். அதற்கு அனுமதி பெறவில்லை. நான் பாயிண்ட் ஆப் ஆர்டருக்கும் அனுமதிக்கவில்லை.

(ஆ) சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவேவ அலுவல் ஆய்வுக் குழுவில் நாம் விவாதித்து முடிவு எடுத்தது பற்றிப் பேச வேண்டாம். திரு. ஆறுமுகம் உட்காருங்கள். (குறுக்கீடு) ** இப்படிப் பேசுவது பாராளுமன்ற முறைக்கு, உண்மையிலேயே உகந்தது அல்ல. அதை நீங்கள் பேசும் போதே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். ** நீங்கள் செய்வதைக் கூடச் சொல்லக் கூடாது. இது பாராளுமன்ற முறைக்கு உகந்தது அல்ல. ** அதைச் சொல்லக் கூடாது**என்று சொல்வது பாராளுமன்ற முறையல்ல. "You are supposed to know everything" அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுகிறேன். அது இருக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) உறுப்பினர்களுடைய தகுதியைக் குறைத்து விடாதீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1987 நவம்பர் 16]

(அ) இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து—தொடர்ச்சி

திரு. இ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய வார்த்தைகள் ஒன்றும நீக்கப்படவில்லை. அவ்வளவுதான் செய்ய முடியும். ஏற்கனவே அனுமதியில்லை என்றால் அதை நீக்கி விடுவேன். அதை நீக்கவில்லை. இதிலிருந்து புரிந்து கொள்ளுங்கள்.

திரு. இ. மனோகரன்: 'ரெக்கார்டு பர்பசுக்காகச்' சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே அனுமதியில்லை என்றால் நீக்குவது வழக்கம். ஆனால் இங்கே நான் அதை நீக்கவில்லை. (குறுக்கீடு) என்னுடைய உணர்வு தான் காரணம். அந்த உணர்வு இருக்கக் கூடாது என்று 'nobody can compel me'

திருமதி டி. யசோதா: உங்களுடைய உணர்வைக் காட்டுவதற்கு நீங்கள் தினமும் அனுமதித்து, பிறகு நீக்கிவிடுகிறீர்கள். அதற்கும் இந்த உணர்வு தான் காரணமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அப்படிக் கேட்பது முறையல்ல. என்னுடைய உணர்வை வெளிப் படுத்த வேண்டிய நேரத்தில் வெளிப் படுத்துவேன். வேண்டாத நேரத்தில் வெளிப்படுத்த மாட்டேன். அது என்னுடைய உரிமை. மனிதனுடைய உரிமை.

திருமதி டி. யசோதா : எல்லா நேரத்திலும் எங்களுடைய உரிமையை நிலை நாட்டுவதில்லை. வன்னியர் பிரச்சினை, ஆதி திராவிடர் பிரச்சினை பற்றி, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றி வெளிக் காட்ட முடிவதில்லை. அதைக் கேட்க முடிகிறதா ? அதே நேரத்தில் உங்களுடைய உணர்வைப் பற்றிப் பேசுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அந்தப் பிரச்சினையைப் பற்றி எழுதிக் கொடுக்கலாம். என்னென்ன குறைபாடுகள் இருந்தாலும், அதை நான் பார்க்கிறேன். அதிலே ஒன்றும் உணர்வு அல்ல.

திரு. இ. மனோகரன் : எங்களுடைய உணர்வைத் தெரிவிக்கக் கூடிய நேரம் என்று வரும் என்று தெரியவில்லை. *** இந்த விஷயத்தில். எனவே நாங்கள் வெளியேறுகிறோம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைச் சொல்லக் கூடாது கேட்டுத்தான் இருக்கிறீர்கள். ** என்ற வார்த்தையைச் சொல்லக்கூடாது.

திரு. இ. மனோகரன் : எங்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாதுகாப்பு கொடுத்து கொண்டுதான் இருக்கிறேன்.

திரு. இ. மனோகரன்: இதை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்).

(முற்பகல் 11–10)

**3. விதி 111-ன் கீழ் உள்ளாட்சித்துறை அமைச்சரின் அறிக்கை—**

**நகராட்சிகள், மாநகராட்சிகளில் சொத்து வரி சீரமைப்பு குறித்து.**

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில் கடந்த சுமார் 15 ஆண்டுகளாக சொத்து வரிப் பொது சீராய்வு செய்யப்படவில்லை. இதற்கான முக்கிய காரணம் நகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் செயல்படாததே. 1986-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நகராட்சி தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்றனர். எனவே, நகராட்சிகளில் பொதுச் சொத்து வரி சீராய்வு செய்வதற்கு அரசு ஆணையிட்டது. சிறப்பு சீராய்வு அலுவலர்களை நியமித்து சொத்து வரி சீராய்வுப் பணியினைத் தொடங்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. இவ்வலுவலர்கள் மேற்கொண்ட சொத்து வரி திருத்தம் மிக அதிகமாக இருப்பதாக மக்களிடமிருந்து புகார்கள் வரவே, அரசு, சிறப்பு சீராய்வு அலுவலர்கள் மேற் கூறிய பணியினைத்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



தொடர வேண்டாம் என்றும், 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி பொதுச் சீராய்வுசெய்து விட்டு வரியைத் திருத்தலாம் என்றும் ஆணையிட்டது. அதன் அடிப்படையிலும், 1980-ம் ஆண்டு நகராட்சி நடைமுறை நூல் பாகம் 1-ல் ஏற்படுத்தப்பட்ட 324-ஏ என்ற எண் கொண்ட திருத்தத்தின் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாகிகள் செய்த சொத்து வரி திருத்த மதிப்பீடு பன்மடங்கு அதிகமாக உள்ளது என முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன. அரசு இதனையும் நன்கு பரிசீலனை செய்து, கீழ்க்கண்டவாறு முடிவுகள் எடுத்துள்ளது.

(i) 1980-ம் ஆண்டு நகராட்சி நடைமுறை நூல் பாகம் 1 (Municipal Manual Volume-I)-ல் ஏற்படுத்தப்பட்ட 324-ஏ என்ற எண். கொண்ட திருத்தம் நீக்கப்படும்.

(ii) நகராட்சி நிர்வாகிகள், 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு (Tamil Nadu District Municipalities Act, 1920) 82 (2)-ல் கண்டுள்ள வரி விதிப்பினைக் கடைப் பிடிக்க வேண்டும். கட்டிடத்தின் வாடகை மதிப்பை நிர்ணயிக்க முடியாத பட்சத்தில் மேற்படி சட்டப் பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள விதிவிலக்கு 82 (2) (a) (ii) -ல் கண்டுள்ள வாடகை மதிப்பை நிர்ணயித்து வரி விதிப்பு செய்ய வேண்டும். இவற்றில் எது நகராட்சிக்குச் சாதகமாக உள்ளதோ, அதனையே கடைப் பிடிக்க வேண்டும்.

(iii) மேற்கண்டவாறு ஆண்டு வாடகை மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்டு சொத்துகளின் மீது வரி விதிக்கப்படும். இதன் தொடர்பாக கீழ்க்கண்ட அறிவுரைகள் நகராட்சி நிர்வாகிகளுக்கு வழங்கப்படும் :—

(அ) சொந்தக் குடியிருப்பு வீடு மற்றும் ஒரு பகுதி சொந்த குடியிருப்பு மறு பகுதி வாடகைக்கு விடப்பட்டுள்ள வீடுகளுக்கு 1–10–87 தேதிக்கு முன்பு இருந்த வரியை விட கூடுதலாக ஒரு மடங்குக்குக் குறையாமல் வரி நிர்ணயிக்க வேண்டும்.

(ஆ) முழுமையாக வாடகைக்கு விடப்பட்ட வீடுகளுக்கு 1–10–87 தேதிக்கு முன்பு இருந்த வரியை விட கூடுதலாக அதிக பட்சம் இரண்டு மடங்குக்கு குறையாமல் நிர்ணயிக்க வேண்டும்.

(இ) வணிகம் மற்றும் தொழிற்சாலை மற்றும் தொழிற் கூடங்களாகப் பயன்படுத்தப்படும் கட்டிடங்களுக்கு அதிக பட்சம் மூன்று மடங்குகளுக்குக் குறையாமல் நிர்ணயிக்க வேண்டும். ஏப்ரல் 1, 1982க்குப் பிறகு கட்டிய குடியிருப்பு மற்றும் அனைத்து கட்டிடங்களுக்கும் (residential and all buildings) 1–10–87-தேதிக்கு முன்பு இருந்த வரியை விட 50 சதவீதம் வரை கூடுதலாக (not exceeding 50 per cent) உயர்த்தி நிர்ணயிக்க வேண்டும்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 16

(ஈ) வரி முறையீட்டுக் குழுவிற்கு வரி முறையீடு விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள், புதிதாக உயர்த்தப்பட்ட வரியில் பாதியை (அதாவது 50 சதவீதம்) பழைய வரியுடன் சேர்த்துக் கட்டிய பின் வரி முறையீடு செய்ய வேண்டும். இது எல்லா கட்டிடங்களுக்கும் பொருந்தும்.

(உ) வரி முறையீட்டுக் குழுவிற்குச் செய்யப்படும் முறையீட்டு விண்ணப்பங்களின் மீது வரி முறையீட்டுக் குழு, சீராய்வு செய்யு முன், நியாயமான ஏற்கக் கூடிய காரணங்கள் இருந்தால் உயர்த்தப்பட்ட வரியில் 5 சதவீதத்திற்கு மேற்படாமல் குறைக்கலாம்.

2. சென்னை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில் சொத்துவரி சீராய்வு செய்வதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் மாநகராட்சிகளின் சட்ட விதிகளின்படி இப்போது அறிவிக்கப்பட்டுள்ள வரி விதிப்பு கொள்கைப்படி வரி விதிக்கப்படும். இனி எல்லா மாநகராட்சிகளும் வரி விதிப்பு மேற்கொள்ளும்பொழுது ஒவ்வொரு வரி செலுத்துவோரிடமிருந்தும் (assessee) எழுத்து மூலமாக அறிக்கை (return) ஒன்று பெறப்படும். மாநகராட்சிக்கு வரி செலுத்துவோருக்கு, பம்பாய் மற்றும் கல்கத்தா மாநகராட்சிகளில் உள்ளதுபோல் சொத்துவரி செலுத்துவதற்கான அட்டை வழங்கப்படும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதற்கேற்றவாறு மாநகராட்சி சட்ட விதிகளில் தக்க திருத்தங்கள் செய்யப்படும்.

3. ஏழை எளிய மக்கள் பெரும்பாலும் குடிசையில் வாழ்கின்றனர். அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, குடிசை வீடுகளுக்குக் குறைந்த அளவு வரி விதித்திருந்தால் அதை உயர்த்தத் தேவையில்லை என அரசு முடிவு செய்துள்ளது.

### கவன ஈர்ப்பு

### (அ) கட்டட வரி உயர்வு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. சுப்பராயன், மா. மணிமாறன், ஆ. நடராசன், டி. ஆர். வேங்கடரமணன், கு. ரமணி, கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, எ. எஸ். ஏ. ஆறுமுகம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் கட்டிட வரி உயர்த்தப்பட்டுள்ளது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1987 நவம்பர் 16]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன். கொள்கை விளக்கத்தைப் பற்றிய அறிக்கையும் அவைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

1978-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மதுரை மாநகராட்சியைத் தவிர மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் செயல்பட்டு வந்தன. தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் சொத்துவரி சீராய்வு செய்வதில் முறைகேடுகள் நடைபெற்றன என புகார்கள் வந்ததால் எல்லா உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்கும்வரை சொத்துவரி பொதுச் சீராய்வு செய்ய வேண்டாம் என்ற தடையை விதித்து அரசு ஆணையிட்டது. மதுரை மாநகராட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் அப்போது செயல்பட்டு வந்ததால் இந்த தடை உத்தரவு மதுரை மாநகராட்சிக்குப் பொருந்தவில்லை.

1986-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஊராட்சி மற்றும் நகராட்சி தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்றனர். எனவே, சென்னை மற்றும் கோவை மாநகராட்சிகளைத் தவிர மற்ற நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் பொதுச் சொத்துவரி சீராய்வு செய்வதற்கு விதிக்கப்பட்ட தடைநீக்கம் செய்யப்பட்டது.

2. தற்போதுள்ள வரியமைப்பு விதிகளின்படி, எல்லா உள்ளாட்சி நிறுவனங்களிலும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பொதுச் சொத்துவரி சீராய்வு செய்யலாம். எனவே, தடைநீக்கம் செய்யப்பட்டவுடன் எல்லா நகராட்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் சிறப்பு சீராய்வு அலுவலர்களை நியமித்து சொத்துவரி சீராய்வுப் பணிகளை உடனடியாகத் தொடங்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. கடந்த சுமார் 15 ஆண்டுகளுக்கு மேல் சொத்துவரி பொதுச் சீராய்வு (மதுரை மாநகராட்சியைத் தவிர) எந்த உள்ளாட்சி நிறுவனத்திலும் நடைபெறாததாலும் தற்போதுள்ள வாடகை மதிப்பினை கருத்தில் கொண்டு சொத்துவரி சீராய்வு செய்ததாலும், பொது மக்களிடமிருந்து வீட்டு வரியினை அதிகமாக உயர்த்திவிட்டார்கள் என்ற புகார்கள் வந்தவண்ணமாய் இருந்தன. எனவே, இதனை அரசு மறுபரிசீலனை செய்து சிறப்பு சீராய்வு அலுவலர்கள் மேற்கூறிய பணியினைத் தொடர வேண்டாம் என்று அரசு ஆணையிட்டது. மேலும் ஊராட்சி மற்றும் நகராட்சிகள் முறையே 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு, பஞ்சாயத்துகள் சட்டம் (1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி) சொத்துவரி பொதுச் சீராய்வு செய்து வீட்டுவரியைத் திருத்தி அமைத்துக் கொள்ளலாம், என ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

[திரு. ஆர். எம். வீரப்பன்] ]1987 நவம்பர் 16

3. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக அதிகாரிகள் ஏற்கெனவே சிறப்பு சொத்துவரி சீராய்வு அலுவலர்கள் செய்து வைத்திருந்த சொத்துவரி சீராய்வினை அடிப்படையாக கொண்டு கேட்பு அறிக்கையில் (demand notice) 1—10—1987 முதல் திருத்திய வரியினைக் கொடுக்கவேண்டும் என அறிவுறுத்தியிருக்கிறார்கள். இந்த மதிப்பீடும் பன்மடங்கு அதிகமாக உள்ளது என பல முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன. அரசு இதனையும் நன்கு பரிசீலனை செய்தது. 1930-ஆம் ஆண்டு நகராட்சி நடைமுறை நூல் பாகம்-1 (Municipal Manual Volume–1)-ல் அரசு ஏற்படுத்திய ஒரு திருத்தமே இந்த அதிக மதிப்பீட்டிற்கு காரணமாக இருந்ததென அறிகிறது. எனவே, நகராட்சி முறை தொகுப்பு நூல் (Municipal Manual Volume–i) பகுதி 1-ல் சேர்த்துள்ள 324—ஏ என்ற எண் கொண்ட திருத்தத்தை நீக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

4. நகராட்சி நிர்வாகிகள் சொத்து வரிவிதிப்பு செய்வதில் 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 82(2), 82(2) (a) (ii)-ல் கண்டுள்ள வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

5. நகராட்சி நிர்வாகிகள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளையும், விரிவான அறிவுரையாக அரசு தனியே வெளியிடவும் முடிவு செய்துள்ளது.

6. இதற்கிடையில், மாவட்ட வருவாய் அலுவலர்/கோட்ட வருவாய் அலுவலர் தலைமையில், நகராட்சிப் பகுதியிலுள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் நகராட்சித் தலைவரும், மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அங்கத்தினர்களும் கொண்ட வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு ஒன்று அமைக்க நகராட்சி சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு மேல்முறையீட்டு மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. மேல்முறையீட்டுக் குழு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்து வழிமுறைகள் வகுக்கப்பட்டு அதற்குரிய ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

7. சென்னை, மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளைப் பொறுத்த வரையில், சொத்துவரி பொதுச் சீராய்வு செய்வதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கேற்றவாறு சொத்துவரி விதிப்பை குறித்த நடைமுறைகளையும் மாநகராட்சி சட்ட விதிகளில் தக்க மாற்றங்களையும் அறிவித்து தேவையான திருத்தங்கள் செய்யப்படும்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொள்கை அறிவிப்புகளையும், கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான அறிக்கையையும் அமைச்சர் அவர்கள் முன்



1987 நவம்பர் 16] [திரு. கே. சுப்பராயன்]

வைத்திருக்கிறார்கள். இவற்றிலே, இப்போது திடீரென அறிவிக்கப்பட்டிருக்கிற இந்த அறிவிப்புக்கு முன்னர், கடுமையான வரி உயர்வினால் பாதிக்கப்பட்டு நகராட்சியினுடைய வரி விதிப்புச் சட்டங்கள் உரியபடி திருத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வருகிற பல்வேறு நகராட்சி மன்றத் தலைவர்களை அல்லது சர்வ கட்சியினரை அழைத்துப் பேசி தீர்வு கண்டிருக்கலாம் அல்லவா? அதற்கிடையிலே, ஒருதலைப்பட்சமான இந்த அறிவிப்பும் மக்கள் மத்தியிலே ஒரு அதிருப்தியை தோற்றுவிக்கும் என்பதை அரசு உணர்கிறதா? ஆகவே, இவற்றையே நகராட்சித் தலைவர்கள் மற்றும் சர்வ கட்சியினரையும் அழைத்துப் பேசி பொருத்தமான முறையில் வரிவிதிப்புச் சதவீதங்களை உருவாக்குவதற்கான முயற்சியை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒருதலைப்பட்சமாக மக்கள் மீது சுமத்தப்படுகின்ற முறையில் இப்போது வரிவிதிப்புக் கொள்கை அறிவிக்கப்படவில்லை. சுமார் 18 ஆண்டுகளுக்கு முன்பு விதிக்கப்பட்ட வரியைப் போல, சொந்தமாகக் குடியிருக்கிற வீடுகள் அல்லது பாதிப் பகுதியை வாடகைக்கு விட்டுவிட்டு, பாதிப் பகுதியிலே குடியிருந்தாலும் அது சொந்தமாகக் குடியிருக்கிற வீடுகளாகக் கருதப்பட்டு, 18 ஆண்டுகளுக்கு முன்னாலே 50 ரூபாய் விதிக்கப்பட்டு இருந்தால், இப்போது இன்னொரு 50 ரூபாய்தான் விதிக்கப்பட வேண்டுமென்று அரசு கொள்கையாக அறிவிக்கிறது. அதைப் போல, வாடகைக்கு விட்டு வருமானம் தேடிக்கொண்டிருக்கிற வீடுகளாக இருந்தால், 50 ரூபாய் 18 ஆண்டுகளுக்கு முன்னாலே விதிக்கப்பட்டிருந்தால், இப்போது 100 ரூபாய் விதிக்கலாம் என்றுதான் கொள்கை அறிவிக்கிறது. அதைப்போல, வியாபாரஸ்தலங்களுக்காக வாடகைக்கு விடப்பட்டு வருமானங்கள் ஈட்டப்படுகின்ற, தொழில் நடத்தப்படுகின்ற கட்டடங்களாக இருந்தால் 18 ஆண்டுகளுக்கு முன்னாலே 50 ரூபாய் விதிக்கப்பட்டிருந்தால் இப்போது 150 ரூபாய்தான் விதிக்கவேண்டுமென்று நாம் குறிப்பிட்டிருக்கிறோம். இது பற்றி பல முனிசிபல் தலைவர்கள் இடத்தில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் இடத்தில் அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் இடத்தில், சில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் இடத்தில் இதற்கு என்ன வழிமுறைகளை நீங்கள் வைத்திருக்கிறீர்கள் என்று அவர்களிடத்திலே கேட்டு, அவர்களிடத்திலே இந்தக் குறிப்புகளைக்கூட சொல்லாமல், அவர்கள் இன்னும் கொஞ்சம் அதிகமாக விதித்தால்கூட பரவாயில்லை, இப்போது விதித்திருக்கிற முறைதான் தவறாக இருக்கிறது; இரண்டாயிரம் ரூபாய் விதித்திருந்த இடத்தில் இப்போது 60 ஆயிரம், 70 ஆயிரம், 80 ஆயிரம் என்றெல்லாம் விதித்து இருக்கிறார்கள்; அது கட்ட முடியாதது என்பது மாத்திரம் அல்ல; அது கொடுமையாகவும் இருக்கிறது என்கின்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இதை எல்லாக் கட்சித் தலைவர்களும், நகரசபைத் தலைவர்களும் மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, குடியிருக்கின்ற வீடுகள்

சொந்தமாக குடியிருக்கின்ற வீடுகள் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினாலேதான் அவர்களுக்கு குறைந்தபட்சமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. 18 ஆண்டுக்கால வளர்ச்சியை நாம் கணக்கிடுகிறபோது, 18 ஆண்டுகளுக்கு முன்னாலே 50 ரூபாய் கட்டிக்கொண்டிருந்தவன், இன்றைக்கு 100 ரூபாய் கட்டவேண்டுமென்று நாம் கேட்கிறபோது, இது ஒருதலைபட்சமான முடிவு என்று நம்முடைய உறுப்பினர் நினைப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன் :** இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு இதேமாதிரி கவன ஈர்ப்பு தீர்மானத்தில் இரண்டு கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் கொடுத்த கவன ஈர்ப்பு தீர்மானத்தின்போது அவ்வாறு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமருங்கள் : 8 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 5 உறுப்பினர்களுக்கு மேலே இருக்குமானால், ஒரு கேள்வி என்று விதி சொல்கிறது. இதைத்தான் பின்பற்றி வருகிறேன். (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விவரமாக அறிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே, மாற்று அறிக்கையும் வைத்திருக்கிறார்கள். நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வதெல் லாம், நகராட்சியிலே சொத்து வரியை அதிகப்படுத்துவதற்கு, வருவாயை அதிகப்படுத்துவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்திருக்கி றீர்கள். ஆனால் உள்ளாட்சித் துறையிலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு கிடைக்கின்ற வருமானங்கள் மிகக் குறைவாக இருக்கின்றது. தல சாலை மானியமாக இருந்தாலும், லோக்கல் செஸ் மாட்சிங் கிராண்டாக இருந்தாலும், 15 ஆண்டுகளுக்கு முன்னாலே விதித்த விதி முறைகளைத்தான் இன்றைக்கும் அர சாங்கம் கடைபிடித்து வழங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, உள்ளாட்சி நிறுவனங்கள் சொத்துவரி மீது ஏற்றுக்கொண்ட வரு மானத்தை பெருக்கிக்கொள்ள வேண்டுமென்று கருதுகின்ற இந்த அரசு, அரசிலிருந்து வழங்குகின்ற இந்த மானியங்களை ஏன் அதிகமாக்க வில்லை இந்த நிலை தல சாலை மானியத்திலும் அப்படித்தான் இருக்கிறது. லோக்கல் செஸ் மாட்சிங் கிராண் டையும் அதிகமாக்கவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மானியங்களை அதிகப்படுத்துவாரா என்று கேட்ப தோடு இன்னொன்று........ (மணியடிக்கப் பெற்றது).

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கிற கவனஈர்ப்புத் தீர்மானத்தினுடைய தலைப்பில் ''தமிழ்நாட்டில் உள்ளாட்சி





அமைப்புகளில் கட்டிட வரி உயர்த்தப்பட்டுள்ளது குறித்து'' என்றுதான் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறு உள்ளாட்சி அமைப்புகள் என்று அவர்கள் குறிப்பிட்டிருந்தாலும் நகராட்சி களில்தான் இப்போது அப்படிப்பட்ட வரியை உயர்த்தி அறிக்கை கள் தரப்பட்டு பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. ஆகவே, நகராட்சிகளைப் பற்றிய குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் கள் தெரிவித்து அதிலே அரசு மிகுந்த சாதகமாக,—தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்து—உடனடியாக எந்தவிதமான வரிச் சுமையும் சாதாரண மக்களுக்கு வரக்கூடாது என்ற உணர்வில் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு இன்றைக்கு இங்கே அறிவிப்பு செய்யச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றைப் பற்றித் தெரிவிக்கிறார்கள். அதைப் பற்றியும் தனியாகக் கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ அல்லது கேள்வியாகவோ கொடுத் தால், அதையும் பரிசீலித்து அரசினுடைய கொள்கையை பதிலில் தெரிவிப்பதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஒரு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கூட்டத் தொடரில் என்னுடைய பெயரில் தெருவிளக்கு சம்பந்தமாக ஒரே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம்தான் வந்தது. அதிலே ஒரே ஒரு கேள்விதான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தீர்கள். ஏதோ பேரவைத் துணைத் தலைவருக்கு இரண்டு கேள்விகள் அனுமதிக்கப்பட்டன என்ற தவறான தகவலையே இங்கே மூலதனமாக வைத்துப் பேசுவது என்பதை அருள்கூர்ந்து அவர் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) ரெக்கார்டில் இருக்கிறது, எடுத்துப் பார்க்கலாம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொள்கை அறிவிப்பின் மூல மாக இந்த வீட்டு வரிப் பிரச்சினைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு புதிய மாற்றத்தைக் கொடுத்தமைக்காக நான் முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் கூட வாடகை வீட்டில் குடியிருப்பவர்களுக்குப் பழைய வரி யிலிருந்து இரண்டு மடங்கு உயர்த்தப்படும் என்று சொல்லி யிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நன்கு அறிவார்கள். ''பேர் ரென்ட் ஆக்ட்''-படி பல கட்டிடங் களுக்கு இன்றைக்கு பேர் ரென்ட் நிச்சயம் செய்யப்பட்டு அந்த வாடகையை விரும்பினால் கூட உயர்த்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வாடகை குறைவாக இருக்கிற இடங்களில் வாடகை செலுத்துகிறவர்களிடத்திலிருந்து வரியை

வசூலிக்க ''ரென்ட் இன்க்லூட்ஸ் டேக்ஸ்'' என்ற அளவில் தகுந்த மாற்றங்களைச் செய்வதோடு, அண்மையில் தஞ்சையில் மருத்துவர்கள் மாநாடு நடைபெற்றிருப்பதையும் மருத்துவமனைகளுக்குப் போடப்படும் வரிகள் அதிகமாக இருக்கின்றன என்று அவர்கள் தெரிவித்திருப்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அத்தகைய புகார்கள்தான் என்னுடைய பகுதியிலிருந்தும் அதிகமாக வந்திருக்கின்றன. அதற்கும் இந்தத் திட்டத்தினால் பலன் இருக்கும் என்றாலும் கூட அதனையும் கூடுமானவரை மனிதாபிமான உணர்வோடு ஆராய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 ஆண்டுகளாகக் கவனிக்கப்படாமல் பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே இருந்து வந்த ஒன்றிற்கு இந்த அரசாங்கம் — அதிலும் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகப் பெரிய உள்ளத்தோடு- மனிதாபிமான உணர்வோடு - பிரச்சினையை நன்கு உணர்ந்து- இன்றைக்குச் சலுகையாக இதை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாடகை குறைவாக வாங்கிக் கொண்டிருக்கிற கட்டிடங்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். இதிலே முதல் பகுதியிலே முனிசிபல் சட்டத்திலேயே இருக்கிற விதிகளின்படி அவர்கள் நிர்ணயிக்கலாம், அப்படி நிர்ணயிக்கின்றபோது வாங்குகிற வாடகை எவ்வளவு, அதனுடைய மதிப்பு எவ்வளவு என்று அவர்கள் முடிவெடுத்து நிர்ணயிக்க முடியுமானால் அதை நிர்ணயிக்க எந்தத் தடையும் இல்லை. அரசாங்கத்தின் அறிவுரை அதற்கு ஏதுமில்லை. ஆனால், நிர்ணயிக்க முடியாத இடத்தில் கண்ணை மூடிக் கொண்டு இவ்வளவு மதிப்பு உயர்ந்துள்ளது, மதிப்பு உயர்ந்துள்ளதால் இவ்வளவு வாடகை இதற்கு வரக்கூடும் என்ற அனுமானத்தின் மீது இன்றைக்குப் பல கட்டிடங்களுக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதை நாம் குறைக்க வேண்டும் என்று ஒரு குறிப்பிட்ட நெறிமுறையை, நடைமுறையை வழங்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் வாடகைக் கட்டிடங்களுக்கு , வாடகை வீடுகளுக்கு 2 மடங்கு மாத்திரம் உயர்த்தலாம் என்று சொல்லியிருக்கிறோம்.

முனிசிபல் நிர்வாகம் முறையாக, அவர்களுடைய அதிகாரத்தின்படி, விதியின்படி அதை நிர்ணயித்தால் அதில் அரசாங்கம் தலையிடாது. மேலும், மருத்துவ மனைகளுக்குத் தீர்மானம் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். மருத்துவ மனைகளுக்கான தீர்மானத்தை நானும் பார்த்தேன். மருத்துவ மனைகளை நடத்துகிறவர்கள் வியாபார நோக்கத்தோடுதான் நடத்துகிறார்கள் ; தொழிலாக நடத்துகிறார்கள். மக்களுடைய நன்மைக்காக என்று யாரும் நடத்துவதில்லை, மருத்துவ மனைக்குச் சென்று படுக்கையில் இருந்து கொண்டு மருத்துவம் செய்து கொண்டு வந்தவர்களுக்குத்தான் அது தெரியும்.





ஆகவே, அவர்களுக்கும் கூட இப்போது 3 மடங்கு போட்டால் போதும் என்றுதான் இப்போது சொல்லியிருக்கிறோம். இதை எல்லோரும் மிக்க மகிழ்ச்சியோடு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தனித்தனியாகப் பலரிடம் கருத்துக்களைக் கேட்டபிறகுதான் முதல்வர் அவர்கள் இவ்வளவு தாராளமாக வரி விதிப்புக் கொள்கையில் இருக்கிறார்களே என்று அவர்களே ஆச்சரியப்பட்டு இதை வரவேற்றிருக்கிறார்கள்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்திருக்கும்படியான விளக்கக் குறிப்பினுடைய அடிப்படையில் அரசாங்கத்தினுடைய முடிவு என்று ஒரு விளக்கமான அறிக்கையை அவர் வெளியிட்டிருக்கிறார். இந்த வரி உயர்வு சம்பந்தமாக மக்கள் மத்தியிலே கடுமையான எதிர்ப்பு உணர்வு கிளம்பியது. பல மடங்கு, எட்டு மடங்கு, பத்து மடங்கு என்று குடியிருப்பு வீடுகளுக்குக் கூட போட்டதை நானே நேரிலே கேட்டிருக்கிறேன். இப்போது அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்கும்போது, 18 ஆண்டுகளாக வரி உயர்வு சம்பந்தமாக ஒரு சரியான நெறி முறை இல்லை; எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாததால் அந்த உள்ளாட்சி ஸ்தாபனங்களுக்கு வருவாய் போயிற்று , அதனால் வரியை உயர்த்த வேண்டுமென்ற நிலை உருவாயிற்று என்று சொன்னார்கள். அதிலே சில அம்சங்கள் சரியானது. எந்தவிதமான வரி உயர்வும் இல்லாமல் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று யாரும் சொல்லவில்லை. அந்த மாதிரி செய்ய முடியாது. இப்போது கூட, ஏற்கெனவே கொடுத்து வந்த வரியை ஒரு மடங்கு உயர்த்தலாம் என்ற நிலைமை இருக்கிறது. வர்த்தக ஸ்தாபனங்கள், வேறு சில ஸ்தாபனங்கள், வருவாய் அதிகமாக இருக்கும்படியான ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கு வருவாயின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அதனுடைய நிலைமை வேறு. அப்படி இங்கே வரவில்லை. அப்படிப்பட்ட ஒரு முறையை ஏன் அரசு முயற்சிக்கக் கூடாது. ஏழையெளிய மக்கள், குடியிருப்பு வீட்டை வைத்திருப்பவர்கள், அல்லது ஒரு வீட்டில் குடியிருந்து கொண்டு மற்றொரு வீட்டை வாடகைக்கு விட்டிருப்பவர்கள் பெரிய வருவாய் உள்ளவர்கள் என்று சொல்ல முடியாது. அப்படி ஒரு தொழிலாளிகூட தான் ஒரு வீட்டில் குடியிருந்து கொண்டு . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. கு. ரமணி :** மற்றொரு வீட்டை வாடகைக்கு விடுகிறார்கள். அதற்கெல்லாம் ஒரு மடங்கு வரி உயர்த்துவதென்பது அதிகம். 50 ரூபாயை 100 ரூபாயாக ஆக்கலாம் என்பதும், 100 ரூபாயை 200 ரூபாயாக ஆக்கலாம் என்று சொல்லுவதும் உண்மையிலேயே கடுமையானது. அப்பீல் கமிட்டியும், அரசு

என்ன சொல்லியிருக்கிறதோ அதைத் தவிர வேறு எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கான முறை இல்லை. அதைப் பற்றியும் அரசு சிந்திக்க வேண்டியிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மென்கள் தலைமை வகிக்கக் கூடாது என்றும், அலுவலர்கள்தான் தலைமை வகிக்கலாம் என்றும் ஒரு தகுந்த ஏற்பாட்டை சட்டமாக இயற்றிவிட்ட பிறகு அவர்கள் வேறு என்ன செய்ய முடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே எல்லா முனிசிபல் சேர்மென்களை கூட்டி வைத்து ஒரு விவாதம் நடத்தி அந்த அப்பீல் கமிட்டியின் செயல்முறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர அரசு முயற்சி எடுக்குமா ? சிறிய வீடுகள், சொந்த குடியிருப்பு வீடுகள் ஆகியவற்றுக்கு ஒரு மடங்கு உயர்த்தலாம் என்பதைக் குறைக்க ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என்பதையும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. ரமணி அவர்கள், அரசு அறிவித்திருக்கின்ற கொள்கையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு ஆதரிக்க வேண்டுமென்று நினைத்தாலும், அரசாங்கம் இவ்வளவு மனம் திறந்த உள்ளத்தோடு, முதலமைச்சர் அவர்களும் இவ்வளவு குறைந்த வரியை இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள் என்றாலும் இந்த வரியை உயர்த்தியதை வைத்துக் கொண்டு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ அரசாங்கம் வரியை உயர்த்தி விட்டது, அரசாங்கம் வரியை உயர்த்திவிட்டது என்று ஊரெல்லாம் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிற நிலையை இன்றைக்கு முதல்வர் அவர்கள் தடுத்து விட்டார்கள். நிறுத்தி விட்டார்கள் என்ற உணர்வு அவருக்குள்ளே தோன்றி இதை எப்படியாவது கேள்வியாகக் கேட்க வேண்டுமென்று மிகுந்த சிரமப்பட்டு, சொந்தமாகக் குடியிருக்கக் கூடியவர்களுக்கு வரி உயர்வு அதிகம் என்று சொல்லுகிறார்கள்.

சொந்தமாகக் குடியிருந்தாலும் சரி, அல்லது ஒரு பகுதியை வாடகைக்கு விட்டு விட்டு பாதியிலே அவர்கள் குடியிருந்தாலும் சரி, அதை அவர்கள் சொந்த குடியிருப்பாக கருதி ஒரு மடங்கு வரி உயர்த்தவிருப்பதாகச் சொல்லுகிறோம். அப்படி உயர்த்தவிருப்பதாகச் சொல்லும்போது, அந்த வரி 18 ஆண்டுகளுக்கு முன்பு 50 ரூபாயாகவும் இருந்திருக்கலாம். 10 ரூபாயாகவும் இருந்திருக்கலாம், 5 ரூபாயாகவும் இருந்திருக்கலாம். எப்படி வரி விதித்தார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும். அப்படி வரி விதித்த சூழ்நிலை என்றைக்கு எப்படி உயர்ந்திருக்கிறது ? ஒரு பக்கத்திலே ரூபாயின் மதிப்பு குறைந்தது என்று எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது மற்ற மதிப்புகள் உயர்ந்துவிட்டன என்றாலும் சரி, நீங்கள் எந்த விவாதத்தை வைக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதை வைத்துக் கொள்ளுங்கள்; எப்படியோ ஒன்று மதிப்பு குறைந்துவிட்டது; மற்றொன்று உயர்ந்துவிட்டது. அப்படி உயர்ந்துவிட்ட 18 ஆண்டு



காலத்திலே 50 ரூபாய் என்று இல்லாமல் 25 ரூபாய் கொடுத்தவர்கள் இன்றைக்கு 50 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றால் அதை அதிகம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி எண்ணுவார்கள் என்று நான் கருதவில்லை. பொதுவாக ஒரு கொள்கையை அறிவிக்கும் போது ஆங்காங்கே உள்ள தனித்தனி பிரச்சினைகளை நாம் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆங்காங்கே இருக்கின்ற நகரசபை நிர்வாகங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏழைகளுக்கு வந்தால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், நிச்சயமாக புரட்சித் தலைவர் அவர்கள் அதற்காக மிகுந்த சலுகைகளை வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதே நேரத்தில் அப்பீல் கமிட்டி பற்றிச் சொன்னார்கள். அப்பீல் கமிட்டி டி.ஆர்.ஓ. அல்லது ஆர்.டி.ஓ. அவர்கள் தலைமையிலே இயங்க வேண்டுமென்று சட்டத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு விதிகளைச் செய்ய இருக்கிறோம். அந்தக் விதிகளிலே மாதத்திற்கு 2 முறை அப்பீல் குழு கூட வேண்டும், டி.ஆர்.ஓ. அல்லது ஆர்.டி.ஓ. வரவில்லை என்றால் அந்த குழுவிலே இருக்கின்ற பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து அப்பீல் குழுவை நடத்தலாமென்ற விதியை நாங்கள் உருவாக்க இருக்கிறோம். அப்படி வருகிறபோது, இயற்கையாகவே 5 பேர் கொண்ட குழுவில், நகராட்சித் தலைவரும், தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற உறுப்பினர்கள் இரண்டு பேரும் இருக்கிறார்கள். அவர்கள்தான் 3 பேர், மெஜாரிட்டி, பெரும்பான்மை. அவர்கள் செய்யும் முடிவுதான் இறுதியானது என்று அந்தச் சட்டத் திருத்தத்தில் இருக்கிறது. ஆகவே அவர்களுடைய முடிவுதான் இறுதியானது. டி. ஆர். ஓ. அல்லது ஆர்.டி.ஓ வரவில்லை என்றால் காத்திருக்க வேண்டியதில்லை. அவர்களே, தங்களுக்குள்ளே ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து அந்த அப்பீல் குழுவை நடத்தலாம். அந்த விதித் திருத்தத்தை அரசு வெளியிட இருக்கிறது.

***திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகராட்சிகளிலே சொத்து வரி விதிப்பு சம்பந்தமாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சபையிலே ஓர் அறிக்கையை வைத்தார்கள். ஓரளவு நிவாரணம் கிடைப்பதால் அந்த அறிக்கைக்கு என்னுடைய பாராட்டுதலை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நான் ஒன்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். விருதுநகரில் பொன்னுசாமி ஆச்சாரி என்பவருடைய காலி இடத்திற்கு 32 ரூபாய் என்று இருந்த வரியை 1,626 ரூபாய் 35 காசு என்று இப்போது உயர்த்தி விதித்திருக்கிறார்கள். இதைப்போல பல டிமான்ட் நோட்டீஸ்கள் என்னிடம் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தனிப்பட்ட விவரங்களைப்பேச முடியாது. அதற்கெல்லாம் அமைச்சரவர்களிடம் பதில் இராது.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: விருதுநகர் நகர மன்ற தலைவர் என்ன சொல்கிறார்கள் என்றால், அரசாங்கம் உயர்த்தச் சொல்லித்தான் உயர்த்தி இருக்கிறோமென்று சொல்லுகிறார்கள். இந்த அளவுக்கு உயர்த்தச் சொல்லியிருக்கிறீர்களா? இன்னும் ஒன்று. குடிசைகளுக்கு உள்ள வரியை அறவே நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டீச்சிங் கிராண்ட் பற்றி ஒன்று. 1—6—86 முதல் நகராட்சிப் பள்ளிகளை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது 30—7—1987 முதல் எபக்டுக்கு வந்துவிட்டது. ஆனால் அதனுடைய செலவை நகராட்சியே செய்து கொண்டிருக்கிறது. விருதுநகரில் மட்டும் மாதம் ஒன்றுக்கு இதற்காக 3 இலட்சம் செலவாகிறது. இதை அரசு கொடுத்தால் சரியாகிவிடும். அந்த நகராட்சியில் 15 இலட்சம் ரூபாய்தான் பற்றாக்குறை. மாதம் 3 இலட்சம் ரூபாய் செலவை அரசு ஏற்றுக்கொண்டால் வருடத்திற்கு 36 இலட்சம் ரூபாய் மீதப்படுகிறது. இதை இந்த அரசு உடனே செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஜனதா கட்சியினுடைய உறுப்பினர் குழுவிற்குத் தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்த வரி விதிப்புக் கொள்கையை வரவேற்று, நன்றி தெரிவித்தற்கு முதலிலே அரசின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் குறிப்பிட்ட அந்த இடம், குடியிருக்கிற இடமா அல்லது தொழில் செய்யும் இடமா என்பது தெரியவில்லை. காலி இடம் என்று சொல்லுகிறார்கள், காலியிடம் என்றால், முன்பு 36 ரூபாய் போட்டிருந்தால். இப்போது 72 ரூபாய்தான் போடுவார்கள். இல்லையென்றால், 32 ரூபாயுடன் 72 ரூபாய் சேர்ந்து 104 ரூபாய் போடுவார்கள் மூன்று முறை சேர்த்தாலும், 100 ரூபாய் சேர்த்து 130 ரூபாய் தான் போடுவார்கள். இதில் ஆயிரம் ரூபாய் பிரச்சினைக்கு இடமில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்த அந்த மகிழ்ச்சியை அரசாங்கம் கொஞ்சம் அனுபவிக்க விட்டிருக்கலாம். ஆனால் அதை எப்படி விடுவது என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். விளக்கம் தெரிவித்துவிட்டேன். அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற கல்வித்துறை, சம்பளம் பற்றி எல்லாம் தெரிவித்துள்ளார்கள். தனியாகக் கேள்வி போட்டால் அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தால், அதற்குரிய பதிலை அரசாங்கம் அளிக்கும்.

## (ஆ) திண்டுக்கல் மருத்துவமனையில் குழந்தைகள் காணாமற் போவது குறித்து.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்ட மருத்துவ மனையில் பிறந்த குழந்தைகள் வார்டில் இருந்து காணாமல் போவதால்



மருத்துவமனை செல்லும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

1—9—1987 அன்று திண்டுக்கல் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் திருமதி குஞ்சம்மாள் என்பவருக்கு இரண்டாவது பிரசவத்தில் பிறந்த குழந்தை காணாமல் போனது என்று அறிந்தவுடன் காவல்துறைக்குத் தெரியப்படுத்தப்பட்டது. காணாமல் போன குழந்தை கண்டுபிடிக்கப்படவில்லை. அப்போதைய மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் சுசிலா அவர்கள் விசாரணை செய்ததில், அந்த வார்டு டாக்டர் சம்பந்தப்பட்ட செவிலியருடன் முறைப்படி வலம் (rounds) வரும் போது வெள்ளை புடவை கட்டிய ஒரு வயதான மூதாட்டியிடம் திருமதி குஞ்சம்மாள், அவர்கள் குழந்தையைக் கொடுத்ததாக சொல்லப்படுகிறது. அப்போது திருமதி குஞ்சம்மாள் யாரோ தன் தலையை தடவியது போலவும் பிறகு மயங்கி விட்டதாகவும், மயக்கம் தெளிந்து பார்த்தபோது குழந்தை காணப்படவில்லை என்று கூறுவதாகவும் சொல்லப்படுகிறது.

2. இம்மாதிரியான சம்பவத்தைத் தவிர்க்க மகப்பேறு வார்டுக்குச் செல்லும் வழியிலுள்ள கதவை மூடும்படி பணிக்கப்பட்டது. தவிர இரவு பகல் எந்நேரமும் அந்த வார்டில் காவல்காரர் ஒருவரைப் பணியிலிருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அறிக்கையிலே, அதிகாரிகள் கொடுத்திருக்கிற தகவலிலே கூட சில முரண்பாடுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே ஏதோ குஞ்சம்மாள் என்பவர் தலையிலே மருந்தைத் தடவி குழந்தையை எடுத்துச் சென்று விட்டதாக ஒரு கதையைச் சொல்லியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக் கூட்டத்திலே தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பிரேம்குமார் அவர்கள் குறிப்பிட்டபோது கூட, தலையிலே தடவி குழந்தையை எடுத்துக் கொண்டு போனதாகத் தகவலை துறை அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. மாவட்டத்திலுள்ள பத்திரிகைகள் எல்லாம் கடுமையான செய்தியைப் போட்டப்

போதும்கூட இப்படிப்பட்ட விளக்கத்தை அந்த அதிகாரிகள் 2, 3 மாத காலத்தில் கொடுக்கவில்லை. திடீரென்று சட்ட மன்றத்திற்கு மட்டும், தலையிலே மருந்தைத் தடவி அந்த குழந்தையைக் கொண்டுபோய் விட்டார்கள் என்ற தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அதுவுமல்லாமல் போலீசில் புகார் செய்திருக்கிறோம் என்ற தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். வார்டுக்குப் பொறுப்பான டாக்டர் இருக்கிறார், வார்டைக் கண்காணித்துக் கொண்டிருக்கும் செவிலியர்கள் இருக்கிறார்கள். அதையும் மீறி, வார்டுக்கு வாச்மென் இருக்கிறார். இப்படி அந்தத் துறையில் பணியாற்றக் கூடிய அதிகாரிகள் செய்த தவறைப்போக்க அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட மருத்துவ அதிகாரி தயக்கம் காட்டுகிறார். இந்த தயக்கத்தைப் போக்குகிற வகையில் அங்கே இருக்கின்ற டாக்டர், செவிலியர், வாட்ச்மேன் போன்றவர்களை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்து, நடந்தது என்ன என்கிற விசாரணை செய்ய வேண்டும் என்ற அந்த உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளில் குழந்தைகள் திருடு போவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று, ஒத்துக் கொள்ள முடியாத ஒன்று, கண்டிக்கத்தக்க ஒன்று, மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்ட ஒன்று. இந்த அரசைப் பொறுத்தவரையில் இதை மிகக் கொடூரமான செயலாக கருதுகிறோம். திண்டுக்கல்லில் இப்படி ஒரு குழந்தை திருடு போவது என்பதில் இது இரண்டாவது குழந்தை என்று கருதுகிறேன். இது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட உடன் இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. இதற்குப் பொறுப்பானவர் மருத்துவர், செவிலியர் அல்லது அங்கு இருக்கின்ற மற்றைய யாராக இருந்தாலும் அவர்களைத் தற்காலிக பணி நீக்கம் செய்ய வேண்டும் என்று ஆணை ஏற்கனவே பிறப்பித்து ஆகிவிட்டது. பணி நீக்கம் செய்து விட்டு அவர்கள் மீது விசாரணை நடக்கும். விசாரணைக்குப் பிறகு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையில் இது போன்ற தவறுகள் நடப்பதற்கு ஒரு காரணம்கூட இருக்கிறது. அரசாங்கம் மிகத் தெளிவாக ஒரு ஆணையே போட்டு இருக்கிறது. 5 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரு அரசு ஊழியர் ஓர் இடத்தில் பணியாற்றக்கூடாது என்று தெளிவாக ஒரு ஆணையை பி. அண்டு ஏ.ஆர். துறை போட்டிருக்கிறது. இருந்தாலும் கூட அந்த துறையில் இது அமல் செய்யப்படுகிறதா என்கிற விவரத்தை அறிய விரும்புகிறேன்.



அதேபோல் திண்டுக்கல் மருத்துவமனையில் 15 வருடங்கள், 20 வருடங்கள் என்று பணியாற்றக்கூடிய டாக்டர்கள் இருக்கிறார்கள். அது பல்வேறு வகையிலே அரசினுடைய திட்டங்கள் செயல்படாமல் இருப்பதற்கும், அங்கே மருத்துவ மனையில் சில தவறுகள் ஏற்படுவதற்கும் ஒரு காரணமாக இருக்கிறது. எனவே 5 ஆண்டுகளுக்கு மேல் அல்லது 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றக்கூடிய டாக்டர்கள் அரசு விதியின்படி மாற்றப்படவேண்டும் என்ற முடிவை விரைவில் அமல் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்து இருக்கிறது அதையும் மீறி அவர்கள் இருப்பார்களானால் நிச்சயமாகக் கவனித்து நடவடிக்கை எடுக்கும். அப்படிப்பட்ட மருத்துவர்களை அங்கிருந்து மாற்றுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கும்.

### (இ) ஆதிதிராவிடர் நலன்களுக்காக நத்தம் புறம்போக்கு நிலங்கள் இடைக்காதது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சோலைராசு "நாடெங்கும் உள்ள நத்தம் புறம்போக்கு நிலங்களை பலர் ஆக்கிரமித்து விட்டதால், ஆதி-திராவிடர் நலனிற்காக மருத்துவமனை, கல்விக்கூட விடுதிகளுக்கான நிலங்கள் கிராமங்களில், கிடைக்கப் பெறாமல் சமுதாயப்பணிகள் தடைப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களின் கவலை குறித்து" கவன ஈர்ப்பு கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லாததால் விவர அறிக்கை அவையில் வைக்கப்பெற்றுள்ளது.

அறிக்கை.

நத்தம் புறம்போக்கு நிலங்கள் இல்லாத ஊர்களில் ஆதி-திராவிடர்களின் வீட்டு மனைக்காகவும், பள்ளிக்கட்டிடங்கள், விடுதிகள், மயானப் பாதை வசதி அமைக்கவும் தனியார் நிலங்கள் அரசு செலவில் கையகப்படுத்தப்படுகின்றன. ஆதி-திராவிட நலனிற்காக மருத்துவ மனை அமைக்க நத்தம் புறம்போக்கு மனை எதுவும் ஒதுக்கப்படவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக ஆதி-திராவிடர்களுக்கு வீட்டுமனை வசதிக்காக செலவு செய்த தொகை, நில எடுப்பு செய்த பரப்பளவு, வழங்கப்பட்ட பட்டாக்கள் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளது :

| வருடம். | செலவுத் தொகை (ரூபாய் லட்சத்தில்.) | நில எடுப்பு செய்த பரப்பளவு. ஏ. செ. | வழங்கப் பட்ட பட்டாக்கள், |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1984-85 .. .. | 115.91 | 615.00 | 21508 |
| 1985-86 .. .. | 111.15 | 744.11 | 18057 |
| 1986–87 .. .. | 123.19 | 931.47 | 22020 |

[1987 நவம்பர் 16

2. நத்தம் புறம்போக்கு நிலங்களை பலர் ஆக்கிரமிப்பு செய்ததினால் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், விடுதிகளுக்கு நிலங்கள் கிடைக்கவில்லை என்பது குறித்து அரசுக்கு முறையீடு ஏதும் வரப்பெறவில்லை.

3. ஆதி திராவிடர் நலப்பள்ளிகள், விடுதிகள் ஏற்படுத்த எந்த ஊரில் நத்தம் புறம்போக்கு நிலங்கள் தேவைப்பட்டு அது கிடைக்காமல் மற்றவர் ஆக்கிரமித்துள்ளனர் என்று அரசுக்கு தெரிவித்தால் இது குறித்து தக்க மேல் நடவடிக்கையை அரசு எடுக்கும்.

### (ஈ) குறிஞ்சிப்பாடி ஒன்றியம், பெருமாள் ஏரிக்கு தண்ணீர் வரும் வாய்க்கால் தூர்ந்துள்ளது குறித்து.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குறிஞ்சிப்பாடி ஒன்றியப் பகுதியிலுள்ள பெருமாள் ஏரிக்குத் தண்ணீர் வரும் வாய்க்காலில் காட்டாமணி செடி வளர்ந்து வாய்க்கால் தூர்ந்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

வாலாஜா ஏரியின் உபரி நீர்க்கால்வாயான பெருவளூர் கால்வாய் பெருமாள் ஏரியின் முக்கிய வரத்துக்கால் ஆகும். பெருமாள் ஏரியினை அடையும் முன் சுமார் 4 கி.மீ. நீளத்திற்கும் இக்கால்வாயினில் காட்டு இலாக்காவினர் கருவேல மரங்களை 6 வருடங்களுக்கு முன் நட்டு, அவைகள் வளர்ந்து நீர்வரத்தை பாதிக்கின்றன. இது தவிர சீமைக் காட்டாமணி செடிகளும் வளர்ந்து கால்வாய் தூர்ந்துபோய் உள்ளது. இப்பொருள் சம்பந்தமாக 9|86-லேயே காட்டு இலாக்காவிற்கு தெரியப்படுத்தி, 4–11–1986-ல் பொதுப்பணித்துறை மற்றும் வன அதிகாரிகள் தலத்தினை கூட்டாகப் பார்வையிட்டுள்ளனர். மரங்களை அப்புறப்படுத்த 29–10–1987-லும் மாவட்ட வன அலுவலர் நினைவூட்டப்பட்டு இருக்கிறார். செயற் பொறியாளர் அவர்களை இது குறித்து மீண்டும் வன இலாக்கா அலுவலருடன் கலந்து பேசி, மரங்களை நீக்க நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டுள்ளார். மரங்களை அப்புறப்படுத்திய பின், சீமைக்காட்டாமணிச் செடிகளையும் சேர்ந்துள்ள தூரையும் கனரக இயந்திரங்களின் உதவியுடன் நீக்கப்படும்.



1987 நவம்பர் 16]

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே பொதுப்பணித் துறைக்கு சம்பந்தமான பெருமாள் ஏரியில் 1–4–1986-ல் வனத் துறை அதிகாரிகளும், பொதுப்பணித் துறை அதிகாரிகளும் இரு வரும் சேர்ந்து ஆய்வு நடத்தியதாகவும், அந்த ஆய்வு 1986 ஆம் ஆண்டு நடைபெற்றதாகவும் அதற்குப் பிறகு இரண்டு துறையில் இருக்கின்ற அதிகாரிகளும் 29–10–1987-ல் அந்த வரத்துக் கால்வாயில் மரங்களும், செடிகளும் அடைத்து இருப்ப தால் அதை அகற்ற நடவடிக்கை எடுத்து உடனடியாக அந்த வரத்து வாய்க்காலில் உள்ள மரங்களை அப்புறப்படுத்த வேண் டும் என்று முடிவு எடுத்து இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே விரைவில் அந்த வாய்க்காலில் உள்ள அந்த மரங்களை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்து இருப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். எனவே விரைவாக அந்த நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் அங்கே அடைபட்டுக் கொண்டு இருந்த அந்த சீமை காட்டாமணி செடிகளையும், வனத்துறையால் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்ற அந்த மரங்களையும் மிக விரைவாக அகற்ற வேண்டும் என்று சொல்லி அதிகாரிகளுக்கு உத்திரவு இடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவில் நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மிகவும் நன்றி. ஆகவே இந்த மரம் மாத்திரம் அந்த வரத்து வாய்க்காலை அடைத்திருப்பது ஒரு காரணம் அல்ல. அந்த பெருமாள் ஏரிக்கு வரக்கூடியவரத்து வாய்க்காலின் இரண்டு பக்கத்திலும் கரைகள் இல்லை. அப்படிக் கரைகள் இல்லாததனாலேயும் இந்த மரம் அடைத்திருப்பதனாலேயும் அருகாமையிலே இருக்கின்ற புவனகிரி தொகுதியின் தென் பகுதியிலேயும் வடபகுதியிலே உள்ள குறிஞ்சிப்பாடி பகுதியிலேயும் வெள்ளக் காலங்களில் பாதிப்பு ஏற்படுகின்றது. கரைகள் இல்லாமல் இருப்பதனாலேயே வெள்ளக் காலங்களில் பல கிராமங்கள் சேதமடைகின்றன. ஆகவே இப்படி பல கிராமங்கள் சேதப்படுகின்றதைத் தவிர்க்கின்ற வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஆண்டு பல நேரங்களில் நான் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். ஆகவே வருகின்ற ஆண் டாவது இரு புறங்களிலும் கரையை அமைத்து வெள்ளக் காலங் களில் கிராமங்களில் பாதிப்புஏற்படுவதைத்தடுக்கும் வகையிலும்,

ஏரிக்கு வரத்து வரக்கூடிய வகையிலேயும் அதை அமைத்துத் தர
உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரி
களோடு பேசி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) வைகை ஆற்றின் கரையில் காமராஜர் பாலம் நுழைவு வாயிலை
யொட்டி அமைந்துள்ள வெள்ளத் தடுப்புச் சுவர் இடிந்துள்ளதால்
வீடுகள் பாதிப்பு.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டம், சோழவந்தான்.
வைகை ஆற்றின் கரையில் காமராஜர் பாலம் நுழைவு வாயிலை
ஒட்டி அமைந்துள்ள வெள்ளத் தடுப்புச் சுவர் இடிந்துள்ளது.
இதனால் ஆற்றில் தண்ணீர் பெருக்கு ஏற்படும்போது அருகில்
உள்ள வீடுகள் பாதிக்கப்படுவதால் பொதுமக்களிடையே ஏற்
பட்டுள்ள பிரச்சினை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்ச
ரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை
முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

மதுரை மாவட்டம், சோழவந்தான் பேரூராட்சி பராமரிப்பி
லுள்ள சாலையான தென்கரை அணுகு சாலை (கி.மீ. 0/0—
0/8)-யில் கி.மீ. 0/2-ல் வைகை ஆற்றின் குறுக்கே மூழ்கு பாலம்
ஒன்றுள்ளது. 1979 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணப் பணிகள்
திட்டத்தின் மூலமாக மேற்படி மூழ்கு பாலமும், இப்பாலத்தின்
இடது பக்கம் ஆற்றின் கீழ் புறம் சுமார் 31.0 மீட்டர் தடுப்பு
சுவருடன் நெடுஞ்சாலைத் துறையால் கட்டப்பட்டது. 1982
ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் மேற்படி தடுப்புச் சுவர்
சுமார் 9.00 மீட்டர் நீளத்திற்கு சரிந்தும் அதற்கடுத்த 22.0
மீட்டர் நீளத்திற்கு முழுவதுமாக சேதமடைந்து விட்டது. அது
இந்நாள் வரை சீர்செய்யப்படவில்லை.

2. தடுப்புச் சுவரை சீர்செய்து திரும்பக் கட்டுவதற்கு தோரா
யமாக ரூ. 1.30 லட்சம் தேவைப்படும் என்றும், இத் தொகை
யினை சோழவந்தான் பேரூராட்சி செலுத்தினால், இப்பணியை
வைப்புப் பணியாக (Deposit work) எடுத்துச் செய்யப்படும்
என்று தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்
பணி) தெரிவித்துள்ளார்.



3. சோழவந்தான் பேரூராட்சியில் போதுமான நிதி வசதி
இல்லாத காரணத்தால், தடுப்புச் சுவர் கட்டும் பணிக்காக ஆகும்
நிதியை அரசு மானிய உதவி நிதியாக வழங்கவும்,
வைகை நதியும் அதன் படுகைகளும் பொதுப்பணித் துறையைச்
சார்ந்தவையாக இருப்பதால் இவ் வேலையை பொதுப்பணித்
துறை மூலம் எடுத்துச் செய்ய மதுரை மாவட்ட ஆட்சியர்
பரிந்துரைத்துள்ளார். இது பற்றி தலைமைப் பொறியாளர்
(பாசனம்) அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இதிலே விவர அறிக்கையிலே சோழவந்தான்
பேரூராட்சி பாலத்திலே இருக்கின்ற அந்த தடுப்புச் சுவர்
1979-லே ஏற்பட்ட வெள்ளத்தினாலே பாதிக்கப்பட்டு 1982 ஆம்
ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினாலே மீண்டும் பாதிக்கப்பட்ட
தனாலே சோழவந்தான் பேரூராட்சியினுடைய நிதியிலிருந்து
கட்ட வேண்டும் என்று மதுரை மாவட்டத்தினுடைய ஆட்சித்
தலைவர் அவர்கள் அரசுக்கு அறிக்கைஅனுப்பி வைத்திருக்
கின்றார்கள். நான் இங்கே அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் மூலமாக ஒன்றை அறிய விரும்புகிறேன். இப்போது,
வெள்ளம் வருகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேயே
அரசு மானியத்திலேயிருந்து இந்த வேலையை மக்களுடைய
நல்வாழ்வினைக் கருத்திலே கொண்டு உடனடியாக செய்வதற்கு
அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது
சம்பந்தமாக என் மத்தியிலேயே பல தடவைகள் பேசியிருக்கின்
றார்கள். அந்த உணர்வின் அடிப்படையில் என்னுடைய துறை
யைச் சார்ந்த பொறியாளர்களிடமும் நெடுஞ்சாலைத் துறைப்
பொறியாளர்களிடமும் பேசி முடிவெடுத்ததன் விளைவாக நெடுஞ்
சாலைத் துறையிலேயே இந்த ஆண்டிலேயே அந்த வேலையை
எடுத்துக் கொள்ளலாம் என்று எனக்கு தாக்கீது அனுப்பியிருக்கி
றார்கள். ஆகவே விரைவில் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு
முடிக்கப்படும்.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த
வேலையை உடனடியாகச் செய்வதாக சொன்னதற்காக அவர்
களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்
கொண்டு இப்போது போடப்படுகின்ற மதிப்பீட்டிலிருந்து இன்
னும் அந்த தென் பகுதி கரைவரைக்கும் தடுப்புச் சுவர் கட்டுகின்ற
திட்டத்தை விரிவுபடுத்திக் கட்டித்தர அரசு முன் வருமா என்
பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
அதிகாரிகளை அந்த இடத்திற்குப் போய் பார்க்கச் சொல்லி,
தேவையானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்,

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

THIRU K. KUPPUSAMY : Mr. Deputy Speaker, Sir, I present the "Fifty-fourth Report of the Committee on Public Undertakings on the further action taken by the Government on the recommendations contained in the Nineteenth Report of the Committee (1985-86) on the Accounts of the Tamil Nadu Electricity Board for the years 1976-77 and 1977-78."

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்,

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1987

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு, 1987

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

[1987 நவம்பர் 16

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிச் சட்டமுன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஊ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".



1987 நவம்பர் 16]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த சட்டத்தை கடுமையாக எதிர்க்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற வன விலங்குகள் சட்டத்தின் மூலமாக காடுகளில் திருடுவது மற்றும் அழிப்பதைத் தடுத்தல் மற்றும் வேறு சட்டங்களின் மூலமாக பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துபவர்களைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல், சமுதாய விரோதிகளைத் தடுத்தல், குண்டர்களை விசாரணையின்றி சிறையில் அடைத்தல் போன்றவற்றிற்கு வழி வகை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறிமுக நிலையில் பேசுவது சுருக்கமாக இருக்க வேண்டும். விளக்கக் கூடாது. நடைமுறையில் இதற்கு எல்லா கட்சியினரும் ஒத்துழைப்பு தருகிறார்கள். ஆனால் விவாதத்தின்போது விரிவாகப் பேச அனுமதிக்கிறோம். தாங்கள் அப்போஸ் பண்ணுவதாக குறிப்பிட்டால் போதும். தாங்கள் அப்போஸ் பண்ணிவிட்டீர்கள் அதுபோதும்.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (வி. சி. ஆர்.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொளிப் (வீடியோ) பேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாக தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் திரையிடப்படுவதை (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

[1987 நவம்பர் 16

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஏ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1981-82 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே 1981—82 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் மேல் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது. அந்த மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் விவர அறிக்கையை இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு, 1981—82 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்தபோது, சில மானியங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேல் மிகைச் செலவு செய்யப் பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1981—82 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக ஒதுக்கப்பட்ட நிதி



1987 நவம்பர் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளை முறைப்படுத்த சட்டமன்றப் பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப் படவேண்டுமென்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்து உள்ளது. அவ்வாறே, 1981—82 ஆம் ஆண்டிற்கான, மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகளின் விவர அறிக்கை தற்போது தாக்கல் செய்யப்படுகிறது. மிகைச் செலவு மொத்தம் ரூ. 9.17 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில், பாசனம், ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், பொதுப் பணிகள் (கட்டிடங்கள்) ஆகியவற்றின்கீழ் மிகைச் செலவு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

3. மாநிலக் கணக்குத்துறைத் தலைவர், நிதி ஆண்டின் இறுதியில், வட்டிச் செலவுகள், பணியாளரமைப்புச் செலவுகள், எந்திரம்-சாதனங்கள் குறித்த செலவுகள், ஓய்வூதியச் செலவுகள் ஆகியவற்றில் வீதாச்சார அடிப்படையில், சில சரிக் கட்டல்கள் செய்ததால் 'பாசனம்' என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. ஓய்வூதியத் திட்டங்கள் தாராளமாக்கப்பட்டதாலும், இன்னும் அதிகமான பேருக்கு குடும்ப நல ஓய்வூதியத் திட்டம் நீட்டிக்கப்பட்டதாலும், இக் காரணங்களினால் எதிர்பார்த்ததை விட அதிகமான பேருக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்ட தாலும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இவ்வாண்டில், பல அகவிலைப்படி-த்தவணைத் தொகைகள் வழங்கப்பட்டதாலும், 'ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும்' என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டு உள்ளது.

4. புயல், வெள்ளம் முதலியவை காரணமாகச் சிறப்புச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் பொதுப் பணிகள் (கட்டிடங்கள்) என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. இம் மானியத்தின் கீழ் வரும் கணக்குகள் தவறாக வகைப்படுத்தப் பட்டதாலும் ஓரளவுக்கு மிகைச் செலவு ஏற்பட்டது.

5. 1981—82 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம் மானியக் கோரிக்கைகள் பற்றிய விவர அறிக்கைக்கு ஒப்புதலளிக்குமாறு பேரவையை வேண்டி அமர்கிறேன்.

## 8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1982-83 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982—83 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் மேல் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது. அந்த மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன்.

2. பொதுக் கணக்குக் குழு, 1982–83 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில், சில மானியங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச்செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1982–83 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளை முறைப்படுத்த சட்டமன்றப் பேரவை முன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாமென்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1982–83 ஆம் ஆண்டிற்கான, மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் தற்போது தாக்கல் செய்யப்படுகின்றன. மிகைச்செலவு மொத்தம் ரூ. 8.71 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில், ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், மாநில அரசு வழங்கும் கடன்களும்—முன் பணங்களும், மாவட்ட நிருவாகம் ஆகியவற்றின் கீழ் மிகைச் செலவு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

3. எதிர்பார்த்ததைவிட அதிகமான பேருக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டதாலும், இறப்பு-பணிக் கொடைக்கான உச்ச வரம்பை 24,000 ரூபாயிலிருந்து 36,000 ரூபாயாக உயர்த்தியதாலும், குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியத் தொகையை திங்களொன்றுக்கு 100 ரூபாயிலிருந்து 125 ரூபாயாக உயர்த்தியதாலும் ஓய்வூதியமும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

4. எதிர்பார்த்ததைவிட அதிக எண்ணிக்கையில் பண்டிகை முன் பணங்களுக்கு அதிகாரிகள் அனுமதி வழங்கியதாலும், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்த மாநகராட்சிகள், நகராட்சிகள், நகரியங்கள் ஆகியவற்றுக்கு வழிவகை முன் பணங்கள் வழங்கியதாலும், கைத்தறித் துணிகளை வாங்குவதற்கான முன் பணத்திற்கு எதிர்பார்த்ததைவிட அதிகமாக அனுமதி வழங்கியதாலும் மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

5. சம்பளங்கள், பயணச் செலவுகள், வாடகை, கட்டண வீதங்கள், வரிகள், மோட்டார் வண்டிகள் மீதான வரிகள், ஏனைய சில்லறைச் செலவுகள் ஆகியவற்றின் கீழ் மாவட்ட ஆட்சியர் மிகைச் செலவு செய்ததாலும் புதிதாக கிராம நிருவாக அலுவலர்களை நியமனம் செய்ததாலும் மாவட்ட நிருவாகம் என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

6. 1982--83 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம் மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு பேரவையை வேண்டி அமர்கிறேன்.





## 9. அறிவிப்புகள்

### (அ) 1987-88 ஆம் ஆண்டுக்கான கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளை மொழிவது குறித்து (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987–88 ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Article 203 clause (3) of the Constitution of India, I, SUNDAR LAL KHURANA, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for further Grants for the year 1987-88."

## 10 முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1987-88—விவாதமும் வாக்கெடுப்பும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1987–88 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை விவாதம். பேரவை விதிகளின்படி இந்த விவாதமும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையும் ஒரு மணிக்கு முடிந்து, மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனவே கட்சிக்கு ஒருவர் பேசுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். விவாதத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள் மிகக் குறைவாகப் பேசி உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையில் தமிழை வளர்க்கக்கூடிய பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. மானியத் தொகை வழங்கப்பட்டு இருக்கிறது. நான் குறிப்பாக ஒன்றை உங்கள் மூலம் அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். என் கையில் ஒரு சுற்றறிக்கை இருக்கிறது. 2–11–1987- லிருந்து "All Officers in Madras circle" என்று சொல்லி இங்கே இருக்கக்கூடிய வங்கிகளுக்கு ஒரு சுற்றறிக்கை. வங்கிகளிலே இருக்கக்கூடிய கோப்புகள் எல்லாம் ஆங்கிலத்தோடு கட்டாயமாக இந்தியிலும் ட்ரான்ஸ்லேட் செய்யப்படவேண்டும் என்றும் அதற்கு வசதி இல்லை என்று சொன்னால் அதற்கான வசதிகள் ரீஜினல் ஆபீஸிலே செய்து கொடுக்கப்படும்; இது கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்றும் சொல்லி மீண்டும்,

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 16

இவ்வளவு பெரிய எதிர்ப்புக்குப் பிறகும், எங்களுடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் பதவியிழந்ததற்குப் பிறகும் தமிழ் நாட்டில் இந்தியைத் திணிக்கக்கூடிய காரியம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

இந்த அரசு தமிழை வளர்ப்பது உண்மையாக இருக்குமானால், இந்தி ஆதிக்கத்தை ஒழிக்க முயல்வது உண்மையாக இருக்குமானால் இது குறித்து முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே பல்கலைக் கழகங்களைப் பற்றி ஒரு குறிப்பு நம்முடைய துணை மானியக் கோரிக்கையில் வருகிறது. மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பலர் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுக்கு அனுமதிக்கப்படவில்லை. அது 6-வது மாநாடு, சீனர்களும், மலேசியாக்காரர்களும் அதிகமாக இருக்கக்கூடிய அங்கே அந்த மாநாடு நடக்கிறது. ஆனால் பல்கலைக் கழகத்துடைய பல்வேறு பேராசிரியர்கள், பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள், தொல்பொருள் ஆராய்ச்சி இயக்குநர்கள், அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. குழந்தைவேலு அவர்கள், அதுபோலவே சென்னை பல்கலைக் கழகத்தினுடைய மற்றும் தமிழ் பல்கலைக் கழகத்தினுடைய பேராசிரியர்கள் இவர்கள் எல்லாம் அங்கே ஆராய்ச்சிக் கட்டுரைகள் வாசிப்பதற்கு அழைப்பு இருந்தும்கூட பாஸ் போர்ட் எடுத்து வைத்திருந்தும் கூட உலகத்தமிழ் மாநாட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அந்தச் சர்க்காரின் திரு. தத்தோ அவர்கள் இங்கே வந்து நேரடியாக முதல்வர் அவர்களையும், மற்றவர்களையும் சந்தித்ததற்குப் பிறகும்கூட இந்த அரசாங்கம் யாரும் போக வேண்டாம் என்று சொல்லி அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகளை உலகத் தமிழ் மாநாட்டிற்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் அனுப்பவில்லை என்று சொன்னால் இதைக் காட்டிலும் வருத்தப்படக்கூடிய விஷயம் என்னவாக இருக்கும் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய நாவலர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது— முதல்வராக திரு. பக்தவத்சலம் அவர்கள் இருந்தபோது— கோலாலம்பூரில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டார்கள். ஆனால் இவர்களைக் கலந்துகொள்ள அனுமதிக்காததற்கு என்ன காரணம்? பேராசிரியர்களை அனுமதிக்காததற்கு என்ன காரணம்? நான் சந்தேகிக்கிறேன். எங்கள் தலைவர் கலைஞர் கலந்துகொள்கிறார் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் இந்த அரசு உலகத் தமிழ் மாநாட்டைப் புறக்கணிக்கிறது என்றால் அது எந்த வகையில் நியாயம் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.



1987 நவம்பர் 16]

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாநாட்டில் கலந்து கொள்வதும் கலந்து கொள்ளாத சூழ்நிலை ஏற்படுவதும் அவ்வப்போது ஏற்பட்டிருக்கிற தன்மையைப் பொறுத்தது. 3-வது உலகத் தமிழ் மகாநாடு இலங்கையிலே நடைபெற்ற போதுகூட, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது கூட, இந்த மாநில அரசின் சார்பாக அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. அப்போதிருந்த சூழ்நிலையை ஒட்டி, அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

அதேபோல இங்கே 5-வது உலக தமிழ் மாநாடு மதுரையிலே நடந்தபோது கூட, எவ்வளவோ அழைப்பு அழைத்தும் கூட, இந்த மாநிலத்தில் தமிழக அரசின் சார்பாக நடைபெற்ற போதும் கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும் கூட, அன்றைக்கு அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் யாரும் அதிலே கலந்து கொள்ளவில்லை. கலந்துகொள்ளத்தான் வேண்டும் என்று யாரும் எந்தக் கட்சியையும் வற்புறுத்த முடியாது. இப்போது மலேசியாவிலே ஏற்பட்டிருக்கிற அரசியல் சூழ்நிலைகளையும் வேறு பல நிலைமைகளையும் ஒட்டி, இந்த அரசைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிட்ட முடிவை எடுத்திருக்கிறது. அப்படி அரசு அதிகாரிகளும், அரசின் சார்பாகவும் யாரும் கலந்து கொள்ள வேண்டாம் என்று ஒரு முடிவை எடுத்தது அரசே தவிர, கலைஞர் கலந்து கொள்கிறார், ஆகவே நாங்கள் கலந்து கொள்ளவில்லை என்ற முடிவு இல்லை. அப்படி ஒரு நோக்கம் கற்பிப்பது தவறு என்பதைத்தான் தெரிவித்துக் கொள்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் அரசின் சார்பாக நிதி உதவி கேட்டால்தான், அரசு அனுமதி அளிக்க வேண்டிய அவசியம் வருமே தவிர, அவர்களாகவே பொறுப்பு ஏற்றுக் கொண்டு—பல்கலைக் கழகம் ஒரு, 'அட்டானமஸ்' பாடி—ஆகவே அது தானாகவே ஒரு முடிவை எடுக்குமேயானால், அதனுடைய செலவில் அல்லது அவரவர்களுடைய செலவில் அது அனுப்ப முடியுமேயானால் அது வேறு விஷயம். அரசினுடைய நிதி வேண்டுமென்றால்தான் அரசினுடைய அனுமதி வேண்டும். அரசினுடைய நிதி தேவையில்லை என்று வருகிற போது, பல்கலைக் கழகமே முடிவு செய்திருக்கலாம். ஆகவே அதிலேயும் பிரச்சினை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் போது கலைஞர் அவர்களுக்கு முறையாக அழைப்பு அனுப்பவில்லை என்பதோடு கூட, குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்ட நேரத்தில் அதன் நினைவாக வைக்கப்பட்ட குதிரைச் சின்ன சிலையை, சென்னையிலேயிருந்து மதுரைக்கு கொண்டு வருவோம் என்று சொல்லி, அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, அவமானப்படுத்தப்படும் சூழ்நிலை ஏற்பட்டது. எனவே வந்தால் சரியாக இருக்காது, அவமானப்படுத்தப்படுகிற சூழ்நிலை இந்த அரசாங்கத்தால் செய்யப்படுகிறது என்ற எண்ணத்தினாலேதான் கலந்துகொள்ளவில்லையே தவிர, மற்றபடி தமிழ் உணர்வு இல்லாத காரணத்தினால் அல்ல. . . . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநாட்டிற்காக அழைப்பு கொடுத்தோம், நேரிடையாகவும் அழைப்பு விடுத்தோம், அதற்கென ஏற்கனவே நடைபெற்ற குழுவிலே கலந்து கொள்ளவும் கூப்பிட்டோம். ஆனால் வரவில்லை. வராமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று நான் விவரிக்கவும் இல்லை, அதை விவாதிக்க வரவும் இல்லை. காரணம் எது வேண்டுமானாலும் அவரவர்களுக்கு இருக்கலாம். அந்த காரணத்திற்குள்ளே நான் நுழையவும் விரும்பவில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, ஏன் கலந்து கொள்ளவில்லை கலைஞர் இந்த மாநாட்டிலே என்ற கேள்வியை கேட்டு விட்டு, நான் காரணம் சொன்னதற்குப் பிறகு, அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை என்று நாவலர் அவர்கள் சொன்னது சரிதானா? ஆனால் மலேசியாவைப் பொறுத்தமட்டில். . . . . . . . . . . . . . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, அதற்கு முன்னாலேயும் நான் நுழைய விரும்பவில்லை, பின்னாலேயும் நுழைய விரும்பவில்லை. நான் சொன்னது, அவர்கள் அதிலே கலந்து கொள்ளவில்லை என்றுதான் குறிப்பிட்டுச் சொன்னேனே தவிர, ஏன் கலந்து கொள்ளவில்லை என்று நான் சொல்லவில்லை. திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு காரணம் சொன்னார். அதேபோல அரசுக்கு என்று சில காரணங்கள் உண்டு. அப்போது இலங்கையிலேயும் அந்த அரசு கலந்து கொள்ளவில்லை. அதே மாதிரி இப்போது மலேசியாவிலேயும் இந்த அரசு கலந்து கொள்ளாததற்கு சில பல காரணங்கள் உண்டு. அவ்வளவுதான்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பல்வேறு பேராசிரியர்கள் என்னிடத்திலே முறையிட்டார்கள். அரசாங்கத்திடம் இருந்து கிளியரன்ஸ் கிடைக்கவில்லை, ஆகவே போக முடியவில்லை என்று சொன்னார்கள்.



நான் கேட்க விரும்புவது என்னவென்றால், கலந்து கொள்ளாத தற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டும் அல்லவா? இன்னதுதான் காரணம் என்று அமைச்சர் வெளிப்படையாகச் சொல்லி இருந்தால் மக்களுக்கும் தெரியும். அவர்களுக்கு தமிழ் உணர்வு இருக்கிறது, தமிழ்ப் பற்று இருக்கிறது தனி நபரைப் பற்றி அல்ல பிரச்சினை என்று புரிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தினாலேதான் சொன்னேன். அங்கே அரசியல் சூழ்நிலை சரியில்லை என்று சொன்னால் எப்படி? ஏறத்தாழ 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்களும், 27 நாடுகளும் கலந்துகொள்கின்றன. அவர் களுக்கெல்லாம் இல்லாத அரசியல் சூழ்நிலை இங்கே வந்து விட்டதா? இருந்தாலும் அது வேறு விவகாரம். ஆனால் தமிழை வளர்ப்பதற்காகப் பாடுபடுவதாகச் சொல்லுகிற ஒரு அரசாங்கம் உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிறபோது, பேராசிரியர்கள் ஆராய்ச்சிக் கட்டுரையை வாசிக்க விடாமல் தடை போடு வதும், அரசாங்கத்தில் இருக்கக் கூடியவர்கள் அல்லது அதன் பிரதிநிதிகள் செல்லாத சூழ்நிலையை ஏற்படுத்துவதும் கண் டிக்கத் தக்கது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் நீதிமன்றத்தை மதிக்க வேண்டும். நாங்கள் நீதிமன்றத்தை மதிக்கிறோம் என்று அடிக்கடி சொல்லுகிறீர்கள். ஆனால் நீதிமன்றம் தமிழ்நாடு ஹவுசிங் போர்டுக்கு 2,500 ரூபாய் அபராதம் விதித்து இருக்கிறது. காரணம், நந்தனத்திலே இருக் கிற ஒரு ஃபிளாட்டை அங்கே இருக்கிற சங்கரபாண்டியன் என்ற ஒருவருக்கு ரெண்ட் பேசிஸ்லே தரப்பட்டது. திடீரென்று 1983-வது ஆண்டு 20 சதவீதம் வரி உயர்த்தினார்கள். அதை எதிர்த்து அவர் கோர்ட்டுக்கு போனார். ஆனால் திடீரென்று ஒரு நாள் அவருடைய வீட்டை போலீசை வைத்துக் காலி செய்து, வீட்டிலே இருக்கக்கூடிய தட்டு முட்டு சாமான்களை எல்லாம் தெரு விலே தூக்கி எறிந்தார்கள். உடனே அவர் பழையபடி கோர்ட் டிற்குப் போனவுடனே கோர்ட் சொன்னது, கோர்ட் உத்தர வின்படி அவர்களை வெளியேற்றக்கூடாது என்று. ஆனால் வெளியேற்றி இருக்கிறார்கள். இது கோர்ட்டை அவமதிக் கிற காரியம். வெளியேற்றிவிட்டுத் தயாராக இருந்து, இன் னொருவருக்கு அந்த வீட்டை அலாட் செய்து விட்டார்கள். இதிலேயிருந்தே தெரிகிறது ஹவுசிங் போர்டில் உள்நோக்கத் தோடு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் அந்த மனுதார ருக்கு, பாதிக்கப்பட்டவருக்கு எவிக்ஷன் செய்யப்பட்டவருக்கு 2,500 ரூபாய் தமிழ் நாடு ஹவுசிங் போர்ட் அபராதம் கொடுக்க வேண்டுமென்று கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. நீதிமன் றத்தை மதிக்காமல் ஒரு சர்க்காருடைய நிறுவனம் இவ்வளவு மோசமாக அபராதம் செலுத்துகிற நிலையில் இருப்பது எவ் வளவு பெரிய அவமானகரமானது? நீதிமன்றத்தை அரசாங் கத்தினுடைய ஒரு அமைப்பு மதிக்காத நிலையில் இருந்தால் சாதாரண மக்கள் எப்படி மதிப்பார்கள் என்று கேட்க விரும்பு கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 16

அதைப்போல வழக்கமான போலீஸ் லாக்கப் சாவுகள் தொடர்ந்து இந்த ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் பழனிசெட்டிபட்டியில் இருக்கக்கூடிய பாண்டியன் என்பவரை ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக சந்தேகப்பட்டு விசாரணைக்கு அழைத்துப் போய் மறுநாள் அவரைப் பார்க்க போனால் போலீஸ் லாக்கப்பில் தற்கொலை செய்து கொண்டார். தூக்குப் போட்டுக் கொண்டார் என்று சொல்கிறார்கள். போலீஸ் லாக்கப்பிலே தூக்குப் போட்டுக் கொள்வதற்கு வாய்ப்பே கிடையாது. அவர்கள் கண்காணிப்பிலே இருக்கிறார்கள். பாடியை உறவினரிடத்தில் ஒப்படைக்கப்படவில்லை. அந்த பாடியை எரித்து விட்டார்கள். எனவே போலீஸ் ஸ்டேஷன் உள்ளே நடைபெற்ற கொலையாக இருக்குமோ என்பதற்கான போதுமான காரணங்கள் இருக்கின்றன. இது குறித்து நீதி விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். வெளியே பத்திரிகைகளில் ஒரு யுத்தமே நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய உயர்நீதிமன்றத்திலே இன்றைக்கு ஐந்து நீதிபதி பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதற்காக நான்கு பேர் பிராமணர், ஒருவர்தான் பிற்படுத்தப்பட்டவர். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அதிலே முதலிடம் இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டும் ஒரே நேரத்தில் பிரதிநிதித்துவம் இருக்கக் கூடாது. எனவே, இதை எதிர்க்கிறோம். அது இந்த மண்ணின் தன்மை என்று சொல்லி நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் அந்த நியமனத்தை செய்த மரியாதைக்குரிய தலைமை நீதிபதி ** ** தமிழ் பேசாத நீதிபதி சந்துர்க்கர் அவர்களை எதிர்த்து அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

* திரு. மா. சின்னராசு : துணைத் தலைவர் அவர்களே தங்கள் மூலமாக ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். துணை மானியக் கோரிக்கையில் எந்த வரையறைக்கு உட்பட்டுப் பேசலாம் என்று பலமுறை தாங்களும் தலைவர் அவர்களும் தெரிவித்து இருக்கிறீர்கள். இது ஒரு மானியக் கோரிக்கை விவாதமல்ல. இதிலே குறிப்பிட்ட பொருள்கள் பற்றித்தான் விவாதிக்க முடியும். இப்படி யாரும் எல்லாம் விவாதிக்கலாம் என்றால் ஒரு மணிக்கு அவையை முடித்து விட்டு மாலையும் கூடி விரிவாக விவாதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரகுமான்கான் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 நவம்பர் 16]

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, நானும் 10 ஆண்டுகளாக உறுப்பினராக இருக்கிறேன். நான் இதையெல்லாம் படித்து விட்டுத்தான் வந்தேன். காவல் துறைக்கு, பல்கலைக் கழகத்திற்கு, நீதி நிர்வாகத்திற்கு இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி தொகை ஒதுக்கப்படுவதால் நீதி நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பேசுவது தவறல்ல. ஆகவே, துணை சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு நான்கு இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இது ஒரு சர்ச்சையாக நடந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொல்கிறார்கள். நம்முடைய உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி ஒரு விளக்கத்தைச் சொல்கிறார். ஒன்றை கேட்க விரும்புகிறேன். உண்மையில் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களுக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் காலியாக இருக்கிற அந்த நான்கு நீதிபதி பதவிகளில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்பது உங்களுடைய உண்மையான நோக்கமாக இருந்தால் அது வரவேற்கத் தகுந்ததுதான். காரணம் பிராமணர்களும் புறக்கணிக்கப்படக்கூடாது. அண்ணா சொன்னதைப் போல், காந்தியடிகள் சொன்னாரே அதைப்போல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத்தான் நாங்கள் எதிரிகளே தவிர, பிரிட்டிஷ் காரர்களுக்கு அல்ல என்று அதுபோல பிராமண சகோதரர்களுக்கு தனிப்பட்ட முறையில் யாரும் விரோதமானவர்கள் அல்ல. தவறான கொள்கைக்குத்தான் நாங்கள் விரோதமானவர்கள். அந்த அடிப்படையில் அவர்களும் கௌரவிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இது இந்த அரசாங்கத்தினுடைய உண்மையான நோக்கமாக இருந்தால் உள்ளபடியே நாங்கள் வரவேற்கிறோம். இன்றைக்கு மத்திய சர்க்காரிடத்தில் சிபார்சு கோரி இந்த தமிழ்நாடு சர்க்கார் ஒரு பட்டியலை எழுதி அனுப்பியிருப்பதாகச் சொல்லி பிரதமர் ராஜீவை நம்புகிறார்கள். ஆனால் இந்தியாவினுடைய சட்ட அமைச்சர் யார்** அட்டர்னி ஜெனரல் யார்,

* * * *

பிரதமர் யார் * ** நான் கேட்க விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்).

திரு. எஸ். வேணுகோபால் : துணைத் தலைவர் அவர்களே, * * பற்றியா இங்கே பேச வந்திருக்கிறோம்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * பற்றி பேசியதை நீக்கி விடுகிறேன். சீக்கிரம் முடியுங்கள், ரகுமான்கான்.....

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 நவம்பர் 16

(பிற்பகல் 12–10)

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, நான் அவ்வளவு பிற்போக்கானவன் அல்ல. நான் சொல்ல விரும்புவது மண்ணினுடைய தன்மை என்று சொல்லிக்கொண்டு, மனுவை யாரிடத்திலே கொடுக்கிறீர்கள் என்பதுதான். ஆகையினாலே இன்னும் நான் சொல்ல விரும்புவது, தமிழ் தெரியாத நீதிபதி இருப்பதை உயிரோடு இருக்கும் வரையிலும் அனுமதிக்க மாட்டோம் என்று வீர சபதம் எல்லாம் செய்தீர்கள். சட்ட அமைச்சர் அவர்களை நேருக்கு நேர் கேட்கிறேன். வேறு மாநிலத்தைச் சேர்ந்த நீதிபதி, தமிழ் தெரியாத நீதிபதி கம்பீரமாக அமர்ந்து இருக்கிறார்களே, என்ன முயற்சியை எடுத்து இருக்கிறீர்கள்? ஆகையினாலே, இதிலே ஏதாவது உள்நோக்கம் இருக்குமோ என்ற சந்தேகம் எனக்கு எற்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே சில நல்ல கொள்கையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது அவர்கள் தனக்கே உரித்தான அந்தக் குரோத உணர்வுகளைக் காட்டக் கூடாது. உள்நோக்கம் என்றெல்லாம் சொல்லக் கூடாது. நமது முடிவு எடுத்த கொள்கை என்ன என்பதை அரசு ஏற்கனவே தெளிவாக்கியிருக்கிறது. உள்நோக்கம் அதில் எதுவும் இல்லை. ஒரு குறிப்பிட்ட 'கொள்கையை நாம் ஈடேற்ற வேண்டும் என்பதற்காக இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் பிரதமராக வர வேண்டும், இந்தச் சமுயதாயத்தைச் சேர்ந்தவர்தான் உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியாக வரவேண்டும் என்று மாற்றி அமைக்கக்கூடிய உரிமை எந்த ஒரு மாநில அரசுக்கும் இல்லை; இருக்காது என்பதையும் நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணரவேண்டும்.

தமிழக அரசைப் பொறுத்த வரையில், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் தகுதி மிக்கவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கொள்கையைத் தொடர்ந்து இந்த அரசு வலியுறுத்தும். அதில், அந்தக் கொள்கையில் பிடிப்போடு இந்த அரசு தொடர்ந்து செயல்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ரகுமான்கான், நீங்கள் சொன்னதைப் பற்றி நான் பார்த்தேன். அட்மினிஸ்ட்ரேசன் ஆப் ஜஸ்டிஸ் பற்றி இதிலே வரவில்லை. பணம் ஒதுக்காத மானியத்தைப் பற்றி நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) உங்களுக்கு கொடுத்த நேரத்திற்குள் பேசி முடித்துக் கொள்ளுங்கள். குறுக்கீடுகள் கழிந்த பிறகும் 10 நிமிடங்களை தாண்டிவிட்டீர்கள். எனவே, சுருக்கமாகப் பேசி முடித்து விடுங்கள்.



1987 நவம்பர் 16]

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பிராமண சமுதாயமா அல்லது வேறு சமுதாயமா என்பதைப் பற்றி நான் பிரச்சினையாக்க விரும்பவில்லை. இடம் நிரப்பப்படவேண்டும் என்பதுதான்; நேரத்தை கடத்த வேண்டாம். இப்போது சப்-ஜட்ஜுகளைப் பொறுத்தவரையிலும் 14 வேகன்சிகள் இருக்கின்றன, தமிழகத்தில், பல இடங்களில் நீதிபதிகள் இல்லை. ஏறத்தாழ இன்றைக்கு 1,23,443 சிவில் வழக்குகள் பெண்டிங்காக இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் அரசினுடைய அறிக்கையை ஏற்கனவே படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இந்த சப்ஜட்ஜ் பதவிகளை நிரப்புகிற பொறுப்பு, அதிகார வரம்பு உயர் நீதி மன்றத்திற்கு மட்டுமே உரித்தானதேயொழிய மாநில அரசுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. உயர்நீதி மன்றத்தை, உடனே நிரப்பவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

அடுத்து, எந்த நீதிபதி இடம் காலி என்று சொன்னால் அதற்கு நான் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சுருக்கமாகப் பேசி முடித்து விடுங்சள். நீங்கள் பேசுவது சம்பந்தமாக அரசாங்கம் ஒரு பைசாவைக்கூட ஒதுக்கவில்லை. 59 ஹெட்டிலேயும் கூட ஒரு பைசாவைக்கூட ஒதுக்கவில்லை. எல்லா உறுப்பினர்களுக்கும் நான் சொல்கிறேன். துணைமானியக் கோரிக்கையில் எந்த பர்பசுக்கு பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்துவிட்டுப் பேசவேண்டும். உதாரணமாக ரூரல் டெவலப்மெண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் ஒதுக்கினால் அதற்காக கம்ப்ளீட்டாக மாநிலம் முழுவதும் இருக்கிற நிலைமையைப்பற்றி பேசினால், இந்த விவாதத்தை முடிக்க முடியாது.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, உங்களோடு சர்ச்சை செய்ய நான் விரும்பவில்லை. அமைச்சர்கள். அதே போல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்று ஹெட்டிங்கிலே கொடுத்திருக்கிறார்கள். ஒதுக்கக்கூட இல்லைதான்.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அரசாங்கத்தினுடைய முக்கியமான ஒரு கொள்கையைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன் இந்த பதவி நீட்டிப்புந் தருவது என்பது நிர்வாகம் சம்பந்தப்பட்டது. பொதுவாக நிர்வாகம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை. பிரதமரே கூடச் சொல்லியிருக்கிறார், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். இவர்களுக்கு எல்லாம் திரும்பத்திரும்ப நாம் ரீ-அப்பாயின்ட்மென்ட் அல்லது எக்ஸ்டென்ஷன் கொடுத்துக் கொண்டிருப்பது சரியாக வராது என்று. ஆனால் நம்முடைய டி.ஜி.பி. திரு. ரவீந்திரன் அவர்களுக்கு பழையபடி எக்ஸ்டென்ஷன். தம்முடைய 60 வயதை தாண்டிவிட்டுக்குப்

போகின்ற வயதில் இருக்கக்கூடிய திரு. வடிவேலுக்கு எக்ஸ்
டென்ஷன். அதைப்போல உங்களுக்குத் தெரியும், நம்முடைய
தலைமைச் செயலாளருக்கு எக்ஸ்டென்ஷன். அப்படியானால்
58 வயதானால் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற சட்டம்
எதற்கு? எக்ஸ்சப்சனல் சர்க்கம்ஸ்டான்சஸ் என்று வையுங்கள்,
நான் வேண்டாம் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்புத் தகுதியின்
அடிப்படையில் பதவி நீட்டிப்பு அல்லது மீண்டும் பதவியில்
அமர்த்துதல் கூடாது என்று there is no express p.ovisicn அந்த
அடிப்படையில் சிறப்புத் தகுதியின அடிப்படையில் நீட்டிப்பு
தருவது, நிர்வாகத்தினுடைய நலன் கருதி, நீட்டிப்பு தருவது
என்பது வழக்கமாக உள்ள ஒன்று. அதில் ஒன்றும் தவறில்லை.

திரு. அ. ரகுமான்கான் : அந்த எக்ஸ்டென்ஷன் நியாயமான
தாக இருக்கவேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. அடுத்து
காவல்துறைக்கு நாம் மானியம் வழங்கியிருக்கிறோம். அதிலே
சட்டம்-ஒழுங்கு எல்லாம் வருகிறது. உங்களுக்கெல்லாம் தெரி
யும், இந்திரா அம்மையாரைக் கொலை செய்யும் முயற்சியிலே
ஈடுபட்டோம் என்று சொல்லி, எனக்கும், பொன் முத்துராம
லிங்கம் போன்ற 55 பேர்களுக்கும் 2 வருடம் கடுங்காவல்
தண்டனை சிறைத்தண்டனை கொடுத்திருக்கிறார்கள். நாங்கள்
இப்போது ஜாமீனில் இருக்கிறோம். அப்பீல் செய்து இருக்கிறோம்.
அது வேறு விவகாரம். ஆனால் நம்முடைய அமைச்சர் திரு. ப. உ.
சண்முகம் அவர்கள், குற்றவாளிதான் என்று கோர்ட் தீர்ப்பு
சொல்லவில்லை. ஆனால் இந்த அரசாங்கம் அவர்கள் குற்ற
வாளிதான் என்று சொல்லி, அப்பீல் செய்கிறது. நான் திட்ட
வட்டமாக கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்.)

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஏற்கனவே வழக்கு
மன்றத்தில் தீர்ப்புவழங்கப் பெற்றிருக்கிறது அவர் அமைச்சராகத்
தொடர்வதில் எந்தத் தவறும் இல்லை என்று ஏற்கனவே வழக்கு
மன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டதற்குப் பின்னால், ஒரு வழக்
குரைஞராக இருப்பவர் அதைத் திரும்பத் திரும்ப இங்கே பேச
வேண்டிய அவசியம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தப்பாக
புரிந்து கொண்டார்கள். நீங்கள்தான் அவரைக் குற்றவாளி
என்று சொல்லி அப்பீல் செய்து இருக்கிறீர்கள். அதுதான் என்
னுடைய வருத்தம். அவர் குற்றவாளி அல்ல என்பதுதான்
என்னுடைய வாதம். இது நியாயமா? அவரைக் கொலை
காரன், கொலை செய்ய முயற்சித்தார் என்று சொல்லி அமைச்ச
ராக வைக்காதீர்கள். இது என்ன நியாயம் என்று கேட்கிறேன்.
அப்பீல் செய்து இருப்பது நீங்கள்தான். என்ன அர்த்தம்? அவர்



கொலை செய்ய முயற்சித்தார் என்று அரசாங்கம் முடிவுக்கு வரு
கிறது. அப்படியானால் கொலை செய்ய முயற்சித்தவரை எப்படிப்
பக்கத்தில் வைக்கலாம். அதுதான் என்னுடைய கேள்வி. சட்
டம் கூட சம்மதிக்கலாம். தார்மீகமாக அது சரியா? எனவே அவர்
குற்றம் செய்யவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து.
ஆனால் துரதிர்ஷ்டவசமாக நீங்கள் அவரைக் கொலைக்கார
னாகச் சித்தரித்து இருப்பது நியாயம் அல்ல. இப்படிப்பட்ட ஒரு
இடத்திலே அவர் இருக்கவே கூடாது. ஆகவே அதைப் பரிசீலிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினையை உங்களுடைய கவ
னத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பாட நூல் நிறுவனம்
பற்றியது. துணைத் தலைவர் அவர்களே தயவுசெய்து நீங்களும்
கவனிக்கவேண்டும். பாட நூல் நிறுவனத்திற்கு மானியம் இதிலே
ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1983 ஆம் ஆண்டு அச்சடித்து வெளி
யிடப்பட்டுள்ள 3-வது வகுப்பு அறிவியல் பாடம். அதிலே 3-வது
பாடம். பிள்ளைகளுக்கு அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது.
தெரியுமா? சந்திரன் என்ற தலைப்பிட்டு சந்திரன் தன்னைத்
தானே சுற்றுவது இல்லை என்று எழுதப்பட்டிருக்கிறது. சந்தி
ரன் தன்னைத்தானே சுற்றுவது இல்லை என்று 1983 ஆம் ஆண்டு
அச்சடிக்கப்பட்ட புத்தகத்தில் இருக்கிறது. 1986 ஆம் ஆண்டு
அதே பாட நூல் நிறுவனம் அதே 3 ஆம் வகுப்பு பிள்ளைகளுக்கு
என்ன சொல்கிறது தெரியுமா? சந்திரன் தன்னைத்தானே சுற்று
கிறது என்று பாட நூல் நிறுவனம் அச்சடித்த புத்தகம் சொல்லு
கிறது. வாத்தியார் என்ன சொல்லுவார்? சந்திரன் தன்னைத்
தானே சுற்றுகிறது என்று சொல்லுவாரா? சுற்றுவது இல்லை
என்று சொல்லுவாரா? நான் கேட்கிறேன் வாத்தியாரையும்
குழப்புகிறீர்கள். பிள்ளைகளையும் குழப்புகிறீர்கள். இதற்கு ஒரு
. . . . . .

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற குழப்பங்கள் நிரந்
தரமாக நீக்கப்படவேண்டும் என்பதற்காகத் தான் டாக்டர்
மால்கம் ஆதிசேசய்யா அவர்கள் தலைமையில் புதிய குழு அமைக்
கப்பட்டு அதிலே அறிவியல் அடிப்படையில் ஆன பாட நூல் திட்
டங்களை எல்லாம் வகுத்து நடப்பு ஆண்டிலிருந்து நடை
முறைக்குக் கொண்டு வர இருக்கிறோம். எங்கேனும் அங்கொன்
றும் இங்கொன்றுமாகத் தவறுகள் இருந்திருக்குமேயானால் அவ்
வப்போது அது சுட்டிக்காட்டப்பட்டு திருத்தப்பட்டிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய மரியாதைக்குரிய கல்வி
அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் ஆர்ட்ஸ் கோர்சஸ், இண்டரி,
பிலாசபி, லிட்டிரெச்சர் இவைகள் எல்லாம் இந்த கல்லூரிகளில்
இருக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஏன் இருக்கக்

[திரு. அ. ரகுமான்கான்] [1987 நவம்பர் 16

கூடாது என்றால் அது வேலைவாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது என்று சொல்லுகிறார்கள். 400 என்ஜினியர்கள் சர்வீஸ் கமிஷனால் 1983 ஆம் ஆண்டில் செலக்ட் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் பொதுப் பணி துறையில் வேலை கிடைக்கவில்லை. சையன்ஸ் படித்தவர்களுக்கு எல்லாம் வேலை கிடைத்து விடுகிறதா ? எனவே கல்வி என்பது வேலையை மட்டும் தருவது அல்ல.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் அவைக்கு ஒருவேளை வரவில்லை என்று கருதுகிறேன் அல்லது பத்திரிகையில் அரசு சார்பாக வெளியிடப்பட்ட அறிவிப்பை சரியாக படிக்கவில்லை என்று கருதுகிறேன். Never the Government has taken a policy decision that Arts Course should be totally ab lished. What we have already told is, that Arts C urse would e re-vamper. ஏற்கனவே இருப்பது Arts Educaion has outlived its utility. The Course have to be re-vamped in tune with the modern scientific and techn logical approach. என்ற முறையிலே கலைப் படிப்பைப் பொறுத்தவரைக்கும் வாழ்க்கைக்குப் பலன் கிடைக்கக்கூடிய முறையிலே இதை மாற்றி அமைக்கப்படவேண்டும் என்ற முறையிலே Need based and utility oriented educati n என்ற முறையில் மாற்றி அமைக்கப்படுகிறது. அதற்கு டாக்டர் வி. சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது என்று ஏற்கனவே நான் தெளிவாக கூறியிருக்கிறேன்.

கலைப்படிப்பைப் பொறுத்தவரைக்கும் கிட்டத்தட்ட 2 லட்சம் பேர் ஜியாகரிப்பி, பிளாசபி, சைக்காலஜி போன்ற பாடங்களை எல்லாம் படித்து விட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்கள், நல்ல புரப்பசனல் கோர்ஸ் என்று சொல்லக்கூடிய இன்ஜினியரிங். மெடிகல் போன்றவைகளுக்கு போகின்ற குழந்தைகள் வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது எலைட் சர்க்கிள் என்று சொல்லக்கூடிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சென்று விடுகிறார்கள். மாறாக பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மெடிக்கல், இன்ஜினியரிங் இடங்கள் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்படுகிற போது அவர்களுக்குப் பி. எஸ்ஸி. கெமிஸ்ட்ரி கிடைப்பது இல்லை, பிசிக்ஸ் கிடைப்பது இல்லை, மெத்தமெட்டிக்ஸ் கிடைப்பது இல்லை, எனவே அவர்கள் கலைப் படிப்பிற்குச் செல்லுகிறபோது அந்த குழந்தைகள்தான் பாதிப்புக்கு உள்ளாகிற காரணத்தால் கலைப் படிப்பை ஆர்ட் எஜுகேஷன் என்று சொல்லக்கூடிய அந்த கலைப் படிப்பை " ரீ வெம்ப் " செய்து வேலை வாய்ப்பு உருவாக்கக் கூடிய முறையில் எப்படி அதை கொண்டுவர வேண்டும் என்ற முறையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் நடவடிக்கை எடுக்கும் என்று தான் அரசு சொல்லியிருக்கிறது.



1987 நவம்பர் 16]

(பிற்பகல் 12-20)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே கலைப் படிப்பைப் பொறுத்த மட்டில் வேலைக் கண்ணோட்டத்தோடு பார்க்காமல், மனித நியதியை உருவாக்கக் கூடியது, கலாச்சாரம், மொழி அறிவுகளை எல்லாம் உருவாக்கக் கூடிய அடிப்படையில் அவற்றை அனுமதிக்க வேண்டும். அனுமதிப்போம் என்ற உத்தரவாதத்தினை அமைச்சரவர்கள் தந்திருக்கிறார்கள். அதற்கு நன்றி.

இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். 5,138 நியாய விலைக் கடைகள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடைபெற்று வந்தன. ஆனால் 1-10-1987 லிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றப்படுகிறது. மாற்றப்பட வேண்டியதன் அவசியமென்ன ? தனியாரிடத்திலிருந்ததை நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மாற்றியது ஒரு சமூக நோக்கத்தோடு, ஒரு தேசியமயம் மாதிரி. அதை அரசாங்கமே கொள்முதல் பண்ணி, அரசாங்கமே சீராக விநியோகிக்கிறது ? கோ-ஆப்பரேடிவிற்குப் போய் விட்டால் அங்கே எலெக்ஷன் கிடையாது. அங்கேயிருக்கும் ஆட்கள் நம்முடைய ஆட்கள்தான். எனவே நான் கேட்கிறேன். விநியோகம் சீராக இருக்குமா? சீராக இருக்காது. ஏற்கனவே இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடைகளில் பணியாற்றுகிறவர்களுக்குச் சம்பளம் இதிலே மாற்றப்படும். சீனியாரிட்டி போய்விடும், ப்ரமோஷன் போய்விடும். இந்த தேவையில்லாத வேலை எதற்கு? இதற்குப் போய் ஏறத்தாழ ரூ. 1 கோடி நிதியை நம்முடைய அமைச்சரவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

அடுத்து இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் வேண்டும் என்று நாங்கள் பேசிப் பேசி களைத்துப் போனோம். இப்போது நம்முடைய அமைச்சர் பண்ருட்டியார் அவர்கள் புதுக் காரணம் சொல்கிறார்கள். கட்சிச் சின்னம் இல்லாமல், அரசியல் இல்லாமல் தேர்தல் நடத்தப் போகிறோம் என்று. முதலில் சொன்னதும் நீங்கள் தான். மாற்றியதும் நீங்கள் தான். இன்றைக்கு இப்போது சொல்வதும் நீங்கள் தான். அதற்காக ஒரு மசோதா கொண்டு வரப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். இது காலங்கடந்த காரியம். எனவே இதை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரமாகிவிட்டது. எல்லோரும் நேரம் கேட்பார்கள். நிறையப் பேசிவிட்டீர்கள். ஸ்கோப்பிற்குள்ளே பேசுங்கள். ஸ்கோப்பை விட்டு வெளியே போனால் என்ன செய்வது.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் பேசிய பேச்சில் ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி பற்றி பேசக் கூடாது என்ற மரபும், விதியும் தெளிவாக இருக்கிற காரணத்தால், அந்தப் பகுதியையும் நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள், மேலும் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடக்கும் என்று அறிவித்திருந்தார்கள். 23—10—1987 அன்று உத்தரவு போட்டார்கள். ஆனால் டிசம்பர் 16-ல் தேர்தலை ஒத்திவைத்து விட்டார்கள். காரணம் தெரியவில்லை. துணைத் தலைவர் அவர்களே, இதோடு நான் முடித்து விடுகிறேன்.. ஊராட்சி அதிகாரப் பறிப்பு இன்று நடப்பதைப் பற்றி இங்கே நான் சொல்லவேண்டும். நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டதெல்லாம், வரி விதிப்பு சம்பந்தமாகத் தீர்மானிப்பது யார்? மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மன். மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டுமே தவிர ஆர்.டி.ஓ., டி.ஆர்.ஓ. பி. டபிள்யூடி.-யில் இருக்கக் கூடிய இஞ்சினியர்கள், இரண்டு கௌன்சிலர்கள் போன்ற இவர்களைப் போட்டுக்கொண்டு அந்தக் காரியத்தை செய்வது என்பது மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அவமானம் செய்வதாகும். நம்முடைய முதலமைச்சர் இருக்கிறார். அவர் தீர்மானிப்பதற்குப் பதிலாக இரண்டு அதிகாரிகளை அந்தக் குழுவிலே போட்டு, முதலமைச்சரையும் அந்தக் குழுவிலே ஒரு ஆளாகப் போட்டு, தீர்மானித்தால் அது எப்படி வரும்? ஆகவே இது அதிகாரத்தைப் பறிப்பதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொன்றாகச் சொன்னால், மற்றவர்களும் கேட்பார்கள். 25 நிமிடமாயிற்று. அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

### 11. அரசினர் தீர்மானம் விதி 189 (3)-ஐத் தளர்ந்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு சட்டமன்றப் பேரவை 9-00 மணிக்குக் கூடிய காரணத்தினாலே 1-00 மணியோடு முடிக்கவேண்டுமென்ற விதி வைத்திருந்தது. இப்போது 9-00 மணிக்குப் பதிலாக நாம் 10-00 மணிக்கு கூடுகின்ற காரணத்தினாலே விதியைத் திருத்தத்தான் நாம் 1-00 மணியோடு என்பதை 2-00 மணியோடு முடித்தால் இன்னும் சில நண்பர்கள் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்குமென்று கருதி, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : ''சட்டமன்றப் பேரவை விதி 189 (3)-ன் கீழ் துணை மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் பிற்பகல் 1-00 மணியோடு முடித்தாக வேண்டுமென்பதைத் தளர்த்தி, அதை 2-00 மணி வரை நீடிக்கலாம்.''

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.**





### 10. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1987–88 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்கோப்பிற்குள்ளே பேசுங்கள். நீங்களே வில்லங்கம் உருவாக்கக் கூடாது. அவருக்குச் சொன்ன பதில்தான் உங்களுக்கும் பொருந்தும். அதை எக்ஸ்பஞ்ச் பண்ணி விடுகிறேன். துணை மானியக் கோரிக்கை சம்பந்தமாக ஸ்கோப்பிற்குள்ளே கட்டாயமாகப் பேசியாகவேண்டும். அவருக்கு ஒரு நியாயம். உங்களுக்கு ஒரு நியாயம் கிடையாது. தயவு செய்து துணை மானியக் கோரிக்கையின் கீழ் எது இருக்கிறதோ, அதைப் பேசுங்கள், மற்றது பேசினால், 'I will be forced to expunge it' இங்கே நேரத்தைத்தான் நாம் பார்க்கவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளில், எல்லா இலாக்காக்களும், டிஸ்ட்ரிக்ட் ஹெட்டில்தான் இருக்கிறது. ஒரு பேச்சை ஆரம்பித்தால், ஒரு உறுப்பினருக்கு ஒரு மணி நேரம் வேண்டும் என்றால் எப்படி? (குறுக்கீடு) டாக்டர் மாசிலாமணி அவர்கள் டெக்னிக்கலாகப் பேசக்கூடாது. (குறுக்கீடு).

THIRU A. RAHMAN KHAN : It is our fundamental right to express our views. (Interruptions)

*டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் நடப்பு நிதியாண்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்ற முதல் துணை மதிப்பீட்டின்கீழ் சுமார் 252.42 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றபோது, கடந்த காலத்திலே வளர்ச்சிப் பணிக்குச் செலவிடப்பட்ட தொகைகள் நல்லமுறையில் செலவிடப்பட்டதா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வறுமை ஒழிப்புத் திட்டங்கள் என்ற பெயராலே, மத்திய அரசும், மாநில அரசும் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவிட்டபோது ஆர்.எல்.ஈ.ஜி.பி., என்.ஆர்.ஈ.பி., ஐ.ஆர்.டி.பி. போன்ற திட்டங்களைக் கிராமப்புறங்களில் செயல்படுத்துகின்ற போது பல்வேறு பிரச்சனைகளோடும், முறைகேடுகளோடும் செயல்படுவதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழக அரசு இந்த வளர்ச்சிப் பணிகள் சிறப்பாகச் செயல்படுவதற்கு ப்ளாக் அட்வைசரி கமிட்டி என்றும், டாஸ்க் போர்ஸ் கமிட்டி என்றும் பல்வேறு கமிட்டிகளை அறிமுகப்படுத்தி, ஒழுங்குபடுத்தி திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பல அமைப்புகளை உருவாக்கியும்கூட கிராமப்புறங்களில் இருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகள் செய்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[டாக்டர் ந. மாசிலாமணி] [1987 நவம்பர் 16

உதாரணமாக என்னுடைய தொகுதிக்குக் கீழே தா.பழூர் ஒன்றியத்தில் உள்ளாட்சி அமைப்பால் இயங்குகின்ற ஒன்றியக் குழுத் தலைவராக இருக்கின்றவர்— அவர் ஆளும் கட்சியைச் சார்ந்தவர் அல்ல— பல்வேறு என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டங்களைச் செயல்படுத்துகின்ற போது, ஆதி திராவிடர் வகுப்பில் வாழ்கின்றவர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தில் பல்வேறு குறைபாடுகளைச் செய்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே இந்த மன்றத்துனுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பளாக் அட்வைசரி கமிட்டியும், டாஸ்க் ஃபோர்ஸ் கமிட்டியும் தேர்ந்தெடுத்தாலும் கூட, உதாரணமாக ஒரு கிராமத்தில் 1-லிருந்து 20 என்கின்ற வரையில், வரிசை அடிப்படையில், எண்ணிக்கை அடிப்படையில் வீடுகளை ஒதுக்குகின்றபோது அதை சரிவர அமுல்படுத்தாமல், அங்கிருக்கின்ற ஒன்றியக் குழுத் தலைவர் அவர்கள் அருகால் நிலைப் பயனாளிகள் கொடுக்க வேண்டும் என்றும் வீட்டிற்கு 100 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் அங்கிருக்கின்ற ஆதி திராவிட மக்களை வற்புறுத்துகிறார்கள். இதுகுறித்து அந்தப் பகுதியில் உள்ள ஆதிதிராவிட மக்கள் எல்லாம் கூட உள்ளாட்சி அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும், பல்வேறு அதிகாரிகளுக்கும் இந்தப் பிரச்சினையைத் தெரிவித்து இருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்கு கீழே வாழுகின்ற ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுகின்றபோது அவர்களிடமிருந்து அருகால் நிலையைப் பறிக்க வேண்டும் என்று அந்த இயக்கத்துனுடைய தலைவர் அவர்கள் சொல்லுகிறாரா என்பதை இந்த மன்றத்தில் கேள்விக் குறியாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு பிரச்சினைகள், ரோடு போடுவதாக இருந்தாலும் சரி, தண்ணீர் கொடுப்பதாக இருந்தாலும் சரி, செய்கிற திட்டங்களுக்கு எல்லாம் அவர்கள் சரியான முறையில் கணக்கு காண்பிக்காமல் பணங்களைச் சுருட்டுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இந்த துணை பட்ஜெட்டில் குறிப்பிடுகின்றபோது வறட்சிப் பணிக்காக, இந்த நடப்பு ஆண்டில் சுமார் 51.6 கோடி ஒதுக்கியிருப்பதாக நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதிலே குறிப்பிடுகின்ற போது 29.94 கோடி ரூபாய் குடிநீருக்காகவும், அதிலே 7.58 கோடி ரூபாய் குடிநீர் வசதியைப் பெருக்குவதற்காகவும் சென்னை நகருக்கு மட்டும் வழங்கியிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குடிநீர் வழங்குவதற்காக மொத்தம் செலவிட்ட தொகையிலே 4-ல் ஒரு பங்குத் தொகை சென்னையிலே உள்ள சுமார் 40 இலட்சம் மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். 4-ல் ஒரு பகுதி பணத்தைச் சென்னையில் மட்டும் செலவழித்திருக்கிறார்கள். தமிழகத்திலே 4½ கோடி மக்கள் வாழ்கின்ற இடத்தில் சுமார் 40 இலட்சம் பேர்களுக்கு மட்டும் தண்ணீர் கொடுத்துவிட்டால் 4½ கோடி மக்களுடைய தாகம் தீர்ந்துவிடுமா என்பதை இந்த மன்றத்திலே கேட்க ஆவசப்படுகிறேன். கடுமையான வறட்சி இந்த ஆண்டில் இருக்கின்ற காரணத்தினால் நாங்கள்



1987 நவம்பர் 16] [டாக்டர் ந. மாசிலாமணி]

முழு மூச்சோடு போர்க்கால அடிப்படையிலே நிவாரணப் பணிகளை மேற்கொண்டு இருக்கிறோம் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே ஒருமுறை மாண்புமிகுநாவலர் அவர்கள் வறட்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது வறட்சி அதிகமாக இல்லை, கடுமையாக இல்லை, ஆங்காங்கே ஒரு சில மாவட்டங்களில்தான் இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் இங்கே குறிப்பிடும்போது தமிழகத்திலே கடுமையான வறட்சி இருப்பதால் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணி மேற்கொண்டோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், அதற்காக செலவிட்ட தொகை ரூ.30கோடி கடுமையான வறட்சி இருக்கின்ற நேரத்தில், தமிழகத்திலே உள்ள 20 மாவட்டங்களுக்கு 30 கோடி ரூபாயைச் செலவு செய்தால் வறட்சி நீங்கிவிடுமா? யாருடைய வறட்சி நீங்கியது என்பதை நீங்கள் கண்காணிக்க வேண்டும் என்று இங்கே நான் கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12—30)

அடுத்தபடியாக, இந்தக் குறிப்பிலே பிற்படுத்தப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக சுமார் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இன்னும் அதிக அளவில் நிதியை ஒதுக்க வேண்டும். செலவு அதிகமாகச் செய்து, பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் உயர்ந்து மேல் மட்டத்திலே வருவதற்கு நீங்கள் ஊக்கம் அளிப்பதற்கு நல்ல திட்டங்களை வழங்குவதற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டிலே குறிப்பிடுகின்றபோது, வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், தூத்துக்குடியிலே 384 குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூபாய் 1 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது. என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே வாடகை வீட்டிலே குடியிருப்பவர்களுடைய நிலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்கின்றபோது, உதாரணமாக, இராயப்பேட்டை பீட்டர்ஸ் ரோட்டிலே அரசு அலுவலர்கள் குடியிருப்புகள் இருக்கிறது. அங்கே 1,200 குடும்பங்கள் வாழ்கின்றன. அந்தக் குடியிருப்புகள் 1972லே உருவாக்கப்பட்டவை. அதற்குப் பின்னாலே, 1986லே அந்தக் குடியிருப்பைச் சுற்றியுள்ள காம்பவுண்ட் சுவரை இடித்து, அதாவது எம்.எம்.டி.ஏ., கார்ப்பரேஷன் மற்றும் உள்ளாட்சிகளின் அனுமதி இல்லாமல் அங்குள்ள காம்பவுண்ட் சுவரை இடித்து, அந்த இடங்களிலே டீக்கடை, பெட்டிக்கடைகள் மற்றும் மளிகைக் கடைகள் போன்று 10 கடைகளை உருவாக்கியிருக்கிறார்கள். 1985லே மாண்புமிகு திரு. இராகவானந்தம் அவர்கள் வீட்டுவசதித்துறை அமைச்சராக இருந்தபோது அவர்கள் இதற்கு ஸ்டே கொடுத்தார்கள்.

ஆனால், அதற்குப் பின்னாலே, இப்போது, 1986லும், 87லும்
அதற்கு அனுமதி வழங்கி, அங்கேயிருக்கின்ற அடிப்படை வசதி
களையெல்லாம் சீரழிக்கின்ற வகையில், சுகாதாரங்கள் கெடு
கின்ற வகையில், அங்கேயிருக்கின்ற காலனியின் வசதிகள் குறை
கின்ற வகையில் இந்த நடவடிக்கையை எடுத்து இருக்கிறார்கள்.
அந்தக் குடியிருப்புகளிடையே இப்படிப்பட்ட நடவடிக்கை
களை மீண்டும் அரசு தடுத்து நிறுத்தவேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கேரள மாநிலத்திலே, வைக்கத்தில் தந்தை பெரியார் அவர்
களுக்கு, சிலை ஒன்றையும், நினைவுச் சின்னம் ஒன்றையும்
அமைப்பதற்காக அரசு 15 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது
என்று இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்
டிருக்கிறார்கள். இதை முழுக்க முழுக்க நாங்கள் வரவேற்கி
றோம்.* *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது வேண்
டாம். அதை எக்ஸ்-பஞ்ச் செய்து விடுகிறேன். முதலிலேயே
சொல்லிவிட்டோம். டிமாண்டுக்கு உட்பட்டுப் பேசுங்கள் என்று.
அங்கே பாருங்கள், உடனே அங்கே ஒருவர் எழுந்து கொள்கி
றார். (குறுக்கீடு) இல்லை, இல்லை, வேண்டாம் (குறுக்கீடு)
நாங்கள் சொல்லக்கூடாது. ஒரு மெம்பருக்கு ஒரு கருத்து
இன்னொரு மெம்பருக்கு ஒரு கருத்து இருக்க முடியாது, (குறுக்
கீடு) திரு. ரகுமான்கானுக்கும் சொல்லிவிட்டோம். நீங்கள் அந்
தப் பிரச்சினைப் பற்றி பேச ஆரம்பித்தவுடன் அங்கே தமிழரசன்
நானும் அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவேன் என்று,
எழுந்து கொள்கிறார். பிரச்சினை வேண்டாம், சுமுகமாக
இருக்க வேண்டும், அதற்காகத்தான் சொல்கிறேன், அதை நீக்கி
விடுங்கிறேன். துணை மானியக் கோரிக்கையிலே பேசுங்கள் (குறுக்
கீடு) அந்த இரண்டு பிரச்சினைகளையும் ஒரு காரணத்திற்காகத்
தான், பேரவைத் தலைவர், தான் அனுமதி மறுத்து இருக்கிறேன்
என்று சொல்லியிருக்கிறார். திரும்ப அதையே நான் அலவ் பண்
ணினால் அது நியாயமாக இருக்காது. நீங்கள் அதை விட்டு
விட்டு வேறு விஷயம் பற்றி பேசுங்கள் (குறுக்கீடு).
இதுக்கியிருக்கிற மானியம் சம்பந்தமாகப் பேசுங்கள். (குறுக்
கீடு) நான் அதை வைத்துப் பேசுகிறேன், இதைவைத்துப் பேசு
கிறேன் என்று பேச ஆரம்பித்தால், அப்புறம் அவர் பேசுகிறேன்
என்பார், பிரச்சினையாகிவிடும், நான் அதற்காகத்தான் சொல்
கிறேன். (குறுக்கீடு) அப்புறம் எல்லோருடம பேசிக்கொண்டு
போவார்கள். (குறுக்கீடு) தலைவர்கள் சொன்ன கருத்து என்
றால், எல்லா சமுதாயத்தைப் பற்றியும், எல்லாக் கருத்துக்களும்
சொல்லியிருக்கிறார்கள். அப்புறம் அப்படியே ஒவ்வொன்றாகப்
போகும். பேங்கி பற்றிய போகும்; நிலவுடமை, நிலச் சீர்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.





திருத்தம் போன்றவைப் பற்றியும் அந்தத் தலைவர்தான்
சொல்லியிருக்கிறார். இப்படியே பேசிக்கொண்டிருந்தால், அலவ்
பண்ண முடியுமா நாங்கள்? (குறுக்கீடு) நீங்கள் பேசினால், அவர்
களும் கேட்பார்கள் (குறுக்கீடு) பெரியார் அதையும் சொல்லியிருக்கி
றார், அதுபற்றியும் பேசச் சொல்வார்கள், (குறுக்கீடு) இல்லை,
இல்லை, நீங்கள் மற்ற சப்ஜெக்ட் பற்றிப் பேசுவதாக இருந்
தால் பேசுங்கள், இல்லையென்றால் முடித்துவிடுங்கள், அடுத்த
உறுப்பினரைக் கூப்பிடுகிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி : * * * * ,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை அனு
மதிக்காமல் இருப்பதற்குக் காரணமே, புளோரில் கான்டிரவர்சி
வரக் கூடாது, அதனால் பிரச்சினை உருவாகும் என்பதற்காகத்
தான் இரண்டு பிரச்சினைகளையும் அலவ் பண்ணாமல் இருந்து
கொண்டிருக்கிறோம். உள்ளதைச் சொல்கிறேன். பேச அனு
மதிக்க முடியாது. அதற்குமேல், ஸ்பீக்கர், நாங்களெல்லாம்
சொன்ன தீர்ப்புகளிலிருந்து தவறி நடக்க வேண்டுமென்று சொல்
கிறீர்களா, நீங்கள், (குறுக்கீடு) இல்லை, இல்லை, அனுமதிக்க
முடியாது. வேறு விஷயம் பேசுவதாக இருந்தால் பேசுங்கள்
அல்லது முடிவுக்கு வாருங்கள். இந்தப் பகுதியை நான் நீக்க
உத்தரவிடுகிறேன் (குறுக்கீடு) முடியாது, உட்காருங்கள், மாண்பு
மிகு உறுப்பினர் திரு. மா. சின்னராசு.......

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மன்றத்தினுடைய
துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படிப் பேசி
னால் எப்படி விவாதங்கள் சபையிலே போகும்? நல்ல நிதர்சன
மாகத் தெரிந்துகொண்டு செய்வது நியாயமாக இல்லை, நீங்கள்
பேசினால் அங்கே எழுந்து நிற்பதைப் பாருங்கள். அங்கே திரு.
தமிழரசன் எழுந்து நிற்கிறார். என்னைப் பேச விடுங்கள் என்று
அவர் சொல்லப் போகிறார். ** என்கிறீர்கள். இதற்கு மற்ற
வர்களும் பதில் சொல்லப் போகிறார்கள். எனவே, சபை சுமூக
மாக நடக்க நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் (குறுக்கீடு) சபை
யின் விவாதம் ஒழுங்காகப் போக நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்.
எனவே, நீங்கள் அந்தப் பொருளைப் பற்றிப் பேசாதீர்கள்.
அந்தப் பொருள் பற்றிப் பேசுவதற்கு நான் அனுமதிக்கப் போவ
தில்லை. (குறுக்கீடு) இந்தக் கேள்வியை இப்படிக் குறுக்கு வழி
யில் கேட்டால் நானும் சிலவற்றைக் குறுக்கு வழியில் கேட்டால்
நீங்கள் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) ஆகவே, என்
னுடைய தீர்ப்பு இது. சபை விவாதம் வேறு திசையில் போக
அனுமதிக்க முடியாது. அதனால்தான் இது சம்பந்தமாகவும்,
இலங்கைத் தமிழர் சம்பந்தமாகவும் பேசியதை நான் ஏற்கெனவே

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

எக்ஸ்பஞ்ச் பண்ணியிருக்கிறேன். (குறுக்கீடு) ஆகவே, துணை மானியக் கோரிக்கைக்கு உட்பட்டு வேறு விஷயம் எதையாவது பேசுவதாக இருந்தால் பேசுங்கள். நான் அனுமதிக்கிறேன். இல்லை என்றால் நீங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள் (குறுக்கீடு) அடுத்த உறுப்பினரைப் பேச விடுவதற்கு அது வாய்ப்பாக இருக்கும். (குறுக்கீடு) அதை நிராகரித்து விட்டோம். (குறுக்கீடு) அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) நீங்கள் சொல்லலாம். அந்த விவாதம் தேவையில்லை. அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கை மீது, அத்துமீறி காவல் துறையினர் நடந்து கொண்டிருப்பார்களேயானால் அந்தப் பிரச்சினையை மாத்திரம் கொண்டு வரலாமே தவிர மற்றபடி போராட்டத்தைப்பற்றி முழுவதுமாக இங்கே ஒரு பிரச்சினையாகக் கொண்டு வந்தால் பின்னர் அதன் சாதக பாதகங்களையும் விவாதிக்க வேண்டியிருக்கும். ஆனால், அதற்கு இங்கே இடமில்லை. மேற்கொண்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த பிரச்சினைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அவர்களைக் கூப்பிட்டு இந்த மாதக் கடைசியில் பேச இருக்கிறேன் என்று சொல்லி அந்தச் செய்தி பத்திரிகைகளிலும் வந்த பிறகு, அந்தப் பிரச்சினையை இங்கே கிளப்பி வேறு பல நிலைமைகளை ஏற்படுத்தாமல் இருப்பது மிக மிக நல்லது. அவர்களே நேரடியாக அதை வரவேற்றிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களோடு அவர்கள் பேசி தங்கள் கருத்துக்களை எடுத்து வைப்பார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களோடு பேசி என்ன முடிவாகப் போகிறது என்பதெல்லாம் பொருத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று. அந்தச் சமயத்தில் இந்தப் பிரச்சினையைப் பற்றி அவர்கள் முதலமைச்சரிடம் தெரிவிப்பார்கள். அதைப் போலவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அரசின் சார்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படி எடுப்பார்கள். நிலைமை இப்படியிருக்கும்போது இந்தப் பிரச்சினைபற்றி நீங்கள் விவாதிப்பது என்று ஆரம்பித்தால் அந்தந்தக் கட்சிகள் பிறகு அவர்களுடைய பிரச்சினைகளையும் கிளப்புவார்களானால் அதுபற்றிய விவாதமே வந்து சேர்ந்துவிடும். ஆகவே, இந்தப் பிரச்சினையை இங்கே கிளப்புவது சரியில்லை. அதற்கு உரியவர்களே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேச இருக்கிறார்கள். அவர்களே அப்படி முடிவு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் இந்த மாத இறுதிக்குள் ஒரு நாளைத் தருகிறேன் என்று சொன்ன பிறகு—அது நடைபெறப் போகிறது என்று சொன்ன பிறகு—இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடுவது தான் நல்லது.



**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள், வன்னியர் சங்கத்தினரை அழைத்துப் பேசுவார் என்ற நம்பிக்கையை இந்த மன்றத்தின் மூலமாக வழங்கியதற்காக மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் சொல்லவதைக் கேளுங்கள். அதைப் பேசினால்தான் பிரச்சினை. பிறகு அதனுடைய பிரோஸ் அண்டு கான்ஸ் பற்றியும் பேச்சு வந்துவிடும். அது பேச்சுவார்த்தைக்கே குந்தகமாகப் போய்விடும். பேசலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர்களும் முன்வந்திருக்கிறார்கள். நிச்சயமாக அது நடக்கும். அதைத் தெரிந்துதான் அனுமதிக்கவில்லை (குறுக்கீடு) அதைத் தெரிந்துதான் சொல்லுகிறேன். ஆகவே, வேறு சப்ஜெக்ட் இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடு) இந்த விவாதத்திலிருந்து தயவு செய்து வேறு விவாதத்திற்குப் போங்கள். (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை இதைத் தவிர வேறு ஏதாவது பேசுங்கள். இல்லையென்றால் முடித்து விடுங்கள். வேறு உறுப்பினரைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடு) இதைப் பேச அனுமதிக்கப் போவதில்லை. அதற்கான நியாயமான காரணங்கள் இருக்கின்றன. இதைப் பேசுவதை விட்டு மற்றதைப் பேசுங்கள். இல்லையென்றால் அடுத்த உறுப்பினரை அழைக்கப் போகிறேன். (குறுக்கீடு) அதை எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறேன். அதை விட்டு விடுங்கள் வேறு பேசுங்கள். (குறுக்கீடு) இதைப் பேச அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமானால் சொல்லலாம். அவை முன்னவர் அவர்களே தெளிவாக இப்படி ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தைக்குக் குந்தகமாக இந்த விவாதம் அமைந்து விடக் கூடாது என்பது தான் முக்கியம். அதற்குப் பாதுகாப்பாகத்தான் இந்த நடவடிக்கை. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது நியாயமில்லை. வேறு சப்ஜெக்டைப் பேசினால் அனுமதிக்கிறேன். அடுத்து திரு. சின்னராசு.

***திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் முன் மொழியப் பட்டிருக்கிற ரூ. 252 கோடிக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களையும் சில வற்றைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமை பட்டிருக்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தமிழ் உலகம் முழுவதுமே தன்னிகரில்லாத் தலைவனாக விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவரின் ஆட்சியில்தான் நான்காவது தமிழ்ச் சங்கத்தைக் கண்டார்கள். உலகத் தமிழ் மாநாட்டை, தமிழ் உலகமே வியக்கின்ற முறையில் மதுரை மாநகரிலே நடத்தினார்கள் என்பதும், தமிழுக்கு என்று தனியாக ஒரு பல்கலைக் கழகத்தையும் உருவாக்கி, நலிந்த தமிழ்க் கவிஞர்களுக்கு நிதி உதவி வழங்கியும், தமிழுக்கு, தமிழ் உணர்வுக்கும் பாடுபடுகிறவர்களின் நலனுக்காகப் பல அளப்பரிய திட்டங்களையும் பொன்மனத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கினார்கள் என்பதையும் அவர் தமிழுக்கு ஆற்றியிருக்கிற மிகப் பெரிய தொண்டினையும் யாரும் இங்கே மறுத்துவிட முடியாது என்பதையும் நான் முதலில் நினைவு கூற விரும்புகிறேன்.

தமிழ் உலகம் உள்ளளவும் நிலைபெறுகிறவாறு, தமிழ் வளர்ச்சிக்கான திட்டங்களையும் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அதற்காக கோடானுகோடி அளவுக்கு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, சமுதாய வளர்ச்சிக்காகவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி அதற்குக் கூடுதலாக நிதி தேவைப்படுகிறது என்று வருகிறபோது அந்தத் திட்டங்கள் எல்லாம் மக்களுடைய வறுமையைப் போக்குவதற்கும் சாதாரண பாமர மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கும் போடப்பட்டிருக்கிறது என்பதை வரவேற்றுப் பேசுகிற இந்த நேரத்தில் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

(பிற்பகல் 12-40)

இன்று சம்பந்தம் இல்லையென்றாலும்கூட, பேசியிருக்கின்ற நண்பர்கள் நீதிமன்றத்தில் ஒருவருக்கு தண்டனை கொடுக்கப்பட்டுவிட்டது 'கண்டெம்ட் ஆஃப் கோர்ட்' என்று சொல்லி ஏதோ ஒரு நீதிமன்றம் திர்ப்பை வழங்கிவிட்டது என்பதற்காக அந்த வாரியம் தகுதியை இழந்து விட்டது என்று குறைத்துப் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட காலத்தில் திரு. எம். எஸ். பாலசுப்பிரமணியம் என்ற அரசு செயலாளருக்கு இதே சென்னை உயர்நீதிமன்றம். கோர்ட் உத்திரவை மீறியதற்காக 'கண்டெம்ட் ஆஃப் கோர்ட்' என்று தண்டனைவிதித்திருக்கிறது, கண்டனம் தெரிவித்திருக்கிறது. அன்று அந்த ஆட்சி கண்டனத்திற்கான காரணத்தால் ஆளுவதற்கு தகுதியில்லாமல் போய் விட்டது என்று எளிதாக நான் சொல்ல முடியும். நீதிமன்றம் தீர்ப்பை வழங்கிவிட்டது என்பதாலே நீதிமன்றத்தை அரசு மதிக்கத் தவறி விட்டது என்பது உள்ளபடியே பொருத்தமற்றதாகும். அப்படிப் பார்த்தால் முன்பிருந்த அரசு தகுதியற்ற அரசாகவே ஆண்டது என்று என்னால் சொல்ல முடியும்.





அதைப் போல நீதிபதிகள்பால் பரிவு காட்டிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களின் தலைவர், அவருடைய கட்சியின் தலைவர் அவர்கள், அன்னை இந்திரா காந்தி கொலை வழக்கில் தீர்ப்பு வந்தபோது, அந்த தீர்ப்பை அளித்த நீதிபதியை அவர் எப்படி விமர்சித்திருக்கிறார் என்பதற்கு பழைய 'முரசொலி' பத்திரிகையைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீதிபதியைப் பற்றி எவ்வளவு கொச்சைப் படுத்த முடியுமோ அந்த அளவிற்கு கொச்சைப்படுத்தி பல நேரங்களில் பேசிய, தலைவருக்கு பின்னால் உள்ள உறுப்பினர் எப்படி நீதிபதிக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று இன்றைக்கு சொல்லுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

நீதிமன்றம் என்பதும், நீதி பரிபாலனம் என்பதும் அரசுக்கு அப்பாற்பட்டது என்பதை உணர்ந்த புரட்சித் தலைவர், எல்லா நேரங்களிலும், நீதிபதிகளுக்கும், நீதிமன்றத்தில் மதிப்பு தந்திருக்கிறார் என்பதை நான் நினைவுகூற விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால் நீதிமன்றத்தில் பல்வேறு வளர்ச்சிகளுக்கும், நீதிமன்றங்களில் குறைபாடுகளை நீக்குவதற்கும் புரட்சித் தலைவர் அரசு உதவியிருக்கிறது என்பதை நினைவுகூற விரும்புகிறேன். தமிழ் நீதிமன்றங்களில் இருக்க வேண்டும், நீதிபதிகள் தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் கருத்து தெரிவித்த நேரத்தில் அதைப் பற்றி இங்கே பேசிய உறுப்பினர் ரகுமான்கான் அவர்களின் மதிப்பிற்குரிய தலைவரிடம் கேட்டபோது 'நோ கம்மெண்ட்ஸ்' 'No Comments' என்று சொன்னார். ஆக நானும் without Comments அதை அவருடைய தீர்ப்புக்கே விட்டு விடுகிறேன். தமிழ் தெரிந்தவர்கள் நீதிபதிகளாக இருக்க வேண்டுமென்ற கருத்துக்கு வேறு அபிப்பிராயம் சொல்லுவதற்கில்லை என்று ஒரு காலத்திலே சொன்னவர்கள் எங்களைப் பார்த்து தமிழை அவமதிக்கிறோம் என்பது உள்ளபடியே வேடிக்கையாக இருக்கிறது. முரண்பட்டக் கருத்துக்களை அந்தந்த நேரத்திற்கேற்ற கருத்துக்களை, தமிழ் மக்களுக்குச் சொல்லி, தாங்கள்தான் தமிழ்க் காவலர்கள் என்று சொல்லும் பிரச்சாரம் பொய்த்து விட்டப் பின்னர் புதிய தத்துவங்களை வைத்து வெற்றி பெறப்போவதில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அரசு இப்போது ஒதுக்கியுள்ள நிதியில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் சத்துணவு திட்டத்திற்கு வழங்கப்படுகிற அரிசிக்காக 50 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. உள்ளபடியே உலகம் போற்றுகின்ற உன்னதத் திட்டம் சத்துணவுத் திட்டம். பல இலட்சக்கணக்கான குழந்தைகள் சத்தான உணவை விநியோக முறை சிறப்பாக இருப்பதால், பெற்று வருகிறார்கள். விநியோக முறையில் அரசு மற்ற பொருள்களை உரிய காலத்திலே கிடைக்கக் கூடிய அளவிற்குக் கொடுத்தாலும் நகராட்சிப் பகுதிகளில் பல சத்துணவுக் கூடங்களுக்கு சரியான

கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. சில கூடங்கள் கூரைகளில்லாமல் இருக்கின்றன. கிராமப் பகுதிகளில் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. என்ற திட்டங்களின் கீழ் சத்துணவுக் கூடங்களை அமைத்து வருகிறோம். ஆனால் நகராட்சிப் பகுதிகளில் சத்துணவுக் கூடங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் இல்லை. போதிய கட்டடங்கள் இருக்கின்ற சத்துணவுக் கூடங்களிலும் பராமரிப்புக்கு எந்த வாய்ப்பும் இல்லை. அழிந்து விட்ட கூடங்களாக இருக்கின்றன. அதைச் செம்மைப்படுத்த இங்கே தனியாக முயற்சிகள் எடுக்க வேண்டும். குறிப்பாக நகராட்சி மன்றங்கள் பல மாற்றுக் கட்சியினரால் ஆளப்படுகிற காரணத்தால் புரட்சித் தலைவருடைய திட்டம் முதலமைச்சர் திட்டம் மக்கள் மத்தியிலே குறைக்கப்பட வேண்டும், அதன் மதிப்பு குறைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்திலே சில இடங்களில் பராமரிப்பு செய்யப்படாமல் இருக்கிறது. ஆகவே அரசு இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விநியோக முறைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் பல கூட்டுறவுச் சங்கங்கள் வேறு எந்த பணியும் ஆற்றாமல் ரேஷன் கடைகளை நடத்துவதற்கு மட்டும் பதிவு செய்து கொண்டிருக்கின்றன. இதனால் பல முறைகேடுகள் நடத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசு இதையெல்லாம் கவனத்திலே கொண்டு விநியோக முறையை ஏற்றுக் கொள்கிற கூட்டுறவுச் சங்கங்கள் ரேஷன் கடையை நடத்துகிற சங்கங்கள் ஆகியவற்றின் நிதி வசதி என்ன, தகுதி என்ன என்பதை ஆய்ந்து ரேஷன் வழங்குகிற பணிகளை ஒப்படைக்க வேண்டும்.

அப்படி இல்லையென்றால், அதனால் ஏற்படுகிற தவறுகளுக்கு அரசுக்குத்தான் அவப்பெயர் ஏற்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல குடிமைப் பொருள்களை, அத்தியாவசியப் பொருள்களை ரேஷன் கடைகள் மூலம் விநியோகம் செய்யும் போது, மலைவாழ் பகுதிகளைப் பொறுத்த வரையில் விதிகளை (ரிலாக்ஸ்) தளர்த்தி 500 அல்லது 1000 கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக் கடை இருக்க வேண்டுமென்பதை ரிலாக்ஸ் செய்து, கொடுக்க வேண்டும். அந்தந்த இடங்களில் உள்ள நிலைமை கருதி இதைச் செய்ய வேண்டும். 200, 250 குடும்பங்கள் 15 மைல் சுற்றளவில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ரேஷன் வாங்க முடியவில்லை என்பதால் அவர்கள் அல்லல்படுகிறார்கள். அவர்களின் துயரைத் தீர்க்க, கோவை மாவட்டத்திலுள்ள கோப்பநாரி பில்லூர், அத்திக்கடவு ஆகிய மலைப் பகுதிகளில் 250 குடும்பங்கள் இருந்தாலும், அவர்களுடைய பிரத்யேகமான நிலைமையைக் கருதி, நியாய விலைக் கடை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நியாய விலைக்



கடைகளை 250 குடும்பங்களுக்கு அமைக்கவில்லை என்றால், நடமாடும் நியாய விலைக் கடைகளை அமைத்து, அத்தியாவசிய பொருள்களை வழங்க வேண்டும். அவர்கள்தான் ரேஷன் வாங்கிச் சாப்பிட வேண்டியவர்கள். அவர்களுக்கு இந்த வசதிகளைச் செய்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்திலும், பல இடங்களிலும் ஆதி திராவிட நலத் துறை அமைச்சரவர்கள், ஆதி திராவிட மக்களுக்கு சப்சிடியில் அரிசி வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். கோவையில் உள்ள 25,000 ஆதிவாசி மக்களில் யாருமே மானியவிலை அரிசியை வாங்கியதில்லை. எதனால் அந்த பகுதி விடுபட்டிருக்கிறது என்பதை ஆய்ந்து அவர்களுக்கும் மானிய விலையில் ரேஷன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

இன்று நம்முடைய துணை மானியத்தில் மிக அதிக அளவுக்கு நிதியை வறட்சி நிவாரணத் திட்டங்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஒதுக்கி இருக்கிறது. இன்று வறட்சி நீங்கி, மழை பெய்தாலும், கோவை மாவட்டத்தில் ஒரு பகுதி-கிணற்றுப் பாசனத்தை நம்பியுள்ள பகுதியில் கிணறுகளில் போதிய அளவுக்கு நீர் வரவில்லை. எனவே விவசாயிகள் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று விவசாயிகளுக்காக வழங்கியுள்ள சலுகைகளை நிறுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இன்று மழை பெய்தாலும், தீவனம் தான் விளைந்திருக்கிறது, விளை பொருள்கள் காணவில்லை. அவர்களுக்குத் தொடர்ந்து கடன் உதவி வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. அவர்களுக்கான சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்றாலும், நடைமுறையில் கிராமங்களிலே உள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகள் கடன் பெற முடிய வில்லை. இன்றும் 80 சதவிகிதம் விவசாயிகள் கடன் வசதி பெற முடியாதவர்களாக இருந்து வருகிறார்கள். என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சென்ட்ரல் கோவாப்பரேட்டிவ் வங்கியின் தனி அதிகாரிகள் எல்லா சங்கங்களும் விவசாயிகளுக்கு நிபந்தனை இல்லாமல் கடன் வழங்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது என்று சொன்னாலும், கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள தனி அதிகாரிகள் பல காரணங்களைச் சொல்லி, விவசாயிகளுக்கு நன்மைகள் கிடைப்பதைத் தடுத்து வருகிறார்கள். அந்தக் கடன் வசதிகளை, இருக்கிற சலுகைகளைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தாத அதிகாரிகளைக் கண்டித்து, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் வழங்கும் திட்டங்கள், இதுவரை குடிநீர் ஆதாரம் இல்லாத கிராமங்களுக்கு லாரிகளில் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. மழை பெய்துள்ளதால், அது நிறுத்தப்பட்டிருக்கிறது. குடிநீர் ஆதாரம் இல்லாத அல்லது குறைவாக உள்ள

[திரு. மா. சின்னராசு] [1987 நவம்பர் 16

கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும். பல காலம் ஆய்வு செய்யப்பட்ட பின்பு, பணிகளை எடுத்துக் கொண்ட பிறகும், காலதாமதப்படுத்துவது குடிநீர் வடிகால் வாரியம்தான் என்பது இன்றைக்கு நாம் பார்க்கும் நிகழ்ச்சியாக இருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத் திட்டங்கள் தாமதப்படுத்துவதற்குக் காரணம், அங்கே, வாரியத்திலே நான்-அஃபிஷியல்ஸ் இல்லை. பொது மக்களுடைய பிரதிநிதிகள் அங்கே இல்லை. முழுக்க முழுக்க ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்ள அந்த வாரியத்தில் திட்டங்களை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லுவதற்கு அந்த வாரியத்தில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அந்த வகையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆளுங்கட்சியிலிருந்து ஒருவரையும், எதிர்க் கட்சியிலிருந்து ஒருவரையும் அந்த வாரியத்திலே பங்கேற்கும் வகையிலே நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–50)

அடுத்து கோவை மாவட்டத்திலே மிகப் பெரிய குடிநீர் திட்டம் அத்திக்கடவு திட்டம், அது இன்று வன இலாக்கா ஆட்சேபனை காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அத்திட்ட மே கூட கைவிடப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. வேறு வழியே இல்லாமல் அந்தத் திட்டத்தை நம்பி 430 கிராம மக்கள் இருக் கிறார்கள். ஆக 10 ஏக்கர் அல்லது 12 ஏக்கர் வனநிலத்தை அளித்து அவர்களுக்கு நீர் வழங்குவது மிக அவசியத் தேவை. இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்தால் நிச்சயமாக 430 கிராமங்களுக்கு வேறு வழியே கிடையாது. அந்த அளவுக்கு வேறு வாய்ப்பு இல்லாத கிராமங்களுக்கு நீர் வழங்கும் திட்டத்தை, வன இலாகா ஆட்சே பனை என்று சொல்லி நிறுத்தி விடுவதை அரசாங்கம் கவனித்துப் பார்க்கவேண்டும். அது நின்றுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இது உலக வங்கி திட்டமாக இருக்கிறது. கூடிய விரைவிலே அதற்கான அந்தத் தடையை நீக்கி அதற்குரிய அனு மதியை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே வறட்சிக்காக மேட்டுப்பாளையம் நகரத்திற்கு 7.5 லட்சம் ரூபாய் நம்முடைய அரசு மானியமாக குடிநீர் மேம் பாட்டுக்காக வழங்கியது. அந்த திட்டம் கொடுக்கப்பட்டு 6, 7 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் நிதிஒதுக்கம் தற்போது செய்யப் பட்ட காரணத்தினால், அந்த ரூ. 7.5 லட்சம் வைத்துக்கொண்டு அந்தக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற முடிய வில்லை. இந்தத் திட்டத்திற்கு இன்றைக்கு ரூ. 15 லட்சம் அள வுக்கு தேவையாகிறது. ரூ. 7.5 லட்சம் ஒதுக்கியிருந்தும்கூட இந்தத் திட்டத்திற்கு 5 ஆண்டுகளுக்குப் பின்னால் கணக்கிட்டு சொல்லப்படுகின்ற தொகை ரூ. 15 லட்சம். இந்த செலவை



136539
600 008.

1987 நவம்பர் 16] [திரு. மா. சின்னராசு]

ஏற்றுக்கொள்ளமுடியாத அளவுக்கு நகராட்சி இருக் என்பதை ணத்தினால் அளிக்கப்பட்ட அந்த ரூ. 7.5 லட்சம் என்பதை ரூ. 15 லட்சமாக உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்று மழை பெய்துவிட்டது என்றாலும்கூட ஒரு வாரகாலத்திலே மழை பெய்து நீர் வெள்ளமாகக் கோவை மாவட்டத்திலே ஓடி வீணாகிறது. வறட்சியிலே பாதிக்கப்படு கிறோம். அது மட்டுமல்ல; ஒரு வாரம், 10 நாட்கள் திடீரென்று பெய்கின்ற மழையினால் பாதிப்புகள் ஏற்பட்டு அந்த நீர் வீணாகிறது. அந்த இரண்டையும் தடுப்பதற்கு இருக்கின்ற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், அதிலே பி.சி. ரேஷியோ சரி வரவில்லை என்று எடுக்கப்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. ஆக பி.சி. ரேஷியோ இல்லை என்றாலும் கூட பெனிபிட் ரேஷியோ இல்லை என்றாலும்கூட, இன்று கோவையிலே இருந்துகொண்டி ருக்கின்ற, ஜம்மகுண்டி பள்ள திட்டம், பெரியபள்ள திட்டம் போன்ற திட்டங்களை நிறைவேற்றியிருந்தால், நிச்சயமாக வீணாகிற நீரை நாம் தடுத்திருக்கமுடியும். மழை இல்லை என்றாலும்கூட அந்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால் நூற்றுக்கணக்கான கிராமங்கள் அங்கே பாதிப்பில் இருந்து தப்பித்திருக்கமுடியும். அதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். சிறிய அணைகள் கட்டிய இடங்களிலே அதன் பயனைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். வறட்சி தொடர்ந்து பாதிக்கின்ற இந்த பகுதிகளிலும், குறிப்பாக கோவை மாவட்டத்தில் வேறு நீர் ஆதாரம் இல்லாத காரணத்தினால், அங்கே பாசனத் திட்டங்களுக்கு இருக்கின்ற பி.சி. ரேஷியோ கணக்கை தளர்த்தி அதை நீண்டகால வறட்சியை நீக்குகிற பணியாக சிறப்பான திட்டமாக எடுத்துக்கொண்டு அங்கே இருக்கின்ற சிறிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசு சிறப்பான சலுகையை அந்த மாவட்டத்திற்கு, என்னுடைய மாவட்டத்திற்கு வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் பணி வோடு கேட்டு அமைகிறேன்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய அவையின் முன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக் கக்கூடிய ரூ. 252.42 கோடிக்கான துணை மானியக் கோரிக்கை யின் மீது நான் சார்ந்திருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். குறிப்பாக இந்த ஆண்டு நமக்கு முன்னாலே வந்திருக்கக்கூடிய இரண்டு முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று வரலாறு காணாத வறட்சி. அதையொட்டி ஏற்படக்கூடிய நிலைமைகள். இன் னொன்று தொடர்ந்து ஏறிக்கொண்டிருக்கக்கூடிய விலைவாசி உயர்வு. அதனால் மக்களுக்கு அன்றாடம் ஏற்பட்டுக்கொண் டிருக்கக்கூடிய துன்பங்களும் துயரங்களும் தினசரி அதிகரித்துக்

கொண்டே இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அந்த இரண்டையும் சமாளிப்பதற்கு, சந்திப்பதற்கு, அதனால் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு நிவாரண உதவி செய்வதற்கு நம்முடைய அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது. என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும், அதில் இருக்கக்கூடிய குறைபாடுகளையும் அரசின் அலட்சியப் போக்கையும் அரசினுடைய பொறுப்பற்ற நடவடிக்கையையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். அதைச் சமாளிப்பதற்கு அரசு என்னென்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே ரூ. 150 கோடி நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கி, இந்த விலைவாசி உயர்வை ஓரளவுக்குச்சரி கட்டவும், மலிவு விலையிலே மக்களுக்குப் பொருள்கள் கிடைக்கக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்து, அந்த வகையிலே வருகின்ற நஷ்டத்தை அரசு ஏற்றுக்கொள்வது என்ற அளவிலே இந்த ரூ. 150 கோடி நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

குறிப்பாக இந்த நாடு முழுவதுக்கும் வரக்கூடிய ஆய்வு அறிக்கையைநாம் பார்ப்போமானால், பல்வேறு தகவல்கள் இன்றைக்கு விலைவாசி உயர்வு என்பது, இந்திய நாட்டிலே தமிழகத்தில்தான் மற்றைய மாநிலங்களை விட உயர்ந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதுபோலவே, பண மதிப்பு குறைவு என்பது மற்ற மாநிலங்களை விட தமிழகத்திலேதான் இருக்கிறது. தமிழகத்திலேதான் பண மதிப்பு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது மற்ற மாநிலங்களை விட என்று சொல்கின்றார்கள். பல்வேறு ஆய்வு அறிக்கைகள் சொல்கின்றன.

இன்றைக்கு மக்கள் வாங்கக் கூடிய ஒவ்வொரு பொருளின் விலையும் உயர்ந்துகொண்டேயிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும், குறைந்தவிலையில் மக்களுக்கு உணவுப் பண்டங்கள் கிடைக்கவும் அரசு போதிய கவனம் செலுத்தவில்லை, அதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. அதுமாத்திரமல்ல, கவனம் செலுத்தாத போக்கு நீடிக்கிறது. இந்த நிலைமை மேலும் மேலும் விலைவாசிகள் உயர்ந்துகொண்டு போக அரசே உதவி செய்யக்கூடிய வகையில் அரசின் நடவடிக்கைகளும், கொள்கைகளும் அமைந்திருக்கின்றன.

குறிப்பாக, சிவில் சப்ளைஸ் துறையிலிருந்து அமுதம் அங்காடிகளை கூட்டுறவுத் துறைக்கு மாற்றியிருக்கிறார்கள். மொத்த வியாபாரத்தைச் செய்வது சிவில் சப்ளைஸ் துறையாம். சில்லரை வியாபாரத்தைச் செய்வது கூட்டுறவுத் துறையாம். அக்டோபர் 1 ஆம் தேதியிலிருந்து சிவில் சப்ளைஸ் கடைகளை கூட்டுறவுத்



துறைக்கு மாற்றியிருக்கிறோம் என்று அரசு அறிவித்ததன் காரண
மாக கிராமப்புற மக்களுக்கு மிகப் பெரிய சிக்கல்கள் ஏற்பட்டிருக்
குக்கின்றன, அமுதம் அங்காடிகள் என்பன ஒவ்வொரு ரெவின்யூ
கிராமத்திற்கும் ஒரு யூனிட் என்கிற வகையில், எத்தனை கார்டு
கள் இருந்தாலும் எத்தனை குடும்பங்கள் இருந்தாலும்
அதற்கு ஒரு கடை என்கிற வகையில் இயங்கி வந்தன. ஆனால்
இன்றைக்கு கூட்டுறவுத் துறைக்கு மாற்றியிருப்பதன் காரணமாக
ஒவ்வொரு ரெவின்யூ கிராமமும் ஒரு யூனிட் என்கிற முறை
மாற்றப்பட்டு ஆயிரம் கார்டுகள் கொண்டது ஒரு யூனிட் என்று
சொல்லி அப்படிப்பட்ட இடங்களுக்கு ஒரு கடை என்று நிர்ண
யித்து அவற்றை அமைப்பதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்
டிருக்கிறது.

முன்பு கிராமத்திலேயே குறிப்பிட்ட இடத்திற்குப் போய்
பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய், அரிசி
போன்ற அத்தியாவசியமான பொருள்களை மலிவு விலையில்
வாங்கும் நிலைமை இருந்தது. அது விலைவாசியால் பொது
மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்கிற வகையில் உதவி செய்வதாக
அமைந்தது. ஆனால் இன்றைக்கு சிவில் சப்ளைஸ் துறையிலிருந்து
கூட்டுறவுத் துறைக்கு மாற்றுவதன் மூலம் சில விளைவுகள் ஏற்
பட்டிருக்கின்றன. முன்பு உணவுப்பொருள்களின் மொத்த கொள்
முதலையும் சிவில் சப்ளைஸ் துறையே மேற்கொண்டதுடன
விநியோகத்தையும் அமுதம் அங்காடிகள் மூலம் மேற்கொண்டது.
ஆனால் இப்போது கூட்டுறவுத் துறை உணவுப் பொருள்களை
விநியோகம் செய்யும் நிலையில் கோடிக்கணக்கில் ரூபாய் வைத்
திருந்தால்தான் அவர்கள் உணவுப் பொருட்களை வாங்கி வைத்து
விநியோகிக்க முடியும். ஆனால் நிதி ஆதாரத்திற்கு வழிவகை
செய்யாமல் ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு கடை என்று மாற்ற
ஏற்பாடு செய்வதானது மலிவுவிலையில் பொதுமக்களுக்குக்
கிடைக்கின்ற கொஞ்ச நஞ்ச உணவுப் பொருட்களும் கிடைக்காமல்
போவதற்கான வாய்ப்பிருப்பதோடு மாத்திரமல்லாமல் விலை
வாசி உயர்வால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கு
மேலும் உதவி செய்வதாக இது அமையாது என்கிற காரணத்
தால் இதுகுறித்து அரசு சரியாக பரிசீலிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் இருக்கிற மிகப் பெரிய பிரச்சினை
வறட்சி, இந்த வறட்சியின் காரணமாகத் தமிழகத்தில் ஒட்டு
மொத்தமாகப் பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு பல வகையிலும்
இழப்பு ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்
கொண்டால் அதிகாரிகள் 10.50 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்ய
முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். முன்பெல்லாம் 18
லட்சம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்ய முடியும் என்று இருந்த
நிலை மாறி இன்றையதினம் 5 1/2 லட்சம் ஏக்கர் இருபோக
சாகுபடியும் 7 லட்சம் ஏக்கர் ஒரு போக சாகுபடியும் செய்ய
முடியும் என்கிற நிலைக்கு வந்திருக்கிறோம். ஆக, தண்ணீர்

திறந்து விட்டு, பல முறைகளில் முயற்சிசெய்தாலும்கூட இன்றைய தினம் 11 லட்சம் ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்ய முடியாது என்கிற நிலைமையில், சுமார் 7 லட்சம் ஏக்கர் நிலங்களில் சாகுபடி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி என்றால் ஏறத்தாழ 40 சதவீகித சாகுபடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் 500 கோடி ரூபாய் வேண்டுமென்று மத்திய அரசிடமிருந்து உதவி கேட்டதாகவும், அறிக்கை அனுப்பப்பட்டதாகவும் செய்தி எல்லாம் வந்தது. அதற்கு மத்திய அரசு எவ்வளவு உதவி செய்திருக்கிறது என்பது குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கும்போது குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த வறட்சியின்போது, வறட்சியைச் சமாளிக்க அரசு எடுத்த முயற்சி சரியான முறையிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையிலும் அமையவில்லை. மத்திய அரசிடம் 500 கோடி ரூபாய் வறட்சிக்காகக் கேட்டிருக்கும் இந்த அரசு இங்கே தமிழகத்தில் வறட்சியைப் போக்க மொத்தமாக 52.66 கோடி ரூபாய்தான் செலவு செய்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1—00)

அதிலும் குறிப்பாக வேலைவாய்ப்புக்கு சுமார் 16 கோடி ரூபாய் தான் செலவிடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் இன்னொன்றையும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதை இந்த அவையும் தமிழ்நாடும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். இந்த வறட்சியைச் சுற்றிப்பார்த்து, நிவாரண நடவடிக்கைகளைப் பார்வையிட வந்திருந்த இந்திய நாட்டின் பிரதமர் தமிழ்நாட்டில் வறட்சியால் வேலைவாய்ப்பு இல்லாமல் 36 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் ; இந்த மாநில அரசு 6 இலட்சம் பேர்களுக்குத்தான் வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க முன்வந்திருக்கிறது ; 30 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்த மாநில அரசால் வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு உண்மை ?

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க 16 கோடி ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது. என்று சொன்னால் வறட்சியால் பாதிக்கப்பட்டு, விவசாயம் அழிந்திருக்கக்கூடிய காலத்தில் விவசாயத் தொழிலாளர்களைப் பாதுகாக்க அரசு எடுத்த முயற்சி சமாளிக்கக் கூடியதாக இல்லை. அதனால் அவர்கள் பட்டினிச் சாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.



குறிப்பாக கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரணத்திற்காகக் கோரப்பட்டிருந்த தொகை 10 கோடி ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அரசு கொடுத்தது 5.5 கோடி ரூபாய்தான். அதனால் குறைந்தபட்சத் தேவையைக் கூட நிறைவேற்ற முடியவில்லை.

அதைப்போன்று தஞ்சை மாவட்டத்தில் 2, 3 மாதங்களுக்கு முன்னாலே 10 கோடி ரூபாய்க்குமேல் கோரியும் உரிய காலத்திலே அதைக் கொடுக்கவில்லை. சித்திரை மாதத்தில் வறட்சி வந்தது. வறட்சி, வறட்சி, என்று எல்லோரும் கூப்பாடு போட்டார்கள். சித்திரை மாதத்திலே வறட்சி என்று கூப்பாடு போட்டாலும் ஐப்பசி மாதம்தான் பணம் அனுப்புகிறார்கள். எனது தொகுதியில் நாகை நகரில் வறட்சி நிவாரணப் பணியின்கீழ் குளத்தை தூர் எடுத்து விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க 28—10—1987-ல் 2.5 இலட்சம் ரூபாய் 'அலாட்மென்ட்' வருகிறது. 28-ந் தேதி உத்தரவு வந்து, 29-ந் தேதி பணம் வருகிறது. 31-ந் தேதி அந்தப் பணியை முடித்துவிட்டு தகவல் அனுப்பவேண்டுமென்று சொல்லி உத்தரவு வருகிறது. அக்டோபர் மாதம் 29-ந் தேதிதான் பணம் வருகிறது ; அதே அக்டோபர் மாதம் 31-ந் தேதிக்குள் 2.5 இலட்சம் ரூபாயை செலவழித்துவிட்டு தகவல் அனுப்ப வேண்டுமென்றால் எப்படி முடியும் ? எப்படி பணத்தைச் செலவிடுவது, எப்படி வேலையைப் பூர்த்தி செய்வது, எப்படி வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுப்பது ?

அதுமட்டுமல்ல. கடுமையான வறட்சியால் விவசாயம் நடைபெறவில்லை ; மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நிலவரியை முழுமையாக வசூல் செய்ய கடும் நடவடிக்கை எடுக்கிறார்கள். எல்லாம் வசூலித்து முடித்துவிட்ட பிறகு ஒருசில கிராமங்களுக்கு வரி வஜா செய்கிறோம் என்று அறிவித்தார்கள். வரியை முழுமையாக வசூல் செய்து விட்டு, வறட்சியால் பாதிக்கப்பட்டு சங்கடங்களுக்கு உள்ளான விவசாயிகளிடமிருந்து வரியை வசூலித்துவிட்டு, அறிவிக்கப்பட்ட கிராமங்களில் உள்ளவர்களுக்கு வசூலித்த வரியை அடுத்த ஆண்டு வரவேண்டிய வரிக்கு வரவு வைத்துக்கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். இது என்ன ஜனநாயக முறை ? இதுதான் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கும் உதவியா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் கூட்டுறவுத் துறையில் கடன் வாங்குவதில் மிகப் பெரும் நிபந்தனையை விதித்திருக்கிறார்கள். முழுமையாகக் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கு கடன் பெற 'எலிஜிபிலிட்டி' இல்லை என்று சொல்கிறார்கள். இரண்டு பேர் ஜாமீன் போட்டு கடன் வாங்கிவிட்டு, ஒருவர் கடனைப் பூராவும்

[திரு. கோ. வீரய்யன்] [1987 நவம்பர் 16

கட்டிய பின்னாலும் ஜாமீன்தாரராக இருந்த இன்னொருவர் கடனைக் கட்ட முடியாமல் இருந்தால் கடனை முழுமையாகக் கட்டியவரும் கடன் பெற முடியாது என்று சொல்கிறார்கள். ஜாமீன் போட்டவரும் கடனைக் கட்டினால்தான் மீண்டும் கடன் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஜாமீன் நின்றவர் கடனைக் கட்டாவிட்டாலும் கடனைக் கட்டியவருக்கு மீண்டும் கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல். டி. பாங்கில் கடன் பெற்றவர்கள் கடனைத் திருப்பிக் கட்டியபின்னாலும் அவர்களுடைய பத்திரங்களைத் திருப்பித் தர மறுக்கிறார்கள். கடன் பெற்றவர்கள் பணத்தைக் கட்டி விட்டாலும் அரசு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்த வில்லை ; அதனால் பத்திரத்தைத் தர முடியாது ; அரசி லிருந்து வரவேண்டிய பணம் வந்து, கணக்கு நேர் செய்யப்பட்ட பின்னால்தான் பத்திரத்தைக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) வேட்டி, புடவை வழங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். பல கிராமங்களில் வழங்கப்படவில்லை. அது மட்டுமல்ல. மழை வந்துவிட்டது என்று சொல்லி வறட்சிப் பணிகளை நிறுத்திவிடாமல் தொடர்ந்து செய்ய வேண்டும். (அடுத்த உறுப்பினர் அழைக்கப் பெற்றார்).

திரு. எ. எஸ்] ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1987–88ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீட்டின்மீது ஜனதா கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் மே 11-ந் தேதி முடிந்தது. அதன் பிறகு, ஆறு மாதங்களுக்குள் சட்டமன்றத் தைக் கூட்டாவிட்டால் சட்டமன்றத்தின் ஆயுள் காலம் முடிந்துவிடும் என்பதால், சரியாக ஆறு மாதங்களுக்கு ஒரு நாள் முன்னதாக, நவம்பர் 9-ந் தேதி இந்தச் சட்டமன்றம் கூட்டப்பட்டிருக்கிறது.

ஏதோ கடமைக்காக இந்தச் சட்டமன்றம் கூட்டப்பட்டு இருக்கிறதே தவிர, பொதுமக்களுடைய பிரச்சினையை மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வாதிக்கின்ற வகையில் கூட்டப்பட்டதாகத் தெரியவில்லை. அவசரம், அவசரமாகக் கூடிக் கலைவது போல் இருக்கிறது. வினா-விடைகளுக்கு துணை வினா கேட்க நேரம் இல்லை. அதேபோல சட்ட முன்வடிவுகளின் மீதும் வாதிப்பதற்கு நேரம் இல்லை. தமிழக மக்கள் பெரிதும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரே பிரச்சினையான இலங்கைப் பிரச்சினை மீது பேசுவதற்கு நேரம் ஒதுக்கவில்லை.



1987 நவம்பர் 16]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதையெல்லாம் பேரவைத் தலைவர் அவர்களின் அறையில் பேசியிருக்க வேண்டும். பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே பேச வேண்டும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, நான் பேசுவது பேரவைத் தலைவரைப் பற்றியல்ல. நான் சொல்வது அரசாங்கத்தைப் பற்றி.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. குப்புசாமி : அவையின் நேரத்தை எல்லாம் நிர்ணயிப்பது அரசாங்கத்தி னுடைய வேலையல்ல. பேரவைத் தலைவருடைய வேலை.

திரு. எ. எஸ். ஏ, ஆறுமுகம் : 17—9—1987 அன்று வன்னியர் சங்கத்தினுடைய சாலை மறியல் போராட்டம் நடைபெற்று......

மாண்புமிகு மாறறுத் தலைவர் (திரு. கே. குப்புசாமி) : நீங்கள் பேச வேண்டிய சப்ஜெக்ட்டுக்கும், வன்னியர் பிரச் சினைக்கும் சம்பந்தம் இல்லை. எனவே அது குறித்து வரும்போது அதுபற்றிப் பேசுங்கள் ; இதிலே எல்லாம் அனுமதிக்க முடியாது. அதற்குரிய ரெகுலர் சப்ஜெக்ட் வரும் போது பேசுங்கள். காவல் துறை மானியத்திலே பேசுங்கள்.

திரு. எ, எஸ். ஏ. ஆறுமுகம் : * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் ]திரு. கே. குப்புசாமி) : அதெல்லாம் வேண்டாம். அவைக்குறிப்பிலே இருந்து அவை நீக்கப்படுகின்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : அவற்றை எல்லாம் என்ன காரணத்தால் எடுக்கிறீர்கள் என்பதே தெரியவில்லை. நாட்டு மக்கள் பிரச்சினையைப் பேச விடமாட்டேன் என்கிறீர்களே.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.கே குப்புசாமி) : பிரச்சினையை அந்தந்தப் பொருள் பற்றி வரும்போது பேசலாம். இங்கே இருக்கின்ற நேரம் ரொம்பக் குறைவு. எனவே துணை மானியக் கோரிக்கையிலே உள்ள பொருட்கள் பற்றி மட்டும் பேசுங்கள். * * * * * அதையெல்லாம் அவைக் குறிப் பிலே இருந்து நீக்குகிறேன்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தமிழகம் முழுவதும் சொத்து வரி, வீட்டு வரி முதலியவற்றை உள்ளாட்சி மன்றங்கள் மிகக் கடுமையாக உயர்த்தியிருக்கின்றன. அது ஓரளவுக்கு முடிந்திருக்கிறது. அதுபோக ஏழை எளிய மக்களைப் பாதிக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. துணை மதிப்பீட்டில் ரூ. 252 கோடி ஒதுக்கி அறிக்கை தந்திருக்கிறீர்கள். இதிலே உருப்படியான காரியம் என்னவென்றால் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 23,000 பேர்களுக்கு ஓய்வூதியங்கள் கொடுக்கிறீர்கள் அல்லவா ? அது ஒன்றுதான் உருப்படியான காரியம். மற்றவை எல்லாம் அரசினுடைய அன்றாட நிர்வாகம் சம்பந்தப்பட்டவைதான். எனவே இதிலே புதிதாக ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வறட்சி நிவாரணப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட 51 கோடியே 66 இலட்சம் ரூபாயிலே குடிநீருக்கு மட்டும் ஏறத்தாழ 30 கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறீர்கள். வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக ஏறத்தாழ 14 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. இந்தச் செலவில் முக்கியமானது ஊருணிகளை ஆழப்படுத்துவது, கிராமச் சாலைகளைப் போடுவது போன்ற பணிகள் எல்லாம் நடைபெற்று இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதையெல்லாம் பார்க்கும் போது பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கண்மாயை ஆழப்படுத்துவதற்காக மழை வரும் காலத்தில் டெண்டர் விடப்பட்டு அரைகுறையாக வேலை நடந்துகொண்டிருக்கும்போது கண்மாய் நிரம்பிவிட்ட காரணத்தால் வேலைகள் நடக்காமல் போய் அதன் காரணத்தால் அரசின் பணம் வீணாகி இருக்கிறது. நகரங்களில் மட்டும்தான் முறையாக லாரிகள் மூலம் குடிதண்ணீர் சப்ளை செய்யப்பட்டு இருக்கிறது. கிராமங்களில் அந்த மாதிரியான ஏற்பாடுகள் முறையாக நடக்கவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானையில் திருவெற்றியூர் என்ற ஊர் இருக்கிறது. அங்கே பாகம் பிரியாள் கோயில் இருக்கிறது. அங்கே குடிதண்ணீர் குடம் மூன்று ரூபாய்க்கு விற்றது. அதனால் அங்கே போயிருந்த பக்தர்கள் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

(பிற்பகல் 1–10)

அதேபோல தஞ்சை மாவட்டம் திருக்குவளை பக்கத்திலே எட்டுக்குடி முருகன் கோயில் என்று கோயில் ஒன்று இருக்கிறது. குடிப்பதற்குத் தண்ணீர் அந்த ஊரிலேயே கிடையாது. வெளியிலே இருந்துதான் கொண்டு வரவேண்டும். அந்த





எட்டுக்குடி முருகன் கோயிலிலே தினசரி 50 முதல் 100 திருமணங்கள் நடைபெறுகின்றன. அந்த ஊருக்குக் குடிதண்ணீர் தருவதற்குப் பல்வேறு திட்டங்கள் பல ஆண்டுகளாகப் போடப்படுகிறது. ஆனாலும் இன்னும் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசு அதிலே எல்லாம் மெத்தனமாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இராமேஸ்வரம் பெரிய யாத்திரை ஸ்தலம். அங்கே எந்தவித சுகாதார வசதியும் கிடையாது. அங்கே இருக்கிற மக்கள் அது டவுன்ஷிப்பாக இருக்கிற காரணத்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் சரியாக எதுவும் செய்யவில்லை, எனவே அதை நகர மன்றமாக ஆக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே அதை நகர மன்றமாக ஆக்க வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல காமராசர் மாவட்டத்திலே, மழை அதிகமாகப் பெய்த காரணத்தாலே, பொதுப்பணித்துறை கண்மாய்களும், ஊராட்சி ஒன்றியத் துறை கண்மாய்களும், தண்ணீரை தாக்குப் பிடிக்க முடியாமல், பல கண்மாய்கள் உடைந்து போய் விட்டன. அந்தக் கண்மாய்களை எல்லாம் ஆழப்படுத்த வேண்டும் என்றும், கரைகளை அகலப்படுத்த வேண்டும் என்றும் மடைகளை மராமத்து செய்ய வேண்டும் என்றும் சென்ற 2 ஆண்டுகளாகச் சட்டமன்றத்திலே மட்டுமல்ல, அதற்கென இருக்கும்படியான கமிட்டியிலே எல்லாம் பேசியிருக்கிறேன்.

அதேபோல நீர்ப்பாசன மாநாட்டில் கூடப் பேசியிருக்கிறேன். ஆனாலும் இந்த அரசு சரியான முறையில் செய்யாத காரணத்தால், வந்த தண்ணீரையும் இழந்து, அந்தப் பகுதி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். பல கண்மாய்கள் விவசாயத்திற்குத் தண்ணீர் கூட இல்லாமல் வறண்டு கிடக்கின்றன.

அதேபோல நான் இன்னொன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சாலைகள் போட, பாலங்கள் கட்ட, மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் செய்ய மற்றும் அத்தியாவசியத் தேவையான எதைச் செய்ய நாங்கள் கோரிக்கை வைத்தாலும், நிதி ஆதாரத்தைப் பார்த்துச் செய்கிறோம். நிதி ஆதாரத்தை பார்த்துச் செய்கிறோம் என்று அமைச்சர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நிதி ஆதாரத்தை எப்போது பார்ப்பது, எப்போது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவது என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே நிதி ஆதாரத்தைப் பார்க்கிறோம் என்ற காரணங்களை இனிமேலும் அமைச்சர்கள் சொல்லிக் கொண்டிருக்காமல், அத்தியாவசியத் தேவைகளை உடனுக்குடன் செய்து கொடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்க வேண்டும். தன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இந்தச் சட்டமன்றம் மொத்தம் 8 நாட்கள் கூட இருக்கிறது. ஏன் 3 மாதத்திற்கு முன்பாகவே கூட்டி, பத்து நாள் அதிகமாகக் கூட்டினால் என்ன இந்த அரசுக்கு நஷ்டம் வந்துவிடும்? பல சட்டங்களை நீங்கள் போட்டு விட்டு, ஒரு மணி நேரம் கூட விவாதிக்க நேரம் கொடுக்காமல் நிறை வேற்றுகிறீர்களே, இது சரியா? அரசின் சட்டம் என்றுதான் போட்டு விட்டீர்கள். அதன் பிறகு மக்களுடைய பிரதிநிதி களுக்கு விவாதிப்பதற்காவது நேரம் கொடுத்தால் என்ன? 1 லட்சம் 1 1½ லட்சம் மக்கள் ஓட்டு போட்டு தேர்தலிலே ஜெயித்து வந்து, மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிற நாங்கள் எல்லாம் சட்டமன்றத்திற்கு வந்து, இதைக்கூட விவாதிக்க முடியாமல் திரும்ப ஊருக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது.... ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களைப் பொறுத்த மட்டிலே, நீங்கள் பேசுகையில் பெல் அடிக்காமல், நீங்கள் பேசி முடித்த பிறகுதான் அடுத்த உறுப்பினர்களை கூப் பிட்டு இருக்கிறேன். ரிக்கார்டிலே இருக்கிறது பாருங்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: அடுத்து சிதம்பரனார் மாவட் டம். அங்கே கடம்பா குளம் கண்மாய் இருக்கிறது. அந்த சண்மாய் பெருகித்தான் அடுத்து உள்ள 12 கண்மாய்களைப் பெருக்க வேண்டியிருக்கிறது. அங்குள்ள கண்மாய்கள் நத்தம் குளம், ஆவுடையார் குளம் போன்ற 12 கண்மாய்கள், 8 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுவதற்காக பெருக வேண்டி இருக்கிறது. அந்தக் கண்மாய் பெருகுவதற்கு ஸ்ரீவைகுண்டம் அணையிலே இருந்து தனிக் கால்வாய் அமைத்து, பாசன வசதி செய்து தர வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கோவை மாவட்டம், பல்லடம் தாலுக்கா மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கே மேட்டுப் பாளையம் பவானி ஆறு திட்டம் உலக வங்கி உதவியுடன் 50 கோடி ரூபாய் செலவிலே நடைபெற இருக்கிறது. அதனால் 20 பேரூராட்சிகள் நன்மை பெறும். அந்த வேலைகள் எல்லாம் 4 வருடம் ஆகியும் கூட துரிதமாக நடைபெறவில்லை. அந்த வேலைகளைத் துரிதமாகச் செய்து, அந்தத் திட்டத்தை நிறை வேற்றிக் கொடுத்தால், கோவை மாவட்டத்தில் பல்லடம் தாலுக்கா சுபிட்சம் உள்ளதாக—பாலைவனப் பிரதேசமாக இப் போது உள்ளது—சுபிட்சமாக ஆகிவிடும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல் பெரியார் நீர்த் தேக்கம். அங்கே கொள் அளவு உத்தரவாதம் 152 அடி. ஆனால் இப்போது தேக்கம் உள்ளது 136 அடி. பல ஆண்டுக்காலமாக நமக்கு அனுமதி இருந்தும்கூட கட்டப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன? கான்டிராக்டுகள் முடிவுறவில்லை. கான்டிராக்டுகள் முடிவுற



ஏன் தாமதம்? இதையெல்லாம் இந்த அரசு பரிசீலித்து உடனடி யாக பெரியார் நீர்த் தேக்கத்தை 152 அடி கொள் அளவுக்குக் கட்டி பாசன வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியைப் பற்றிச் சொன்னார்கள். இதிலே சர்ச்சை தேவையா? சட்ட அமைச் சரும், தலைமை நீதிபதியும் சர்ச்சை செய்வது தேவையா என்று கேட்க விரும்புகிறேன். ஜாதியைப் பற்றிப் பேசுகிறார்கள். இது தேவையில்லையென்பது எங்களுடைய கருத்து. அதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆட்சித் தலைவர் திரு. பாண்டியன் அவர்கள் எங்களுடைய கட்சியைச் சார்ந்த குன்றத்தூர் வட்டாரத் தலைவர் பக்தவத்சலுவை சாலையில் வைத்து தாக்கியிருக்கிறார் காரணம் என்னவென்றால் அவருடைய நிர்வாகக் கோளாறுகளுக்காக உண்ணாவிரதம் இருக்கச் சென்றார்களாம். வேனில் சென்றவரை நிறுத்தி வைத்து சாலை யில் தாக்கியிருக்கிறார்கள். மருத்துவ சான்றிதழ் கொடுக்கப் பட்டிருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக் கிறது. இதனைத் தக்க முறையில் விசாரித்து அரசாங்கம் அவருக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, நாடக சக்கரவர்த்தி விஸ்வநாத தாஸ் அவர்கள் 29 முறை ஆங்கிலேயரால் சிறை பிடித்துச் செல்லப்பட்டவர். பல்லாண்டு காலம் சிறைத் தண்டனைப் பெற்றவர். அவர் 1940 ஆம் ஆண்டு இந்த சென்னை மாநகரத்தில் டிசம்பர் 31 ஆம் தேதி நாடக மேடையில் சுதந்திரத்தைப் பற்றி பாட்டு பாடி இறந்து போனார். அவருடைய வீடு திருமங்கலத்தில் ஏலம் போயிருக்கிறது. அந்த வீட்டை இந்த அரசாங்கம் எடுத்து அதை நினைவுச் சின்னமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

அடுத்து தமிழ்நாடு மலைக்குறவர் சங்கம், தங்கள் இனத்தைச் சார்ந்த 2½ லட்சம் பேர்கள் இருப்பதாகவும், அவர்கள் பல்வேறு பெயர்களில் இருந்தாலும் அவர்களை மலை ஜாதி யினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். மலைக் குறவர் பிரிவைச் சார்ந்தவர்களை எஸ்.டி. பிரிவிலே, மலைவாழ் மக்கள் பிரிவிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ப. உத்திராபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 1987-88 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1987 நவம்பர்

இன்றைக்குத் தமிழகத்தில் ஒரு வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தக் காலக் கட்டத்தில் நமது சட்டமன்றம் கூடியிருக்கிறபோது ஒரு வெள்ளை அறிக்கை வைத்து விவாதம் நடத்தியிருந்தால் தமிழகத்தினுடைய முழுமையான வறட்சி பற்றித் தெரிந்திருக்க முடியும். அதைச் செய்யவில்லையென்பதைக் குறையாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய முதல் வேண்டுகோளாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழகத்தில் 23 பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. இந்த 23 பஞ்சாலைகளில் வேலை செய்யக்கூடிய 15 ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைக்குப் பட்டினியால் தெருத் தெருவாக குழந்தை குட்டிகளோடு அலைந்து கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு பஞ்சாலைகளை எடுக்க முடியாது என்று அறிவித்திருந்தாலும் கூட, தமிழக அரசு எத்தனையோ அவசர சட்டங்களைப் போடக்கூடிய அரசு, இதற்கு ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டு அந்தப் பஞ்சாலைகளை எடுத்து, இதனால் வேலை இழந்திருக்கிற 15 ஆயிரம் தொழிலாளர்கள் குடும்பத்திற்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 252 கோடியே 42 லட்சம் ரூபாய் இதில் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி வாங்கியிருப்பதைப் பற்றி எந்தவிதமான ஆட்சேபணையும் இடையாது. தமிழகத்தில் 17 மாவட்டங்களில் கடுமையான வறட்சி இருப்பதாக தமிழக அரசில் அறிவித்தார்கள். அமைச்சர்களும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று நேரடியாகப் பல்வேறு வாக்குறுதிகளையும், அறிவிப்புகளையும் தந்து கொண்டிருந்தார்கள். இதைக் கேட்ட நமது பாரதப் பிரதமர் அவர்கள் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற கடுமையான வறட்சியைப் பார்க்க வேண்டுமென்று பறந்து வந்தார்கள். பிரதமர் அவர்கள் ஜீப்பைத் தானே ஓட்டிக் கொண்டு கிராம மக்களை நேரில் பார்த்து வறட்சியையும் நேரில் பார்த்துத் திரும்பியவுடன் தமிழகத்திற்கு நமது தமிழக அரசு கேட்டிருக்கிற 347 கோடி ரூபாய் நிதியுதவியில் மூன்றில் இரண்டு பங்காவது கொடுப்பார்கள் என்று மக்கள் எதிர் பார்த்தார்கள். ஆனால் மத்திய அரசு என்ன கொடுத்தார்கள்? 27 கோடி ரூபாய் கொடுத்து தமிழக மக்களை வறட்சியிலிருந்து பாதுகாப்போம் என்று சொல்கிறார்கள். ஆகவே பாரதப் பிரதமர் நேரில் வந்து பார்த்ததற்குப் பிறகு 100 கோடி, 120 கோடி ரூபாய் என்று உதவியை மற்ற மாநிலங்களுக்கெல்லாம் மத்திய அரசு கொடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட மத்திய அரசு கணவன் மனைவி உறவு என்றெல்லாம் சொல்லக்கூடிய தமிழக அரசுக்கு கை விரித்து இருக்கிறது, ஏமாற்றத்தை அளித்து இருக்கிறது. வறட்சியைப் போக்குவதற்கு தேவையான நிதியை கொடுக்கவில்லை என்று மத்திய அரசை நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.



1987 நவம்பர் 16] [திரு. பொ. உத்திராபதி]

(பிற்பகல் 1–20)

அதேபோல் இன்றைக்குத் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய வறட்சியால் விவசாயம், குடிநீர், மா மரங்கள், தென்னை மரங்கள், பனை மரங்கள் போன்று உள்ள அத்தியாவசியமான வருமானம் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் சேதம் அடைந்திருக்கின்றன. இந்த ஆயிரம் கோடி ரூபாயை நம்முடைய தமிழக அரசு எப்படி ஈடு செய்யப் போகிறது என்பது தெரியவில்லை. இன்றைக்குத் தமிழக அரசு 51 கோடியே 66 லட்சம் ரூபாய் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதில் 29 கோடியே 94 லட்சம் ரூபாய் குடி தண்ணீருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. குடிதண்ணீர் என்று சொல்கிறபோது, தமிழகம் முழுவதிலும் உள்ள தாய்மார்கள் இந்த ஆண்டு குடிநீருக்காக பட்டிருக்கக்கூடிய கஷ்டங்களும், அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடிகளும் சொல்ல முடியாத அளவிற்கு இருந்தது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு விவசாயம் பொய்த்து விட்டது. ஜுன் மாதம் கிடைக்கக்கூடிய மேட்டூர் தண்ணீர் நவம்பர் மாதம் 9 ஆம் தேதி, 5 மாதங்கள் கழித்து திறந்து விடப்பட்டது. இந்த வறட்சி காலத்தில் என்ன வேலைகள் நடைபெற்று இருக்கின்றன. என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. என்ற திட்டங்களின் பெயரால், 3 ஆண்டுக் காலமாக 4 ஆண்டுக் காலமாக தேக்கி வைக்கப்பட்டிருந்த புளுத்துப் போன அரிசி இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்கள் 2 குளங்கள் 3 குளங்கள் என்று தான் வெட்டியிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக 8 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் 5 மாத காலமாக பட்டினியால் வாடிக் கொண்டு இருக்கிறார்கள். குழந்தைகள் பட்டினியாலும், பசியினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் 3 பேர்கள் பட்டினியால் உயிரிழந்திருக்கிறார்கள் குறிப்பாக மயிலாடுதுறை பக்கத்தில் காபத்திநாதபுரம் கிராமத்தில் ஒரு குடும்பமே பட்டினியால் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். வறட்சியைப் போக்க, போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு வேலை செய்வதாக அறிவித்திருந்தாலும் கூட, அப்படிப்பட்ட வேலைகள் நடைபெறவில்லை. கொடுத்த பணங்களுக்கு உரிய வேலைகள் நடைபெறாமல் தேக்க நிலையில் தான் அவைகள் இருந்தன. முழுமையான வேலைகள் நடைபெறவில்லை.

விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வை தமிழக அரசு அறிவித்து 4 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், மற்ற, மற்றத் துறைகளில் இருக்கக்கூடியவர்களுக்கு நான்காவது சம்பளக் கமிஷன், 5 ஆவது சம்பளக் கமிஷன் என்று அறிவித்துக்கொண்டிருக்கிறார்களே தவிர, கிராமப்புறங்களில் உள்ள 60 லட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு அறிவிக்கப்பட்டு 4 ஆண்டுகள் ஆகியும், இன்னும் கூலி உயர்வு கொடுக்கப்படவில்லை.

[திரு. பொ. உத்திராபதி] [1987 நவம்பர் 16

ஆகவே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் உடனடியாக கூலி நிர்ணயக் கமிஷன் ஒன்றை அமைத்து, சங்கப் பிரதிநிதிகளையும் இணைத்து, இந்த ஆண்டே கூலி உயர்வைச் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த வறட்சியால், எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் உணவு நிலைமை மிகவும் கவலை தரக்கூடியதாக, கடுமையான நிலை வரும் என்பதை எச்சரிக்கிறேன். இயற்கையை மட்டும் நம்பி நாம் வாழ முடியாது இந்த ஆண்டு இயற்கை ஏதோ நமக்கு உதவி செய்து விட்டது, தமிழகம் முழுவதும் விவசாயம் நடந்துகொண்டிருக்கிறது என்று தமிழக அரசு பெருமையாக மார்தட்டிக்கொள்ளக்கூடாது. நான் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தஞ்சை மாவட்டம் நிரந்தரமாக விவசாயத்தை நம்பி இருக்கிற மாவட்டம். அங்கே விவசாயம் வாழவேண்டும் என்றால், காவிரி நீர்ப்பிரச்சினை தீர்க்கப்பட்டு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக, மத்திய அமைச்சர் ஒருவர் சொன்னார். ஜனாதிபதி தேர்தல் முடிந்தவுடன் இந்தக் காவிரி நீர்ப்பிரச்சினை தீர்க்கப்படும் என்றும், மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் விரைவில் நடுவர் தீர்ப்பின் மூலமாக இந்த காவிரி நீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இது நாள் வரையில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் நாம் ஏமாற்றம் அடைகிறோமே தவிர, இந்தப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. எனவே, உடனடியாக இந்தப் பிரச்சினை தீர்வதற்கு நமது அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகத்தில் வாழக்கூடிய 60 இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 17 கோடி ரூபாய் நிதி பெற்று, வேட்டி, சேலை கொடுக்கப்போவதாக அறிவித்தீர்கள். அது எந்த அளவிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் 8 இலட்சத்திற்கும் அதிகமாக விவசாயத் தொழிலாளர்கள், குடும்பங்கள் இருக்கின்றன. அதில் 1½ இலட்சம் பேர்களுக்குக்கூட இந்த வேட்டி, புடவையை சர்க்கார் அறிவித்தபடி இன்னும் கொடுக்கவில்லை. ஆகவே, இந்த அரசாங்கம் விவசாயத் தொழிலாளர்களை ஏமாற்றக்கூடிய அரசாங்கமாக இருக்கக்கூடாது. அறிவித்தபடி 60 இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கும் வேட்டி, புடவைகளை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின்சாரத் துறைக்கு 100 கோடி ஒதுக்குகிறோம். ஆனால், இந்த மின்சார துறை பெருமளவு சரியாக செயல்படவில்லை என்றுதான் நாம் சொல்ல முடியும். இன்றைக்கு விவசாயிகளுக்கு மின் கட்டணம் வழங்குவதில், வட்டி, அபராத



1987 நவம்பர் 16] [திரு. பொ. உத்திராபதி]

வட்டி என்று சொல்லி வசூலிக்கப்படுகிறது. நகராட்சி, பேரூராட்சிகளுக்குக் கூட, பாக்கியிருந்தால், வட்டி, அபராத வட்டி என்று சொல்லி, பணம் வசூலிக்கப்படுகிறது. எனவே, இந்த வட்டி, அபராத வட்டி என்பதை நீக்கிவிட்டு, பில் பணத்தை மட்டும் வசூலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுக் கடன்கள். அரசு அறிவித்தும்கூட இன்னும் முழுமையாகக் கட்டியவர்களுக்குக் கடன் கிடைக்கவில்லை. தேக்க நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையைத் தன் கையில் வைத்துள்ள மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு கடன் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உரம் கூட கம்பெனியிலிருந்து போகாமல் இருக்கிறது. இப்போது நடவு வேலை தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, உரம் அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 150 கோடி ரூபாய் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுவது எல்லாம் நுகர் பொருள் வாணிபக் கழகத்திலிருந்து பொறுப்புகள் கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், ஒதுக்கப்பட்டப் பிறகு இன்றைக்கு தீபாவளிக்குக் கூட கிராமங்களில் இருப்பவர்களுக்கு ஒரு கிலோ பாமாயிலும், நகரத்தில் இருப்பவர்களுக்கு 2 கிலோ பாமாயிலும் தரப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், பாமாயில் கிடைத்ததா என்றால் நகரத்தில் மட்டும்தான் ஒரு கிலோ பாமாயில் கிடைத்ததே தவிர கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு ஏமாற்றம் தான் கிடைத்து இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து அந்தப் பொறுப்புகளை எடுத்த உடன் அதில் பணியாற்றிக்கொண்டு இருந்த ஊழியர்களுக்கு கூட்டுறவுத் துறையில் இன்னமும் பெரும்பாலானவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. உடனடியாக அந்த நம்பி வாழ்ந்து கொண்டிருந்த ஊழியர்களுக்கு வேலைக்கு உத்திரவாதம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, இந்த நகராட்சிகளில் வரி அப்பீல் கமிட்டி என்று இன்றைக்கு டி.ஆர்.ஓ., ஆர்.டி.ஓ., நகராட்சித் தலைவர் 2 கவுன்சிலர்கள் ஆகிய 5 பேர் அடங்கிய ஒரு குழு இன்றைக்கு வகுத்தப்பட்டு இருக்கிறது. எப்படி இந்த அரசு நகராட்சிகள், உள்ளாட்சிகளுக்கு தேர்தலை முடித்தப் பிறகு அதற்குள் இருந்த அதிகாரத்தை முழுமையாக அரசால் பிடுங்கப்பட்டு இன்றைக்கு நகராட்சிகள், உள்ளாட்சிகள் எல்லாம் வெறும் பொம்மைகளாகக் காட்சி அளித்துக் கொண்டு இருக்கின்றன. எப்படி ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அமைப்புகளுக்குப் [illegible] பஞ்சாயத்து யூனியன்களுக்கு இன்றைக்கும் தற்காலிகமாக ஜன

பதிலாக ஒரு கமிட்டி புகுத்தப்பட்டதோ அதே போல் இதற்கும் இந்தக் கமிட்டி புகுத்தப்பட்டது நியாயம் அல்ல. அப்படி ஜனநாயகத்தை கேலி கூத்தாக ஆக்கக்கூடிய தமிழக அரசாக இது மாறக்கூடாது. உடனடியாக அதைத் திரும்பப்பெற்று அது நகராட்சி கமிட்டியாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் சமீபகாலத்தில் ஒரு ஆட்சி நடைபெறுகிறதா அல்லது நிலைகுலைந்து நிற்கிறதா என்று 2, 3 மாத காலமாக சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாக மக்கள் இடத்திலே ஒரு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, தமிழக அரசு மக்களுக்கு செய்யக்கூடிய காரியங்களில் தேக்க நிலை வளர்ந்து வருகிறது. அதைத் தீவிரமாக நிதியமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இது சம்பந்தமாக வறட்சி நிவாரண வேலைகளை தொடர்ந்து செய்யவும், மத்திய அரசை வற்புறுத்தி நாம் பெறக்கூடிய நிதியைப் பெற்று தமிழ்நாட்டில் ஏற்பட்டு இருக்கக்கூடிய நிலைகளை மாற்றுவதற்கு நிதியமைச்சர் அவர்கள் சீரிய கவனம் செலுத்த வேண்டுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பேர்வையினுடைய முன்னவர் அவர்களால் முன் மொழியப்பெற்று இருக்கிற துணை மதிப்பீடுகளின் பேரில் தான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் என்னுடைய சில கருத்துக்களை சொல்ல விழைகிறேன்.

இன்றைக்குத் தமிழகம் முழுமையும் வறட்சியால் பாதிக்கப்பட்டு தெய்வாதீனமாகக் கடந்த சில நாட்களாகத் தான் இங்கே மழை பொழிந்து தமிழகத்திலுள்ள மக்களுக்கு ஓரளவுக்கு ஒரு நம்பிக்கையை ஊட்டியிருக்கிறது. இந்த வறட்சிக் காலம் இன்று, நேற்று அல்ல, தமிழகத்திலே பல முறை வந்திருக்கிறது. இதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். இருந்தாலும் இந்த ஆண்டில் வறட்சியினுடைய கொடுமையைப் பார்க்கிறபோது அதிகமான மக்கள் வறட்சியின் காரணத்தால் கோவை மாவட்டம், மதுரை மாவட்டம் போன்ற பகுதிகளில் இருக்கக் கூடியவர்கள் எல்லாம்—ராமநாதபுரம் மாவட்டம்தான் அதிகமாக வறட்சியால் பாதிக்கப்படுகிற மாவட்டம், அங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் தான் அதிகமாக இடம் பெயர்ந்து செல்வார்கள் என்ற ஒரு கருத்து இருந்தது போக இந்த ஆண்டில் இருந்த வறட்சியின் காரணமாக—இடம் பெயர்ந்து சென்று பிற மாநிலங்களுக்கு எல்லாம் சென்று இன்றைக்கு தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக அவர்கள் அல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்த மழை பொழிந்ததற்குப் பின்னால் ஒரு நம்பிக்கையோடு இன்றைக்கு அவர்கள் தமிழகத்தை நோக்கி





திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு வறட்சி அதிகமாக இருக்கிற பகுதி என்று பார்க்கிற போது கோவை, மதுரை மாவட்டங்கள் இன்னும் ராமநாதபுரம் மாவட்டங்களில் பார்க்கிறபோது வறட்சிப் பணிகள் அங்கே எந்த அளவுக்கு நிறை வேற்றப்பட்டு வருகிறது, வறட்சிப் பகுதி என்று அறிவிப்பதிலேயே எந்த அளவுக்கு அரசு அதிலே கண்காணித்து வருகிறது என்பதைப் பார்க்கிறபோது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாகத் தான் இருக்கிறது. மாநில அரசினுடைய குழு வருகிறது. மத்திய அரசினுடைய குழு வருகிறது, ஆனால், அந்தக் குழுக்களுடைய பரிந்துரையின்படி அரசு அதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

(பிற்பகல் 4–30)

அதற்கு ஒரு உதாரணமாக நான் சொல்லவேண்டுமென்றால், மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கு முன்னால், அன்றைக்கு வேடசந்தூர் ஒரு வறட்சிப் பகுதியாக இருந்தது. ஆனால், அதற்குப் பின்னாலே மதுரை, அண்ணா என்று பிரிக்கப்பட்டதற்குப் பின்னால் மதுரை மாவட்டத்திலே அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதி என்று சொல்கிறபோது, அது உசிலம்பட்டி தாலுக்காவாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலேயிருந்து வருகின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் சொல்கிறேன்.

முதன் முதலாக தமிழகத்திலே வறட்சி என்று சொன்னவுடனேயே உசிலம்பட்டியைப் பற்றி எனக்கு நினைவிருக்கிறது. பத்திரிகைகளைப் பார்க்கிறபோது, தினமணி பத்திரிகையிலும், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலும் மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டினார்கள். தென்னை மரங்கள் பட்டுப்போய் இருக்கின்ற படங்களை, அதிலே பிரசுரித்து இருந்தார்கள். அப் பேற்பட்ட ஒரு நிலையைக் கொண்டிருக்கின்ற அந்தப் பகுதியைப் பொறுத்தவரை இன்றுவரை நாங்கள் போராடிப் பார்க்கிறோம். இருந்தா வேடசந்தூர் எங்களை விட்டுச் சென்றுவிட்டது. இருந்தாலும் உசிலம்பட்டி பகுதியில் இருக்கக் கூடியவர்கள் அதிகமாக வாடிக் கொண்டிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயராலே நீங்கள் மாவட்டத்தை அமைத்திருக்கிறீர்கள். எங்களுக்கு வேடசந்தூரை கவனித்துக்கொண்டிருக்கிறீர்கள். நம்முடைய மாண்பு அருகாமையில் ஆண்டிப்பட்டி இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொகுதியாக இருக்கிறது. அந் தப் பகுதியில் எப்பேர்ப்பட்ட பணிகள் எல்லாம் நடந்துகொண் டிருக்கின்றன. அந்தப் பகுதி எப்படி வறட்சிப் பகுதியிலே சேர்க்கப்பட்டிருக்கிறது ? ஆனால், எங்களுடைய உசிலம்பட்டி பகுதியை ஏன் சேர்க்கவில்லை என்பதைப் பற்றி எல்லாம் தொடர்ந்து நான் வருகின்ற குழுக்களிடத்திலே மட்டுமல்ல, நம் முடைய அமைச்சர் வருகின்ற நேரத்திலேகூட சொல்லியிருக்கி றோம். அதன் காரணமாக வறட்சிப் பகுதி என்று அறிவிக்க

படாததோடு மட்டுமல்ல, வறட்சிப் பகுதி என்று அறிவிக்காததினாலே அந்த விவசாயக் கூலிகளுக்கு, ஒரு தொழில் கிடைக்கும், ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்ற நிலை உருவாகவில்லை. அதற்குப் பிறகு இன்றைக்கு மழை பெய்திருக்கிறது.

என்ன நடந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்படாததாலோ வறட்சிப் பணிகள் அங்கே நடவாத காரணத்தினாலே, அங்கே இருக்கின்ற குளம், குட்டைகள் எல்லாம் ஆழமில்லாத காரணத்தாலே, அதிகமான மழை பெய்திருந்தும், அங்கே தண்ணீர் பிடிப்பு இல்லாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. கண்மாய்கள் உடைந்து அன்றைக்கு வெள்ளச் சேதம் என்று சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே அது வெள்ளச் சேதம் என்று சொல்வதற்கு வாய்ப்பில்லை. அந்த அளவிற்குக் கேவலமாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. எனவே அந்தப் பகுதி தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன என்பதைத்தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அன்றைக்கு சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்ட மக்கள் என்கின்ற முறையிலே, வைகை அணைப்பகுதி மக்கள் இருந்தாலும், இன்றைக்கு வைகையினுடைய ஒதுக்கீட்டை பார்க்கும் போது, அதிலே எந்தவிதமான பங்கீட்டு வகையும், உசிலம்பட்டி தாலுக்காவிலே இருக்கக் கூடிய மக்களுக்கு இல்லை. அந்தப் பகுதியைபாசனப் பகுதியாக மாற்றக் கூடிய அந்த திருமங்கலம் கால்வாயிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதற்கு எங்களுக்கு வாய்ப்பில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் பெரியாறிலிருந்து தண்ணீரை எடுத்து, வைகையின் மூலமாக எடுத்துத் தருகிறோம் என்று சொல்கிறார்கள். அதிலேயும் அவர்கள் திட்டங்களை வைத்திருக்கிறார்கள். அங்கே 132 அடியிலே தான் இன்றைக்கு கொள் அளவிலே இருந்து கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு வந்த பிறகு தான் தண்ணீர் திறந்து விடமுடியும் என்று சொல்கிறார்கள். இந்த நிலையைப் பார்க்கும் போது அந்த ஒரு பகுதி மக்கள் மட்டும் எந்த அளவிற்குப் பாவம் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள்? அங்கேயிருக்கக் கூடிய அந்த மக்களுக்கு மட்டும் ஏன் இந்த ஒரு நன்மையைச் செய்யக் கூடாது? அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் மனிதர்களாக உங்கள் கண்களுக்குப் படவில்லையா என்பதைத்தான் இன்றைக்கு அரசினிடத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இது மாதிரி தொடர்ந்து 3 ஆண்டுகாலமாக வறட்சியின் காரணமாக அந்தப் பகுதியிலிருக்கின்ற அத்தனை பேரும் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். பல மாநிலங்களுக்கும் சென்று வயிற்றுப் பிழைப்பைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், மழை பெய்ததற்குப் பின்னாலே குடிநீராவது கிடைக்கிறதே என்ற நம்பிக்கையோடு இன்றைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்





அந்த மக்களின் மனதிலே மேலும் நம்பிக்கையூட்டக் கூடிய அந்தப் பகுதியிலே எல்லாம் மழையின் காரணமாக வைகையிலே நீர் நிறைந்து இருக்கிறது. நிலங்கள் எல்லாம் குளிர்ந்து இருக்கின்றன. இந்த நேரத்திலாவது நீங்கள் வைகை. பெரியாறு திட்டத்திலேயிருந்து, திருமங்கலம் பிரதானம் கால்வாயின் மூலமாக அங்கே தண்ணீர் விடுகிற நிலையிலே அந்தப் பகுதியினுடைய மக்கள் நல்ல முறையிலே நம்பிக்கை பெறக் கூடியவர்களாக இருப்பார்கள். நிச்சயமாக அந்த அளவில் நிலைமை ஏற்படாவிடில் அவர்கள் மேலும் இடம் பெயர்ந்து சென்று அந்த பகுதியிலே ஒரு சட்டமன்ற உறுப்பினராவது தேர்ந்தெடுக்கப்பட்டு வர முடியும் என்ற நம்பிக்கையை இழக்கக் கூடிய அளவிலே அங்கே யாரும் குடியிருக்க முடியாது. அது காடாகி விட்டது. என்று சொல்லக் கூடிய நிலைமை மாற வேண்டுமென்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று கேட்டால் அந்தப் பகுதியைப் பொறுத்த வரையில், நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். நாங்கள் மட்டுமல்ல. இதற்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் அத்தனை பேரும் அதை வலியுறுத்திச் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே எங்கள் பகுதி மட்டும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. நாங்கள் மாற்றுக் கட்சியிலே இருந்து கொண்டிருக்கிறோம். ஆளும் கட்சிக்கு என்றைக்கும் நாங்கள் அடிமைப்பட்டவர்களாக இல்லை என்ற கருத்தினை தேர்தல்கள் எடுத்துக் காட்டியுள்ளது. அதனால்தான் என்னவோ தெரியவில்லை. எத்தனை இயக்கங்கள், எத்தனை கட்சிகள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்தாலும் கூட, அந்தப் பகுதி தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறதே தவிர, வேறு அல்ல. அங்கே ஒன்றும் பெரிய தொழில்கள் கிடையாது. விவசாயத்தை மட்டும் நம்பி இருக்கக் கூடிய மக்கள் இன்றைக்கும் தொடர்ந்து வாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதே நிலை, இதே புறக்கணிப்பு தொடருமேயானால், நான் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதிலே எந்தவித அர்த்தமும் இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால், இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ஒரு நல்ல முடிவை எங்கள் பகுதியிலே செழுமைபடுத்தக் கூடிய முடிவை, இந்த சட்டமன்றத்தின் மூலமாக எங்களுக்கு அறிவிக்காவிட்டால், நிச்சயமாக நான் இந்தச் சட்டமன்றத்திலே தொடர்ந்து உண்ணாவிரதம் மேற்கொள்ளக் கூடிய ஒரு நிலை ஏற்படும் என்பதைச் சொல்லி, வாய்ப்பு கொடுத்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 252 கோடிக்கான நிதிநிலை அறிக்கை மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய குடியரசுக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். தமிழகத்திலே கடந்த ஆண்டு வரலாறு காணாத அளவிலே கடுமையான வறட்சி

ஏற்பட்டு அந்த வறட்சியினால் தமிழகம் மிகவும் சிக்கித் தவித்ததை இந்த அவையிலே பலர் குறிப்பிட்டு உள்ளார்கள். இந்த வறட்சியின் மூலமாகப் பெரும் அளவிற்குப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழகத்திலே உள்ள ஏழை கூலி விவசாயத் தொழிலாளிகளாக இருந்து கொண்டிருக்கின்ற ஒரு கோடிக்கு மேற்பட்ட கிராமப்புற தாழ்த்தப்பட்ட மக்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நினைவுப்படுத்த விரும்புகிறேன். இந்த வறட்சி குறித்து வேலை வாய்ப்பிற்கு 14 கோடி ரூபாய் அளவிற்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 14 கோடி ரூபாய் என்பது 1 கோடிக்கு மேற்பட்ட கிராமப்புற ஏழைத் தொழிலாளர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் எந்த அளவிற்குப் போதுமானது என்பது புரியவில்லை எனவே குறைந்த பட்சம் 100 கோடியாவது இந்த வேலைவாய்ப்பிற்குச் செலவிடப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

பல்கலைக் கழகங்களுக்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே தொகைகள் பகுத்து அளிக்கப்பட்டிருக்கின்றன. நான் சார்ந்திருக்கின்ற வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வட ஆற்காடு மாவட்டத்திலேயிருந்து வந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறோம். கடந்த ஆண்டு, இந்த ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் உருவாக்கப்படும் என்று இந்த அவையிலே அறிவித்தார்கள். ஆனால் ஒரு ஆண்டுக்கு மேலாகியும் அப்படிப்பட்ட வேளாண்மைப்பல்கலைக் கழகம் வட ஆற்காடு மாவட்டத்திலே தொடங்கப்படவில்லை. வட ஆற்காடு மாவட்டம் ஒரு மிகப் பெரிய மாவட்டம். 21 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை உள்ளடக்கிய மாவட்டம். பல்வேறு கல்லூரிகள் இருக்கின்ற மாவட்டம். பல மாவட்டங்களில் பல்கலைக் கழகங்கள் இருக்கின்ற போது எங்களுடைய மாவட்டம் மட்டும் என்ன காரணத்தினாலோ துரதிஷ்டவசமாக இதுவரையிலும் ஒரு பல்கலைக் கழகம் கூட அமைக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. எனவே ஒரு பல்கலைக் கழகத்தை வட ஆற்காடு மாவட்டத்திலே நிறுவவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு வசதிக்காக 40 கோடி அளவிலே இந்த நிதி நிலை அறிக்கையிலே தந்திருக்கிறீர்கள். ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்குக் கிராமப் புறங்களிலே ஒவ்வொரு நாளும் என்றைக்கு நம்முடைய குடிசைகள் எல்லாம் இடிந்து போய்விடுமோ, என்றைக்குத் தீ வைத்துக் கொளுத்திவிடுவார்களோ என்கின்ற அளவிற்கு அஞ்சி அஞ்சி வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழை தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்குத் தனி வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டிருந்த போதிலும் கூட கடந்த ஒரு ஆண்டிற்கு மேலாக தாட்கோ மூலமாக தமிழக அரசாலே ஒரு வீடு கூட இன்னமும் கட்டித் தரப்படவில்லை. அது ஏனோ நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால்





கிராமப் புறத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் ஒவ்வொரு நாளும் என்றைக்கு நம்முடைய வீடு கொளுத்தப்பட்டு விடுமோ என்று அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் சிலதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த 4 மாதங்களிலே மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களுடைய வீடுகள் 3,000-க்கு மேற்பட்ட வீடுகள் தமிழகத்திலே கொளுத்தப்பட்டிருக்கின்றன. தர்மபுரி மாவட்டத்திலே பென்னாகரம் வட்டத்திலே நாகமலை என்ற கிராமத்திலே டீ கடையிலே ஏன் தனி டம்ளர் வைத்திருக்கிறீர்கள் எங்களுக்கு மொத்த டம்ளர் தரக்கூடாதா என்று கேட்ட ஒரே காரணத்திற்காக அந்த கிராமத்திலே 70-க்கு மேற்பட்ட வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டது. அதேபோல் சேலம் மாவட்டத்திலே ஓமலூர்வட்டத்திலே ராக்கிப்பட்டி என்ற கிராமத்தில் அண்ணல் அம்பேத்கார் பெயரிலே ஒரு விழா எடுத்தார்கள். ஒரு மன்றம் கட்டினார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் காவல் நிலையத்திலே புகார் செய்த போதும் கூட, காவலர்கள் கூட அங்கே பாதுகாப்பாக இருந்த போதிலும் கூட, ராக்கிப்பட்டி கிராமம் தீ வைத்து கொளுத்தப்பட்டு 70—க்கு மேற்பட்ட குடிசைகள் எரிந்து சாம்பலாகிறது. அதே போல கடந்த மாதம் தென்னாற்காடு மாவட்டத்தில் ஏதோ ஒரு சம்பவத்திலே, ஒரு பிரச்சினையிலே நடந்த ஒரு இன ஆதிக்கப் போராட்டத்தின் போது 3,000-க்கு மேற்பட்ட வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. இன்றைக்கு இந்த மழைக் காலத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் வீடிழந்தவர்களாக அங்கே அநாதைகளாக வெறும் வானமே கூரையாக, சுவர்கள் கூட இல்லாமல், குட்டிச்சுவர்களுக்குப் பக்கத்திலே தங்களுடைய குழந்தைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த கோரக் காட்சியை தென்னாற்காடு மாவட்டத்தில் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

(பிற்பகல் 1-40)

மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட குடிசைகள் கொளுத்தப்பட்டு, ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கு வீடுகள் இல்லாமல் அநாதைகளாக அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு சம்பவத்தையும் சொல்லிக் கொண்டே போனால், அது மிக நீளமான பட்டியலாகப் போகும். எனவே, வீட்டு வசதிக்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்த வேளையிலே நான் இந்த அரசுக்குப் பணிவோடு ஒன்றுபட்டிய கோரிக்கையைச் சமர்ப்பிக்க கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தீ வைத்துக் கொளுத்த முடியாத, தீக்கிரையாகாத, தீப்பிடிக்காத வீடுகளை இந்த அரசு 1 கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு. அதனால் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கையை இங்கே நான் முன் வைக்க விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், இன்னொரு நிகழ்ச்சியைக் கூட நான் இங்கே சொல்ல விழைகிறேன்.

[திரு. கு. தமிழரசன்] [1987 நவம்பர் 16

கடந்த மாதம், ஆதி திராவிடர் மகாநாட்டிற்காக, லாரி மூலமாக சென்ற ஆதி திராவிட மக்கள், திருநெல்வேலி மாவட்டத்திலே, பண்டாரம்பட்டி என்ற ஊருக்குச் சென்று மணியாச்சி வழியாக வந்து கொண்டிருந்தபோது, மணியாச்சியிலே, எப்போதுமே, வரலாறே இல்லாத அளவிற்கு, ஒரு வெடிகுண்டு அந்த லாரியின்மீது வீசப்பட்டது. அதனால் அந்த லாரியிலே போய்க் கொண்டிருந்த 17 பேர் படுகாயம் அடைந்து அதில் சேவியர் என்கின்ற ஒருவர் அந்த இடத்திலேயே இறந்து போனார். இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அவர்களின் இந்த நிலைமைகளை ஆராய்வதற்கு ஒரு தனிக் கமிஷன் நிறுவி, அந்த தனிக் கமிஷன் இதை ஆராய்ந்து அரசுக்கு ஆய்வறிக்கை தருவதற்கு அரசு முன் வரவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்..... (மணியடிக்கப்பெற்றது).

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987—88 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்கு நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்துக் சொள்கிறேன். 252.42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்து இந்த மானியக் கோரிக்கை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இங்கே முன்மொழியப்பெற்று வந்திருக்கிறது. இதிலே குறிப்பாக, பல அம்சங்களிலே நாம் இந்தத் தொகையினை செலவிட்டிருக்கிறோம். மின்சாரத் துறைக்கு 100 கோடி; நுகர்பொருள் வாணியக் கழகத்திற்கு 50 கோடி; வறட்சி, இன்னும் புது பணிகளுக்கு என்று இதர தொகையினை செலவிட்டதற்கான அனுமதியைக் கோரி வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

தமிழகத்திலே ஏற்பட்ட வறட்சியின் காரணமாக மக்கள் குடிநீருக்கு பட்ட துன்பங்களை நாம் நினைவு கூறாமல் இருக்க முடியாது. இதிலே, குறிப்பாக தமிழகத்தினுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக 30 கோடி ரூபாய் இந்த அரசாங்கம், இந்த மானியக் கோரிக்கையிலே ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதிலே, சென்னையைப் பொறுத்தமட்டிலும் கிட்டத்தட்ட 7 கோடிக்கு அதிகமாக நாம் செலவு செய்து இந்தக் குடிநீர்ப் பிரச்சினையை சென்னையிலே சமாளித்து இருப்பதை நிச்சயமாக பாராட்டாமல் இருக்க முடியாது. சென்னையினுடைய குடிநீர் வாரியம் மிகச் சிறப்பான முறையிலே, பல ஆயிரக்கணக்கான லாரிகளை அமர்த்தி பகுதி மக்களுக்குக் குடிநீர் கிடைப்பதற்குரிய வாய்ப்பினை உருவாக்கித் தந்ததை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லாமல் இருக்க முடியாது. ஆனால் அதே நேரத்திலே இந்த நிலை தொடராமல், இது போன்ற சூழ்நிலை வராமல் தடுப்பதற்கு வேண்டிய முழு முயற்சியையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.



1987 நவம்பர் 16] [திருமதி டி. யசோதா]

அடுத்தாற்போல், இன்றைக்கு நாம் பத்திரிகைகளிலே பார்க்கின்றபோது, நீதி கிடைக்கும் என்று நீதிமன்றத்திற்குச் சென்றால் அங்கே நீதிபதியைக் காணவில்லை, அங்கே நீதிபதிகள் இல்லையென்கிற குறைபாட்டுக்கு மத்தியிலே மக்கள் அவதிப்படுகின்ற போது, நீதிமன்றங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கூட இல்லையென்பதை நாம் பார்க்கிறோம்.

நீதிமன்றங்களுக்குரிய அடிப்படை வசதிகள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கழிப்பிடங்கள் கூட இல்லாமல் இருக்கிற நிலைமை இருக்கிறது. நீதிமன்றங்களின் மூலமாக அரசுக்கு ஒரு கணிசமான தொகை அரசாங்கத்திற்கு வருமானமாக வந்து கொண்டிருக்கிறபோது அத்தகைய குறிப்பிட்ட நீதிமன்றங்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்கவும், நீதிபதிகள் இல்லாத நீதிமன்றங்களில் உடனடியாக நீதிபதிகளை நியமித்தும் துரிதகால நடவடிக்கையாக அரசு மிக வேகமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் பல நல்ல காரியங்கள் நாட்டு மக்களுக்குக் கிட்டாமல் நீதி தேவன் தன்னுடைய புனிதப் பணியைச் செய்ய முடியாத நிலை இருப்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப் போலவே சிவகாசியில் இருக்கிற சுமார் 700 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்ற நிலையைப் பார்க்கிறோம். அதற்குக் காரணம் என்னஎன்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இவ்வாறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்குரிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது என்று கண்டறிந்து அதைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவில் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் தஞ்சாவூரில் இருக்கிற பீடித் தொழிலாளர்கள் பசிக் கொடுமையிலிருந்து தங்களைப் பாதுகாக்க, கூட்டுறவுத் துறையில் அந்தத் தொழிலைத் தொடங்க தமிழக அரசை வலியுறுத்தித் தொடர் உண்ணாவிரதம் என்னும் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். 1985 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 130 பீடி கம்பெனிகள் கதவடைப்பு செய்து தொழில் நடத்தும் உரிமத்தை சரண்டர் செய்துவிட்டார்கள். இதனால் தமிழக அரசு தொழில் மையம் மூலமாகக் கூட்டுறவு முறையில் தொழில் தொடங்கிட ஆலோசனை செய்து 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 534 பீடித் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக 227 பீடித் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள், கட்டணத்தை தஞ்சாவூர் கூட்டுறவு தொழிலாளர் மையத்தின் அனுமதியோடு இந்தியன் ஓவர்சீஸ் பேங்கில், தஞ்சாவூரில் செலுத்தியுள்ளனர். தொழில் வணிகத் துறையினரிடமிருந்து கூட்டுறவுப் பதிவு வரவில்லை. தஞ்சாவூர் பீடித் தொழிலாளர்களைப் பசிக் கொடுமையிலிருந்து மீட்க கூட்டுறவுத் துறையில் பீடித் தொழிற்சாலைகளைத் தொடங்க தமிழக அரசை வலியுறுத்தி, தொடர் உண்ணாவிரதம் ஏற்றிருக்கிறார்கள்.

[திருமதி டி. யசோதா] [1987 நவம்பர் 16

மாண்புமிகு அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கூட்டுறவுத் துறைக்கும் பொறுப்பேற்றிருக்கிற காரணத்தால் இதையும் உடனடியாகச் செயல்வடிவம் கொடுத்து, நிறைவேற்றி, தொழிலாளர்களுடைய உண்ணாவிரதத்தை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இங்கே ஆசிரியர் தேசிய சங்கத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதில் மேல்நிலைக் கல்வி பொறியியல் பிரிவு மெக்கானிக்குகளின் ப த் தன்மையை மாற்றி அரசு ஆணை எண் 1719—நாள் 14–9–1 8-ன் இணைக்கப்பட்ட வாசகத்தில் The staff of the c dre of mech nics who can teach pr c ic l courses ஆனது முழு ே ர போதகர்கள் பணியைப் .பாதிப்பதால் அதை நீக்கக் கோருப் மனுவை அதிகாரிகளுக்கு அனுப்பியும், அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியும் அது நடைமுறையில் எடுபடாது இருக்கிற காரணத்தால் அதையும் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களிடம், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் மூலமாகச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குரிய துரித நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசாங்கம் வறட்சிப் பணியைப் போர்க்கால நடவடிக்கை எடுப்பதைப்போல் எடுத்துச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே எனக்கு முன்னால் பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர்கள்கூட வறட்சிக்கு மத்திய அரசாங்கம் கொடுக்கிற தொகை குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். குறைந்த தொகை போதும் என்று நான் சொல்வதற்குத் தயாராக இல்லை. மத்திய அரசிலிருந்து தமிழகத்திற்கு எவ்வளவு நிவாரணம் வந்தாலும் அது அதிகமாக வேண்டும் என்று கேட்கிற குரல்களில் எங்களுடைய குரல்களும் சேர்ந்துதான் இருக்க வேண்டுமே தவிர தனியாக இருக்க முடியாது. ஆனால் மத்திய அரசாங்கத்திலிருந்து வந்தத் தொகையை நாம் எப்படிச் செலவழிக்கிறோம் என்பதையும் பார்க்க வேண்டும்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், உதாரணத்திற்குச்சொல்ல வேண்டுமென்றால் முதலில் சமூக நலக் கூடங்கள் அமைப்பதற்கு என்று பணத்தை ஒதுக்கினார்கள். கிட்டத்தட்ட 3 லட்சம் ரூபாய் ஒரு யூனியனுக்கு சமூக நல்க் கூடம் கட்டுவதற்காக என்று ஒதுக்கினார்கள். ஆனான்கிசகமூல க் கூடம் கட்டுவதற்கு முன்னாலேயே அதைச் செய் nentல்டாமென்று சொல்லி அதற்குப் பதிலாக உடனடியாக குளங்களையும், குட்டைகளையும் ஏரிகளையும் ஆழப்படுத்துவதற்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு உத்தரவைப் போட்டார்கள். அவ்வாறு உத்தரவு வந்த பிறகு உடனடியாக எந்தெந்த ஏரிகளை எடுக்கலாம், எந்தெந்த குளங்களை குட்டைகளை எடுக்கலாம் என்று ஆய்வு செய்து எடுத்தார்கள். அதற்குப் பிறகு மறுபடியும் அந்தக் குளங்கள், குட்டைகளுக்குரிய வரைவு படத்தை



1987 நவம்பர் 16] [திருமதி டி. யசோதா]

அரசாங்கம் கொடுக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அரசாங்கம் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்ட காரணத்தால் குட்டைகளையும் குளங்களையும் வேலை செய்வதற்கு எடுத்துக்கொள்ள முடியவில்லை. அதைப் போலவே ஏரிகளையும் எடுத்துக்கொள்ள முடியவில்லை. இவ்வாறு ஏரிகளும், குளங்களும் எடுத்துக் கொள்ளப்படாத காரணத்தால், மீண்டும் மழை பெய்த நேரத்தில், அதிகமாக மழை பெய்திருந்தாலும்கூட அந்த மழை நீரைத்தேக்கி வைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அந்த மழை நீர் முழுவதும் பாழாக்கப்பட்டிருப்பது மட்டுமல்லாமல் அந்தப்பணத்தை மீண்டும் இப்போது சமூக நலக் கூடங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்று உத்திரவிட்டிருக்கிறார்கள். இதுதான் நம்முடைய போர்க்கால பணியா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–50)

ஆக வறட்சியினுடைய பணிகள் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் காலதாமதம் ஏற்படுவதற்கு, அரசாங்கத்தினுடைய மாறுபட்ட உத்திரவுகள்தான் காரணமாக இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

மேலும் இன்றைக்கு மத்திய அரசாங்கத்தின் மூலமாக நம் முடைய தேசிய கிராமப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு என்று கருதுகிறபணம் நியாயமான முறையிலே செலவழிக்கப்பட வேண்டும் என்பதிலே மாநில அரசுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது என்பதை குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அரசியல்வாதிகள் மீது நாம் குறை சொல்லும் அதே நேரத்தில் அதிகாரிகளாக இருக்கின்றவர்கள் எவ்வளவு பெரிய தவறுகள் செய்தாலும் அதைப் பாதுகாக்கின்ற சூழ்நிலையில் தமிழக அரசு இருக்கக்கூடாது, இருக்காது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தான் சில குற்றச்சாட்டுகளை இங்கே உங்கள் முன்னே சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

கந்தனூர் கல்வெட்டுக் காலனி என்ற பஞ்சாயத்து ஸ்ரீபெரும்பதூரிலே இருக்கிறது. அந்த பஞ்சாயத்தில் கிட்டத்தட்ட 1984 ஆம் ஆண்டு 25 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்காக 85 ஆயிரம் ரூபாயை முன்பணமாக பக்தவத்சலம் என்கிற ஒரு ஆர். ஐ. பெற்றிருக்கிறார். எண்பத்தைந்தாயிரம் ரூபாயை முன்பணமாக பெற்ற அந்த ஆர். ஐ. இதுவரையில் அந்த வீடுகளைக் கட்டி முடிக்கவில்லை. அது துவக்கக் கட்டத்திலேயே இருக்கிறது. அந்த ஆர். ஐ.க்கு அதே யூனியனிலே ஓரகடம் மகாகவி மங்களம் என்கிற பஞ்சாயத்துக்கு ரோடு போடுவதற்காகவும், கீரனூர் பகுதிக்கு சாலை போடுவதற்காகவும் மொத்தம் எட்டாயிரம் ரூபாய் முன்பணமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அந்த ஆர். ஐ.யினுடைய பணியின் திறமையைப் பார்த்தா? எதன் அடிப்படையில்? ஆக அந்த ஆர். ஐ. ஏற்கெனவே 85 ஆயிரம் ரூபாயை பெற்றிருக்கிறார், இப்போது மறுபடியும்

எட்டாயிரம் ரூபாயை இரண்டு சலைகள் அமைக்கப் பெற்றிருக்கிறார். 13-11-1987இல் வேலையையே ஒதுக்கீடு செய்யாமல் ஒரு பத்தாயிரம் ரூபாயைப் பெற்றிருக்கிறார் ஆர். ஐ. ஜெயச்சந்திரன். வேலையே இல்லை. என்ன வேலை என்றே தெரியாத அவர் ஒரு ஐந்தாயிரம் ரூபாயை முன்பணமாக பெற்றிருக்கிற சூழ்நிலை ஸ்ரீபெரும்புதூர் யூனியனில் ஏற்பட்டு 6 மாதங்களுக்கு மேலாக அங்கே ஒரு அதிகாரிகூட பணியாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் இன்றைக்கு அரசியல் கட்சிக்காரர்களால் சாதிக் கலவரங்கள் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சமான சூழ்நிலை இருக்கிறது. மூளச்சூர், செட்டிப்பேடு என்ற பகுதிகளிலும் இது போன்ற சூழ்நிலை இருக்கிறது. புறம்போக்கு நிலத்தை விற்பனை செய்வதிலேகூட போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு சுங்குவார்சத்திரம் பகுதியில் குட்டை புறம்போக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலையில் கடைகள் கட்டிக்கொள்ளும் நிலை அங்கே இருக்கிறது. அங்கேயுள்ள தாசில்தார் குட்டை புறம்போக்கு நிலத்தை நத்தம் புறம்போக்காக மாற்றுவதற்கு ஒரு ரெசல்யூஷன் அனுப்பியிருந்தாலும் மாவட்டக் கலெக்டர் அலுவலகத்திலே அது மூடக்கப்பட்டு இருக்கிறது. இன்று அந்த மக்களைக் காலிசெய்ய துரிதமாக நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் மற்ற பகுதிகளில் அருமையான பழத்தோட்டம் உள்ள பூந்தண்டலம், பூக்கள் பூக்கும் பூந்தண்டலம் போன்ற பகுதிகளில் உள்ள புறம்போக்கு நிலங்களை விற்கக்கூடிய சூழ்நிலை எப்படி ஏற்பட்டிருக்கிறது. ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

சமூக நலக் காடுகளைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால் நிறையச் சொல்லலாம். மிக அதிகமாக ஊழலை சமூக நலக் காடுகளின் மூலமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ரேஷன் கார்டுகளிலும் அதைப்போலத்தான். இன்றைக்கு ஏழை மக்களுக்கு உரிய சர்க்கரை பாமாயில்— தீபாவளிக்குக் கொடுப்பதாகச் சொன்னது இன்னும் கிடைக்கவில்லை— கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது.

ஸ்ரீபெரும்புதூர், குன்றத்தூர் போன்ற காவல்நிலையங்களில் ஜீப்புகள் இல்லாத காரணத்தால் பொது மக்கள் கஷ்டப்பட்டு அடிப்பட்டு உதைப்பட்டு இரத்தம் சிந்தி வருகின்றவர்களே போலீசாருக்கு வண்டி அமைத்துக் கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது.

இறுதியாக ஒன்றைச் சொல்லி அமர்கிறேன். ஊதியத்தைப் பொறுத்த வரையில் அனைவருக்கும் கொடுப்பதாகச் சொன்னீர்கள். அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை. அதற்கென்று ஒரு ஜி.ஓ. டர்ம்ஸ் ஃபர்ம் டெஃபைன் செய்து சரியான முறையில் நீங்கள் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்குரிய முதல் துணை மதிப்பீடுகள் ரூ. 252 கோடியே 42 இலட்சத்திற்கு கோரப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்கில் ரூ. 225 கோடியே 3 இலட்சமும் மூலதன கணக்கிலே ரூபாய் 27 கோடியே 39 இலட்சமும் கேட்கப்பட்ட விவரங்கள் பற்றிய குறிப்புரைகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன.

எனக்கு அதிக நேரம் தர வேண்டாம் என்ற பெருந்தன்மையின் அடிப்படையிலேயும் அதிக சிரமம் எனக்குத் தர வேண்டாம் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க நேரத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு என்னைப் பெரும்பகுதி விடுவித்ததற்காக என்னுடைய நன்றியறிதலை அவர்கள் அத்தனை பேருக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்தத் துணை மதிப்பீட்டு கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்களிலே நடைமுறைப்படுத்தக்கூடிய நடைமுறைப்படுத்த வேண்டிய நியாயமான கோரிக்கைகள் அத்தனையையும் அந்தக் கருத்துகள் அத்தனையையும் அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் குறித்து வைத்து அதன் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படி எடுப்பார்கள் என்பதை முதலிலே, குறிப்பாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இந்தத் துணை மதிப்பீட்டிலே நாம் வறட்சி நிவாரணப் பணிகளுக்குச் செலவழிப்பது பற்றியும் அதை யொட்டி பல்வேறு துறைகளுக்குச் செலவழிக்க வேண்டிய இன்றியமையாத நிலையைப் பற்றியும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்ற குறிப்புகளில் விவரமான தன்மைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்தளவில் நாம் அதிகமாக ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதையும் ஓரளவுக்குச் சமாளிக்க வேண்டிய நிலைமையில் எப்படி எல்லாம் இந்த அரசு நடந்து வந்தது என்பதையும் அவ்வப்போது அறிக்கைகள் மூலம் தெரிவித்ததோடு சட்டமன்ற நடவடிக்கைகளின் போதும் நாம் விரிவான விளக்கங்களைத் தந்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்த வகையிலே மட்டும் இதற்கு 55 கோடியே சில்லரை என்று குறிப்பிட்டிருக்கிறோம். இதற்கு முன்னால் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் போடுவதற்கு முன்னால் இருந்து வறட்சி நிவாரணப் பணிகளுக்கு என்று ஒதுக்கீடுகள் செய்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் பல்வேறு திட்டப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையும் இருக்கிறது. அந்த திட்டப் பணிகளை உள்ளடக்கிய வகையில் அவை வறட்சி நிவாரணப் பணிகளுக்குப் பயன்பட வேண்டு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 16

மென்ற அடிப்படையில் இதுவரையில் வறட்சி நிவாரணப் பணிகள். குடி தண்ணீர் வழங்க, வேலை வாய்ப்பு உறுதி செய்ய, வேலை வாய்ப்பு தர, ஆங்காங்கே ஆழ்குழாய் கிணறுகள் ஏற்படுத்த, கிணறுகளை ஆழப்படுத்த, உறைக் கிணறுகளை அமைக்க, ஏற்கனவே உள்ள கிணறுகளைப் புதுப்பிக்க, புதிய கிணறுகள் உருவாக்க, இப்படிப்பட்ட பணிகளுக்கெல்லாம் பயன்படுத்துகிற வகையில் இதுவரையில் 182 கோடியே 26 இலட்சம் ரூபாய்க்கு இதுவரையில் நாம் அனுமதி தந்திருக்கிறோம். அதில் 23—10—1987 வரையில் 140 கோடியே 35 இலட்சம் ரூபாய் அளவுக்கு பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட ஒரு மாத காலத்திற்குள் கூடுதலாகப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கிற இந்த அளவிலே, மத்திய அரசின் சார்பாக முதலிலே கிட்டத்தட்ட 35 கோடி ரூபாயும், பிறகு 26 கோடி ரூபாயும், மொத்தம் கிட்டத்தட்ட 61 கோடியே 37 இலட்சம் ரூபாய் மத்திய அரசிடத்திலிருந்து கடனாகவும், மானியமாகவும் வந்திருக்கிறது. இந்த 61 கோடியே 37 இலட்சத்தில், அடிக்கடி தெரிவித்திருப்பதுபோல், 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் தரப்பட்டிருக்கிறது. 30 சதவிகித மானியம் அடுத்த திட்ட செலவுகளில் ஈடு செய்து கொள்ளப் படுமென்ற தன்மையிலே தரப்பட்டிருக்கிறது என்புதை உறுப்பினர்கள் மனதிலே கொள்ள வேண்டுமென்பதோடு இந்தக் கடனை மத்திய அரசுக்கு சிலபல ஆண்டுகளிலே செலுத்த வேண்டுமென்ற வகையிலே தரப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அது உடனடிச் செலவுக்குப் பயன்படும் அளவுக்கு வந்திருக்கிறது. அந்த வகையிலேதான் பல்வேறு தன்மைகளை மேற்கொள்ளும்போது இதிலே 29 கோடியே 94 இலட்சம் ரூபாயை குடிநீர் வழங்க அனுமதித்திருக்கிறோம். சென்னை மாநகருக்கு 7 கோடியே 58 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல் வேலை வாய்ப்புத்தர 14 கோடி ரூபாய் அனுமதித்திருக்கிறோம். 5,000 குழாய் கிணறுகள் 12½ கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 853 திறந்த கிணறுகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க 4 கோடியே 72 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. விரிவான குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாயும், இப்படிப் பல்வேறு வகைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற, நிலைமைகளை எல்லாம் விரிவாக எடுத்துச் சொல்லலாம். மற்றவைகள் எல்லாம் பிற பிற நேரங்களில் விளக்கப்படுமென்று சொல்லி, பல்வேறு விளக்கங்கள், வாய்ப்பு, நேரம் கிடைக்கும்போது, விளக்கம் தர வேண்டிய இன்றியமையாமை ஏற்படும்போது தரப்படும் என்பதை எடுத்துச் சொல்லி, மன நிறைவோடு மாண்புமிகு உறுப்பினர் செல்லலாம் என்று மட்டும் கூறி என் உரையை முடிக்கிறேன்.



1987 நவம்பர் 16]

(பிற்பகல் 2—00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது பிற்பகல் 2—00 மணி. விவாதம் முடிவுற்றது. வாக்கெடுப்பு.

பேரவை முன்னுள்ள கேள்வி ;

''1987—88ஆம் ஆண்டிற்குக் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 12—11—1987 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1987—88ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற்றன.

நிறைவேற்றப்பெற்ற 1987—88ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

ஏ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | கோரிக்கை. | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| 1 | நிலவரித் துறை .. .. .. | 1 |
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும்—தீர்வைகளும் நிர்வாகம் | 53 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 23,82 |
| 10 | பால் வழங்கு திட்டங்கள் .. .. | 22, 60 |
| 11 | மாவட்ட நிருவாகம் .. .. .. | 90 |
| 15 | காவல் துறை .. .. .. .. | 4,05,41 |
| 17 | கல்வி .. .. .. .. | 1[illegible],28,49 |
| 18 | மருத்துவம் .. .. .. .. | 29,21 |
| 9 | பொதுச்சுகாதாரம்.. .. .. .. | 32,61 |
| 20 | வேளாண்மை .. .. .. .. | 7,05,70 |
| 22 | கால்நடை வளர்ப்பு .. .. .. | 9,50 |
| 23 | கூட்டுறவு .. .. .. .. | 1,09,47 |
| 24 | தொழில்கள் .. .. .. .. | 2,75,00 |
| 26 | கைத்தறியும் துணித்தொழிலும் .. .. | 12,00 |
| 28 | சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் | 5,02,00 |
| 30 | சமூக நலம் .. .. .. | 4,16,56 |

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| 31 | பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் .. .. .. .. | |
| 35 | நுகர்ப்பொருள் வழங்கல் .. .. .. | 8,68 |
| 36 | பாசனம் .. .. .. .. | 50,60,00 |
| 38 | பொதுப்பணிகள் பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் .. .. | 3,00,89 |
| 39 | சாலைகளும் பாலங்களும் .. .. .. | 5,09 |
| 4. | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. .. .. .. | 1,20,00 |
| 43 | பல்வகை .. .. .. .. | 5,43,75 |
| 45 | காட்டு வளத் துறை .. .. .. | 1,00,00,00 |
| 47 | செய்தி, சுற்றுலா திரைப்படத் தொழில் நுட்பவியல்— .. .. | 4,40,62 |
| | | 4,35 |
| 48 | ஊரகத் தொழில்கள் | |
| 49 | குடிநீர் வழங்கல்— .. .. .. | 4,15 |
| | | 23,41,64 |
| | மொத்தம்—ஏ. வருவாய்க் கணக்கு .. | 2,25,02,89 |

பி. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

| | | |
|---|---|---|
| 51 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 14,50 |
| 52 | பாசனம் குறித்த மூலதனச் செலவு .. | 83,00 |
| 53 | பொதுப் பணிகள்— கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | |
| 58 | பல்வகை மூலதனச் செலவு .. .. | 17,50 |
| | | 4,17,56 |
| | மொத்தம்— பி. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு. | 5,32,56 |

சிகடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | | |
|---|---|---|
| 59 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும். | 21,38,67 |
| | பெரு மொத்தம் .. | 2,51,74,12 |



அறிவிப்புகள்—தொடர்ச்சி.

நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஓ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (17—11—1987) காலை 10–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

101. உலக வங்கியின் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் நீரகற்று வாரியத்தினருக்கு, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தாரால் விற்கப்படும் 'அரசு' கல்நார் சிமெண்டினாலான அழுத்தக் குழாய்கள் மற்றும் துணைக் கருவிகள் மீது சலுகை முறையில் வரி விதிப்பது

குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 24—7—1987ஆம் நாளிட்ட 851 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

102. வருவாய்த் துறையின் 18—3—1970ஆம் நாளிட்ட 86/1970ஆம் எண். அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30—7—1987ஆம் நாளிட்ட 872 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

அ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

18. 1976–77 மற்றும் 1977–78 ஆகிய ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1985–86) பத்தொன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்திநான்காவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

136539

V2'', 31 N87

1187-45-3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.